# அறநூல்கள்

522

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

புதுமைப் பதிப்பகம் லிமிட்டெட்
காரைக்குடி

விற்பனை உரிமை :
அன்னை நிலையம்
ராயவரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

முதல் வெளியீடு: 1—3—46

விலை ரூபா 5-0-0

உரிமை பதிவு செய்யப்பெற்றது

Printed by Sakthi Press Ltd., Madras. P. I. C. No. MS. 23
for Pudumai Padippaham Ltd., Karikudi. P. I. C. No. R. 11.
21—2—'46

# முன்னுரை

## ராஜாஜி

மகோன்னத புகழுக்கு உரித்தான மூன்று மிகப் பெரிய நூல்களின் பொருளை எனக்குள்ள அறிவைச் செலுத்தி, பக்திசிரத்தையுடன் தமிழர்களுக் கென்று சுருக்கியும் விளக்கியும் அவ்வப்போது எழுதிய இந்த மூன்று நூல்களைப் புதுமைப் பதிப்பகத்தார், அறநூல்கள் என்ற பெயரிட்டு இந்த வெளியீட்டில் அமைத்துள்ளார்கள்.

உபநிஷத்தில், நம்முடைய பெரியோர்கள் தவமும் ஆராய்ச்சியும் செய்து, மெய்ப்பொருளின் தன்மையை விளக்கியிருக்கிறார்கள். அந்த உண்மையிலிருந்து தோன்றும் வாழ்க்கைக் கிரமம் யாது என்பது கீதையில் விரிவாக விளங்கும்.

உலகத்தின் நன்மையையும் நம்முடைய வருங்காலத்து சுகத்தையும் உத்தேசித்து, வேத வாழ்க்கையை அனைவரும் பின்பற்ற வேண்டும். பிளவுபட்ட வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பதில் பயன் ஒன்றுமில்லை. வேத வாழ்க்கை என்றால் பற்றற்ற முறையில் சமூகக் கடமைகளைச் செய்து, இடையூறுகளைக் கண்டு அஞ்சாமலும் தோல்வியைக் கண்டு கலவரப்படாமலும் ஒப்புரவும் தெய்வபக்தி கொண்டு வாழ்நாளைக் கழித்தல்.

இவ்வாறான வாழ்க்கைக்கு வேண்டிய ஞானம், நூல்களைப் படிப்பதனால் மட்டும் உண்டாகாது. நூல்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் விளங்குவதற்கே, வாழ்க்கையில் சீலமும் பக்தியும் பெற்றிருக்க வேண்டும். இல்லா

விடில், விளங்கிய மாதிரி தோற்றம் காட்டுமே யொழிய உண்மையில் விளங்காது.

நல்ல முறையில் ஒருவன் அடைந்த ஞானம் செயலில் தானகவே பரிணமிக்கும். பூவாவது காய் ஆவது போலும், காய் பழம் ஆவது போலும் ஞானமானது செயலுருவம் எடுக்கும்.

இந்த அறநூல் தொகுதியில் கீதையும் உபநிஷத்தும் இருப்பதோடு, மார்க்க அரேலியரின் ஆத்ம சிந்தனைக் குறிப்புகளைச் சேர்ந்திருப்பதுப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். மார்க்க அரேலியர் தமக்கென்றே எழுதிய இந்த குறிப்புகளின் மிகச் சிறந்த ஒரு அறநூலாகும் என்பது எனது அபிப்பிராயம். அரசனும் யோகியுமான இந்த மகானுடைய உள்ளத்திலிருந்து பொங்கிய எண்ணங்களை அவர் அவ்வப்போது எழுதிவைத்தார். அது நம்முடைய வேதாந்தத்துக்கு ஒரு உரைபோல் விளங்குகிறது. நம்மைப் போல் சுக துக்கங்களில் சிக்கிய மனிதர் கூறும் வார்த்தைக்கு ஒரு தனிச் சக்தி உண்டு. நம்முடைய நாட்டில் தோன்றிய கீதை, உபநிஷத்து போலவே, மார்க்கருடைய ஆத்ம சிந்தனைகள் போற்றத் தக்க ஒரு வேதாந்த நூல். என் வாழ்க்கையிலே நான் இந்த நூலிலிருந்து மிகுந்த ஆறுதல் அடைந்திருக்கிறேன். மற்றவர்களும் இந்தப் பயனைப் பெறவேண்டும் என்பது என் ஆசை.

சம்ஸ்க்ருதத்தைத் தமிழ் எழுத்தில் எழுதுவதற்கு ஒரு வழி கண்டு, அதை இந்த வெளியீட்டில் உபயோகித்துப் பார்க்கலாம் என்று நான் சொன்னதை, புதுமைப் பதிப்பகத்தார் ஒப்புக்கொண்டு, மிக்க சிரமம் எடுத்து நிறைவேற்றியிருக்கிறார்கள். புதியதொரு முறையில் முதல் முயற்சியானபடியால் சில அச்சுப் பிழைகள் புகுந்திருக்கும் என்றே எண்ணுகிறேன்.

சம்ஸ்க்ருத நூல்களை முற்றிலும் தமிழ் எழுத்தில் எழுத இந்த முறை பயன்படும் என்பதாக யாரும் எண்ணி விடலாகாது. அந்த உத்தேசத்துடன் இதை நான் கற்பிக்கவில்லை. சம்ஸ்க்ருதமும் தமிழும் கலந்திருக்க வேண்டிய புத்தகங்களில், நாகரி எழுத்துப் படிக்கத் தெரியாத தமிழருக்குதான் இந்த முறை பயன்படும்.

க, ச, ட, த, ப, இந்த ஐந்து எழுத்துக்கள் ஒவ்வொன்றும் நான்கு பேதப்பட்ட உச்சரிப்புக் கொள்ளும். சுத்த வல்லெழுத்து ஓசை ஒன்று. அதுவே அழுத்த உயிர்ப்புடன் கலந்தது மற்றொன்று. கனத்த குரலோடு உச்சரிப்பது மூன்றாவது. இந்தக் கனத்தகுரல் அழுத்தமான உயிர்ப்புடன் கலந்து வருவது நான்காவது.

தேவநாகரி, தெலுங்கு, மலையாளம் முதலிய இந்திய பாஷைகளில் இந்த நான்கு எழுத்துக்களும் வெவ்வேறு எழுத்துகளாகவே இருக்கும். தமிழ் எழுத்துக்குக் கீழ்க் கண்ட குறிகளைச் சேர்த்துக்கொண்டு தேவநாகரிக்குப் பதில் தமிழ் எழுத்துக்களையே உபயோகிக்கலாம்.

சுத்த வல்லெழுத்து ஓசைக்கு அடையாளம் கீழ்க் கோடு:

க̠ ச̠ ட̠ த̠ ப̠

அழுத்தமான உயிர்ப்புடன் உச்சரிக்க வேண்டுமென்பதற்கு அடையாளம் இரட்டைக் கோடு:

க̳ ச̳ ட̳ த̳ ப̳

கன ஓசையில் உச்சரிக்க வேண்டும் என்பதற்கு அடையாளம்: க̑ ட̑ த̑ ப̑

ஜ என்கிற எழுத்து தமிழ் பிரயோகத்தில் இருப்பதால் ச̑ என்பதை அதற்கு உபயோகப்படுத்தவில்லை. அதற்குப் பதில் श என்கிற உச்சரிப்பை அது குறிக்கும். கன

ஓசை அழுத்த உயிர்ப்புடன் கலந்தால் அளவுக் குறிப்புக்குப் பதில் வட்டக் குறிப்பு இடப்படும்: க̥ ட̥ த̥ ப̥

ஆகவே

| | | | |
|---|---|---|---|
| க̱ | க͇ | க̯ | க̥ |
| क | ख | ग | घ |
| ச̱ | ச͇ | ஜ | ஜ̱ |
| च | छ | ज | झ |
| ட̱ | ட͇ | ட̯ | ட̥ |
| ट | ठ | ड | ढ |
| த̱ | த͇ | த̯ | த̥ |
| त | थ | द | ध |
| ப̱ | ப͇ | ப̯ | ப̥ |
| प | फ | ब | भ |
| ச̯ | ஷ | ஸ | ஹ |
| श | ष | स | ह |

இந்தக் குறிப்புகளை அனுசரித்து சம்ஸ்க்ருத சுலோகங்களை உச்சரித்துப் படிக்க வேண்டும். மெல்லெழுத்தை யடுத்து வந்த வல்லெழுத்தையும் இந்த அடையாளங்களை அனுசரித்தே உச்சரிக்க வேண்டும். வழக்கின்படி கன ஓசை தரலாகாது.

# பொருளடக்கம்


1. உபநிஷதப் பல்கனி .... 1-72

| | | |
|---|---|---|
| | உபநிஷதம் | ... 3 |
| க. | நசிகேதன் | ... 8 |
| உ. | தேவர்கள் தோற்றது | ... 9 |
| ங. | படித்தால் மட்டும் போதாது | ... 11 |
| ச. | சுவேதகேது | ... 12 |
| ரு. | மைத்திரேயி | ... 13 |
| சு. | இல்வாழ்க்கை: ஒரு பயிற்சி | ... 14 |
| எ. | பரம்பொருளின் இலக்கணம் | ... 16 |
| அ. | சிறு விதைக்குள் மரம் முழுதும் | ... 18 |
| கூ. | ஜலத்தில் கரைந்திருக்கும் உப்புப்போல | ... 20 |
| க0. | கண்ணைக்கட்டி காட்டில் விட்டவாறு | ... 22 |
| கக. | குருகுலவாசம் முடிந்ததும் | ... 23 |
| கஉ. | தருமநூல் தோற்றுவாய்கள் | ... 24 |
| கங. | மரக்கட்டைக்குள் மறைந்துள்ள நெருப்பு | . 31 |
| கச. | அந்தராத்மா | ... 33 |
| கரு. | சாப்பாட்டில் குற்றம் சொல்லவேண்டாம் | . 38 |
| கசு. | உலர்ந்த கட்டையும் தளிர்த்துவிடும் | ... 39 |
| கஎ. | தண்ணீர்க் குடத்தில் கண்ட ஆத்மா | ... 43 |
| கஅ. | வில் வளைத்த தியானம் | ... 50 |
| ககூ. | ஒரு உபவாச ஆராய்ச்சி | ... 53 |
| உ0. | தியானம் | ... 55 |
| உக. | கணித நூலுக்கு அடங்காது | ... 56 |
| உஉ. | கீதையும் உபநிஷதமும் | ... 59 |
| உங. | நதிகள் அனைத்தும் கடலில் சேர்ந்துவிடும் | . 63 |
| உச. | அறிவுக்கு எட்டாத பொருள் | ... 67 |
| உரு. | முடிவுரை | ... 71 |

2. கண்ணன் காட்டிய வழி .... 73 - 226

ஸ்ரீமத் பகவத் கீதை ... 75
க. பாரதக் கதையும் கீதையும் ... 77
உ. கீதையின் சிறப்பு ... 80
ஙூ. சிற்றறிவின் மயக்கம் ... 81
ச. பரம்பொருள் ஆராய்ச்சி ... 83
ரு. ஆராயும் முறை ... 85
சூ. ஏன் கவனிக்க வேண்டும்? ... 87
எ. சாஸ்திரம் படிக்கும் முறை ... 90
அ. ஆத்மா ... 92
கூ. கர்மவிதி ... 98
க0. கர்மபலன் ... 103
கக. கர்மவிதிக்கு ஆட்சேபங்கள் ... 105
கஉ. பிரகிருதி: ஜீவன்: பரமாத்மா ... 109
கங. கர்மயோகம் ... 120
கச. கர்மயோகமே வேள்வியும் ... 123
கரு. கர்மயோகமே துறவும் ... 130
கசூ. அமைதியற்ற துறவு ... 135
கஎ. கர்மயோகமும் வாழ்க்கை நலமும் ... 141
கஅ. மனதைக் காத்தல் ... 144
ககூ. தியானம் ... 151
உ0. இயற்கைக் குணங்கள் ... 166
உக. அனைவருக்கும் விடுதலை ... 173
உஉ. நாஸ்திகம் கூடாது ... 180
உங. குணவிபாகம் ... 187
உச. பிரபத்தி ... 194
உரு. அனைத்தும் ஒன்று ... 200
உசூ. அத்துவைதமும் கர்மயோகமும் ... 213
உஎ. விச்வரூப தெரிசனம் ... 217
உஅ. முடிவுரை ... 222

3. ஆத்ம சிந்தனை .... 227 - 327

வரலாறு ... 229
ஆத்ம சிந்தனை ... 231

# உபநிஷதப் பலகணி

# உபநிஷதம்

தற்காலப் பள்ளிக்கூடப் படிப்புப் பெற்றவர்கள் நம்முடைய தரும நூல்களைப் படிப்பதேயில்லை; படிக்க விரும்புவதுமில்லை. சிரத்தைக்கும் பக்திக்கும் பதில் அவைகளைக் கண்டால் பயம். வேதாந்தம் கீதை உபநிஷத்து என்றால் பேயோ பிசாசோ வந்த மாதிரி விலகி நிற்கிறார்கள்.

நம்மில், புதுவகை அறிவுநூல்களைக் கற்றவர்கள் நமக்குரிய பூர்வீக தரும நூல்களைப் படியாம லிருப்பது பலவிதத் தீமையை விளைவித்து வருகிறது. பிற தேசங்களில் இவ்வாறில்லை; படித்த கூட்டம் தங்களுடைய சமூகத்தார் பின்பற்றும் மதநூல்களை அங்கே புறக்கணிப்பது கிடையாது. அதனால் அந்த நாட்டாரின் தரும முறைகள் முற்போக்காளர் காப்பில் இருந்துவருகின்றன. ஹிந்து தருமம் சீர்கெட்ட நிலையிலிருப்பதற்கு ஒரு பெரிய

காரணம், நம்முடைய தேசத்தில், மதநூல் புலவருக்கும் மற்றவகைக் கல்வி யடைந்தவர்களுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் பிரிவே. நம்முடைய முன்னோர்கள் எழுதி வைத்திருக்கும் அரிய தரும நூல்களைப் புதுவகை அறிவு பெற்றவர்கள் படித்து, வைதிகர்களைப்போல் தாங்களும் அவைகளை ஆராய்ந்து பொருள் உரைக்கத் தகுதிபெற்றால், சமுதாயமும் மதமும் வேறு முயற்சியின்றியே தாமாகத் திருந்திவிடும். இதற்காகக் கலாசாலை மாணவர்கள் தங்களுடைய முக்கியமான கடமைகளுள் இதையும் சேர்த்துக்கொண்டு, நம்முடைய பழைய நூல்களை நன்றாய்க் கவனித்துப் படிக்க வேண்டும்; படித்துச் சமூக முன்னேற்றத்திற்காகத் தொண்டு செய்யவேண்டும்.

ஹிந்து தருமத்திற்குப் பிரமாண நூல்களுள் முக்கியமானவை உபநிஷத்துகள். உபநிஷத்துகளில், சீடன் குருவினிடம் மிக நெருக்கி உட்கார்ந்து விஷயம் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிற முறையில் ஆத்மஞானம் போதிக்கப்படுகிறது. அக்காலத்து வாழ்வு நாம் இந்நாளில் நடத்தும் வாழ்வுக்கு முற்றிலும் வேறானபடியால் பல இடங்களில் விஷயம் விளங்காமலிருக்கும். தவிர, சீடனுக்கு விளக்கிச் சொல்லப்பட்ட விஷயங்களை வெறும் ஞாபகக் குறிப்புகளாகக்கொண்டே அந்நாளில் ரிஷிகள் உபநிஷத்துகளை யாத்தனர். அச்சிட்டு வழங்கித் தனிமையில் படிப்பதற்காக எழுதிய புத்தகங்களல்ல அவை. இக்காரணத்தினாலும் சில இடங்களில் பொருள் விளங்குவது கடினமாகிறது. ஆயினும் வாழ்வை நல்வழியில் நடத்தி, மனதைச் சுத்தமாக

வைத்துக்கொண்டு, மெய்ப்பொருளில் உண்மைப் பற்றுடன் படிப்பவர்களுக்கு, இந்த உபநிஷத்துகளைப்போல் உதவக்கூடிய நூல்கள் உலகத்தில் வேறில்லை.

நம்முடைய நாட்டில் அரசுபுரிந்த மொகலாய சக்கரவர்த்திகளுள் ஒருவரான ஷாஜஹானுடைய மூத்த குமாரனும், அவுரங்கஸீப் சக்கரவர்த்தியின் அண்ணனுமான தாரா ஷுகோ என்ற புகழ்பெற்ற மேதாவி, கி. பி. 1657-ஆம் ஆண்டில், பல பண்டிதர்கள் உதவியைக்கொண்டு ஐம்பது முக்கியமான உபநிஷத்துகளைப் பார்ஸி பாஷையில் மொழிபெயர்த்தான். இந்தப் பார்ஸி மொழிபெயர்ப்பை வைத்தே ஐரோப்பியப் புலவர்கள் கி. பி. 1801-ல் லத்தீனில் முதன்முதலில் உபநிஷத்துகளை மொழிபெயர்த்தார்கள். உடனே மேல்நாட்டில் உபநிஷத்துகளின் பெருமை பரவிற்று. மொகலாய ராஜ குமாரன் தாராவின் உயர்ந்த அறிவும், சம்ஸ்கிருதப் புலமையும், மேலான குணமுமே, உபநிஷத்துகளின் பெருமை உலகம் முழுதும் பரவுவதற்குக் காரணமாயிருந்தன வென்ற விசித்திரத்தை நாம் என்றும் மறக்கக் கூடாது.

உபநிஷத்துகளில் சொல்லப்படுகிறது என்ன விஷயம், அது எவ்வாறு சொல்லப்படுகிறது என்பதை அறியாமல் கல்விப் பேறுபெற்ற ஹிந்துக்கள் இருந்துவருவது பெரிய அவமானம். நம்மைப் பெற்ற முன்னோர்களில் மகா ஞானிகளும் குணசீலர்களுமான முனிவர்கள் கண்ட கருத்துக்களை இக் காலத்துச் சிறுவர்களுக்கு அறிமுகப்

படுத்தலாம் என்று எழுதிய இந்தப் புத்தகத்தைப் பார்க்கும் பெரியோர்கள், குற்றங்களைப் பொறுத்து, ஆசீர்வதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

க

# நசிகேதன்

**வா**ஜசிரவஸர் என்ற பிராமணர், தமக்குள்ள உடைமைகள் அனைத்தையும் தானமாகக் கொடுத்து, ஒரு பெரிய யாகத்தைச் செய்தார். அவருக்கு நசிகேதன் என்று ஒரு மகன் இருந்தான்.

தகப்பனார் செய்த யாகத்தில் தட்சிணைகள் வழுங்கியதைப் பார்த்த சிறுவன் யோசிக்கலானான்: "இத்தகைய தட்சிணைகளினால் என்ன பலன் உண்டாகும்? பிரியமான பொருள்களைக் கொடுப்பதாயிருந்தால், தனக்கு மிகவும் பிரியமான என்னை யல்லவோ கொடுக்கவேண்டும்? உதவாத பசுக்களைக் கொடுப்பதில் என்ன இருக்கிறது?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தகப்பனாரிடம் போய், "அப்பா, என்னை யாருக்குத் தட்சிணையாகக் கொடுக்கப்போகிறாய்?" என்று கேட்டான்.

பையன் பேச்சைத் தகப்பனார் முதலில் காதில் போட்டுக்கொள்ளாம லிருந்தார். பிறகு அடுத்தடுத்து அவ்வாறே கேட்டான். தகப்பனார், வேடிக்கையாகவோ கோபமாகவோ, "உன்னை யமனுக்குத் தட்சிணையாகக் கொடுக்கப்போகிறேன்"

சொன்னதும், அவர் "என்ன செய்துவிட்டேன்! இந்த யாகத்தில் சொன்ன சொல்லை நடத்தியே தீர வேண்டுமே" என்று திகைத்தார்.

தகப்பனாரது மனக்குழப்பத்தைக் கண்டு நசிகேதன், "ஐயனே, யமனிடம் நான் தனியாகவா போகிறேன்? எனக்கு முன் எண்ணிறந்த பேர் அவனிடம் சேர்ந்திருக்கிறார்கள். எனக்குப் பின்னும் வெகு பேர்கள் போகப் போகிறார்கள். என்னை யமன் என்ன செய்துவிடப் போகிறான்? நமக்குமுன் வாழ்ந்தவர்கள் எங்கே? நமக்

குப் பின் வருபவர்களின் கதிதான் என்ன? நெற்பயிர் போல், மனிதர்கள் வளர்ந்து முதிர்ந்து அறுபடுகிறார்கள். மறுபடி முளைக்கிறார்கள். இவ்வளவே யல்லவா?'' என்று சொல்லி, யமாலயம் போய்ச் சேர்ந்தான்.

யமன் வீட்டில் பையன் வருவது தெரியாதாகையால் யாரும் எதிர்கொள்ளவில்லை. மூன்று நாள் காத்திருந்தான். பிறகு யமன் வந்து பையனை நமஸ்கரித்து, "அதிதியாய் வந்த நீ சரியாகப் பூஜிக்கப்படாமல் என் வீட்டில் மூன்று நாள் காத்திருந்தாயாதலால், நான் அபராதம் செய்தவனானேன். அதற்குப் பரிகாரமாக மூன்று வரங்கள் கேட்டு என்னிடம் பெறுவாயாக'' என்றான்.

நசிகேதன் வணங்கிச் சொன்னதாவது :— யமனே, என் தகப்பனார் மனம் சாந்தி அடைந்து என்மேல் அவர் கொண்ட கோபம் தீரவேண்டும். இது நான் கேட்கும் முதல் வரம்.

" அவ்வாறே யாகுக '' என்றான் யமன்.

அதன்பின், இரண்டாவதும் மூன்றாவதுமாக நசிகேதன் கேட்ட வரம் பரம்பொருள் உபதேசம்.

யமன் பல ஆசைகள் காட்டியும் நசிகேதன் அவைகளை மறுத்துவிட்டான். " யமனே, உயிரைக் கொண்டு ஏகும் நீ இருக்கும்வரையில், மனிதர்களின் ஆயுள் எம்மாத்திரம்? நீ தருவதாகச் சொல்லும் செல்வங்கள் என்ன சுகம் தரும்? ஐசுவரியங்களும் குதிரைகளும் ஆட்டமும் பாட்டும் நீயே வைத்துக்கொள். சந்தேகங்கள் தீர்ந்து உண்மை உபதேசம் உன்னைப் போன்ற ஒரு குருவினிடம் பெறுவதையே நான் விரும்புகிறேன் '' என்றான்.

" உன்னைப் போன்ற தீரன் ஒருவன் சிஷ்யனாகக் கிடைப்பதும் அரிது '' என்று யமனும் சம்மதித்து உபதேசம் செய்யப் புகுந்தான்.

உ

## தேவர்கள் தோற்றது

தேவர்களும் அசுரர்களும் வெகு நாட்கள் யுத்தம் செய்தார்கள். ஒரு சமயம் தேவர்கள் வெற்றி யடைந்தார்கள். வெற்றியானது ஈசுவர லீலை என்று அறியாமல், தங்களுடையதாகவே எண்ணிப் பெருமை பாராட்டிக் கொண்டார்கள். அப்போது பிரம்மம் அவர்கள் முன் நின்றது. "இது என்ன தோற்றம்?" என்று அவர்கள் திகைத்து, "அக்கினியே! போய் யார் என்று அறிந்து வா" என்று அக்கினி பகவானை அனுப்பினார்கள்.

அக்கினி பகவான் அதனண்டைப் பாய்ந்தான். அந்தத் தோற்றம் அசையாமல், அக்கினியைப் பார்த்து, "யார் நீ?" என்றது.

"நான் அக்கினி தேவன்" என்றான் அக்கினி பகவான்

"உனக்கு என்ன வீரியம் உண்டு?" என்றது தோற்றம்.

"உலகத்தில் எதையும் எரித்துப்போடுவேன்" என்று அக்கினி பெருமையாகச் சொல்லிக்கொண்டான்.

"அப்படியா?" என்று சொல்லி, அது ஓர் உலர்ந்த புல் துரும்பை அக்கினிமுன் வைத்து, "இதை எரி!" என்றது. அக்கினி அதன்மேல் தன் வலியெல்லாம் கொண்டு பாய்ந்தும் அதை எரிக்க முடியவில்லை. வெட்கப்பட்டுத் திரும்பிப்போய், "இது யாரோ, எனக்கு விளங்கவில்லை" என்று தேவர்களிடம் சொன்னான்.

அவ்வாறே வாயுவும் இந்திரனும் அவமானப்பட்டார்கள். 'எதையும் தகர்த்துவிடுவேன்' என்று வீரியம்

பேசிய வாயுவால், எவ்வளவு வேகமாக வீசிப்பார்த்தும் தன்முன் வைக்கப்பட்ட அந்தத் துரும்பை நகர்த்த முடிய வில்லை. எதையும் அறிவேன் என்று எண்ணிய இந்திரன் கிட்ட நெருங்கினதும் உருவம் அவன் கண்களுக்கு மறைந்தே போயிற்று.

பிறகு பார்வதி இந்திரனுக்குப் பிரசன்னமாகி, அத் தோற்றம் பரம்பொருள் என்பதை விளக்கித் தேவர்களின் சக்தி அனைத்தும் பிரமத்தின் சக்தியே என்று, உபதேசம் செய்தாள்.

௩

## படித்தால் மட்டும் போதாது

நாரதர் முனிவர் ஒரு நாள் சநத்குமாரரிடம் சென்று, "ஐயனே, உபதேசம் கோருகிறேன்" என்று வணங்கி நின்றார்.

"உமக்குத் தெரிந்ததைச் சொல்லும்; அதற்குமேல் நான் சொல்லுகிறேன்" என்று சநத்குமாரர் பதிலுரைத்தார்.

நாரதர், "எனக்கு ரிக் வேதம் தெரியும்; யஜுர் வேதம் தெரியும்; சாமவேதம் தெரியும்; அதர்வண வேதமும் தெரியும். அதற்குமேல், இதிகாசங்கள் புராணங்கள் அனைத்தும் அறிவேன். கர்மங்கள், மந்திரங்கள் அனைத்தும் அறிவேன். கணிதம், சோதிடம், கால அளவு சாஸ்திரம், வியாகரணம், காவியம், யாப்பியல், அலங்காரம் பூதநூல்கள், ஆயுத நூல், வான சாஸ்திரம், விஷயங்களைப் பற்றிய சாஸ்திரம், நாட்டியம், சங்கீதம், இன்னும் எல்லாக் கலைகளும் படித்திருக்கிறேன். இவையெல்லாம் நான் அறிவேனாயினும் ஆத்மாவைப்பற்றி நான் அறியவில்லை. ஆத்மஞானம் அடைந்தால்தான் துக்கம் தீரும் என்று தங்களைப்போன்ற பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இன்னும் துக்கம் எனக்குத் தீரவில்லை. எனக்கு ஞானம் அருள்வீராக" என்றார்.

சநத்குமாரர், "நீர் படித்தவை அனைத்தும் வெறும் பெயர்களைப்பற்றினவையே, பெயரைவிட மேலானது ஒன்றுண்டு; அதுவே மெய்ப்பொருள்" என்று உபதேசத்தை ஆரம்பித்தார்.

ச

## சுவேதகேது

சுவேதகேதுவைப் பார்த்து, அவன் தகப்பனார் உத்தாலகர், "சுவேதகேது! நீ பிரமசாரியாக அமர்ந்து படிக்கவேண்டும். நம்முடைய குலத்தில் யாரும் வெறும் பிறவிப் பிராமணர்களாக இருந்தது கிடையாது; கல்வி கற்கவேண்டும். கல்வி கற்றால்தான் பிராமண குலம் நிலைக்கும். ஓர் ஆசாரியனிடம் சேவை செய்து படித்து வா" என்றார்.

அதற்கிணங்கி, பையன் பன்னிரண்டாவது வயது தொடங்கி இருபத்து நான்கு வயது வரையில், ஒரு குருவிடமிருந்து வேதங்களும் அக்காலத்தில் கற்கக்கூடிய மற்றவையும் படித்துவிட்டு, மிகவும் கர்வங்கொண்டு எல்லாம் தெரிந்துவிட்டது என்றெண்ணி வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

"மகனே, எல்லாம் படித்தறிந்துவிட்டதாக எண்ணுகிறாய் போலிருக்கிறது. படிப்புக்கு எட்டாத பொருளை எவ்வாறு உணர்வது என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டாயா?" என்று தகப்பனார் கேட்டார். "அதைப்பற்றி நான் விசாரிக்கவில்லை; அது என்ன?" என்றான் மகன்.

பிறகு தகப்பனார் உபதேசிக்கிறார்.

௫

# மைத்திரேயி

**யா**ஜ்ஞவல்கியர் இல்லறம் முடித்துவிட்டு வனம் செல்ல ஏற்பாடுகள் செய்த சமயம். தம் மனைவிகள் இருவரில், மைத்திரேயியைக் கூப்பிட்டு, "மைத்திரேயி, நான் வனம் போக விரும்பியது உனக்குத் தெரியுமே; உனக்கும் காத்யாயனிக்கும் தகுந்த ஏற்பாடு செய்துவிடுதல் நலமல்லவா?" என்றார். அதைக் கேட்ட மைத்திரேயி, "பகவானே, சகல சம்பத்துக்களையும் வைத்து இந்தப் புவி முழுவதையும் நீர் எனக்குத் தந்தாலும், அதைக் கொண்டு நான் இறவாமை அடைவேனா?" என்றாள்.

யாஜ்ஞவல்கியர், "அது எவ்வாறு முடியும்? செல்வத்தினால் என்ன சுகங்கள் அடையலாமோ, அவற்றையெல்லாம் நீயும் அடையலாம்; இறவாமையை எதிர்பார்த்தல் கூடாது" என்றார்.

"ஐயனே, முக்தி தராத செல்வத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்? தாங்கள் வனம் போகுமுன் எனக்கு அறிவு உபதேசித்தருள்வீர்களாக; அதைத்தான் விரும்புகிறேன்" என்றாள்.

யாஜ்ஞவல்கியர் மனம் பூரித்து, "பிரியே, என் அன்பைப் பெருக்கினாய். வா, உட்காரு; நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேள், கணவனைக் காதலிக்கிறாள் மனைவி. அந்த அன்பின் பயன் என்னவென்று எண்ணுகிறாய்? கணவனை விரும்புவதன்று. அவனுள் நிற்கும் மெய்ப்பொருளை விரும்பப் பயிலுவதே. இல்லற வாழ்க்கையில் தோன்றி வளரும் காதலானது மெய்ப்பொருளின் ஒரு அம்சமேயாகும்" என்று தொடங்கி உபதேசிக்கலானார்.

# இல்வாழ்க்கை : ஒரு பயிற்சி

நல்ல முறையில் இல்லறம் நடத்தி உள்ளம் பக்குவம் அடைந்தபின்னரே துறவு நிலையானது உண்மைப் பயன் தரும் என்பது நம்முடைய தரும நூல்களின் முடிபு. இல்லற வாழ்வினுல் மனம் எவ்வாறு பக்குவம் அடையும்? ஒருவன் தன் மனைவியிடம் அன்பு செலுத்தித் தன்னைத் தான் ஓரளவு மறக்கவும் துறக்கவும் கற்றுக்கொள்கிறுன். அவ்வாறே குடும்பத்தின் நன்மை, குலத்தின் நன்மை, விருந்தினரின் திருப்தி முதலியவைகளும் 'தான்' என்னும் வலையினின்று வரவர வெளியேற மனிதனுக்குப் பயிற்சிதந்து வழிகாட்டுகின்றன. இல்லற வாழ்வுக்குரிய அன்புகள் அனைத்தும் பேரன்புக்கு ஒரு பயிற்சியே யாகும். இந்தப் பயிற்சியைச் சரிவரப் பெற்ற பின்னரே, உள்ளத்தில் ஞான ஒளிக்கு வாய்ப்பு ஏற்படும்.

மக்கள், மனைவி, கணவன், குலத்தார், ஊரார், தேசத்தார் என்றெல்லாம் கருதிக் கவலைப்பட்டு, அன்பும் பணியும் செய்தால் அப்பொருள்களில் மறைந்து உள்ளூடு நிற்கும் மெய்ப்பொருளைக் காணும்படியான அறிவு உண்டாகும். ஆனுல் இதற்கு இல்லற வாழ்வை அறவழியில் நடத்தி, வரவரப் பற்றுக்களைக் கழற்றும் பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

யாஜ்ஞவல்கியர் இல்லற வாழ்வு முடித்துவிட்டு வனம் செல்ல ஏற்பாடுகள் செய்து மனைவி மைத்திரேயியைப் பார்த்து உபதேசித்தது, இந்த உண்மையையே. அதன் சுருக்கம் பின்வருமாறு :—

கணவனைக் காதலிப்பது கணவனைக் காதலிக்க அல்ல; பரமாத்மாவைக் காதலிக்கப் பயில்வதற்காகவே. கணவன்

மனைவியைக் காதலிப்பதும் இதற்காகவே. இதுவே காதலின் பயனும் உண்மைப் பொருளும் ஆகும். பெற்ற மக்களிடம் உள்ளங்கரைவதும் இதற்காகவே. செல்வத்தை விரும்புவதும் இதற்காகவே. மனைவி, கணவன், மக்கள், செல்வம், பசுக்கள், இவைகளினுள் நிற்கும் பரம்பொருளைக் கண்டு அதனுடன் கலந்து ஒன்றுவதற்கு உள்ளம் பொங்க வேண்டும். இந்தப் பயிற்சி பெறுவதே அவைகளைக் காதலித்து அனுபவித்து வாழ்வதன் உண்மைப் பயன். குலாபிமானம் ஜாதியபிமானமுங்கூடப் பாரமாத்மிக பக்திக்குப் பயிற்சியேயாகும்.

எங்கும் பரவி நிற்கும் மெய்ப்பொருளைக் கண்டு காதலிக்கவே வேதம் ஓதுதல், கலைகள் கற்றல் பூஜை முதலியன அமைந்திருப்பதாகக் கருதுவாய். பரம்பொருளை மறந்து, வேறெந்தப் பொருளைத் தேடி வாழ்ந்தாலும், அது ஏமாற்றத்தையே தரும்.

பரம்பொருளைத் தனியாகக் காணவோ, அடையவோ மனித வாழ்வில் முடியாது. மற்றப் பொருள்களில் அது உள்ளூடு நிற்பதை அறிந்து அப்பொருளின் வழியாகவே அதை அடைய முடியும். பேரிகையிலும் சங்கிலும் ஒலி உண்டாகிறது. ஒலியை மட்டும் எடுத்துப் பிடித்துக் கொள்ள முடியாது. சங்கையும், பேரிகையையும், அவற்றை கோஷிக்கச்செய்பவனையும் அடைந்து, ஒலியைப் பெறலாம். வீணையின் நாதத்தை மட்டும் தனியாக எடுத்து வைத்துக்கொள்ள முடியாது. வீணையைப் பெற்று நாதத்தையும் கேட்கலாம். இவ்வாறே பரம்பொருளையும் காணலாம்.

ஏ

# பரம்பொருளின் இலக்கணம்

*இதுவும் மைத்திரேயிக்கு யாஜ்ஞவல்கியர் உபதேசித்தது:*

ஈர விறகுக் கட்டைகள் போட்டுத் தீ எரியவைத்தால் புகை கிளம்புகிறது. அவ்வாறே வேதங்களும், புராணங்களும், கலைகளும், உபநிஷத்துகளும், யாகங்களும், தானங்களும் எல்லாம் தீயின் புகைபோல் பரம்பொருளினின்று வெளிவந்தன வென்று அறிவாய். சரியாக எரியவிட்டால் பின்னர்த் தீயைக் காண்பாய். வெறும் புகையைத் தீ யென்று கருதிவிடலாகாது.

உப்புக் கட்டிக்கு உள் என்றும், புறம் என்றும் உருவ வேறுபாடு இல்லை. நீரில் கலந்தால் மறைந்து, அவ்வளவும் உவர்ப்பு என்ற புலனுணர்ச்சியாகவே தீர்ந்து போய்விடுகிறது. அவ்வாறே ஆத்மா முக்தி யடைந்தபின் பஞ்ச பூதங்களைவிட்டுப் பரம்பொருளுடன் கலந்து ஒன்றாகிவிடுகிறது. பிறகு அதற்குத் தன்னறிவு கிடையாது.

தான் என்ற அறிவு போய்விடும் என்று முனிவர் சொன்னதும் மைத்திரேயி தயங்கினாள். அதைக் கண்டு யாஜ்ஞவல்கியர், "ஏன் தயங்குகிறாய்?" என்று சொல்லி, மேலும் உபதேசிக்கிறார்:—

இரண்டு வெவ்வேறு பொருள்களிருந்தால், ஒன்று மற்றொன்றைப் பார்ப்பதும் மோப்பதும் அருந்துவதும் வணங்குவதும் கேட்பதும் அறிவதும் முடியும். அனைத்தும் ஒரு பொருளான பிறகு, ஒன்று மற்றொன்றைத் தீண்டுவதும் பார்ப்பதும் அறிவதும் ஏது?

## பரம்பொருளின் இலக்கணம்

அறிவு என்பதே பரம்பொருள். அதற்குமேல் பரம்பொருளை அறிவது எவ்வாறுகும்? 'இது அன்று' 'அது அன்று' என்றே பரம்பொருளுக்கு மறுப்பிலக்கணம் கூற முடியும். வேறு இலக்கணங்கள் கூறமுடியாது. அறிபவனும் அறியப்படும் பொருளும் ஒன்றேயான பிறகு, 'அறிதல்' என்பது ஏது?

"மைத்திரேயி, இதுவே உனக்கு நான் தரும் உபதேசம். பரம்பொருளைப்பற்றி இம்மட்டும்தான் விளக்க முடியும்" என்று சொல்லி யாஜ்ஞவல்கியர் வனம் சென்றுர்.

அ

## சிறு விதைக்குள் மரம் முழுதும்

*சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகர் தம்முடைய குமாரன் சுவேதகேதுவுக்கு உபதேசித்தது சொல்லப்படுகிறது :*

"அனைத்தும் ஒரு சக்தியிலிருந்து வந்ததாகச் சொல்லுகிறீர்களே. இந்த அற்புத உலகம் அவ்வளவும், இந்தப் பல்லாயிர உருவ வேற்றுமைகளெல்லாம், பெயரும் வடிவமுமற்ற ஒரு பொருளிலிருந்து, எவ்வாறு உண்டாகும்?" என்று மகன் கேட்கிறான்.

"அப்பனே! அந்த ஆலமரத்தின் பழம் ஒன்று எடுத்து வா" என்றார்.

சுவேதகேது ஒரு பழத்தை எடுத்து வந்து "இந்தாருங்கள், ஐயா!" என்று சொன்னான்.

"அதைக் கிள்ளு" என்றார்.

"கிள்ளினேன், ஐயா" என்றான்.

"உள்ளே என்ன இருக்கிறது? பார்" என்றார்.

"சின்னஞ் சிறு விதைகள் இருக்கின்றன" என்றான்.

"அவற்றில் ஒரு விதை எடுத்து, அதைக் கிள்ளிப் பார்" என்றார்.

ஒரு சிறு விதையை எடுத்து, சொன்னபடி செய்தான்.

"என்ன காண்கிறாய்?" என்றார்.

"ஒன்றும் கண்ணுக்குக் காணவில்லை" என்றான்.

"அப்பனே, உன் கண்ணுக்குத் தோற்றமாகாமல் அந்த ஒரு விதைக்குள் கிடக்கும் நுண்ணிய பொருளே,

கிளைகளும் இலைகளும் விழுதுகளும் கொண்ட இந்தப் பெரிய ஆலமரம் ஆயிற்று. இந்த மரம் முழுதும் அந்தச் சிறு விதையினுள் கண்ணுக்குத் தெரியாமல் அடங்கியிருந்தது. இதை யோசித்துப் பார். இவ்வாறே உலகம் முழுதும் கண்ணுக்குப் புலப்படாத சத்திலிருந்து உண்டாயிற்று" என்றார்.

பல்லாயிர வருஷங்களுக்குமுன், உத்தாலகர் தம் மகனுக்கு விளக்கிச் சொன்னதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், நாம் இப்போதும் உண்மையறிவும் அடக்கமும் அடையலாம். ஆலம் விதை மிகச் சிறியது. அதற்குள் எவ்வாறு அந்தப் பெரிய மரமும் அதன் கிளைகளும், விழுதும், இலையும், பாலும், காயும் அவைகளின் நிறம், சுவை, குணம், எல்லாம் அடங்கி மூடிக்கிடந்தன? அந்த விதையை எங்கே புதைத்தாலும் இந்த நிறம், இந்தக் குணம், இந்த அளவு, இந்த உருவம் கொண்ட மரமே உண்டாகும். வேறொன்றினின்று இது உண்டாகாது. இதினின்று வேறொன்று உண்டாகாது. மரம் முழுதும் அவ்விதையினுள் அருவமாகக் கிடக்கிறது. இதைப் போலவே, ஒவ்வொரு வகை விதையிலும் அவ்வவ்வகை மரம் முழுதும், பூவின் வாசனையும் நிறமும், மற்ற சகல விசேஷ குணங்களும் மறுபடி அம்மரத்தில் இத்தகைய விதைகள் நிறைந்த கனிகள் உண்டாக்கும் சக்தியும் உள்பட அடங்கி நிற்கின்றன. இந்த அதிசயத்தை ஆழ்ந்து சிந்தித்தால், உலகத்தின் இரகசியம் ஒருவாறு விளங்கும். கற்றறி மூடரும் அடக்கம் பெறலாம்.

பௌதிக ஆராய்ச்சிக்காரர்கள் இப்போது சொல்லி வரும் வழிமுறைப் பரிணமக் கொள்கையானது சங்கோசத்தில் அடங்கி நிற்கிறது.

## ஜலத்தில் கரைந்திருக்கும் உப்புப்போல

இதுவும் உத்தாலகர் தம் மகன் சுவேதகேதுவுக்கு உபதேசித்தது:

"உலகம் முழுவதும் பரவியிருக்கும் இந்தப் பொருள் எவ்வாறு மறைந்து போயிற்று?" என்று மகன் கேட்கிறான். அதற்கு உத்தாலகர் உபதேசித்ததாகச் சொல்லியிருப்பது தற்கால இரசாயன நூல் சோதனை முறையாகவே யிருக்கிறது. மகனை ஓர் உப்புக்கட்டி கொண்டுவரச் சொல்லி, அதைத் தண்ணீரில் போடச் சொன்னார். பிறகு, "நாளைக் காலையில் வா" என்றார்.

மறு நாள் தகப்பனாரிடம் பையன் வந்து நின்றான். "நேற்றுத் தண்ணீரில் போட்ட உப்பைக் கொண்டுவா" என்றார். பையன் பார்த்தான். உப்பு எங்ஙனம் இருக்கும்? கரைந்து போயிருந்தது.

"ஐயா, உப்பு அழிந்து போயிற்று" என்றான்.

"தண்ணீரில் மேலே கொஞ்சம் எடுத்து அருந்து" என்றார்.

"உவர்ப்பா யிருக்கிறது" என்றான் மகன்.

"மத்தியில் அருந்திப் பார்" என்றார்.

"அதுவும் உவர்ப்பாகத்தான் இருக்கிறது" என்றான்.

"அடித்தண்ணீரைப் பார்" என்றார்.

அதை யருந்திப்பார்த்து, அதுவும் அப்படியே இருப்பதாகச் சொன்னான்.

"கொட்டிவிட்டு வா" என்றார்.

மகன் கொட்டிவிட்டு வந்தபின், "உப்பு அழிந்து விட்டதா?" என்று கேட்டார்.

"இல்லை, எவ்வுருவாகவோ எங்கேயோ அது இருந்து கொண்டுதான் இருக்கிறது" என்றான்.

"அப்பனே, இவ்வாறே உலகம் முழுதும் பரம் பொருள் மறைந்து நிற்கிறது. கண்ணுக்குப் புலப்படா மல், அனைத்திலும் இருக்கிறது. அதுவே சத்து, அதுவே ஆன்மா. நீயும் அதுவே. தத் த்வம் அஸி" என்றார்.

## கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டவாறு

ஞான ஒளி பெறும் வழியை உத்தாலகர் டிகனுக்கு உபதேசிக்கிறார் :

"ஒருவனைக் கண்ணைக் கட்டிக் காட்டில் திருடர் கொண்டுபோய் விடுவதுபோல், முன் செய்த கருமங்கள் நமது ஞானத்தை மறைத்து ஆசைகளாகிய மோகக் கட்டுகளால் கண்ணைக் கட்டி, உலகம் என்ற காட்டில் நம்மைக் கொண்டுவந்து விட்டிருக்கின்றன. நாம் இருக்கும் இடம் எது, நம்முடைய ஊருக்குத் திரும்பிப்போக வழி எது என்றறியாமல் பயத்திலும் மயக்கத்திலும் கிடக்கிறோம். தகுந்த ஆசிரியன் கிடைத்துக் கட்டுகளை அவிழ்த்தால் கண்கள் திறந்து வழிதேடி ஊர்போய்ச் சேரலாம். ஆசைக்கட்டுக்கள் அவிழ்ந்தால் கண்கள் திறந்து ஞானப் பிரகாசம் வரும். நம்முடைய உண்மைச் சொரூபம் நமக்குத் தெரியவரும். இல்லாவிடில் எந்த முயற்சியும் பயன் தராது!"

சரியான காட்சி பெறக் கண்ணும் யுக்தியும் போதா. ஆசைத் திரைகள் மனதை மூடாமல் நீங்கவேண்டும். ஆசைகளும் பற்றுக்களும் அறிவைக் கெடுக்கின்றன. அவை உள்ளத்தினின்று நீங்கினால்தான் மனிதனுடைய அறிவு தன் சுபாவ ஒளியைப் பெறும்.

கக

## குருகுல வாசம் முடிந்ததும்

ஒவ்வொரு வருஷமும், தற்காலத்துக் கல்விப் பட்டங்கள் பெறும் மாணவர்களுக்கு, ஒரு நீண்ட பிரசங்கம் சர்வ கலாசாலை மண்டபத்தில் நடைபெறும் வழக்கத்தை அனைவரும் அறிவர். பழைய காலத்திலுங்கூட, குருகுல வாசம் முடிந்ததும் ஆசாரியன் சீடனை வீட்டுக்கு அனுப்பு முன், வாழ்க்கைக் கிரமத்தைப்பற்றி ஒரு கடைசி உப தேசம் செய்வது வழக்கம் என்று தைத்திரீய உபநிஷத்தி லிருந்து தெரிய வருகிறது. அதில், ஓரிடத்தில் இத்தகைய பிரசங்கம் ஒன்றைக் காண்கிறோம்.

குருகுலத்தில் வசித்துவந்த சீடனுக்கு வேதம் ஓது வித்து முடிந்ததும் குரு உபதேசிக்கிறார்.

ஸத்யம் வத | தர்மம் சர ||

ஸ்வாத்யாயான் மா ப்ரமத: ||

ஆசார்யாய ப்ரியம் தனம் ஆஹ்ருத்ய ப்ரஜா தந்தும் மா வ்யவச்சேத்ஸீ: ||

ஸத்யான் ந ப்ரமதிதவ்யம் ||

தர்மான் ந ப்ரமதிதவ்யம் ||

குசலான் ந ப்ரமதிதவ்யம் ||

பூத்யை ந ப்ரமதிதவ்யம் ||

ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம் ||
தேவ பித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம் ||
மாத்ரு தேவோ பவ
பித்ரு தேவோ பவ
ஆசார்ய தேவோ பவ
அதிதி தேவோ பவ ||

"உண்மையைப் பேசு.

அறத்தைச் செய்.

குருவுக்குக் காணிக்கை கொணர்ந்து கொடுத்தபின், சந்ததி என்ற நூல் அறுபட்டுப் போகாமல் காப்பாயாக.

உண்மையினின்று வழுவாதே.

அறத்தினின்று வழுவாதே.

நலனைப் புறக்கணிக்க வேண்டாம்.

செல்வத்தைப் புறக்கணிக்க வேண்டாம்.

ஓதலும் ஓதுவித்தலும் மறக்கவேண்டாம்.

தேவர்களுக்கும் முன்னோர்களுக்கும் செய்ய வேண்டியதை மறக்கவேண்டாம்.

தாயைத் தெய்வமாகக் கருது.

தகப்பனைத் தெய்வமாகக் கருது.

ஆசாரியனைத் தெய்வமாகக் கருது.

வந்த விருந்ினரைத் தெய்வமாகக் கருது."

# குருகுல வாசம் முடிந்ததும்

மேலும் உபதேசம் :

"எந்தச் செயல்கள் குற்ற மற்றனவோ அவையே நீ செய்யத் தக்கவை. மற்றவற்றைச் செய்யக் கூடாது. எங்களிடம் நீ கண்ட நன்னடத்தையைப் பின்பற்று வாயாக; அல்லாதது ஒரு நாளும் வேண்டாம். எங்களை விட மேம்பட்ட அந்தணர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆஸனத்தில் அமர்த்திக் கௌரவிப்பாயாக.

"கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடுக்க வேண் டும். அசிரத்தையாகக் கொடாதே; தாராளமாகக் கொடுக்க வேண்டும்; பயத்துடன் கொடுக்க வேண்டும்; அன்புடன் கொடுக்க வேண்டும்.

"செய்யும் கருமங்களிலேனும் நடக்கும் முறையி லேனும் உனக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டபோது, விவேகமும், தருமத்தில் பற்றும், இரக்கமும் கொண்ட அந்தணர்கள் அவ் விஷயங்களில் எவ்வாறு நடந்துகொள் கிறார்களோ, அவ்வாறு நீயும் நடப்பாயாக. விலக்கப்பட வேண்டிய விஷயங்களைப்பற்றியும் அவ்வாறே பெரியோர் களைப் பின்பற்றுவாயாக.

"இதுவே முறை; இதுவே உபதேசம்; இதுவே வேதத்தில் சொல்லப்பட்டதின் பொருள்; இதுவே கட் டளை; இப்படி நடப்பாயாக! இப்படியே நடப்பாயாக!" கல்வி கற்றவர்கள் எல்லோரும் ஒரு நாட்டில் மேற்கண்ட வாறு உண்மையே பேசி, தரும வழியில் நின்று, ஓது வதையும் ஓதுவிப்பதையும் விடாமல், வாழ்க்கை நடத்தி னார்களானால், பின் அந்த நாட்டுக்கு வேறென்ன வேண்டும்?

குருகுல வாசம் முடிந்ததும், 'குடும்ப வாழ்க்கையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஏன் கஷ்டப்படவேண்டும்?

கவலையற்று இன்னும் படித்துக்கொண்டே சுகமாக இருக்கலாம்' என்று யோக்கியரான சீடர்களும் எண்ணக்கூடும். குருகுலக் கட்டுப்பாடும் நியமங்களும் முதலில் கஷ்டமாகத் தோன்றினும், வழக்கப்பட்டபின் அதிலேயே மனம் ஈடுபட்டுப் போய், குடும்ப வாழ்க்கையின் பாரங்களும் கவலைகளும் வேண்டாம் என்று தோன்றுவது சகஜம். இக்காலத்து மாணவர்களுக்குள்ளும் இந்த மனப்பான்மை உண்டாவதைச் சில சமயம் பார்க்கிறோம். இதை யறிந்தே உபதேசத்தில், "குருவுக்குக் காணிக்கை கொடுத்த பின், அதாவது குருகுலவாசம் முடிந்ததும், சந்ததி என்ற நூல் அறுபட்டுப்போகாமல் காப்பாயாக" என்று சொல்லுகிறார்; விவாகம் செய்துகொண்டு, உன் முன்னோர்களுடைய பரம்பரை அறுந்துபோகாமல் இல்லறம் நடத்து என்பது இதன் பொருள். விவாகத்தில் நம் முன்னோர்கள் அறிந்த பயன் இதுவே. காதல் இன்பமோ அல்லது உடலுக்குள் இருக்கும் விலங்குப்பான்மைக்குச் செய்யும் பூஜைக்கிரமமோ அல்ல, விவாகமும் இல்வாழ்க்கையும்; சமுதாயத்திற்கு நாமும் நம்முடைய குலமும் செய்யவேண்டிய சேவை உண்டு. அதைச் செய்வதற்குரிய பிரஜைகளை நிரந்தரமாக நாம் தயாரித்துக் கொடுத்து உதவ வேண்டும் என்பதே விவாக தத்துவம்.

உபதேசத்தின் அடுத்த பாகத்தில், சத்தியத்தையும் தருமத்தையும் வழுவாமல் கடைப்பிடித்து இல்வாழ்க்கை நடத்து என்கிறார். ஆனால், அந்த வாழ்க்கையிலும் ஓதுவதையும் ஓதுவித்தலையும் மறக்கக்கூடாது என்றும் நினைவூட்டுகிறார்.

பெற்றோர், ஆசாரியர், விருந்தினர் இவர்களைத் தெய்வமாகக் கருதுதல் மிகப் பழைய பேச்சு. ஆயினும் இதுவே நம்முடைய நாட்டின் தனிச்சிறப்புடைய பண்பாடு.

தற்காலக் கல்வியால் இது பழுதுபட வேண்டிய அவசிய மில்லை.

தரும முறையில் நடத்தப்படும் இல்வாழ்க்கையில், கொடுப்பது என்பது ஒரு பெரிய அத்தியாயம். இதுவும் நம்முடைய நாட்டின் பண்பாட்டில் இன்றியமையாத தனிச் செல்வம். 'கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடு; சிறப்பாகக் கொடு. கொடுப்பதில் லோபித்தனம் காட்டாதே; யாசித்தவனை இகழ்ந்தோ, அல்லது உதாசின மாகவோ கொடாதே; கொடுக்கும் சக்தி உனக்கு வாய்த்தது என்று கர்வம் கொள்ளாதே; கொடுப்பதைப் பலர் அறிந்து மெச்சுமாறு டாம்பீகம் செய்யாதே; உன் கொடையைப் பெறுகிறவர்கள்பால் அன்பும் பய பக்தியும் கொண்டு நடந்துகொள்வாயாக' என்கிறார். கொடுப்பது என்பது பிச்சை ஒன்றே யல்ல. எவ்வித உபகாரமும் அதில் அடங்கும்; ஆகையால் இந்த எச்சரிக்கைகள் எல்லா விஷயங்களிலும் பொருந்தும்.

எது செய்யத்தக்கது, எது தகாதது என்பதை அறியும் வழியைப்பற்றி இந்த உபதேசத்தில் சொல்லியிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. ஐயங்களைத் தீர்ப்பதற்குப் பிரமாணம் நல்லோர் வாழ்க்கையே. அறவழியில் நிற்பவர்களைப் பின்பற்று என்று சொல்லவில்லை; விவேகமும் தருமத்தில் பற்றும் படைத்திருப்பதோடு நெகிழ்ந்த மனமுடைய பெரியோர்களைப் பின்பற்று என்றார். தரும சாஸ்திர அறிவினால் இரக்கமின்மை உண்டாவது ஓர் அபாயம். தருமப்பற்றும் தயையும் இரண்டும் கொண்ட அந்தணர்களின் வாழ்க்கைமுறையைப் பார்த்துச் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள் என்றார். கேட்டு அறிந்து அல்ல; அவர்கள் செய்வதைப்போல் நீயும் செய் என்றார். மாணவர்களுக்கு எவ்வளவு அழகான பொன்போன்ற உபதேசம்!

## தருமநூல் தோற்றுவாய்கள்

நசிகேதன் தன் தகப்பனார் நடத்திய யாகத்தில் யமனுக்குத் தட்சிணையாகக் கொடுக்கப்பட்டு, யமாலயம் சென்று, அங்கே தருமதேவதையிடம் உபதேசம் யாசித்த கதை முன்னர்ச் சொல்லப்பட்டது. பையனுடைய தீரத்தைக் கண்டு யமன் மகிழ்ந்து, நீண்ட ஆயுளும் எல்லா உலகபோகங்களும் தருவதாகச் சொன்னபோதிலும் ஒப்புக்கொள்ளாமல், உபதேசமே வேண்டும் என்று நசிகேதன் பிடிவாதமாக வணங்கி நின்றான். விஷயத்துக்குத்தக்க ஆசாரியனும் ஆசாரியனுக்குத்தக்க சீடனும் இவ்வாறு வாய்ந்து, கடோபநிஷத்து உபதேசிக்கப்பட்டது. கடோபநிஷத்து என்பது மிகவும் போற்றப்பட்ட வேதாந்த நூல்.

நம்முடைய முக்கியமான தருமநூல்கள் ஒவ்வொன்றும் மனதைக் கவரும் ஒரு தோற்றுவாயுடன் அமைந்து நிற்கிறது. இராமாயணத்தின் தோற்றுவாய் கேட்டிருப்பீர்கள். ஆற்றங்கரையில் அன்றில் பறவைகள் இரண்டு, மகிழ்ந்து விளையாடிக்கொண்டிருந்த சமயம், வேடன் ஒருவன் தன் பசிக்காக அவைகளிலொன்றைக் கொன்றான். பெண் அன்றில் ஆறாத் துயரத்துடன் தத்தளித்தது. இதைப் பார்த்து இதயம் கரைந்த வால்மீகி முனிவர் தம்மை அறியாமல், "வேடனே! ஏன் இவ்வாறு செய்தாய்? நீ ஒரு நாளும் ஒரு சுகமும் அடையாமல் போவாயாக" என்று சோகமும் கோபமும் நிறைந்த மொழி

களைச் சொன்னார். உணர்ச்சி வேகத்தினால் அம்மொழிகள் செய்யுள் உருவம் கொண்டன.

உடனே, அவர் ஒரு பக்கம் இவ்வாறு சபித்து விட்டோமே என்று தம் கோபத்தைக் கண்டு தாமே பயந்தார். மற்றொரு பக்கம், தம் வாயில் தம்மையும் அறியாமல் வெளிவந்த பாட்டின் அழகைக் கண்டு ஆச்சர்யத்தில் மூழ்கி, அப்பாட்டைத் திரும்பத் திரும்பப் பாடினார். அதன்பின் நாரதர் சொற்படி அந்தப் பாட்டின் சந்தத்திலேயே இராமாயணக் கதையை முதல்முதல் பாடினாராம். இதுவே வால்மீகி ராமாயணத்தின் தோற்றுவாய்.

போர்க்களத்தில் திடீர் என்று சந்தேகமும் மனச் சோர்வும் தோன்றி, வில்லைக் கீழே போட்ட அருச்சுனனுக்கு, கடிவாளவாரும் கையுமாய், கண்ணபிரான் பகவத் கீதையை உபதேசித்தார். இது உலகப் பிரசித்தம்.

இந்திரியங்களையும் மனதையும் அடக்கி, பற்றற்ற உள்ளத்துடன் கருமங்களைச் செய்வது பகவத்கீதையின் உபதேசம். உடலைத் தேராகவும், இந்திரியங்களைக் குதிரைகளாகவும், இந்திரியங்களைச் செலுத்தும் மனதைக் கடிவாளவாராகவும், புத்தியைச் சாரதியாகவும், புலன்கள் செல்லும் விஷயங்களை ரதம் ஓட்டும் பாதையாகவும் அமைத்து, உபநிஷத்தில் ஒரு சிறந்த உவமை சொல்லப்பட்டிருக்கிறது. சாரதியைக்கொண்டு குதிரைகளைச் சரியாக இழுத்துப் பிடித்து ரதத்தை ஜாக்கிரதையாகச் செலுத்தினால், எஜமானனாகிய ஆத்மாவின் யாத்திரை சரியாக முடியும். இல்லையேல், குதிரைகள் கண்டவாறு ஓடி, பிறப்பும் இறப்புமாகச் சுற்றிச் சுற்றிப் போய்க் கொண்டிருக்க வேண்டியதாகும் என்று கடோபநிஷத்து சொல்லுகிறது. இந்தப் பழைய உவமையைக் கருதி,

தேரோட்டும் தோற்றுவாய் பகவத் கீதையின் கர்மயோக உபதேசத்திற்கு மிகவும் பொருத்தமாய்ப் பொருள் செறிந்து அமைந்திருக்கிறது.

யமாலயத்தில் தரும தேவதை உபதேசித்ததாகக் கடோபநிஷத்தில் அமைந்திருக்கும் தோற்றுவாயும் மிகவும் பொருத்தமானதே. இந்த உபநிஷத்தின் விஷயம், ஆத்மா எவ்வாறு உடலுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது. உடலினின்று உயிரைப் பிரித்து எடுத்தேகும் யமதேவனைக் காட்டிலும் வேறு யார் ஆத்ம ரகசியத்தை அறிந்து உபதேசிக்க முடியும்? ஆகையால் யமனையே ஆசாரியனாக அமைத்து இந்த உபநிஷத்து சொல்லப் பட்டது.

இன்னொரு விதமாகப் பார்த்தாலும், ஆத்ம தரிசனம் பெறுவது யாருக்கு முடியும்? புலன்களால் அடையும் போகங்களைப் பொருட்படுத்தாத நசிகேதனைப் போன்ற தீரனுக்குத்தான் முடியும். மாசற்ற உள்ளத்தை எடுத்துக்காட்டச் சிடன் இளவயதாகவும் அமைக்கப்பெற்றான்.

ஆசைகளை யொழித்துப் பற்றுக்களைக் களைந்தாலொழிய அறிவினாலும், வேதம் ஓதுதலினாலும், புலவர்களிடம் ஆராய்ச்சிகள் கேட்பதனாலும் மயக்கம் தீராது; ஆத்ம தரிசனம் அடைய முடியாது. தகப்பனார் செய்த யாகத்தைப் பூரணமாக்கப் பசுக்களுடன் தன்னையும் ஒரு தட்சிணையாகக் கொடுக்கச் சொல்லி, யமாலயம் சென்று, அங்கே யமன் தருவதாகச் சொன்ன மற்ற வரங்களை வேண்டாம் என்று சொன்ன வரலாறு, பக்குவ மடைந்தவன் அடையக்கூடிய ஞானோபதேசத்திற்கு மிகச் சிறந்த தோற்றுவாயாக விளங்குகிறது.

## மரக்கட்டைக்குள் மறைந்துள்ள நெருப்பு

தீக்குச்சியைத் தேய்த்து இக்காலத்தில் நாம் நெருப்பு உண்டாக்கிக்கொள்வதுபோல், நம் முன்னோர்கள் ஒரு மரக்கட்டையின்மேல் மற்றொரு மரக்கட்டை வேகமாக உராயுமாறு கடைந்து, நெருப்பு உண்டாக்கிக்கொண்டு வந்தார்கள். இந்தத் தீக்கடை கோலுக்குப் பெயர், 'அரணி'. ஆத்மா என்பது எத்தகைய பொருள், அது தேகத்திற்குள் எவ்வாறு மறைந்து நிற்கிறது, உடலுக்கும் ஆத்மாவுக்கும் என்ன சம்பந்தம்—முதலிய விஷயங்களை யமன் நசிகேதனுக்கு உபதேசம் செய்யும்போது, அரணியை உவமையாக வைத்துச் சொல்லுகிறான்.

அரணியைக் கடைந்தால் நெருப்புக் கிளம்புகிறது. இந்த நெருப்பு, அதற்குமுன் எங்கே, எந்த உருவமாக இருந்தது? இல்லாத தொன்றை நாம் உண்டாக்க முடியாதே? ஆகையால், மரக்கட்டைக்குள் தீ முன்னரே இருந்தது; மறைந்து நின்றது. தாய் தன் வயிற்றுக்குள் கருவை வைத்துக் காப்பதுபோல், அரணியானது தீயைத் தனக்குள் வைத்திருக்கிறது. ஒளியும், அனலும், சக்தியும் கொண்ட தீ எவ்வாறு மரக்கட்டையினுள் மறைந்து நிற்கிறதோ, அவ்வாறே பிரகாசம் பொருந்தியதும் அழிவிலாததுமான ஆத்மா உடலினுக்குள் அடங்கி மறைந்து நிற்கிறது.

மரக்கட்டையினுள் தங்கியிருக்கும் வரையில் அக்கினியானது வடிவமின்றி நிற்கிறது. ஆயினும் அதுவே விளக்கிலும் அடுப்பிலும் உலையிலும் வடிவுகொண்டு வெளி

வந்து, தினசரி வாழ்க்கையில் உதவுகிறது. அதுவே ஓமாக்கினி யாகி நம்முடைய பூஜையையும் நாம் இடும் அசுவிகளேயும் பெறுகிறது.

எந்த மரக்கட்டையிலும் ஒரே தன்மையான அக்கினி மறைந்து நிற்கிறது. உராய்ந்ததும் வெளிவருகிறது. அதைப்போலவே எல்லா உயிர்களிலும் ஒரே தன்மை யான அந்தராத்மா குடிகொண் டிருக்கிறது. எந்தப் பொருளைத் தீயானது பற்றுகிறதோ அந்தப் பொருளின் வடிவத்தையே கொண்டு அது தோற்றுகிறது. விளக் காகவும், அடுப்புத் தீயாகவும், உலை நெருப்பாகவும், காட் டுத் தீயாகவும், இன்னும் எரியும் பொருள்களுக் கேற்ற வாறு, பல வடிவம் கொள்ளும் அக்கினியைப்போல், அந்த ராத்மா ஒரு தன்மையான பொருளே யாயினும் பல வடி வங்களாகத் தோற்றுகிறது. அனேக விதமான பாத்தி ரங்களை நிறைத்துத் தங்கும் வாயு, தான் தங்கும் பாத்தி ரத்தின் வடிவத்தைக் கொண்டு வேறுபட்டாலும் அது ஒரே தன்மையான பொருளாகும். பாத்திரத்தின் வடிவ பேதங்களினல் வாயுவானது வேற்றுமையற்ற தன் மையை இழக்கவில்லை. அதுபோலவே, அந்தராத்மாவும் பற்பல உடல்களில் தன் உண்மைத் தன்மையை இழக் காமல் வேறுபட்ட தோற்றங்களாகிறது. நெருப்புக்கு இரையாகும் பொருள் வேறு, நெருப்பு வேறு; வாயு வேறு, பாத்திரம் வேறு; உயிர்கள் வேறு, அவைகளினூடு நிற்கும் அந்தராத்மா வேறு. வேறுபட்ட தோற்றங் களில் மறைந்து நிற்கும் ஒருமையைக் காண்பதே ஞானம்.

# அந்தராத்மா

ஞாயிற்றின் ஒளியினுலோ, சந்திரன் நிலவினுலோ வேறு வெளிச்சத்தினுலோ பொருள்களைப் பார்க்கிறோம். ஆயினும் சூரியனும், சந்திரனும், மீனும், மின்னலும் தரும் ஒளியானது, கண்ணுக்குள் படைத்த உணர்வெனும் ஒளியில்லையேல், என்ன பயன்படும்? பொருள்களைப் பார்ப்பது, உள்ளத்துள் நாம் படைத்த ஒளியே யல்லாது, வெளியில் வீசும் ஒளியல்ல. ஒளிக்கெல்லாம் ஒளியாகி நம்முள் நிற்கும் பேரொளியே அந்தராத்மா.

இந்த அந்தராத்மா தானுக ஒளிர்கிறதா? அல்லது ஈசுவரனுடைய ஒளியினுல் பிரகாசிக்கிறதா? இதை எவ்வாறு சொல்வது என்கிருன் யமன்.

கதம் நு தத்விஜானீயாம் கிமு பாதி விபாதி வா ||

இவ்வாறு, உபதேசத்தின் ஒரு பகுதியை யமனே முடிக்கிருன். ஆத்மா வேறு, பரமாத்மா வேரு? அல்லது இரண்டும் ஒரு தன்மையை உடைய இரு பொருள்களா? அல்லது இரண்டும் ஒன்றேயா? என்ற கடினமான கேள்விகளைப் பண்டிதர்களுக்கு விட்டுவிடலாம். ஒவ்வொரு ஜீவனுள்ளும் பேதமற்ற சுத்தப்பொருள் ஒன்று உண்டு என்கிற பேருண்மையை நன்கு உணர்ந்து, அந்த அறிவை உள்ளத்தினுள் பதியவைத்து, அது உள்ளத்தில் வேரூன்றி உயிர் கொண்டு நிற்கச் செய்வதே ஞானம். உயிரற்ற அறிவினுல் பயனில்லை. உயிர்கொண்ட ஞானம் உள்ளத்தில் வேர்கொண்டு, இலையும், பூவும், காயும், கனியும் தரும். நற்செயலும், சாந்தியும், நல்லெண்ணெங்களும் உண்டாகும். அவையே உயிர்கொண்ட அறிவின் பூவும், கனியுமாகும்.

கரு

## சாப்பாட்டில் குற்றம் சொல்ல வேண்டாம்

பல கோடி ஜீவராசிகளின் உடல்கள் அனைத்தும் அவை உண்ணும் உணவிலிருந்து உண்டாகின்றன. ஜீவன்களின் உயிரைத் தாங்குவதும் உணவே யாகும். இவ்வளவே யல்ல. எல்லா ஜீவன்களும் முடிவில் வேறு ஜீவன்களுக்கு உணவாகவே முடிகின்றன. ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு தாவர வகையும் பிராணி வகை ஜீவனும் வேறு தாவர ஜங்கம உயிர்களுக்கு ஆகாரமாய் முடிவதை அறிவோம். வேரூன்றி வளரும் செடி முதலிய உயிர்களும், ஊர்ந்தும் பறந்தும் கால்களைக் கொண்டு நடந்தும் செல்லுகின்ற எல்லாப் பிராணி வகைகளும், தம் உடல்களை ஒன்று மற்றொன்றுக்கு உணவாகவே உதவுகின்றன. இதுவே சிருஷ்டி அமைப்பு.

சிருஷ்டியிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றி, ஒன்றுக்கொன்று இன்றியமையாத சம்பந்தமுமாகின்ற இந்த 'உணவு' என்னும் பொருளிலே பிரம்மத்தைக் காணலாம் என்பது உபநிஷத்து உபதேசம்.

"அதோ அந்த மாமரத்தின் வடக்குக் கிளையைப் பார். அதன் மேலிருக்கும் ஏழு நட்சத்திரங்களுக்குப் பெயர் சப்த ரிஷி. அதில் வால்போல் நீண்டு கிடக்கும் மூன்று நட்சத்திரங்களைப் பார்" என்று இவ்வாறு படிப்படியாகப் பையனுக்குச் சொல்லி, அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவதுபோல் உணவின் பேரிரகசியத்தை விளக்கி, அதிலிருந்து படிப்படியாகப் பிரமத்தை முனிவர் உபதேசிக்கிறார்.

## சாப்பாட்டில் குற்றம் சொல்லவேண்டாம்

உலக சிருஷ்டி அனைத்தையும் ஒன்றுக்கொன்று பிணைத்துக் கட்டும் உணவு என்ற சிறந்ததொரு பொருளை அலட்சியம் செய்யலாகாது. அதன் அருமையை அறிந்து மதித்தல் வேண்டும்.

அன்னம் ந நிந்த்யாத் தத்வ்ரதம் ||

"உண்ணும் உணவைப் பழித்தலாகாது; இது விரதமாகும்" என்று தைத்திரீய உபநிஷத்தில் பிருகுவுக்கு அவர் தகப்பனார் உபதேசிக்கிறார்.

தற்காலத்து வைத்திய சாஸ்திரப் புலவர்களும் இதையே சொல்வார்கள். ஆகாரம் உட்கொள்ளும் சமயத்தில் அதைப் பழித்தலோ, குறைகூறலோ, சந்தேகித்தலோ ஆரோக்கிய முறையாகாது. சாப்பிடும்போது, இது நல்லது, இது ஜீரணமாகிவிடும், இது எனக்கு ஆரோக்கியம் தரும், பலம் தரும், உள்ளத்தையும் சுத்தமாக்கும் என்றே எண்ணி உணவை உட்கொள்ள வேண்டும் என்பது, ஆரோக்கிய சாஸ்திர நியதி. நாம் எண்ணும் எண்ணங்களுக்கு அதிக சக்தி உண்டு. புசிக்கும்போது நாம் கொள்ளும் நம்பிக்கையே உணவை நல்லதாகவும் தீயதாகவும் செய்யும்.

அன்னம் ந பரிசக்ஷீத தத்வ்ரதம் ||

"உணவை எறியலாகாது; இது விரதம்." உணவு நன்றாயில்லை என்று தள்ளக்கூடாது. நன்றாயிருப்பதையும் அளவுக்கு மிஞ்சிப் பரிமாறிக்கொண்டு பிறகு எறியக் கூடாது. உயிரைக் காப்பாற்றக்கூடிய உணவுப் பொருளைக் காட்டிலும் அருமையான பொருள் உலகத்தில் உண்டோ? உணவை வீணாக்குதல் கூடாது. மிக்க அருமையான பொருளை அலட்சியம் செய்வதோ, வெறுப்பதோ ஒழுக்கமன்று.

இந்த முக்கியமான ஒழுக்க முறையை இப்போது நம் நாட்டில் ஜனங்கள் உணரவில்லை. பல்லாயிரவருஷங்களுக்கு முன், வேதாந்த ஞானத்தில் ஒரு பாகமாக உபநிஷத்திலுங் கூடச் சொல்லி விளக்கப்பட்டதாயினும், அதை இன்னும் கவனியாமல், மூடர்களைப்போல் நாம் நடந்துகொள்கிறோம். வேண்டிய அளவுக்கு மேலும், வேண்டாதவைகளையும், வற்புறுத்தி வற்புறுத்திப் பரிமாறுவதும், வற்புறுத்துதலை எதிர்பார்ப்பதும், உணவு முடிந்து எறியும் இலைகளில் ஏராளமான தின்பண்டங்கள் கிடப்பதும் நம் நாட்டின் கெட்ட வழக்கமாகி வருவதைப் பார்க்கிறோம்.

அன்னம் ந நிந்த்யாத் ||

அன்னம் ந பரிசக்ஷீத ||

என்ற உபநிஷத்து உபதேசத்தை நாம் இப்போதாவது கவனித்து நம்முடைய தினசரி வழக்கத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

"உணவை ஏராளமாக உண்டாக்குவாயாக" என்பதும் முனிவர் உபதேசம்.

அன்னம் பஹு குர்வீத தத்வ்ரதம் ||

"சோர்வு கொள்ளாதே. உனக்காக மட்டும் உணவு உண்டாக்கினால் போதாது. நாட்டுக்குப் பயன்படுமாறு உணவு ஏராளமாக உண்டாக்கு" என்கிறார் முனிவர். இதைவிட உயர்ந்த பொருளாதார உபதேசம் என்ன வேண்டும்? சமுதாயத்திற்கு உழைப்பாயாக; உணவு ஏராளமாக உண்டாக்குவதே சமூகத்திற்குச் செய்யும் பேருதவி; பொருளை உண்டாக்கும் முயற்சிகளை எப்போதும் செய்வாயாக; சோர்வு வேண்டாம்; இதுவே ஒழுக்கம்" என்பது உபநிஷத்து வாக்கியம்.

## சாப்பாட்டில் குற்றம் சொல்லவேண்டாம்

பொருளை உண்டாக்குவாயாக என்று உபதேசித்து விட்டுத் தொடர்ந்தால்போல் சொல்லுவதையும் கவனிக்க வேண்டும். பொருள் உண்டாக்குவது உனக்காக அல்ல; மற்றவர்களுக்காக :

ந கஞ்சந வஸதௌ ப்ரத்யாசக்ஷீத தத்வ்ரதம் ||

"எவருக்கும் இடமில்லை என்று சொல்லாதிருப்பாயாக; இதுவே ஒழுக்கம்." வந்த விருந்தினருக்கு, இல்லை என்று சொல்லக்கூடாது. சோர்வற்ற முயற்சியைக் கொண்டு, ஏராளமான உணவுப் பொருள்களை உண்டாக்கி, அதை வீண் செய்யாமல் காப்பாற்றி வைத்தால், வந்த விருந்தினரை, போ என்று சொல்ல வேண்டிய அவசியமிராது. பொருளில்லை என்ற தரித்திரத்தின் கஷ்டம் இராது. செல்வம் படைத்துச் சிக்கனமாக வாழ்ந்தால், உலோபித்தனம் வந்து மனதைக் கவர்ந்துகொள்ளப் பார்க்கும்; அது கூடாது. வந்த விருந்தினரைப் போ என்று சொல்லாதே; எவருக்கும் இடம் கொடுப்பாயாக; அதுவே ஒழுக்கம் என்கிறார் முனிவர்.

எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால்,

உண்ணும் உணவில் குற்றம் காணவேண்டாம்.
ஏராளமான உணவுப் பொருளை உண்டாக்கு.
உணவை வீணாக்காதே.
அனைவருக்கும் அன்னம் இடு.

உணவைப்பற்றி உபநிஷத்திலிருக்கும் சிறந்த உபதேசம் இது.

# உலர்ந்த கட்டையும் தளிர்த்துவிடும்

'மறை' என்றால் மறைந்து நிற்கும் பரம்பொருளை விளக்கும் நூல் என்று பொருள். மறைத்து வைக்கவேண்டிய நூல் என்பதல்ல.

"இந்த உபதேசத்தை ஓர் உலர்ந்த கட்டையின்மேல் நீ தெளித்தாயானாலும் அது தளிர்த்து இலையுங் கிளையுங் கொள்ளும்" என்று சத்தியகாம ஜாபாலர் சாந்தோக்கியத்தில் ஓர் அத்தியாயத்தை முடிக்கிறார்.

உண்மைக்கு உயிர் உண்டு, சக்தி உண்டு என்பதை இது எவ்வளவு அழகாக எடுத்துக்காட்டுகிறது! உலர்ந்த கட்டையும் உயிர் கொண்டு தழைக்கும் என்றால், புத்திமானுக்கு அறிவு ஊட்டி உய்விக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

உண்மையின் சக்தி இவ்வாறாயினும், போதனை முறையில் நம்முடைய முன்னோர்கள் சில நிபந்தனைகளை வைத்திருந்தனர். தற்காலத்துக்கு ஏற்றவாறு முறைகளை மாற்ற வேண்டும். ஆயினும், பழைய நிபந்தனைகளை ஆராய்வதில் பயனுண்டு. அவற்றில் காணும் சில தத்துவங்கள் என்றைக்குமே பொருந்தும்.

நம்முடைய முன்னோர்களுடைய கொள்கையில் முக்கியமான தொன்று என்னவென்றால், சிக்கலான விஷயங்களை ஆசாரியன் சொல்ல, பக்தியுடன் சீடர்கள் நேரில் கேட்டால்தான் உண்மைகள் சரியாக விளங்கும்; எழுத்து வாயிலாக உபதேசம் சரிவரப் பெறமுடியாது என்பது.

உபநிஷத்து என்று பெயர்கொண்ட நூல்கள் வெறுங் குறிப்புக்களாகவே யாக்கப்பட்ட நூல்களெனக் கருத

லாம். நேரில் கேட்டு உபதேசம் பெற்ற சீடர்கள், தாம் கற்றறிந்ததை, வேண்டும்போது பிறகு நினைவுக்குத் தந்து கொள்ள இந்த செய்யுட் குறிப்புக்கள் உதவுமே யொழிய, குறிப்புக்களைக் கொண்டே ஞானம் பெற முடியாது.

இக்காலத்திலும் பள்ளிக்கூடங்களில் நடைபெறும் முறையைக் கவனித்தோமானால், உபாத்தியாயர்கள் சொல்லி மாணவர்கள் எழுதிக்கொள்ளும் குறிப்புக்களும் இவ்வாறே என்பதைக் காணலாம். கலாசாலைகளில் உபாத்தியாயர்கள் சொல்லும் குறிப்புக்களை அச்சடித்துப் புத்தக வடிவமாக வழங்கிவிட்டு, கலாசாலைக்கு மாணாக்கர்கள் யாரும் வந்து புலவர்கள் விளக்கிச் சொல்லுவதைக் கேட்க வேண்டிய தில்லை என்று சொன்னால் மதியீனமாகும். அத்தகைய குறிப்புக்களை அச்சிடுவதே கூடாது என்பார்கள். புலவர்கள் விளக்கியதை நேரில் கேட்ட மாணவர்களுக்குத்தான் அக் குறிப்புக்கள் பயன்படும். இந்த உண்மையை யறிந்தே முற்காலத்திலும் சாஸ்திரங்களைக் குருவிடம் நேரில் உபதேசம் பெற்றுப் படிப்பது தான் முறை என்று பெரியோர்கள் விதித்தார்கள். அக்காலத்தில் அச்சு கிடையாது. ஆகையால் மனனத்திற்குச் சௌகரியமாக உபதேசக் குறிப்புக்களைச் சந்தம்பொருத்தி யாத்து, முனிவர்கள் பாடினார்கள். பழைய விஷயங்களை விமரிசனை செய்யும்போது பழைய காலத்திய நிலைமையை நன்றாகக் கவனித்தல் வேண்டும். இதற்கு வேண்டிய கற்பனாசக்தி இல்லாதவர்களால் விஷயங்களை ஆராய்ச்சி செய்ய இயலாது.

உபநிஷத்து முதலிய சாஸ்திரங்களை, முற்காலத்திய அறிஞர்கள் மறைத்து வைத்துக்கொண்டு, பொதுஜனங்களுக்குத் தாராளமாக விநியோகிக்காமல் உலோபிகளாக நடந்துகொண்டார்கள் என்று சிலர் தவறாக எண்ணுவ

துண்டு. மருந்துகளை வைத்தியர்கள் மிக ஜாக்கிரதையாகத் தான் வைத்து வழங்குவார்கள். மருந்தை அறிந்து உபயோகித்தால் அது அமிருதம் போன்ற பொருளாகும். ஆனால், அதுவே அறியாதவர்கள் கையில் அபாயமான விஷமாகும். அத்தியாத்ம உண்மைகள் பக்குவமும் தகுதியும் பார்த்தே உபதேசம் செய்யத்தகும். தீர விளங்காத விஷயங்கள் தவறான பொருளும் பயனுங்கொண்டு தீமைக்கு ஏதுவாகும்.

முற்காலத்திய போதனைமுறை நிபந்தனைகளில் மற்றொரு விஷயம் குறிப்பிடத்தக்கது. சீடன் ஆசாரியரிடம் அன்பும் பக்தியும் கொண்டு அவருக்குச் சேவை செய்வதையே முக்கிய காரியமாகக் கருத வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு செய்தால்தான் அவருடைய உள்ளமும் சீடனுடைய உள்ளமும் ஒன்றாகச் சேர்ந்து, அவர் செய்யும் உபதேசத்தின் பொருள் விளங்கி, வேர் ஊன்றிப் பயன்பெறும். குருவுக்குச் சேவை செய்வதே பிரமசாரியின் முதல் கடமை. சேவை செய்து மிகுந்த நேரத்தில் உபதேசம் பெற வேண்டும் என்பது விதி. தற்காலத்தில் இது வியப்பாகவும் தவறாகவும் தோன்றும். ஆயினும் இதில் ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. சரியான மனப்பான்மைக்கு அத்தாட்சியும் ஏதுவுமான சேவையால் சீடனைப் பரீட்சையும் பக்குவமும் செய்தே உபதேசம் தர வேண்டும்.

குருவுடன் வாசம் செய்யும் சீடனுக்கே உபதேசம் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. தகப்பனிடம் மகன் உபதேசம் பெறலாம், அல்லது ஆசாரியனிடம் ஒரு வருஷ காலமாவது குருகுலவாசம் செய்த சீடன் உபதேசம் பெறலாம். மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டாம் என்று பல இடங்களில் சொல்லப்பட்டிருக்

கிறது. வேறு இடத்தில் குடியிருந்துகொண்டு, படிப்புக்கு மட்டும் குருவிடம் போய் உபதேசம் பெறுவதில் பயனில்லை. தற்காலத்திய கல்விமுறைப் புலவர்களும் இதையே சொல்வார்கள்.

தான் அறிந்ததைப் பிறருக்கு முறைப்படி உபதேசம் செய்யவேண்டியது, உபதேசம் பெறும் சீடனது கடமை. அவ்வாறு செய்யும் எண்ணங்கொண்டவனுக்கே உபதேசம் செய்ய வேண்டும் என்று உபநிஷத்துகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. கல்வி கேள்விகளின் காப்புக்கும் வளர்ச்சிக்கும் இந்த விதி மிக முக்கியமானது. பிறருக்குக் கொடுக்க உத்தேசிப்பவனுக்கே கல்விச் செல்வத்தை வழங்க வேண்டும்.

சீடன் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவனாக இருக்க வேண்டும். சமூகப் பழக்க வழக்கங்களை நிராகரிப்பவனாக இருக்கக் கூடாது. தன் கடமைகளைச் சரியாகச் செய்திருக்க வேண்டும். உபதேசம் பெறுவதற்கு முந்திப் படித்து முடித்திருக்க வேண்டியதை யெல்லாம் குறைவின்றிப் படித்திருப்பதோடு, கோபத்தையும் ஆசைகளின் வேகத்தையும் அடக்கினவனாக இருக்க வேண்டும். குணசீலனாக இல்லாதவனுக்கு உபதேசம் செய்யக்கூடாது.

நல்ல பெருந்தன்மை கொண்டவனும், தெய்வபக்தியுள்ளவனும், குருவைத் தெய்வம்போல் கருதிப் பக்தி செலுத்துபவனுமான சீடனுக்குச் சொன்னால் உபதேசத்தின் பொருள்கள் ஒளிபெற்று விளங்கும் என்பது உபநிஷத்து வாக்கியம்.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஆசாரியனிடத்தில் பெறவேண்டிய உபதேசத்தைப் பெற்று, முறைப்படி பிரமசரியம் முடிந்தபின் விவாகம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி இல்லற வாழ்க்கையிலும், கற்றதை

மறக்காமல் கிரமமாகச் சிந்தனை செய்துகொண்டு வந்து, நல்ல குழந்தைகளைப் பெற்று, குடும்பக் கடமைகள் முடிந்த பின், புலன்களை அடக்கி ஜீவகாருண்ய விரதம் பூண்டு, வாழ்க்கைப் பிரயாணத்தை முடிக்க வேண்டும் என்பது நம்முடைய முன்னோர்களின் கொள்கை. மரணம் வரையில் குடும்பப் பற்றையும் அதனால் உண்டாகும் கவலைகளையும் வைத்துக்கொண் டிருக்கக் கூடாது. கல்விப் பருவம், இல்லறப் பருவம், தவப் பருவம் என ஆயுள்நாளைப் பங்கிடுதல் வேண்டும். அவ்வாறு வகுத்துக்கொண்டு கடமைகளைக் கவனித்தால் அறிவும் ஆற்றலும் பெற்று, அவ்வப்பருவக் கடமைகளையும் சரிவரச் செய்வோம்.

கஎ

# தண்ணீர்க் குடத்தில் கண்ட 'ஆத்மா'

"ஆத்மாவைப் பசி, தாகம், சோகம், மூப்பு, மரணம், பாவம், எவையும் தீண்டா. ஆத்மாவே அறியத் தக்கப் பொருள். அதை யறிந்தபின் எல்லா இன்பங்களையும் பதங்களையும் அடைந்தவாறே யாகும்."

இவ்வாறு பிரஜாபதி சொன்னதாகக் கேள்விப்பட்ட தேவர்களும், அசுரர்களும் "சரி, சகல லோகங்களும் சகல இன்பங்களும் தரக்கூடிய இந்த ஆத்மாவை எப்படி யாவது அடையவேண்டும்" என்று தீர்மானித்தார்கள்.

தேவர்களுக்காக இந்திரனும், அசுரர்களுக்காக விரோசனனும் தனித்தனியாகப் புறப்பட்டுச் சமித்தும் கையுமாகப் பிரஜாபதியிடம் போய் வணங்கி நின்றார்கள். பழைய காலத்தில் உபதேசத்திற்காகக் குருவிடம் சீடர்கள் போகும் முறை இதுவே.

பிரமசரிய விரதம் பூண்டு பல வருஷங்கள் குருகுலத்தில் வசித்தார்கள். பிறகு ஒரு நாள் குரு, "என்ன தேடி வந்தீர்கள்?" என்று கேட்டார்.

"ஐயனே! மூப்பு, மரணம், சோகம், பசி, தாகம் இவைகளில் யாதும் தீண்டாத ஆத்மா ஒன்று உண்டென்றும், அதுவே அறியத்தக்கதும் அடையத்தக்கதுமான பொருள் என்றும், அதை ஒருவன் அடைந்துவிட்டால் எல்லாப் பதங்களும் பேரின்பங்களும் அடைவான் என்றும், தாங்கள் சொன்னதாகப் பேசிக்கொள்கிறார்கள். அந்தப் பொருளைக் காணவந்தோம். ஆத்மா என்பது எது?" என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட பிரஜாபதி, "கண்களுக்குள் தோற்றப்படுபவனே ஆத்மா" என்றார். இது ஒரு பழைய மந்திரம். இதன் பொருள், கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்தால் காணப்படும் புருஷனே ஆத்மா என்பதாம். சீடர்களைப் பரீட்சை செய்ய அந்தப் பழைய மந்திரத்தைச் சொன்னார்.

பிரஜாபதி சொன்ன மொழிகளைக் கேட்டு அவர்கள், "ஜலத்தில் பார்த்தால் உருவம் காண்கிறோமே; கண்ணாடியிலும் காண்கிறோமே; அது யாருடையது? அவனும் ஆத்மாதானே?" என்று கேட்டார்கள்.

அவர்கள் மனோநிலையைக் கண்டு பிரஜாபதி அதிகம் வளர்க்காமல், "ஆம், இவை அனைத்திலும் ஆத்மாவைக் காணலாம்" என்று சொல்லி, "போய்த் தண்ணீர்க் குடத்தில் ஆத்மாவைப் பார்த்து, கண்டதும் காணாததும் வந்து சொல்லுங்கள்" என்றார்.

அவ்வாறே அவர்கள் தண்ணீர்க் குடத்தில் தங்கள் முகத்தை நன்றாகப் பார்த்துவிட்டுச் சந்தோஷமாகத் திரும்பினார்கள்.

"ஆத்மாவைப் பார்த்தீர்களா?" என்றார் குரு.

"ஆம், பார்த்தோம்; மயிர், நகம் உள்பட எல்லாம் சரியாகக் கண்டோம்" என்றார்கள்.

"குளித்து, நல்ல உடுப்பு அணிந்து, மறுபடி தண்ணீர்க் குடத்தில் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றார்.

அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

"என்ன பார்த்தீர்கள்?" என்று கேட்டார்.

"நாங்கள் இருந்தபடியே, ஆத்மாவும் குளித்து நல்ல உடையும் ஆபரணமும் அணிந்திருக்கக் கண்டோம்" என்றார்கள்.

"சரி! அழிவற்ற பொருளைக் கண்டீர்கள்" என்றார்.

அதைக் கேட்டுத் திருப்தியடைந்து இருவரும் தத்தம் இருப்பிடம் திரும்பினார்கள். விரோசனன் மிக்க மகிழ்ச்சியுடன் அசுரர்களுக்குத் தான் கற்றதைப் போதித்தான். "சரீரமே ஆத்மா; அதற்கே சேவை செய்யுங்கள். பூசிக்கத்தக்கது தேகமே; அதைச் சரியாக உபாசித்தால் எல்லாச் சுகமும் அடைவோம்" என்று அசுரர்களுக்கு உபதேசித்தான்.

இப்போதும் அசுரத்தன்மை கொண்டவர்கள் தானம், தருமம், பூஜை, வேள்வி, இவைகளில் ஏதும் பயனில்லை; உடலைத் தவிர வேறு எதையும் கவனிக்க வேண்டியதில்லை என்பார்கள்.

விரோசனன் திருப்தி அடைந்துவிட்டபோதிலும் இந்திரன் கொஞ்ச தூரம் நடந்ததும் ஐயங்கொண்டான். 'இதென்ன? நான் குடத்தில் பார்த்தது சரீரத்தின் பிம்பந் தானே? தேகம் அலங்கரிக்கப்பட்டபோது அலங்கரிக்கப் பட்டவாறும், குளித்தபோது குளித்தவாறும், உடையும் ஆபரணமும் தரித்தபோது உடையாபரணம் தரித்தவாறும் இருந்தது இந்தப் பிம்பம். குருடனானால் குருடனாகவும், நொண்டியானால் நொண்டியாகவும், வேறு அங்கம் இழந்தால் அவ்வாறே அதுவும் அங்கஹீனத்துடனும், குடத்தில் காணப்படும் இந்தப் பிம்பம் மாறுபட்டுத் தோன்றும். நாம் தேடிய அழிவற்றதும், வேறுபாடற்றதும், பயமற்றதுமான ஆத்மா இது எவ்வாறு ஆகும்? நான் உண்மையைக் காணவில்லை என்று தனக்குள் சந்தேகங்கொண்டு திரும்பினான்.

மறுபடி சமித்தும் கையுமாகப் பிரஜாபதியிடம் நின்றான்.

"ஏன் திரும்பினாய்? விரோசனனும் நீயும் திருப்தியடைந்து போனீர்களே?" என்றார் பிரஜாபதி.

"பகவானே! தாங்கள் சொல்லிக் காண்பித்த ஆத்மா இந்தச் சரீரத்தைப் போலவே, உடை, ஆபரணம், நோய், அவயவக் குறைகள், அனைத்தும் கொண்டதாகவே இருந்தது. இது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை" என்றான் இந்திரன்.

"நீ சொல்வது உண்மை. உனக்கு இன்னும் உபதேசம் செய்வேன். நீ இங்கே தங்குவாயாக" என்றார் பிரஜாபதி.

சில ஆண்டுகளுக்குப் பின் பிரஜாபதி இந்திரனைப் பார்த்து, "அப்பனே! ஒருவன் தூங்கும்போது கனவு கண்டு, உடலை விட்டு வெளியேகி, எதேச்சையாக மகிழ்ந்து செல்லுவது நீ அறிவாயல்லவா? அவனே ஆத்மா" என்றார்.

இதைக் கேட்ட இந்திரன், உடலினின்று வேறான ஆத்மாவை அறிந்ததாகத் திருப்தியடைந்து விடைபெற்றுச் சென்றான். ஆனால், போகும் வழியில் முன்போலவே மறுபடியும் பெரிய சந்தேகம் தோன்றிற்று.

"குருடனாக இருந்தாலும், வேறு அங்கக் குறைகளிருந்தாலும், கனவு காணும் ஆத்மா அக் குறைகளில்லாமலிருப்பது உண்மையே. ஆயினும் கனவு காணும்போது, அடிபட்டும் வெருட்டப்பட்டும் துயரப்பட்டும் கண்ணீர் விட்டழுதுங்கூட அலைகிறோம். இந்த நிலையானது சோகம் தீண்டாத ஆத்மா எவ்வாறு ஆகும்? இது சரியல்ல. நான் உண்மையைக் காணவில்லை" என்று பிரஜாபதியிடம் மறுபடியும் வந்து நின்றான்.

"என் திரும்பினாய்?" என்றார்.

"குருவே! சரீரத்தில் கண்ட குறைகள் கனவில் நீங்கியவாறு தோன்றினாலும், நோயும், துயரமும், பயமும், கண்ணீரும் கனவிலும் தொடர்ந்து நிற்கின்றனவே? இது

எவ்வாறு ஆத்மா ஆகும்? எனக்குத் திருப்தியாகவில்லை'' என்றான்.

"நீ சொல்லுவது உண்மை. இன்னும் சில நாட்கள் இங்கே தங்குவாய்; விளக்குவேன்'' என்றார்.

இந்திரன் அவ்வாறே காத்திருந்தான். பிறகு ஒரு நாள் பிரஜாபதி, "அப்பனே, கனவுகள் இன்றி, நினைவு இன்றி, ஏதும் அறியாமல் தூங்கும் நிலையே ஆத்மா'' என்றார்.

இதைக் கேட்ட இந்திரன், "உடலினின்று வேறு பட்ட ஆத்மாவை இப்போது அறிந்துவிட்டேன்'' என்று எண்ணி, தேவலோகம் திரும்பிப்போனான். போகும் வழியில் மறு முறை முன்போலவே ஐயங்கொண்டான்.

"இதென்ன? உணர்ச்சியின்றித் தன்னைத்தான் அறியாத ஒரு பொருள் எவ்வாறு ஆத்மா ஆகும்? இது சுத்த சூனியமாகும். இது சரியல்ல'' என்று மறுபடியும் திரும்பினான்.

சமித்தெடுத்துக் குருவின்முன் வணங்கிநின்று, "நான் திருப்தி கொண்டது பிழை. சூனியத்தை ஆத்மாவாகக் கொண்டேன். தன்னைத்தான் அறியாதது எவ்வாறு ஆத்மா ஆகும்?'' என்றான்.

"நீ சொல்லுவது உண்மை. இன்னும் ஒரு முறை முடிவாக உபதேசம் பெறுவாய். இன்னும் ஐந்து ஆண்டுகள் இவ்விடம் இருப்பாயாக'' என்றார். அவ்வாறே இருந்து உபதேசம் பெற்றான். ஆக, இந்திரன் பிரஜாபதியிடம் நூற்றோர் ஆண்டுகள் சீடனாக விரதம் பூண்டு, காத்து உபதேசம் பெற்றதாக வேதம் சொல்லுகிறது.

இந்தத் தேகம் அழியும் பொருள். அது மரணத்தில் அகப்பட்டுக்கிடக்கும் வஸ்து. மரணமற்றதும் சரீரமற்றதுமான ஆத்மா, தேகத்தில் மறைந்து வசிக்கிறது. அது தேகத்தினுள் வசிக்கும்போது, தானே தேகமாகவும்,

தேகமே தானாகவும் மயங்கி, தேகத்தின் இன்பதுன்பங்களுள் கட்டுண்டு கிடக்கிறது. தேகத்தினுள் இருக்கும் வரையில் இந்தப்படி கட்டுண்டுதானிருக்கும். சரீரத்தை விட்டு அகன்றபின் அது விடுதலை யடையும். சூரியனைக் கண்ட ஜலம் அருவமாகி, அதாவது உருவமற்றதாகி மேல் நோக்கிச் செல்லுவதுபோல், பரஞ்ஜோதியின் ஒளிபட்டதும் இந்த ஆத்மாவும் கிளம்பிப் பரஞ்ஜோதியுடன் கலந்து ஆனந்த நிலையை அடையும்.

வண்டியில் கட்டிய குதிரையைப்போல் ஆத்மா சரீரத்தில் கட்டப்பட்டு நிற்கிறது. காண்பது கண் அல்ல; கண்ணைக் கருவியாகக்கொண்டு காண்பது ஆத்மா. பேசுவது நாக்கு அல்ல; நாக்கைக் கருவியாகக்கொண்டு பேசுவது ஆத்மா. காதைக்கொண்டு இதைக் கேட்பேன் என்பது ஆத்மா. மனதும் ஆத்மா அல்ல; இதை எண்ணுவேன் என்று மனதைக்கொண்டு எண்ணுபவனும் மனதை அடக்குபவனும் ஆத்மா. மனதையே கண்ணாகக் கொண்டு தியானத்தில் மூழ்கிப் பரமாத்மாவைக் கண்டு ஆனந்தம் கொள்பவன் ஆத்மா.

இவ்வாறு உடலினின்றும் இந்திரியங்களினின்றும் உடலின் செயல்களினின்றும் மனதினின்றும் வேறான பொருளே ஆத்மா; அது தன்னில் தானே பரமானந்தம் அடையும். சரீரம் வேறு; அது வேறு.

குடத்திலும் கண்ணாடியிலும் கண்ட பிம்பமே ஆத்மா என்று கதையில் இந்திரன் முதலில் நினைத்தது பெரிய அறிவீனம் என்று நாம் எளிதில் காண்கிறோம். ஆயினும், மிகுந்த அறிவும், கல்வி கேள்விகளும் பெற்றவர்களேயாயினும், உண்மையில் உடலின் உணர்ச்சியையே ஆத்மாவினதாகக் கொண்டு கலவரப்படுத்திக்கொள்கிறோம். உடலின் உணர்ச்சியை வேறுபடுத்தி, ஆத்மா

என்ற தனிப்பொருளைச் சிந்தித்துக் காண்பதும், கண்டா லும் அதை மனதில் நிறுத்துவதும் கடினமேயாகும். ஆழ்ந்து பார்ப்பின், நீர்க்குடத்தில் இந்திரன் கண்ட பிம்பத்தைத்தான் நாம் அனைவரும் ஆத்மாவாகக் கருதி வாழ்கிறோம்! விளக்கிச் சொல்லும்போது, பிழையை எளிதில் காண்கிறோம். ஆனால், அடுத்த நிமிஷத்தில் மறுபடியும் பழைய பிழையிலேயே நிற்கிறோம்.

கஅ

## வில் வளைத்த தியானம்

அனேக ஆயிர வருஷங்களுக்கு முன்னமேயே, முண்டக உபநிஷத்தில், அங்கிரஸ முனிவர் சாஸ்திரம் படித்தல் மட்டும் போதாது என்று சௌனகருக்கு உபதேசிக்கிறார்.

கற்க வேண்டிய கல்வி இரு வகை யாகும். ஆரம்பப் பகுதி ஒன்று; மற்றொன்று பேரறிவு. ஸ்வரம், வியாகரணம், சந்தம், பதவுரை, இவையடங்க சகல வேதங்களையும் நன்றாகக் கற்றபோதிலும், அது ஆரம்பப் பகுதி அறிவே யாகும். அழிவற்ற பரம்பொருளைப்பற்றிய அறிவே பேரறிவு. கிரியைகளினால் நித்தியமான பரம்பொருளை அடைய முடியாது. அறிவும் ஒழுக்கமும் கொண்ட ஆசாரியனை அடைந்து, ஆத்ம தரிசனம் தரக்கூடிய பேரறிவைத் தேடுவாயாக.

படிப்பினாலாவது மதிநுட்பத்தினாலாவது அந்தராத்மாவின் தரிசனம் ஒருவன் பெற முடியாது. எவ்வளவு வேதம் ஓதினாலும், எவ்வளவு புத்தி கூர்மையும் அறிவும் படைத்திருந்தாலும், எவ்வளவு கல்வி கேள்விகள் அடையப் பெற்றாலும், உள்ளத்தில் மறைந்து நிற்கும் சர்வபூதாந்தராத்மா தானே விரும்பினாலொழிய, அவன் சொரூபம் தோற்றமாகாது. உள்ளத்தினின்று பொங்கும் விருப்பம் வேறு, படிப்பும் மதிநுட்பமும் வேறு; இதயத்தினுள் வசிக்கும் ஈசுவரனுடைய அருளிருப்பின் இந்த விருப்பம் பொங்கி ஆத்ம தரிசனம் அடைவோம்.

## வில் வளைத்த தியானம்

பலஹீனம் ஆத்ம தரிசனத்திற்குத் தடையாகும். அறிவும் வேண்டும், பலமும் வேண்டும் என்று உபநிஷத்துச் சொல்லுகிறது. இவ்விடத்தில் 'பலம்' என்பது சோர்வற்ற முயற்சியைக் குறிக்கும்; அதாவது, புலன்களையும் மனதையும் வசப்படுத்தி ஆசைப் பற்றுக்களை யொழிக்கும் முயற்சி. கண்ணும் கருத்துமாகத் தைரியமும் அப்பியாசமும் கைக்கொண்டு, புலன்களை யடக்கிப் பற்றுக்களை ஒழிக்க வேண்டும் என்பது உபதேசத்தின் பொருள்.

குறியற்ற தவத்தால் இதயத்தில் மறைந்து நிற்கும் பரமாத்மாவைக் காண முடியாது. உடலை வருத்துவதனாலேயே பயனொன்று மில்லை. சரியான முறையில் அறிவும் பக்தியும் கொண்டு, மனதை அடக்கி ஆசைத் தளைகளை நீக்குவதே பயன் தரக்கூடிய தவமாகும்.

தியானத்திற்கு முண்டக உபநிஷத்தில் ஒரு சிறந்த உவமை சொல்லப்பட்டிருக்கிறது. தியானம் செய்கிறவன் வில்லாளி. குருவிடத்தில் அடைந்த வேதாந்த ஞானமே வில். தியானம் செய்பவனுடைய ஆத்மாவே அம்பு. அம்பாகிய ஆத்மாவை, அதாவது தன் உள்ளத்தை, வில்லில் வைத்து நாணை இழுக்க வேண்டும். நாணை இழுப்பது என்றால் ஏகாக்கிர சித்தத்துடன் தான் அடைந்த ஞானத்தை உபயோகித்துத் தியானிப்பது. நாணை நன்றாக இழுத்துக் குறிபார்க்க வேண்டும். பரமாத்மாவே குறியாகும். நல்ல வில்லாளி வில்லை வளைக்கும்போது குறியும் அம்பும் ஒரு நேரில் அமையச் செய்கிறான். அந்த நிலையில், அம்பு குறியில் மறைந்து போகிறது. பரம்பொருளைத் தியானம் செய்பவன், அவ்வாறே தன் ஆத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்றாகவே காண வேண்டும். தியானம் செய்யும் காலத்தில், பரமாத்மாவில் தன் ஆத்மா முற்றிலும் அத்துவிதீயமாக மறைந்து போகவேண்டும்.

வில்லை வளைத்து அம்பைவிடும் தறுவாயில், நல்ல வில்லாளி குறியைத் தவிர வேறு எதையும் காணமாட்டான். அவன் கண்ணுக்கு வில், அம்பு, உலகம் அனைத்தும் அந்தச் சமயம் மறைந்துபோகும். தன் உடலையும் மறந்துவிடுவான். குறி ஒன்றே அவன் கண்ணில் நிற்கும். அதுபோல், ஏகாக்கிர சித்தத்துடன் தியானம் செய்பவனுக்குப் பரமாத்மாவைத் தவிர மற்ற அனைத்தும் மறைந்துபோய், தன் உள்ளமும் அந்தப் பரமாத்மாவில் மறைந்து அத்துவிதீயமாகிவிடும். அத்தகைய தியானத்தினுல், அவன் உள்ளம் நல்ல வில்லாளி ஏந்திய அம்பைப்போல், பாய்ந்து குறியைச் சேரும்; அதாவது பரமாத்மாவைத் தரிசிப்பான்.

யுத்தத்திலும் மிருக வேட்டையிலும் எய்யும் அம்பைக் கூராகத் தீட்டி வைத்துக்கொள்வார்கள். அதைப்போல் உள்ளமாகிய அம்பையும் பக்தியினுல் நன்ருகத் தீட்டிக் கூராக வில்லில் வைப்பாயாக என்கிருர் முனிவர். அவ்வாறு தீட்டினுல்தான் உள்ளமாகிய அம்பு ஈசுவரனுகிய குறியை அடைந்து நன்ருகப் பதிந்து பற்றிக்கொள்ளும் என்றவாறு.

கசு

## ஒரு உபவாச ஆராய்ச்சி

"குழந்தாய்! பதினைந்து நாள் ஆகாரம் இல்லாமல் இரு. தண்ணீர் மட்டும் வேண்டிய அளவு அருந்து" என்றார் உத்தாலகர்.

அவ்வாறே சுவேதகேது பதினைந்து நாட்கள் உபவாசம் இருந்தான். பிறகு தகப்பனார் அவனைப் பார்த்து, "அப்பனே! நீ கற்றதைச் சொல்" என்றார். கற்றது எதுவும் சரியாக நினைவுக்கு வராமல் சுவேதகேது மயங்கினான்.

"பெரிய நெருப்பு அணைந்துபோய் சிறு மின்மினிப் பூச்சி போன்ற பொறி யொன்று மட்டும் இருந்தால், அதனால் எதையும் எரிக்க முடியாது. அதைப் போல், உன்னுடைய உயிரில் உபவாசத்தின் பயனாகப் பதினாறில் ஒரு பங்கு மட்டுமே நின்றிருக்கிறது. அதைக் கொண்டு நீ முன் கற்றறிந்த வேதங்களை நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. தண்ணீர் அருந்திவந்தபடியால் பிராணன் நின்றது. ஆனால், ஆகாரம் இல்லாதபடியால் மனம் வேலை செய்ய முடியவில்லை. போய் அன்னம் புசித்து வா!" என்றார்.

சுவேதகேது சிறிதளவு அன்னம் உட்கொண்டு தகப்பனாரிடம் திரும்பி வந்தான். "எல்லாம் மறுபடி ஞாபகம் வந்துவிட்டன. கேட்டதைச் சொல்லுகிறேன்" என்றான்.

"பெரிய தீயில் ஓரே ஒரு சிறு பொறி மிஞ்சியிருந்தாலும், அதன்மேல் சருகு போட்டவுடன் மறுபடி நெருப்

பானது வளர்ந்து கொழுந்து விட்டெரியும். பிறகு அது எதையும் தகித்துவிடக்கூடும். அவ்வாறே, அன்னமின்றி நீர் மட்டும் அருந்தி, வீசம் பங்கு பிராணன் மட்டும் உன் தேகத்தில் நின்றிருந்தது; அதற்கு அன்னம் இட்டவுடன், சிறு தீப்பொறி சருகைப்பற்றி ஜுவாலையுடன் கிளம்புவது போல், நீ முன் கற்ற வேதங்கள் முழுதும் நினைவுக்கு வந்துவிட்டன. தண்ணீருக்கும் பிராணனுக்கும் உள்ள சம்பந்தத்தையும், உணவுக்கும் மனதுக்கும் உள்ள சம்பந்தத்தையும் நீ இப்போது அறிந்தாயா?'' என்றார் உத்தாலகர்.

நீரின் தன்மையும் உயிரின் தன்மையும் வேறாகத் தோன்றுகின்றன. அன்னத்தின் தன்மையும் மனதின் தன்மையும் வேறாகக் காணப்படுகின்றன. ஆயினும் உடலில் சேர்ந்ததும் நீர் உயிராகவும், அன்னம் மனமாக வும் மாறுவதை உத்தாலகர் மகனுக்குக் காட்டினார். எப்பொருளிலும் பராசக்தி சூட்சும உருவமாக மறைந்து நிற்கிறது. நீரிலுள்ள சூட்சுமப் பொருள் உயிராகவும், அன்னத்திலுள்ள சூட்சுமப் பொருள் மனிதனுடைய நுண்ணிய மனப் பொருளாகவும் மாறுகின்றன. எப் பொருளும் அதனுள் வியாபித்து நிற்கும் பரம்பொருளின் சக்தியில் ஓரளவு பெற்று வேலை செய்கிறது.

உ௦

## தியானம்

பாலில் வெண்ணெய் மறைந்து இருப்பதுபோல் மனிதன் உள்ளத்தில் அந்தராத்மா மறைந்து நிற்கிறது. பாலைத் தயிராக்கி அதைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதுபோல், உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அதனுள் மறைந்திருக்கும் ஆத்மாவைக் கடைந்து திரட்டி எடுக்கவேண்டும்.

வெள்ளம் ஓடாத ஆற்றில் மணலுக்குள் தண்ணீர் மறைந்து நிற்கிறது. தோண்டினால் ஊற்று உண்டாகும். அவ்வாறே, உள்ளத்தில் மறைந்து நிற்கும் ஈசுவரனையும் அடையலாம்.

அரணியிலிருந்து நெருப்பு உண்டாக்குவது போலும், பாலிலிருந்து வெண்ணெய் கடைந்து திரட்டியெடுப்பது போலும், ஆற்று மணலில் ஊற்றுத்தோண்டித் தண்ணீர் மொண்டுகொள்வது போலும், தவத்தினால், அதாவது மனதையும் புலனையும் அடக்கித் தியானம் செய்வதனால், உள்ளத்திலே மறைந்து கிடக்கும் பரமாத்மாவைத் தரிசியுங்கள் என்று சுவேதாசுவதர உபநிஷத்தில் உபதேசம் செய்யப்படுகிறது.

## கணித நூலுக்கு அடங்காது

*உபநிஷத்துகளைச் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டி, இந்த நூல் எழுதப்பட்டது. அந்த நோக்கம் பூர்த்தியாக, முதல் நூலிலிருந்து சில மந்திரங்களை எடுத்து இனிவரும் அத்தியாயங்களில் சொல்லப்படும். உரையைக்கொண்டு மந்திரங்களைப் படித்தால் வடமொழிப் பயிற்சியும் ஒருவாறு சிறுவர்கள் அடையக்கூடும்.*

தேகத்துக்கு ஜீவாத்மா எப்படியோ, அப்படி ஜீவாத்மாவுக்குப் பரமாத்மா. தேகத்தை, அதாவது சேதனமற்ற ஒரு சவத்தை, உயிரும் சேதனமும் கொண்ட பொருளாக்கி அதற்குள் அந்தர்பாவமாய் ஜீவன் இருந்து வருகிறது. அம்மாதிரியே ஜீவனுக்குள் பரமாத்மா அந்தர்பாவமாய் நின்று அந்த ஜீவனைத் தாங்கி வருகிறான். பரமாத்மா இன்றி ஜீவனில் ஒன்றுமிராது. உயிரற்ற உடலைப்போலாகி விடும்.

ஜீவன் எப்படிப் பல ஜன்மங்களில் பல வேறு வடிவங்கள் தரித்து வருகிறதோ, அவ்வாறு பரமாத்மா ஒரே காலத்தில் பல ஜீவன்களாக நிற்கிறான். ஒரு ஜன்மம் முடிந்த பின் ஜீவன் செய்யக்கூடிய காரியத்தைப் பரமாத்மா ஒரே காலத்தில் செய்கிறான். எந்த வஸ்துக்குள்ளும் எந்தத் தேகத்துக்குள்ளும் பரம்பொருள் நின்று அதைத் தாங்கி வருகிறது. இவ்வாறு ஈசன் பல ஜீவன்களாகவும் பல பொருள்களாகவும் நின்றபோதிலும், தனிப்பட்டும் நிற்கிறான். பரம்பொருளைத் துண்டுகளாக்க முடியாது. பல

பொருள்களில் நின்றாலும் அதன் ஒருமை சிதறிப் போகாது.

**மம ஏவ அம்ச: ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன: |**
**மன:ஷஷ்டானி இந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தானி கர்ஷதி ||**

என்று கீதையில் பகவான் சொல்லுகிறார்.

அதாவது :

"எனதொரு கிரணமே ஜீவலோகத்தில் சென்று, அங்கே அழியா ஜீவனாகி, ஐந்து இந்திரியங்களையும், ஆறாவதாக மனதையும் சேர்த்துக்கொண்டு நிற்கிறது."

ஈசாவாஸ்ய உபநிஷத்தில் சாந்தி சுலோகமும் இதையே சொல்கிறது :

**ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே |**
**பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே ||**
**ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||**

அதாவது :

"அது விசுவத்தின் பூரணம்; இது உடலின் பூரணம். ஒரு பூரணத்திலிருந்து மற்றொரு பூரணம் வந்தது; ஆயினும் பூரணம் குறைவுபடவில்லை. மிஞ்சி நிற்பதுவும் பூரணமே."

ஒரு பொருளினின்று ஒரு பகுதியை வேறுபடுத்தினால், மிஞ்சி நிற்பது முழுமையிழந்து, ஒரு பகுதியாகத்தான் நிற்கும் என்பது கணித சித்தாந்தம். ஆனால் பரம்பொருள் இந்தக் கணிதநூல் நியதிக்கு அடங்காது. பகுதிகள் வேறுபட்டபோதிலும், முதற்பொருள் முழுமை கொண்டே இருக்கிறது. வேற்றுமையும் ஒற்றுமையும் கலந்து நிற்பதே பரம்பொருளின் தன்மை.

முனிவர் உபநிஷத்தை உபதேசிக்குமுன் சீடனை முழுமுதற்பொருளையும் தன் ஆத்மாவையும் சேர்த்துத் தியானிக்கச் செய்கிறார். 'உலகத்தை ஈன்ற ஈசுவரனின்று கிளைத்தது என் ஆத்மா. முழுப்பொருளினின்று உண்டாகிய பகுதியும் முழுப்பொருளே. முதற்பொருளும், முன்போலவே, தன் முழுமைக்குக் குறைவு இல்லாமல் நிற்கிறது. அந்த முதற்பொருள் எனக்குச் சாந்தி தருக.'

முண்டக உபநிஷத்தில், பரம்பொருளுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள ஒருமையைச் சொல்லும்போது, முனிவர் விளக்குகிறார் :—

தத் ஏதத் ஸத்யம்
யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்புலிங்கா:
ஸஹஸ்ரச: ப்ரபவந்தே ஸரூபா: |
ததா அக்ஷராத் விவிதா: ஸோம்ய! பாவா:
ப்ரஜாயந்தே தத்ர ச ஏவ அபியந்தி ||

"உண்மையைக் கேள், குழந்தாய்! ஜுவாலை விட்டு எரியும் பெருந்தீயிலிருந்து நான்கு பக்கமும் பொறிகள் பறந்து செல்வதுபோல், பரம்பொருளினின்று பல கோடி ஜீவன்கள் உண்டாகி உண்டாகி, மறுபடி அதனுடன் சேர்ந்து ஒன்றாகின்றன."

இவ்வாறு தன் ஆத்மாவின் தூய்மையையும், அது ஈசுவரனோடும் உலகத்தோடும் ஒன்றுபட்டு நிற்கும் பண்பையும் அடிக்கடி தியானித்து வந்தால், உள்ளத்தில் சக்தி பிறக்கும்; தீய எண்ணங்கள்போய் நல்லெண்ணங்களுண்டாகும். துக்கங்கள் பனிபோல் கரைந்துபோகும். சாந்தி பெறுவோம். ஞானம் உதயமாகும்.

உ௨

# கீதையும் உபநிஷதமும்

கடோபநிஷத்தில் நசிகேதனுக்கு யமன் சொல்லுகிறான்:

"குழந்தாய்! நன்மை வேறு, இனிமை வேறு. இவை இரண்டும் மனிதனுடைய உள்ளத்தைப் பற்றுகின்றன. மூடன், இன்பம் தருவதைப் பெரிதாகக் கருதி ஏமாற்றம் அடைவான்; புத்திமான் நன்மையை உயர்ந்ததாகக் கருதுவான். நல்லதும் இனியதும் தன்முன் நிற்கும்போது தீரன் இரண்டையும் நன்றாகச் சூழ்ந்து பார்த்து, நன்மையைத் தான் நாடுவான். மூடனோ, நன்மையைப் புறக்கணித்து இனியதைப் பற்றிக்கொள்வான்.

"உண்மை ஞானத்திற்கும் ஞானம் தராத கல்விப் பயிற்சிக்கும் வெகுதூரம். கற்றதெல்லாம் அறிவாகாது. கற்றறி மூடர்கள் தாங்கள் அடைந்த கல்வியைப் பெரிதாகக் கருதி, கண்ணில்லாதவன் வழிகாட்டுவதை நம்பிச் செல்லும் குருடர்களைப்போல், சுற்றிச் சுற்றித் தடுமாறி அலைவார்கள்.

"வேதாந்தம் படித்து அறிந்ததனாலேயே பரமாத்மாவின் தரிசனம் கிடைத்துவிடாது. சுத்தமான உள்ளமும், விஷய சுகங்களைப் பொருட்படுத்தாத பயிற்சியும் அடையாவிடில், அறிவு முழுதும் பயனற்றதாகும். தீய ஒழுக்கத்தினின்று விலகாதவனும், புலன்களையும் மனதையும் தன்வசப்படுத்திக்கொள்ளாதவனும், உள்ளத்தில் சாந்த சமநிலை யடையாதவனும், அறிவினால் மட்டும் பரம்பொருளைக் காண முடியாது.

"ஞானமின்றிக் கிரியைகளையும் சடங்குகளையும் கைக்கொள்கிறவர்கள் காரிருளில் கிடக்கிறார்கள். ஆனால் செய்யவேண்டிய கருமங்களைப் புறக்கணித்துவிட்டு, வேதாந்த ஆராய்ச்சிகளிலேயே மகிழ்ச்சியடைந்து திருப்தி கொள்கிறவர்களும் அதைவிடப் பெரிய அந்தகாரத்தில் மூழ்குவார்கள்" என்று ஈசாவாஸ்ய உபநிஷத்துச் சொல்லுகிறது.

"ஞானம் அடைந்தவனும் சாதாரண ஜனங்களைப் போலவே செயல்களைச் சரிவரச் செய்து வாழ்நாளை முடிக்கவேண்டும். அவ்வாறு முடித்துவிட்டு, உடலை நீத்த பின், ஞானத்தின் பயனாகிய அமிருதத்துவத்தையும் அடையலாம். ஆசைகளை எரிப்பதே வேள்வி. பற்றுக்களை விடுவதே துறவு. துறவு மார்க்கம் ஒன்றே மோக்ஷசாதனம் அல்ல. வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களை நடத்தியே தருமத்தில் நிற்கலாம்" என்று பகவான் அருச்சுனனுக்குக் கீதையில் விளக்கி யிருக்கிறார். சமுதாய க்ஷேமத்திற்கு வேண்டிய காரியங்கள் நடைபெற வேண்டுமென்றும், அந்தக் காரியங்களில் அவனவன் தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்து முடிப்பதால் மோக்ஷத்திற்குத் தடை ஏற்படாதென்றும் கீதை உபதேசிக்கிறது. சுயநலப் பற்றின்றி, வெற்றி தோல்விகளைக் கண்டு மனங் கலங்காமல், உள்ளத்தில் அமைதியோடு எல்லாக் காரியங்களையும் பகவானுக்கு அர்ப்பணமாகவே செய்துவந்தால், அதுவே வேள்வியும் அதுவே சந்நியாசமும் ஆகும் என்று கீதையில் மிக விளக்கமாகப் பகவான் காட்டியிருக்கிறார்.

இதைச் சுருக்கமாக ஈசாவாஸ்ய உபநிஷத்தில் முதல் இரண்டு மந்திரங்களில் முனிவர் பாடியிருக்கிறார்:

**ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத் |**
**தேந த்யக்தேந புஞ்ஜீதா மாக்ருத: கஸ்யஸ்வித் தனம் ||**
**குர்வன் ஏவ இஹ கர்மாணி ஜிஜிவிஷேச்சதம் ஸமா: |**
**ஏவம் த்வயி ந அந்யதா இத: அஸ்தி ந கர்ம லிப்யதே நரே ||**

அதாவது :

"உலகத்தில் உள்ள அனைத்தும் ஈசனுக்குள் அடங்கியதாகும். அவனை விட்டகன்றது எதுவுமில்லை."

"பொருட் பற்றைவிட்டு நலன்கள் பெறுவாயாக. எவனுடைய பொருளின் மேலும் ஆசை கொள்ளாதே."

"அவ்வாறு எல்லாம் ஈசன்மயம் என்றறிந்து, செய்யும் கருமங்களெல்லாம் அவனுக்கே அர்ப்பணம் என்று செய்துவந்து, உனக்கு அறுதியிட்ட வாழ்நாட்களை முடிப்பாயாக."

"கருமத் தளையில் சிக்கிக்கொள்ளாமல் வாழ்நாளை முடிப்பதற்கு இதுவே வழி. வேறு கிடையாது."

ஆகையால் உபநிஷத்து வாக்கியமும் கீதை உபதேசமும் ஒன்றே. ஆசைகளை ஒழித்து, எல்லாம் ஈசன்மயம் என்று அறிந்து, அவனுக்கு அர்ப்பணமாகவே எல்லாத் தொழில்களையும் செய்து, வாழ்நாட்களை முடிக்கவேண்டும். ஆசைகளை ஒழிப்பதே வேள்வி. அறிவே ஆசைகளை எரித்துவிடும் வேள்வித் தீ.

**யதா ஏதாம்ஸி ஸமித்த: அக்நி: பஸ்மஸாத் குருதே அர்ஜுந |**
**ஞானக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா ||**

அதாவது :

"நன்கு கொளுத்திய தீயானது விறகுத் துண்டுகளைச் சாம்பலாக்கி விடும். அதுபோல், ஞானத் தீயானது எல்

லாக் கருமங்களையும் சுட்டுச் சாம்பலாக்கி விடும்'' என்று கீதையில் அர்ச்சுனனுக்கு பகவான் உபதேசிக்கிறார்.

இதுவே மேலே சொல்லப்பட்ட ஈசாவாஸ்ய உபநிஷத்து மந்திரங்களின் பொருள். முதல் பாகத்தில் அனைத்தும் ஈசன் என்ற ஞானத்தையும், இரண்டாவது பாகத்தில் பற்றுக்களையும் ஆசைகளையும் மனதினின்று ஒழித்துக் கருமங்களைச் செய்வதே மார்க்கம் என்றும் முனிவர் சொல்லுகிறார். இவ்வாறு ஞானம் பெற்று, ஆசைகளை ஒழித்து, கருமங்களைப் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்வதே கரும பாசத்தினின்று விலகும் வழி, வேறில்லை என்பதே கீதையும் உபநிஷத்துகளும் செய்யும் உபதேசம். இந்த உபதேசத்தை அனுசரித்து நடப்பதற்குப் பக்தியும், தெய்வ உபாசனமும் வேண்டும். இதுவே ஹிந்து தருமம்.

# நதிகளனைத்தும் கடலில் சேர்ந்துவிடும்

நான் என்றும் மற்றவர்கள் என்றும் உள்ள வேற்றுமை யுணர்ச்சி ஒழிந்து, எல்லா உயிரும் பரமாத்மாவின் அம்ச விகாரங்கள் என்கிற மனோபாவத்தை அடைய வேண்டும் என்று கீதையில் பகவான் உபதேசிக்கிறார். ஆத்மாவை அஞ்ஞானமானது சூழ்ந்துகொண்டு ஞான ஒளியை மறைக்கிறது. ஞானத்தைக்கொண்டு அந்த அஞ்ஞானத்தை ஒழித்துவிட்டால், பிறகு அறிவு உதயமாகிச் சூரியனைப்போல் பிரகாசிக்கும். பிரிவுபட்டு நிற்கும் எல்லா உயிர்களிலும், பிரிவற்றதும் நாசமற்றதுமான ஒரே பரம்பொருள் காணப்படும். கல்வியும் சிக்ஷையும் பெற்ற ஒரு பிராமணனும், யாதும் கல்லாத ஒரு பிராகிருதனும் ஒன்றாகவே தோன்றுவர். மனிதர்களில் மேலோன், கீழோன் என்கிற உணர்ச்சி அற்றுப்போகும்.

இவ்வாறு கீதை ஐந்தாவது ஆறாவது அத்தியாயங்களில் சொல்லப்பட்டு, பதினெட்டாவது அத்தியாயத்தில் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ள உண்மையை, அதற்கும் முந்தி ஈசாவாஸ்ய உபநிஷத்தில் முனிவர் விளக்கியிருக்கிறார்:

**யஸ்து ஸர்வானி பூதானி ஆத்மனி ஏவ அனுபச்யதி |**
**ஸர்வபூதேஷு ச ஆத்மானம் ததோ ந விஜுகுப்ஸதே ||**
**யஸ்மின் ஸர்வாணி பூதானி ஆத்மாஏவ அபூத்விஜாநத: |**
**தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வம் அனுபச்யத: ||**

அதாவது:

"எல்லாப் பொருள்களும் ஈசனுக்குள் தங்கியிருப்பதையும், எல்லாப் பொருள்களிலும் ஈசன் இருப்பதையும் அந்த ஈசன் தன் அந்தராத்மாவாக இருப்பதையும் ஒருவன் கண்டானானல், அவன் மனதில் வெறுப்பு என்பது பிறகு இருக்க இடமே இல்லை.

"அனைத்தும் ஈசனே என்றும், அனைத்தும் ஒன்றே என்றும் ஒருவன் கண்டுவிட்டால், பிறகு மோகம் எங்கே? துக்கம் எங்கே? அவனைத் துயரம் வருத்தாது; மயக்கம் அணுகாது."

கடோபநிஷத்தில் சொல்லப்படுகிறது:

யத் ஏவ இஹ தத் அமுத்ர யத் அமுத்ர தத் அனு இஹ |
ம்ருத்யோ: ஸ ம்ருத்யும் ஆப்நோதி ய இஹ நாநா இவ பஸ்யதி ||
மனஸா ஏவ இதம் ஆப்தவ்யம் ந இஹ நாநா அஸ்தி கிஞ்சந |
ம்ருத்யோ: ஸ ம்ருத்யும் கச்சதி ய இஹ நாநா இவ பச்யதி ||

அதாவது:

"அனைத்திலும் ஒரு பொருளே: இங்கிருப்பதே அங்கும்; அங்கிருப்பதே இங்கும்; வேற்றுமை காண்பவன் பிறப்பும் இறப்பும் அடைந்துகொண்டிருப்பான். வேற்றுமை உணர்ச்சியை முற்றிலும் மனதிலிருந்தே அகற்றிவிட வேண்டும். வேற்றுமையைக் காண்பவன் பிறவிச் சுழலிலிருந்து மீளமாட்டான்."

அதே உபநிஷத்தில் பின்னும் சொல்லப்படுகிறது:

## நதிகளனைத்தும் கடலில் சேர்ந்துவிடும்

ஏகோ வஶீ ஸர்வபூதாந்தராத்மா ஏகம் ரூபம்
பஹுதா ய: கரோதி |
தம் ஆத்மஸ்தம் யே அனுபச்யந்தி தீரா:
தேஷாம் ஸுகம் சாச்வதம் ந இதரேஷாம் ||

அதாவது :

"தனி ஒருவனாகிய ஈசன் எல்லா உயிர்களுக்குள்ளும் அந்தராத்மாவாக நின்று, ஒரு வடிவத்தைப் பல வடிவங்களாகச் செய்கிறான். இவ்வாறு அந்தராத்மாவைத் தமக்குள் காணும் ஞானிகள் நித்தியமான இன்பத்தை எய்துவார்கள். ஒருமையைக் காணாதவர்களுக்கு இன்பம் இல்லை."

முண்டக உபநிஷத்தில் முனிவர் உபதேசிக்கும் மந்திரம் வருமாறு :

யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரே அஸ்தம்
கச்சந்தி நாமரூபே விஹாய |
ததா வித்வாந் நாமரூபாத் விமுக்த: பராத்பரம்
புருஷம் உபைதி திவ்யம் ||

அதாவது :

"ஓடும் பல நதிகள் கடலில் சேர்ந்து தம் வேற்றுமைகள் நீங்கி, கங்கை, ஸிந்து, காவேரி நருமதை என்ற பெயர்களும் வேற்றுமைகளும் நீங்கி, ஒன்றாகிவிடுவது போல் ஞானிகள், வெவ்வேறு பெயரும் உருவமும் கொண்ட பொருள்களின் ஒருமையைக் கண்டு வேற்றுமை யுணர்ச்சியை அகற்றி விடுபட்டு, ஒளிரும் பரம்பொருளை அடைவார்கள்."

"நதிகள் கடலைச் சேருவதுபோல, ஞானிகளின் அறிவுக்கடலில் எல்லாப் பொருள்களும் வேற்றுமை யொழிந்து ஒருமைப்படுகின்றன. ஞான ஒளி பெற்றுப் பரம்பொருளைக் கண்டதும், ஆத்மா முத்தி யடைகிறது. காண்பது வேறு, அடைவது வேறு அல்ல. காணாததே தடையா யிருப்பதால், கண்டதும் அந்தத் தடை நீங்கிப் பரமாத்மாவை அடையலாம். ஆகையால் ஈசனைக் 'காண்' பதும் 'அடை'வதும் ஒன்றே.

உச

# அறிவுக்கு எட்டாத பொருள்

பரமாத்மாவின் லட்சணங்களைச் சொல்ல முடியாது.

ந தத்ர சக்ஷு: கச்சதி ந வாக் கச்சதி ||

அது கண்ணால் காணக் கூடியதல்ல; மொழிகளால் விளக்கக் கூடியதல்ல.

யத் வாசா அனப்யுதிதம்
யேன வாக் அப்யுத்யதே |
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ||

"சொல்லால் அதை விளக்க முடியாது. அதனினின்று அல்லவோ சொல் என்பதே உண்டாகிறது. அதுவே பிரம்மம். பிரம்மம் என்று பெயர் வைத்துச் சாதாரணமாகத் தொழுவதெல்லாம் பிரம்மம் அல்ல."

யன் மனஸா ந மனுதே
யேந ஆஹு: மநோ மதம் |
தத் ஏவ ப்ரம்மம் த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ||

"மனதைக் கொண்டு நினைப்பது பிரம்மம் அல்ல. எந்த சக்தியால் மனம் நினைக்கிறதோ அதுவே பிரம்மம்."

யத் சக்ஷுஷா ந பச்யதி
யேந சக்ஷூம்ஷி பச்யதி |
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ||

"கண்ணால் பார்ப்பது பிரம்மம் அல்ல. பிரம்மத்தினால் கண் பார்க்கிறது."

யத் ஸ்ரோத்ரேண ந ச்ருணோதி
யேந ச்ரோத்ரம் இதம் ச்ருதம் |
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ||

"காதுகளால் கேட்பது பிரம்மமல்ல. எதனால் காது கேட்கிறதோ அதுவே பிரம்மம்."

யத் ப்ராணேந ந ப்ராணிதி
யேந ப்ராண: ப்ரணீயதே |
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ||

"உயிர்ப்பது பிரம்மம் அல்ல. எதனால் சுவாசம் சுவாசிக்கிறதோ அதுவே பிரம்மம். ஜனங்கள் சாதாரணமாகத் தொழுவதெல்லாம் பிரம்மம் ஆகாது."

மேற்கண்ட மந்திரங்களின் பொருள் என்னவென்றால் பரம்பொருளின் லட்சணங்களை நேராக விளக்க முடியாது. நம்முடைய உணர்ச்சியும், அறிவும், புத்தி விவகாரமும், எல்லாம் அப்பொருளின் வேலையே யானபடியால், அவைகளைக்கொண்டு பரம்பொருளை அறிய முடியாது. பிரம்மத்தைக் கண்ணால் பார்க்கவும் காதால் கேட்கவும் மூக்கால் மோந்து பார்க்கவும் முடியாது;

அந்தராத்மாவின் சக்தியே இச் செயல்களுக்கு ஆதாரம். பிரம்மத்திற்குப் பார்க்கக் கண் அவசியமில்லை. கேட்கக் காதுகள் வேண்டியதில்லை. காதும், கண்ணும், சுவாசமும் வேலை செய்வதே பிரம்மத்தினால். அப்படியிருக்க, அப் பொருளுக்கு இக் கருவிகள் எதற்கு என்பதும் இந்த மந்திரங்களுக்குள் அடங்கி யிருக்கிறது.

வண்டி ஓடுவது சக்கரம் உருளுவதால். வண்டி சக்கரத்தை உருட்டப் பார்ப்பதுபோலாகும் நம் அறிவினால் பிரம்மத்தைக் காணப்பார்ப்பது. எவன் பரம் பொருளைத் தான் அறிய முடியாது என்று உணருகிறானோ, அவனே அதை உண்மையில் அறிந்தவனாவான். அறிந்து விட்டேன் என்று ஒருவன் எண்ணினால் அவன் அதை அறியவில்லை என்பதற்கு அந்த உணர்ச்சியே சான்றாகும். தெரிந்துகொண்டேன் என்பவனுக்குத் தெரியவில்லை; தெரியவில்லை என்பவனுக்குத்தான் தெரிந்தது. இதற்கு மந்திரம் :—

யஸ்ய அமதம் தஸ்ய மதம்
மதம் யஸ்ய ந வேத ஸ: |
அவிஞ்ஞாதம் விஜாநதாம்;
விஞ்ஞாதம் அவிஜாநதாம் ||

மேற்கண்ட மந்திரங்கள் கேனோபநிஷதத்தினின்று எடுக்கப்பட்டவை. இவ்விஷயம் சங்கிரகமாக அடியிற்கண்ட முண்டக உபநிஷத மந்திரங்களிலும் சொல்லப்படுகிறது.

யத் தத் அத்ரேச்யம் அக்ராஹ்யம் அகோத்ரம்
அவர்ணம் அசக்ஷு: ச்ரோத்ரம் தத் அபாணி பாதம் |
நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்
தத் அவ்யயம் யத் பூதயோநிம் பரிபச்யந்தி தீரா: ||

"பரம்பொருளைப் பார்க்க முடியாது; பிடிக்க முடியாது. அதற்குக் குலம் இல்லை, ஜாதி இல்லை. அதற்குக் கண், காது, கை, கால் முதலிய அங்கங்கள் இல்லை. அது நித்தியமாய் எங்கும் பரவி நிற்கும் மிக நுட்பமான பொருள்; அழிவற்றது. அனைத்துக்கும் அது பிறப்பிடம். இவ்வாறு அதை ஞானிகள் அறிவார்கள்."

யதா ஊர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச
யதா ப்ருதிவ்யாம் ஓஷதய: ஸம்பவந்தி |
யதா ஸத: புருஷாத் கேசலோமாநி
ததா அக்ஷராத் ஸம்பவதி இஹ விச்வம் ||

"சிலந்திப் பூச்சி தன்னிலிருந்து நூலை உண்டாக்கி அதைப் பற்றிக்கொண்டு நிற்கிறது. அதைப் போலவும், பூமியிலிருந்து செடிகள் உண்டாவது போலவும், தலையிலும் உடலிலும் மயிர் முளைப்பதுபோலவும் உலகம் யாவும் பரம்பொருளிலிருந்து உண்டானவை."

ப்ரம்ம ஏவ இதம் அம்ருதம் புரஸ்தாத் ப்ரம்ம
பஸ்சாத் ப்ரம்ம தக்ஷிணதஸ்ச உத்தரேண |
அதஸ்ச ஊர்த்துவம் ச ப்ரஸ்ருதம்
ப்ரம்ம ஏவ இதம் விச்வம் இதம் வரிஷ்டம் ||

"முன்னாலிருப்பதும் பிரம்மம். பின்னாலிருப்பதும் அதுவே. வலமும் இடமும், கீழும் மேலும் இந்த அகில விசுவம் முழுதும் எங்கும் இறுதியற்ற கடவுளே பரவி நிற்கிறது."

உரு

# முடிவுரை

"பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே"

எல்லா மதங்களினுள்ளும் உத்தமமான மதம் நமது வேதாந்தம். அது ஓர் உலர்ந்தபோன கட்டையென்று சிலர் எண்ணுவது தவறு. அது நிழலும் கனியும் தரும் உயிருள்ள மரம். சத்தியமே அதன் உயிர். சத்தியம் என்றைக்கும் உலர்ந்து போகாது. பசித்த பிராணி உணவு தேடுவதுபோல், நம்முடைய முனிவர்கள் உண்மையைத் தேடி யலைந்தார்கள். உபநிஷத்துகளைச் சரிவரப் படித்தால், இதை உணரலாம். உணர்ந்து முனிவர்களையும் கௌரவித்து நாமும் தன்னம்பிக்கை அடைந்து பெரும்பயன் பெறலாம்.

பௌதிக ரஸாயன சாஸ்திரப் புலவர்கள் எவ்வாறு சோதனைச் சாலைகளில் சத்தியப் பிரமாணங்களைக்கொண்டு பிரகிருதி உண்மைகளைத் தேடிச் சோதித்துத் தாம் கண்டதைச் சொல்கிறார்களோ, அவ்வாறே ஆத்ம விஷயத்தைப் பற்றி நம் முன்னோர்களான முனிவர்கள் ஆராய்ச்சி செய்து கண்டறிந்ததைச் சொன்னார்கள். ஹிந்துமத சாஸ்திரங்களில் அறிவே பிரமாணம். அறிவை உபயோகித்து, அனுமானித்து ஏற்படுத்திய கொள்கைகளே ஹிந்து தருமம். அறிவும் விவேகமும் தெளிவுபட நன்னடத்தை, ஆத்ம சுத்தம், சாந்த நடுநிலை, இவைகளை முனிவர்கள் நியமித்துக்கொண்டார்கள். தேகத்தையும் மனதையும் வசப்படுத்தி அடக்கியாள வழி தேடி, பிறருக்கும்

காட்டினார்கள். உண்மை ஒன்றையே லட்சியமாகக் கொண்டு ஆராய்ச்சி செய்து தாம் கண்ட தத்துவங்களை, பின்னால் வந்தவர்களுக்கும் பயன்படுவதற்காக முனிவர்கள் எழுதி வைத்தார்கள். இதுவே சாஸ்திரம். சாஸ்திரம் என்பது குருட்டு நம்பிக்கையல்ல. சாஸ்திரம் என்பது எழுதித் தீர்ந்துபோன பொருளும் அல்ல. சத்தியம் என்பதை முடிவாக யாரும் காணவில்லை. காணக்காணச் சத்தியம் வளர்ந்துகொண்டே போகும். சாஸ்திரமும் அவ்வாறே. சத்தியமே பரம்பொருளை அடையும் வழி. பாதைமேல் கல் பரப்பி நடக்கச் சௌகரியமாகச் செய்வதுபோல் தெய்வத்தை அடையும் மார்க்கத்தின் கல்பரப்பு சத்தியமாகும்.

ஸத்யமேவ ஜயதே நா(அ)ந்ருதம்

ஸத்யேந பந்த்தா விததோ தேவயான :

"உண்மையே வெற்றி பெறும். பொய்யைக் கொண்டு வெற்றியடைய முடியாது. தெய்வத்தை அடையும் பாதையின் தளவரிசை சத்தியம்."

**உபநிஷத்துகளையும் பகவத்கீதையையும் மக்கள் படித்து, ஆத்ம சுத்தி யடைந்து, அறிவும் விவேகமும் பெற்று, கடமைகளைச் சரிவரச் செய்து, வாழக் கற்றுக் கொண்டார்களானால் நம்முடைய நாடு செழித்துச் சிறப்படையும்; சந்தேகமில்லை. ஆண்டவன் அருள்வானாக.**

**சுபம்!**

# கண்ணன் காட்டிய வழி

## குரு வணக்கம்

மாசற்ற தூய்மையும் நிகரற்ற மதியும் தடையறியாத பலமும் சோர்வற்ற பக்தியும் கொண்ட ஹனுமான், முன்னம் கடலைத் தாண்டி நம் அன்னையின் சோகத்தைத் தீர்த்தவன், நம்மனைவரையும் அறிவூட்டிக் காப்பானாக.

# ஸ்ரீமத் பகவத்கீதை

பகவத்கீதையைத் தமிழில் அனேக வித்வான்கள் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஸ்ரீ சங்கராச்சாரியர், ஸ்ரீ இராமானுஜாசாரியர், ஸ்ரீ மத்வாசாரியர் முதலிய மகான்கள் பகவத்கீதைக்கு எழுதிவைத்திருக்கும் பாஷ்யங்களோ சம்ஸ்கிருதம் தெரிந்தவர்களுக்கு ஞானம் என்னும் தங்கச் சுரங்கங்களாக விளங்குகின்றன. அந்த பாஷ்யங்களின்முன் இக்காலத்தில் எவர் எழுதும் வியாக்கியானங்களும் சத்தில்லாத பதரே யாகும். அப்படியிருக்கையில் இதை நீ ஏன் எழுதுகிறாய் என்றால், உயர்ந்த பாஷ்யங்களுடன் சம்ஸ்கிருதத்தில் கீதையைப் படிக்கும் திறமையற்றவர்களுக்கும், அதிலும் முழு கீதையையும் குருவினிடம் உட்கார்ந்து படிக்காமல், சில சுலோகங்களை மட்டும் தாங்களாகவே படித்து, சாரத்தைக் கிரகிக்க எண்ணங்கொண்டவர்களுக்கும் ஒருவாறு பயன்படலாம் என்று எண்ணியே இதை எழுதப் புகுந்தேன். உண்மையில் இத்தகைய நூல் எழுத எனக்கு எவ்விதத்திலும் தகுதி கிடையாது. குருடன் குருடனுக்கு வழி காட்டுவதுபோல் என்று இதைச் சொல்வதில் கொஞ்சங்கூட மிகையிராது. ஆயினும் எழுதலாம் என்கிற எண்ணம் உதித்தது. இது அகம்பாவமா, அல்லது பேர் சம்பாதிக்கலாம் என்கிற ஆசையா என்று சோதித்துப்பார்த்துக்கொண்டதில், அப்படி யில்லை யென்று மனப்பூர்வமாய் நிச்சயித்து, ஒரு நல்ல காரியத்திற்குப் பிரயத்தனம் செய்வதில் யாதொரு தோஷமு மிராது, பயனற்றும் போகாது என்று தீர்மானித்து ஆரம்பிக்கிறேன். வழி காட்ட முடியாமல் போனு

னும், அதாவது போய்ச் சேரவேண்டிய இடத்திற்குக் கொண்டுபோக முடியாமல் போனாலும், நடக்காமலே உட்கார்ந்து கிடக்கும் குருடனுக்குக் காலில் இரத்தம் கட்டிக்கொள்ளாம லிருக்க மற்ருெரு குருடன் 'வா, நடக்கலாம்' என்று எழுப்பி, வீட்டைச் சுற்றிச் சுற்றி யாவது இருவரும் நடந்து வருவதும் ஒரு விதத்தில், நலமா யிருக்கலா மல்லவா? அவ்விதமே இது என்று வைத்துக் கொண்டு ஆரம்பிக்கிறேன்.

க

# பாரதக் கதையும் கீதையும்

பகவத்கீதை மகா பாரதத்தில் ஒரு பாகம். யுத்தம் ஆரம்பிக்கப்போகும் சமயத்தில் இரு புறத்திலும் ஆயத்தமாக நிற்கும் சேனைகளைப் பார்க்கலாம் என்று அருச்சுனன் தன் தேரைச் சேனைகளின் நடுவில் கொண்டுபோகும்படி சாரதியிடம் சொன்னான். அப்போது பந்துக்களும் சிநேகிதர்களும் ஒருவரை யொருவர் கொல்ல ஆயுத பாணிகளாக நிற்பதைக் கண்டு அவனுடைய மனம் கலங்கி, "இதென்ன வேலை, ராஜ்யம் என்னத்திற்கு, பகைமை யென்னத்திற்கு, சுற்றத்தாரைக் கொன்று சம்பாதித்த ராஜ்யாதிகார போகத்தில் என்ன சுகம்?" என்று சொல்லி, வில்லைக் கீழே போட்டுவிட்டுப் பேச்சில்லாமல் உட்கார்ந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில், அவனுக்குத் தேரோட்டும் சாரதியா யிருந்த கண்ணபிரான், குருவாக நின்று, அருச்சுனனுக்கு உபதேசம் செய்த மொழிகளே பகவத்கீதை என்பது.

இப்படி அருச்சுனன், "யுத்தம் என்னத்திற்கு? நான் போர் செய்யமாட்டேன்" என்று சொன்ன காலத்தில், "யுத்தம் செய்வதே உன் கடமை" என்று உபதேசம் செய்த இந்த நூல், எல்லா ஹிந்துக்களும் சம்பிரதாய வித்தியாசமில்லாமல் வேதம் போலவும் உபநிஷத்துகள் போலவும் ஒப்புக்கொண்டிருக்கும் ஒரு சாஸ்திரமாக முடிந்து, பல ஆயிரம் வருஷங்களாக அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. கேவலம், வில்லும் அம்பும் கொண்டு

செய்யும் போரில், ஆரம்பித்த காரியத்தை நடுவில் விடாமல் நடத்தவேண்டி உபதேசித்த வார்த்தைகள் இவை என்று முதலிலிருந்து கடைசிவரையில் வைத்துக் கொண்டே வியாக்கியானம் செய்தோமானால், இந்த அற நூலின் உண்மைப் பொருள் விளங்காமல் போகும்.

மகா பாரதக் கதையில் ஒரு பாகமாக அமைக்கப் பட்டதாயினும், பகவத்கீதை தனிச் சிறப்பும் தனிப் பொருளும் கொண்ட யோக சாஸ்திரமாக விளங்கி வருகிறது. வேதத்தின் முடிவு என்று சொல்லப்பட்ட உபநிஷத்துகளுடன் இதுவும் ஓர் உபநிஷத்தாக மகா ஞானிகளால் மதிக்கப்பட்டு வருகிறது. முன்காலத்தில் அச்சு யந்திரம் கிடையாது. கையேட்டுப் பிரதிகளும் குறைவாகத்தான் இருந்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் மனப் பாடம் செய்வது அவசியமாக இருந்தது. புத்தகாலயங்களில் தனித்தனி நூல்கள் இக்காலத்தில் நிறைந்துகிடக்கிற மாதிரி, அந்தக் காலத்தில் இல்லை. மனப்பாடத்திற்குச் சுகமான வடிவம் செய்யுள் வடிவம். நூல்களெல்லாம் செய்யுளாகவே இருந்தன. முந்தி எழுதப்பட்ட முக்கியமான காவியம் அல்லது புராணத்தோடு பிந்தி எழுதப் பட்ட நூல்களையும் பிணைத்து எல்லாம் ஒரு நூலாகக் கோத்துவைப்பது அந்த காலத்து நிலைமைக்கும் கல்வி முறைக்கும் இசைந்த முறையாக இருந்திருக்கலாம். மகா பாரதத்தில் இம்மாதிரி அனேக தருமநூல்கள் சேர்ந்து கிடக்கின்றன. கீதையும் அவற்றில் ஒன்று.

கீதையைப் படிக்கும்போது பாரதக் கதையை மறந்து விடுவதே நலம் என்பது என் அபிப்பிராயம். கீதையில் சொல்லப்பட்ட உண்மைகளும் உபதேசமும் எக்காலத்திலும் எச் சந்தர்ப்பத்துக்கும் பொருந்தியவை யானபடியால், யுத்தகளத்தில் அருச்சுனனுக்கு ஏற்பட்ட மனக்

கலக்கத்திற்கும் சந்தேகங்களுக்குங்கூடப் பொருத்தமான மருந்து கீதாவாக்கியங்களில் காணக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தின் விஷயங்களைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு பொதுவான ஒரு தரும சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்வது தவருன முறையாகும்.

உ

## கீதையின் சிறப்பு

ஹிந்து சமூகத்தில் அடங்கிய சர்வ சம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்களும் சாஸ்திரமாகவும் பிரமாணமாகவும் ஒப்புக்கொள்ளும் பகவத்கீதையில் சில சுலோகங்களை யாவது சிரத்தா பக்தியுடனும் ஆழ்ந்த சிந்தனையோடும் படித்தோமானால் நம்முடைய முன்னோர்கள் கண்ட மெய்ப்பொருள்களும், ரிஷிகள் ஸ்தாபித்த ஹிந்து தரும மும் இன்னவை யென்று விளங்கும். ஹிந்து தருமம் என்ற அஸ்திவாரத்தின் மேல்தான் நம்முடைய சகல நாகரிகமும், கலைகளும், இலக்கியங்களும், இந்தியாவில் நாம் பெருமை பாராட்டக் கூடிய மற்ற எல்லா பாக்கியங்களும் மாளிகை களாக நிற்கின்றன. அந்த ஹிந்து தருமத்தை உள்ளபடி அறிவது நம்முடைய கடமையாகும். ஆகையால், கீதை யின் சாராம்சத்தை நன்றாகப் படித்துத் தெரிந்துகொள் வது நன்மை பயக்கும். பகவத்கீதை 18 அத்தியாயங்க ளாக வகுக்கப்பட்டு, 700 சுலோகங்கள் கொண்ட நூல். இவைகளிலிருந்து சுமார் 200 சுலோகங்களை எடுத்து மொழிபெயர்த்துச் சொல்ல உத்தேசித்திருக்கிறேன். இந்த சுலோகங்களின் பொருளை நன்றாகக் கிரகித்துக் கொண்டால், பகவத்கீதையின் சாரம் முழுதும் கிரகித்துக் கொண்டதாகவே வைத்துக்கொள்ளலாம்.

௩.

# சிற்றறிவின் மயக்கம்

பௌதிக சாஸ்திர விஷயங்கள் கொஞ்சம் தெரிந்தவுடனே சிலருக்கு மயக்கம் உண்டாகி விடுகிறது. அதிலும், மற்றவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாக, குஜிலிக் கடையில் குறைந்த விலைக்கு வாங்கும் பழைய சாமான்கள் மாதிரி, உழைப்பில்லாமல் கிட்டிய அறிவு சிலருக்கு அதிக போதையை உண்டாக்கி விடுகிறது. எது சிறிது, எது பெரியது, எது அணுகி நிற்பது, எது தூரம் என்ற நிதான புத்தி கலைந்து விடுகிறது. எதைத் தம்மால் அறிய முடியாதோ அதை அவர்கள் இல்லவே யில்லை யென்று சாதித்து விடுவார்கள். மனித அறிவுக்கு எட்டாதது அனைத்தும் பொய் என்று தள்ளிவிட முன்நிற்பார்கள். சாஸ்திரமாவது, அறநூலாவது, அனைத்தும் முட்டாள்கள் எழுதி வைத்தவை என்றும், அதற்கு மேல் பேசினால், அவை யனைத்தும் மனிதர்களை மோசம் செய்யவே வஞ்சனைக்காரர்களால் எழுதப்பட்டவை யென்றும் சாதிப்பார்கள். ஆனால், இதே பௌதிக சாஸ்திரங்களை ஆழ்ந்து பரிசோதித்தவர்கள்—பௌதிக சாஸ்திர உண்மைகளைக் கண்டு பிடிக்க ஆயுள் நாள் முழுதும் தங்கள் சக்தி அனைத்தையும் செலுத்தி உழைத்த அறிஞர்கள் — இப்படி உன்மத்தமடைவதில்லை. பௌதிக சாஸ்திரிகள் மிகவும் அடக்கம் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். தாங்கள் கண்டது மிக்க அதிகமாயினும், காணாததின் அளவுக்குக் கண்டது மிகச் சிறியது என்று அறிவார்கள். கால அளவில் இன்னும் பல விஷயங்களை ஆராய்ச்சி செய்து பௌதிக

சாஸ்திரங்கள் வெகுவாகப் பெருக்கியிருந்தபோதிலும் மானிட அறிவுக்கு என்றென்றும் எட்டாததும்,விஞ்ஞான ஆராய்ச்சி எல்லையைத் தாண்டினதாயுமுள்ள விஷயமும் உண்டென்பதை அவர்கள் அறிவார்கள். உண்மையில் பௌதிக சாஸ்திரங்களை நன்ருக ஆராய்ந்து அதில் பயிற்சியும் செய்தவர்கள் அடக்கத்தை இழப்பதில்லை. தாங்கள் பெற்ற அதிக அறிவினுலேயே அதிக அடக்கமும் அடைகிருர்கள். விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அதீதமான பொருள் உண்டென்பதை ஒப்புக்கொண்டு அப் பரம்பொருளின் முன்பு அறிவும் அடக்கமும் கொண்டு தலைவணங்குகிருர்கள்.

ச

# பரம்பொரு ளாராய்ச்சி

காரணங்களுக் கெல்லாம் காரணமாக நிற்கும் முதல் காரணம்—பிரகிருதி விதிகளுக் கெல்லாம் விதியாய் நிற்கும் பராசக்தி—மனிதனுடைய புத்திக்கும் ஆராய்ச்சிக்கும் அடங்காது. ஆனால், மனிதனுடைய புத்தியின் நிர்மாண அமைப்பினுடைய அழகினால் அது தன்னுடைய குறைகளும் வரம்புகளும் தனக்குத் தெரியாதபடி பரிபூரண உணர்ச்சியுடன் நிற்கிறது. அப்படி யிராவிடின் அது வேலைசெய்ய முடியாது. எத்தகைய விஷயமும் எத்தகைய உண்மையும் ஆராய்ந்து அறியக்கூடும் என்று அதற்குத் தோன்றுகிறது. இத் தோற்றம் அதன் அமைப்பின் சுபாவத்திலிருந்தே உண்டாகிறது. இது இயல்பாயினும், உண்மை வேறு. மனிதனுடைய புத்தி மிகச் சிறந்த அமைப்பாயினும், எதனில் அது ஒரு பாகமோ, அம் முழுமுதல்பொருளை அது தனக்குள் அடக்க முடியாது. எத்துணை அழகிய ஆழாக்கானாலும் அதில் உழக்குப் பிடிக்காது. எந்தப் பலகைமேல் ஒருவன் நிற்கிறானோ, அவன் அதன்மேல் நின்றுகொண்டே, அதைத் தூக்க முடியாது. மகா பலவானானாலும் எது தன்னைத் தாங்குகிறதோ அவனால் அதையே பெயர்த்தெடுக்க முடியாதல்லவா? அதை விட்டு இறங்கித்தான் தூக்க முடியும். வண்டியை இழுக்கும் குதிரையை வண்டிக்குள் ஏற்றி விட்டால் அது வண்டியை இழுக்குமா? மனிதனுடைய புத்தி பரம்பொருளை விட்டுத் தனியாக நிற்க இயலாதது. ஆதலால் அப் பரம்பொருளையே அதனால் இழுத்துச்

செல்ல முடியாது; அதாவது தன் அறிவெல்லைக்குள் கொண்டுவர முடியாது. வயிற்றுக்குள் இருக்கும் ஆகாரப்பை எத்தகைய உணவையும் ஜீரணம் செய்யும். ஆனால், தன்னைத்தானே ஜீரணம் செய்துகொள்ள இயலாது. ஓர் அளவு செய்யலாம்; அதற்குள் அது தன் சக்தியை இழந்து அதற்குமேல் வேலை செய்ய முடியாமல் நிற்கும். ஒரு பாம்புக்கு எவ்வளவு கோரமான பசியும் ஆத்திரமு முண்டானாலும் வாலைக் கௌவிக்கொண்டு தன்னைத்தானே விழுங்கிவிட முடியாது. அவ்விதமே அனைத்துக்கும் காரணமான பரம்பொருள் மானிட அறிவுக்குள் அடங்காது.

ரு

# ஆராயும் முறை

பௌதிக சாஸ்திரங்களில், ஆராய்ச்சியின் வரம்பை ஒவ்வொரு விஷயத்திலும் காணலாம். எந்த விஷயத்தை எடுத்துச் சோதித்தாலும் ஓர் அளவுக்குமேல் உண்மையை அறியமுடியாது. கிணறு வெட்டும்போது, பாறை கண்டால் வெட்டுவதை நிறுத்த வேண்டுவது போல், எந்த ஆராய்ச்சியிலும் ஓரளவு ஆழ்ந்து சென்றபின், மனிதனுடைய புத்திக்கு மிஞ்சிய பாறையின்மேல் மனிதன் மூளை மோதுகிறது; அதுவே எல்லை. வேதாந்த சம்பந்தமில்லாத பதார்த்த சாஸ்திர ஆராய்ச்சியிலும், கணித சாஸ்திரத்திலும் இந்த எல்லையின்மேல் ஆங்காங்கு மோதுகிறோம். நான் கண்டதும் காணக்கூடியதும், பாலின் மேல் படிந்திருக்கும் ஆடையின் அளவே. அதன் கீழ் என்றென்றும் காணமுடியாத ரகசியம் ஒன்று கிடக்கிறது. இவ்விதம் சாதாரண வியவச்சேத - பரிச்சேத சோதனைகளுக்கு அகப்படாத ரகசியத்தைப்பற்றித்தான் வேதம், உபநிஷத்து, கீதை முதலிய சமயநூல்களும், தரும நூல்களும், முனிவர்களுடைய வசனங்களும், பக்தர்களுடைய வாழ்க்கைச் சரித்திரங்களும் வியவகரிக்கின்றன. ஐம்புலன்களைக் கொண்டும், ஐம்புலன்களைக் கொண்டு அறிந்த உண்மைகளைப் பிரமாணமாக வைத்து அதன்மேல் யூகித்தும் அறியக்கூடிய வஸ்துக்கள் பௌதிக சாஸ்திர விஷயங்கள். இவற்றை மீறிய விஷயத்தை எப்படிக் காண முடியும், எப்படிக் காட்ட முடியும் என்பதே உலகத்தில் பல தேசங்களில் உண்டான மதங்களின் நோக்கமும்

முயற்சியுமாம். ஆகையால்தான் மதநூல்களில் சொல்லப்படும் விஷயங்கள், பௌதிக சாஸ்திரங்களில் சொல்லப்படும் தெளிவான ஹேதுக்களையும் ஆராய்ச்சிகளையும் போல் இல்லை. வெறும் பிரத்தியட்சப் பிரமாணத்தையோ, யுக்தியையோ கொண்டு அறியமுடியாத இந்த விஷயத்தை ஆராய்ச்சி செய்யப் பக்தி வேண்டும், தியானம் வேண்டும், சாந்தி வேண்டும், நியமம் வேண்டும், தவம் வேண்டும் என்று இவ்வாறு வேதமும் மற்ற தரும நூல்களும் சொல்லுகின்றன. பக்கத்திலுள்ள ஊருக்குக் கால் நடையாகப் போய்ச் சேரலாம்; தூரமாயிருக்கும் ஊருக்கு நம்முடைய காலை உபயோகிக்காமல் வண்டியும் மாடும் கொண்டுபோய்ச் சேர்க்கும். மரத்தின்மேல் ஏறுவது வேறு; கிணற்றில் இறங்குவது வேறு. புஷ்பத்தைக் காதிற்குள் வைத்தால் வாசனை வித்தியாசம் தெரியாது. அழகிய படத்தை மூக்கினால் முகர்ந்தால் அழகு தெரியாது. இந்திரியங்களுக்கு அடங்காத ஒரு பொருளை மனதில் விளங்கச் செய்வது இந்திரிய அனுபவத்தின்மேல் நாட்டிய பரிசோதனை முறைகளாலும் பிரமாணங்களாலும் ஆகாத காரியம். ஆகையால், பாரமார்த்திக விஷயங்களை ஆராய்ச்சி செய்யப் பக்தியும், நியமமும், சுத்தமும், தியானமும், கடவுளை வந்தித்தலும் தவமும் வேண்டும். தவம் என்றால் புறக் கரணங்களையும் அகக் கரணங்களையும் அடக்கி, மனதை ஒருவழிப்படுத்தி நிறுத்துவது; உடலைத் துன்புறுத்துவதன்று.

## ஏன் கவனிக்க வேண்டும்?

“எல்லாம் சரிதான், ஆனால் புத்திக்கு அகோசரமான இத்தகைய பொருளைப்பற்றி மனிதன் ஏன் கவனிக்க வேண்டும்? அறியமுடியாத விஷயத்தைப்பற்றிச் சிந்திப்பதிலோ ஆராய்வதிலோ என்ன பயன்?” என்ற கேள்வி பிறக்கிறது. இதற்குச் சமாதானம் என்னவென்றால், பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிக்கு எட்டாததினாலேயே, இருக்கும் ஒரு பொருள் இல்லாமல் போகாது. நாம் தொட்டு, கண்டு, முகர்ந்து, கேட்டு, ஆராய்ந்து பார்த்த விஷயங்களுக்குமேல், முதல் காரணமாயும் அனைத்துக்கும் ஆதாரமாயும் ஒன்று உளது என்பது நிச்சயம். அதைத் தொட முடியாது; அதன் உருவத்தை அறிய முடியாது; அதன் குணங்கள் புத்திக்கு எட்டாதவை; ஆனபோதிலும் அது எங்கும் எவ் விஷயத்திலும் கலந்து நிற்கிறது. சகல பதார்த்தங்களும், சகல சக்திகளும், மனிதனுடைய சொரூபம் உள்பட அனைத்தும் இந்த அறியமுடியாத பொருளால் கவரப்பட்டிருப்பது உண்மை. இத்தகைய பெரிய ஓர் உண்மையைக் கவனிக்காமல் எப்படி இருக்க முடியும்? ஆகையால், பரம்பொருளைக் கவனியாமல் விட்டுவிடலாம் என்பது முடியாது. இருட்டறையில் இன்னது இருக்கிறது என்று அறிய முடியாதுதான்; ஆனால் அதில் ஒரு முக்கியமான சாமான் இருப்பது உறுதியா யிருக்குமாயின், அந்த இருட்டறையைக் கவனியாமல் விடமுடியுமா?

கணிதப் புலவர்களை விசாரித்தோமானால் அனேக கணிதப் பதங்களை சங்க்யா ரூபமாகக் கணக்கிட முடி

யாது என்பதைச் சொல்லுவார்கள். ஆயினும் அவைகளை நன்ருகக் கவனித்து அனேக முக்கியமான விஷயங்களைக் கணித்து வருகிருர்கள். அப்படிக் கணித்ததின் ஆதாரத்தைக் கொண்டு கட்டிடங்கள் கட்டியும் யந்திரங்கள் செய்தும் வருகிருர்கள். ஒரு சக்கரத்தின் சுற்றளவுக்கும் அதன் நேர் குறுக்களவுக்கும் என்ன பரஸ்பரப் பிரமாணம், ஒரு சமசதுரத்தின் பக்க அளவுக்கும் மூலைக்கு மூலை அளவுக்கும் என்ன பரஸ்பரப் பிரமாணம் என்ருல், இந்த சாதாரண விஷயத்தைக்கூடக் கணக்கிட்டு சங்க்யா ரூபமாகச் சொல்லவே முடியாது. 4-க்கு வர்க்க மூலம் 2, 9-க்கு வர்க்கமூலம் 3. இதைப்போல் 2-க்கு வர்க்கமூலம் என்னவென்ருல் தசாம்சத்திலாவது சாதாரண பின்ன ரூபத்திலாவது கணக்கிட்டு முடிவாகச் சொல்ல முடியாது. ஆயினும் இந்த அறிய இயலாத லக்கங்கள் வேலைக்கு மிகவும் உதவி வருவதை கணிதப் புலவர்களும் கட்டிடங்கள், பெரிய வாராவதிகள், அணைக்கட்டுகள் முதலியவை கட்டும் நிபுணர்களும் அறிவார்கள். அதே விதமாக, கடவுளும் தருமமும் ஆராய்ச்சிக்கு அடங்கவில்லை யென்கிற காரணத்தைக்கொண்டு அவை காரியத்திற்கு உதவா என்று விட்டுவிட முடியாது. வேதம், உபநிஷத்து, கீதை முதலிய நூல்களில் சொல்லப்படும் விஷயங்களின் வரம்பு, ஆதாரம், உருவம் முதலியவைகளை நிரூபித்து நிச்சயிக்க முடியாதாயினும், அவை வெகு முக்கியமான விஷயங்கள் ; வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானவை.

கீதையிலும் உபநிஷத்துகளிலும் இன்னும் உலகத்தார் மதிக்கும் வேறு தரும நூல்களிலும் விவரிக்கப்படும் விஷயங்கள், கணிதம் பௌதிகம் ரஸாயனம் முதலிய பௌதிக நூல்களில் விஷயங்கள் எவ்வளவு தெளிவாக சொல்லப் படுகின்றனவோ அவ்வளவு தெளிவாகச் சொல்லப்படாத

ளைக்கொண்டு, அவற்றை ஆதாரமற்றவை என்று எண்ணி விடக்கூடாது. இந்திரியங்களுக்கு அடங்காத தத்துவங்களை ஆராய்ச்சி செய்து ஞானம் பெறுவதற்கு, அறிவும் பக்தியும் மட்டும் போதா. பக்தியும், சுத்தமும், தவமும், தியானமும் அவசியம். தியானமும், தவமும் செய்வதற்கு இந்த நூல்கள் வழி காட்டும்.

காய சுத்தமும் மனோ சுத்தமுங்கொண்டு தியானித்துப் பரமாத்மாவை வேண்டினோமானால், முதலில் விபரீதமாகவும் பரஸ்பர விரோதமாகவும் பொருளற்ற வார்த்தைகளாகவும் தோன்றியவைகூடப் பொருள் கொண்டு விளங்கும். மனதிற்கு எட்டாத விஷயம் பிரகாசமடைந்து ஜொலிக்கும். அவ்விதம் பகவானுடைய அருள் பெற்ற ஒருவர், அந்தராத்மாவால் கண்டு ஆனந்தம் பெற்ற விஷயத்தை, மற்றவர்களுக்கு விளக்கிச் சொல்லச் சக்தியில்லாமலுங்கூட இருக்கலாம்.

எ

## சாஸ்திரம் படிக்கும் முறை

**ஏ**ந்த மதத்தையாவது சம்பிரதாயத்தையாவது சரியாகத் தெரிந்துகொள்வதற்குத் துவேஷமோ, அவமதிப்போ கொண்ட புத்தியால் இயலாது. ஒரு விஷயத்தைக் கௌரவித்தா லொழிய அந்த விஷயத்தின் உண்மை புலப்படாது. "மோசக்காரர்கள்; நம்மை ஏமாற்றுவதே இவர்கள் நோக்கமா யிருந்தது; ஏதோ லாபத்திற்குப் பொய்யும் மோசமும் கொண்டு மதங்களை ஏற்படுத்தி, ஸ்மிருதிகளும் புராணங்களும் எழுதினார்கள்" என்று மனதையும் புத்தியையும் கெடுத்துக்கொண்டு படிக்க உட்கார்ந்தோமானால் ஒன்றும் விளங்காது. இப்படி எண்ணுவதும் மூடத்தனம். நமக்கு இப்போது இருக்கும் அறிவும் ஜாக்கிரதையும் சந்தேக உணர்ச்சியும் அக் காலத்து ஜனங்களுக்கும் உண்டு. அவர்களனைவரும் முட்டாள்கள் என்றும், வெகு சுலபமாக ஏமாற்றப்பட்டு, வலையில் சிக்கிவிட்டார்கள் என்றும் எண்ணுவது தவறு. நமக்கிருக்கும் புத்திகூர்மை அக் காலத்திலும் ஜனங்களுக்கு இருந்தது. விஷயங்களில் புத்தி செலுத்தி ஆராய்ச்சி செய்து பொய்யும் மோசமும் கண்டுபிடித்துத் தள்ள அந்நாளில் அவகாச மில்லாமலும் போகவில்லை. மதங்களை ஸ்தாபித்த பெரியோர்களை நேரில் கண்டவர்களும் கேட்டவர்களும் அவர்கள் அன்புடன் மதிக்கத்தகுந்த குணமும் வாழ்க்கையும் கொண்டவர்கள் என்று கௌரவித்தபடியால்தான், அப் பெரியோர்கள் சொன்ன சொற்களும் ஸ்தாபித்த மதங்களும் கொண்டாடப்பட்டு வந்தன. மோசத்தாலும் ஏமாற்றத்தாலும்

அவை சக்தி யடைந்து நிலைபெற்றன வென்று எண்ணுவது சுத்தத் தவறு.

எந்த ஸ்தாபனமும் எந்த முறையும் நாளா வட்டத்தில் சில சுயநலக்காரர்கள் கையில் சிக்கி அவர்களுடைய சுயநலத்திற்குக் கருவிகளாகி விடும். அப்படியே மதஸ்தாபனங்களும் மதங்களுங்கூடக் கெட்டிருப்பது உண்மை. ஆனால், பிந்தி நடைபெறும் சீர்கேட்டை முந்தி உண்டாக்கிய மகான்களை அவமதிப்பதற்குக் காரணமாக வைத்துக் கொள்வது, ஆராய்ச்சி முறையாகாது. சாக்கடையைப் பார்த்து மேகத்தில் அழுக்கிருந்தது என்று எண்ணலாமா? மேகத்தையும் மழையையும் எவ்வளவு கௌரவமாக நோக்க வேண்டுமோ அவ்விதமே ஆதி ரிஷிகளையும் அவர்கள் இயற்றிய தரும நூல்களையும் கௌரவித்துப் படிக்க வேண்டும். திருடனைக் கண்டுபிடிப்பதற்காக வீட்டில் சோதனை செய்ய நுழையும் போலீஸ்காரனுடைய மனோபாவத்துடன் கீதையையாவது பிற மதத்தார்கள் கௌரவிக்கும் மார்க்க தரிசன நூல்களையாவது படிப்பதில் பயனில்லை; படித்தலும் கூடாது. மார்க்க நூல்களைப் படிக்கும்போது தகப்பனிடம் மகன் நெருங்குவதுபோல் பக்தியும் அன்புங் கொண்டு நெருங்க வேண்டும்.

இனி, கீதா சங்கிரம் ஆரம்பம்.

அ

## ஆத்மா

ஜீவன், ஜீவாத்மா, ஆத்மா, தேஹீ என்று இவ்வாறு பல பெயரிட்ட பொருள் ஒன்று, உடம்பிற்குள் உடம்பின் எஜமானனாக வாசம் செய்கிறது என்ற உண்மையை, முதலில் உணர்ந்து மனதில் ஊர்ஜிதப்படுத்திக்கொள்ள வேண்டும். கண்ணுக்குப் புலப்படும் தேகம் மட்டில் உண்மை, அதைத் தவிர வேறு எதுவுமில்லை என்று எண்ணுவது தவறு. ஜீவன் புலன்களுக்குப் புலப்பட மாட்டான். ஆயினும் தேகத்திற்குள் எங்கும் வியாபித்து எல்லாவற்றையும் நடத்தியும் அனுபவித்தும் வருகிறான். மனிதனுக்கு உள்ள புத்தி வேறு, ஆத்மா வேறு. நினைவு, கோசரம், ஆசை முதலிய மனோபாவம், நிதானபுத்தி, விவேகம் இவைகளெல்லாம் மனிதனுடைய தேகத்தின் சுபாவமான தொழில்கள். இவையே ஆத்மாவல்ல. இவைகளை யெல்லாம் தவிர்த்து அவைகளுக்குப் பின் நிற்பது ஆத்மா.

ஆத்மா உடம்பெங்கும் வியாபித்திருக்கிறது. வயிற்றிலோ, மார்பிலோ, தலையிலோ மட்டும் இருப்பதன்று. அதற்குத் தனி அவயமாவது, கோசமாவது இல்லை. "ஈதர்" அல்லது ஆகாயம் என்று பௌதிகப் புலவர்கள் கற்பனை செய்துகொண் டிருக்கும் கற்பனா பதார்த்தத்தைப் போல் இதற்கும் எடையில்லை, இடமில்லை, அளவில்லை.

மனிதனுக்கு மட்டு மல்ல ; எல்லாப் பிராணிகளுக்கும், கொடி, செடி, மரங்களுக்கும் ஆத்மா உண்டு.

தேகம் என்பது ஆத்மாவுக்கு இருப்பிடம். ஆகையால் தேகத்தை க்ஷேத்ரம் என்றும், ஆத்மாவை க்ஷேத்ரி

என்றும், க்ஷேத்ரத்தை அறிந்தவனே, க்ஷேத்ரஜ்ஞன் என்றும் சொல்வதுண்டு.

மனிதனோ அல்லது வேறு பிராணியோ, தாவரமோ, மரணமடைந்துவிட்டால் அது தேகத்திற்கு நடந்த சம்பவம். தேகந்தான் புதைக்கப்படும், சுடப்படும், அல்லது பிராணிகளுக்கு இரையாகும். ஆத்மா சாகாது; அதைச் சாகடிக்கவும் முடியாது. மக்கள் இறந்தார்கள் என்று துயரப்படுவது மூடத்தனம். கிழிந்த துணியை அல்லது வேண்டாத உடுப்பை எடுத்துவிட்டுப் புது வஸ்திரம் அணிவதுபோல் ஜீவன் வேறு தேகத்திற்குள் செல்லப் பழைய தேகத்தை நீக்கிக்கொண்டான். இவ்வளவே உண்மை. இதற்கு நாம் ஏன் துயரப்பட வேண்டும்?

ஸ்ரீ பகவானுவாச |

அசோச்யானன்வசோச஀ ஸ்த்வம்
ப்ரஜ்ஞா வாதாம்ச்ச பாஷஸே |
கதாஸூனகதாஸூம்ச்ச
நானுசோசந்தி பண்டிதா: ||

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:

துயரப்படத் தகாதார் பொருட்டுத் துயரப்படுகிறாய். அறிஞர் பேச்சும் பேசுகிறாய். இறந்தார்க்கேனும் இருப்பவர்களுக்கேனும் அறிஞர் துயரப்படமாட்டார். (2-11)

நத்வேவாஹம் ஜாது நாஸம்
நத்வம் நேமே ஜநாதிபா: |
ந சைவ ந பவிஷ்யாம:
ஸர்வே வயமத: பரம் ||

இதன்முன் எக்காலத்திலும் நான் இல்லாதிருந்த தில்லை. நீயும் இங்குள்ள வேந்தர் யாவரும் அப்படியே. இனி என்றைக்கும் நாம் இல்லாமல்போகவும் மாட்டோம். (2-12)

தேஹிநோ' ஸ்மிந்யதா தேஹே
கௌமாரம் யௌவனம் ஜரா |
ததா தேஹாந்தர ப்ராப்திர்
தீரஸ்தத்ர ந முஹ்யதி ||

ஆத்மாவுக்கு இவ் வுடலில் எங்ஙனம் பால்யம், யௌவனம், மூப்பு தோன்றுகின்றனவோ, அங்ஙனமே வேறொரு சரீரமும் பிறப்பும் ஏற்படுகின்றன. இதைப் பார்த்துத் தீரன் கலங்க மாட்டான். (2-13)

அவிநாசி து தத்வித்தி யேந ஸர்வமிதம் ததம் |
விநாசமவ்யயஸ்யாஸ்ய ந கச்சித் கர்த்துமர்ஹதி ||

இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளின் உடம்பிலும் பரந்து நிற்கும் பொருள் அழிவற்றதென்றறிவாய். கேடற்ற இதனை அழித்தல் யார்க்கும் இயலாது. (2-17)

ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்நாயம்
பூத்வா பவிதா வா ந பூய: |
அஜோ நித்ய: சாச்வதோ'யம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே ||

ஜீவன் பிறப்பதுமில்லை; எக் காலத்திலும் இறப்பதுமில்லை. ஒரு முறை இருந்து பின்னர் இல்லாது போவது

மில்லை. பிறப்பற்றான், நித்யன், சாசுவதன், பழையோன். உடம்பு கொல்லப்படுகையில் ஆத்மா கொல்லப்படுவதில்லை. (2-20)

வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோ' பராணி |
ததா சரீராணி விஹாய ஜீர்ணான்
ந்யந்யானி ஸம்யாதி நவானி தேஹீ ||

நைந்த துணிகளைக் கழற்றி யெறிந்துவிட்டு, மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல், ஜீவன் நைந்த உடல் களைக் களைந்து புதியனவற்றை எய்துகிறான். (2-22)

அச்சேத்யோ' யமதாஹ்யோ'
யமக்லேத்யோ' சோஷ்ய ஏவ ச |
நித்ய: ஸர்வகத: ஸ்தாணுரசலோ'
யம் ஸநாதந: ||

பிளத்தற்கு முடியாதவன்; எரித்தற்கும் நனைத்தற் கும், உலர்த்துதற்கும் முடியாதவன்; நித்யன்; எங்கும் செல்பவன்; நிலைகொண்டவன்; அசையாதவன்; என் றும் மாறாதவன். (2-24)

அவ்யக்தோ' யமசிந்த்யோ'
யமவிகார்யோ' யமுச்யதே |
தஸ்மாதேவம் விதித்வைநம்
நாநுசோசிதுமர்ஹஸி ||

வெளிப்படையாகான், சிந்தனைக்கு எட்டாதவன், விகாரப்படாதவன் என்று ஆத்மாவைப்பற்றி சுருதியில்

சொல்லப்படுகிறது. ஆதலால் ஜீவன் இத்தன்மையது என்றறிந்து நீ துயரப்படாதிருக்கக் கடவாய். (2-25)

தேஹீ நித்யமவத்யோ'யம்
தேஹே ஸர்வஸ்ய பாரத |
தஸ்மாத் ஸர்வாணி பூதாநி
ந த்வம் சோசிதுமர்ஹஸி ||

எல்லாருடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்ல முடியாதவன். ஆதலால், நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்த வேண்டியதில்லை. (2-30)

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்வம்
ஸ்தாவர ஜங்கமம் |
க்ஷேத்ர க்ஷேத்ரஜ் ஞஸம்
யோகாத்தத்வித்தி பரதர்ஷப ||

ஸ்தாவரமாயினும் ஜங்கமமாயினும் ஓருயிர் உண்டாயின், அது க்ஷேத்ரக்ஞனும் சேர்ந்தமையால் உண்டானதென்றறிவாய். (13-27)

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யா
தாகாசம் நோபலிப்யதே
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே
ததா''த்மா நோபலிப்யதே ||

எப்பொருளிலும் ஊடுருவிச் சென்றிருக்கும் ஆகாயம் தன் நுண்மையால் எதனுலும் மாசுபடியாமல் தன் சுத்த நிலைமைக்குக் குறைவின்றி நிற்பதுபோல், ஆத்மாவானது,

உடம்பில் வியாபித்துநின்றாலும் உடம்பின் குற்றம் அதைத் தீண்டுவதில்லை. (13-32)

யதா ப்ரகாசயத்யேக:
க்ருத்ஸ்நம் லோகமியம் ரவி: |
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம்
ப்ரகாசயதி பாரத ||

சூரியன் ஒருவனாய் இவ்வுலக முழுதையும் எங்ஙனம் ஒளியுறச் செய்கிறானோ, அதுபோல், க்ஷேத்திரத்தை உடையோனாகிய ஜீவன் க்ஷேத்ரம் முழுவதையும் ஒளியுறச் செய்கிறான். (13—33)

௯

# கர்மவிதி

ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் என்ன பரஸ்பர சம்பந்தம் என்கிற பெரிய விஷத்தை உணர்ந்துகொள்வதற்கு ஆசாரியர்கள் ஒரு நல்ல வழியைக் காண்பித்திருக்கிறார்கள். தேகத்துக்கும் தேகத்தை யாளும் ஜீவனுக்கும் என்ன சம்பந்தம் என்பதை நன்றாகக் கவனித்து உணர்ந்தால், தேகத்துக்கு ஜீவாத்மா எப்படியோ, அப்படி ஜீவாத்மாவுக்குப் பரம்பொருள் என்று வைத்துக்கொள்ளலாம். தேகத்தை எப்படி ஜீவன் சேதனப் பொருளாக்கிப் பிரகாசித்துக் கொண்டு அதற்குள் அந்தர்பாவமாய் இருந்து வருகிறதோ, அதே மாதிரி ஜீவனுக்குள் பரமாத்மா அந்தர்பாவமாய் நின்று அந்த ஜீவனைத் தாங்கி வருகிறது.

ஜீவன் ஒன்றன் பின் ஒன்றாகப் பல தேகங்களைத் தரிக்கிறது. ஒவ்வொரு உருவத்தைத் தரிக்கும்போதும் அது அந்தந்த உருவமாகிறது. அதேமாதிரி பரமாத்மா பல ஜீவன்களை ஒரே காலத்தில் தரித்து வருகிறான். உடம்பு எவ்வாறு ஆத்மாவை மறந்துவிடுகிறதோ, அவ்வாறே ஜீவன் பரமாத்மாவை மறந்துவிட்டுத் தானே எல்லாம் என்று எண்ணிவிடுகிறது. இதுவே மாயை அல்லது அஞ்ஞானம். ஓர் ஆத்மா ராஜாவாகவோ, பிச்சைக்காரனாகவோ, மாடாகவோ, பன்றியாகவோ,மாமரமாகவோ புழுவாகவோ பல பிறவிகளாக உருவெடுப்பதுபோல்,பரப்பிரம்மமும் பலஉருவெடுத்து நிற்கிறது. ஆத்மாவே அரசனாய் விடவில்லை, புழுவாகவுமில்லை. அதே மாதிரி பரமாத்மாவும் மனிதனாய் விடவில்லை; உடல்களுக்கு மட்டுந்தான் அந்த உருவபேதங்கள்.

ஆத்மா தனிப்பட்டே நிற்கிறது. எந்த தேகத்துக்குள்ளும் எந்த வஸ்துக்குள்ளும் பரம்பொருள் நின்று அதைத் தாங்கி வருகிறது. ஆயினும், அது அந்த வெவ்வேறு பொருள்களாகி விடவில்லை. தனிப்பட்டே நிற்கிறது. பரம்பொருளைத் துண்டுளாக்க முடியாது; பல பொருள்களில் நின்றாலும் அதன் ஒருமை சிதறிப் போகாது.

பரமாத்மாவுக்கும் ஜீவனுக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தத்தை இதற்குமேல் விசாரிக்கப் புகுந்தோமானால் துவைத, அத்வைத, விசிஷ்டாத்வைத வாதங்களில் புக நேரிடும். பகவத் கீதையில் துவைதாத்வைதப் பிரச்னையை எடுத்துக்கொள்ளப்பட வில்லை. மூவித கோட்பாடுகளுக்கும் கீதையைப் பிரமாணமாக வைத்துக் கொண்டே, மதாசாரியர்கள் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். உபநிஷத்துக்களும் இப்படியே மூவித கோட்பாடுகளுக்கும் இடங் கொடுக்கும்.

ஜீவாத்மாவுக்கும் பரமேசுவரனுக்கும் என்ன சம்பந்தம் என்னும் விஷயத்தில் அபிப்பிராய வேறுபாடுகள் இருந்தாலும், மூவித ஸம்பிரதாயங்களிலும் கர்ம விதி ஒப்புக்கொள்ளப்படுகிறது: அதாவது, ஜீவன் கர்ம விதியில் பந்தப்பட்டு நிற்கிறான் என்று.

புலன்களும், புலன்களை நடத்தும் மனமும் ஆக ஆறும் கொண்டது தேகம். இதுவே ஜீவனுக்கு வீடு. இந்த வீடு அசேதன பூத பிரகிருதியைக் கொண்டு செய்யப்பட்டது. ஒரு தேகத்தைத் தரிக்கும் ஆத்மா அத் தேகத்தை கொண்டு விஷயங்களை அனுபவிக்கிறது. செயல்களெல்லாம் குணங்களாக மாறி அக்குணங்கள் தொடர்ந்து நிற்கின்றன. "குணம்" என்பது பொருள்கள், செயல்கள் இவற்றின் சூட்சும வடிவம். ஒரு தேகத்தை விட்டு வேறு தேகத்தைத் தரிக்கும்போது முன் ஜன்மத்தில்

அடைந்த கர்ம பலன்கள் ஆத்மாவைப் பற்றிநிற்கும். இதுவே புது தேகத்தின் மூலதனம், அல்லது குணம். ஓர் உடலைவிட்டு வெளியேறும்போது ஆத்மா அவ்வுடலில் தான் அடைந்த குணங்களை உடன்கொண்டு ஏகும். அவைகளோடு அது புது உடலில் பிரவேசிக்கிறது. காற்று ஒரு தோட்டத்தின்வழி வீசும்போது அவ்விடத்திலுள்ள வாசனைகளை எடுத்துக்கொண்டு வெளிச் செல்வதுபோல், ஆத்மாவும் தான் எடுத்த ஜன்மத்தின் கருமங்களைசூட்சும உருவத்தில் கொண்டு செல்கின்றது.

மமைவாம்சோ ஜீவலோகே
ஜீவ பூத: ஸநாதன: |
மன: ஷஷ்டானீந்த்ரியாணி
ப்ரக்ருதிஸ்தானி கர்ஷதி ||

எனதொரு கிரணம் ஜீவலோகத்தில் சென்று, அங்கே என்றுமுள்ள ஜீவனாகி, ஐந்து இந்திரியங்களையும் ஆருவதாக மனதையும் சேர்த்துக்கொண்டு நிற்கிறது. (15-7)

சரீரம் யதவாப்நோதி
யச்சாப் யுத்க்ராமதீச்வர: |
க்ருஹீத்வைதானி ஸம்யாதி
வாயுர்கந்தா நிவாசயாத் ||

ஆங்காங்குள்ள வாசனைகளைக் காற்று பற்றிச் செல்லுவதுபோல், உடலுக்கு எஜமானனை ஆத்மா யாதேனுமோர் புது உடலை எய்துங்காலத்தும் கொண்ட உடலை விடுங்காலத்தும் இவைகளைப் பற்றிச் செல்லுகிறான். (15-8)

## கர்மவிதி

ச்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்சனம் ச
ரஸனம் க்ராணமேவ ச |
அதிஷ்டாய மனஸ்சாயம்
விஷயானுப ஸேவதே ||

கேட்டல், காணல், தீண்டுதல், சுவை, மோப்பு இவைகளுக்குரிய பொறிகளையும் மனத்தையும் கொண்டு விஷயங்களை ஜீவன் அனுபவிக்கிறான். (15-9)

ஒரு ஜீவனுடைய பரிணமம் அதன் கையிலேயே இருக்கிறது. நற்கருமமும் தீயகருமமும் செய்து தனக்குத் தானே உதவிக்கொள்ளுகிறது. மேன்மையடையவும் கீழே செல்லவும் வழி அதன் செயலே. இந்தப் பொறுப்பும் சுதந்திரமும் ஜீவனுக்கு உரிமை. இந்த வியாபாரம் மரணத்தோடு நின்று போவதில்லை. ஒரு தேகத்தில் செய்த செயல்களின் பலன் அந்தத் தேகம் நீங்கியவுடன் தீர்ந்து போகாது. மறு ஜன்மத்தில் கணக்கு ஆரம்பிக்கும்போது, முதல் பேரேட்டின் லாப நஷ்டக் கணக்கைச் சேர்த்துக்கொண்டுதான் ஆரம்பிக்க வேண்டும். இது தான் கர்ம விதி. உலகத்தில் காணும் சுக துக்கங்களுக்கும் குண பேதங்களுக்கும் காரணம் தேடி ஆராய்ந்து சொல்லும் எந்த மதக்கோட்பாட்டுக்கும் ஆட்சேபனைகள் காட்டலாம். எவ்வித சமாதானம் தேடினாலும் குறைகள் இருக்கவே இருக்கும்; புத்தி பரிச்சேதத்திற்கு முற்றிலும் அடங்கி நிற்காது. இதுவே பீடிகையில் சொல்லிய ஈசுவர ரகசியம். ஆனால், புலப்படும் தேகத்திற்குள் புலப்படாத ஆத்மா ஒன்றுண்டு, அதற்கு மரண மில்லை என்பதை ஒப்புக் கொண்டால், ஹிந்து மதத்தில் சொல்லப்படும் இந்தக் கர்ம விதி யொன்றே சர்வ பௌதிக சாஸ்திர அனுபவத்

நிற்கும் ஒத்திருக்கும் கோட்பாடு. வேறு எந்தக் கொள்கையும் இதைவிட அதிக ஆட்சேபனைகளுக்கு இடங் கொடுக்கும். பதார்த்த சாஸ்திரத்தில் ஜடப் பொருளுக்கும் ஜட வேகத்திற்கும் அவிநாசத்வம் சொல்லப்படுகிறது. அதாவது எந்தப் பதார்த்தத்தையாவது, எந்த வேகத்தையாவது உருவம் மாற்றலாமே யொழிய அழித்துவிட்டு அதை இல்லாமல் செய்துவிட முடியாது. அந்தக் கோட்பாட்டைக் கொண்டே பௌதிக சாஸ்திரம் முழுதும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. அசேதன அவிநாசத்வ தத்துவத்தைச் சேதன வேகத்திற்குப் பிரயோகிப்பதே கர்ம விதி. ஹிந்து தர்மத்திற்கு இது அடிப்படையான கொள்கை. காரண காரியத்தின் நிரந்தர சம்பந்தத்தின் மேல் ஏற்பட்ட தத்துவம். காரணத்திற்குச் சமம் காரியம். காரணம் பலனின்றி மறையாது. காரணத்தின் மறு உருவமே பலன். ஆகையால் தேக வியோகமான பின்னும் ஆத்மா உண்டெனில், ஆத்மாவைப் பற்றிய மட்டில் அதன் செயல்களின் பலன் அதைத் தொடர்ந்தே நிற்கும். இதுதான் பூர்வ ஜன்ம கர்ம விதி. ‘ இன்ஸால் வென்ஸி ’ கோர்ட்டில் கடன்களை ரத்துசெய்துவிடுவதுபோல், கர்ம விதியில் கிடையாது. முன் ஜன்மங்களின் பழைய கணக்கைத் தீர்த்தே யாக வேண்டும்.

கூ

## கர்ம பலன்

ஒரு குளத்தில் ஒரு கல் போட்டால், அது ஜலத்தைக் கலக்கி அலைகள் உண்டாகும். எவ்வளவு சிறிய கல்லும் அதன் கனத்திற்கும் வேகத்திற்கும் தகுந்த அளவில் அலைகளைக் கிளப்பும். சிறு கலக்கமானாலும் அதன் வேகம் அலை அலையாகச் சென்று கரையை மோதும். ஓர் அலை மற்றோர் அலையை வெட்டும். ஒன்றோடு ஒன்று சேர்ந்து பெருகுவதும் குறுகுவது முண்டு. ஆனால், எந்தச் சிறிய சலனமும் வீண் போகாது. இதேவிதம் நம்முடைய செயல்களும். செயலென்றால், மனதில் உதிக்கும் எண்ணங்களே ஆகும். வெகு ரகசியமான மனத் தோற்ற மூங்கூடப் பரம்பொருள் என்ற ஆகாச சமுத்திரத்தில் அலைகளை உண்டாக்கிச் செல்லும். அது தன் பலனை உண்டாக்கியே தீரும். அந்தப் பலனைத் தீர்த்துக்கொள்ள ஜீவன் மறுபடியும் யத்தனித்துத் தீரவேண்டும்.

ஒருவன் மற்ற ஜீவன்களுக்கு உண்டாக்கும் சுகத்திற்கும் துக்கத்திற்கும் தகுந்த தண்டனையோ வெகுமதியோ அடைவது ஒருபுறமிருக்க, நாம் எண்ணும் ஒவ்வொரு எண்ணமும், செய்யும் ஒவ்வொரு செயலும், உடனே நம்மையே தாக்குகிறது. ஒருவன் செய்யும் வினை மற்றவர்களைப் பாதிப்பதற்குமுன் செய்தவனை முதலில் தாக்குகிறது. செயலின் பயனை முதலில் செய்தவன் அடைகிறான். ஆத்மாவின் குணச்சுவை அந்தச் செயலால் மாறுபடுகிறது. இன்று நான் ஒரு நல்ல எண்ணம் எண்ணுவேனானால், அல்லது நற்கருமம் செய்வேனானால் அந்த

அளவில் என் குணம் மேன்மை யடைந்து விட்டது. ஒரு தீங்கு நினைத்தேனானால், அல்லது இழிவான மனத்தோற்றத்திற்கு இடங் கொடுத்தேனானால் அந்த அளவிற்கு ஆத்மா கீழ்நோக்கிச் சென்றது. புற உலகத்தில் மாறுதல்கள் உண்டாகும் எண்ணத்துடன் வினைகளைச் செய்கிறோம். ஆனால் உண்மையில் நாம் அடைவது நம்முடைய உள்ளத்தின் மேன்மை அல்லது தாழ்வு. ஒவ்வொரு க்ஷணமும் தட்டான் தங்க ஆபரணத்தைத் தட்டி உருவாக்குவது போல், நம்முடைய ஆத்மாவை நாம் கர்மம் என்கிற சுத்தியால் தட்டிக்கொண்டு இருக்கிறோம். உடலை விட்டுப் பிரியும்போது அதன் வடிவம் எத்தகையது என்பது, வாழ்நாளில் செய்த செயல்களையும் எண்ணிய எண்ணங்களையும் பொறுத்திருக்கிறது.

இன்று நான் கோபத்தைப் பொறுத்தேனானால் நாளைப் பொறுப்பது எளிதாகும். பொறுமையே சுபாவமாய் விடும். இன்று காம எண்ணம் எண்ணினானால் நாளை அதன் வேகத்தைத் தாங்குவது கடினம். அதுவே வழக்கமாய் விடும். செய்த தீமைக்கோ, எண்ணிய இழிவான எண்ணத்திற்கோ இன்று பச்சாத்தாபப்பட்டு உண்மையில் வருத்த மடைந்தேனானால், நாளை அந்த எண்ணம் என்னை அணுகாது. இப்படியே எல்லா குணங்களும். சாகும் காலத்தில் ஆத்மாவின் தலைச்சுமை இதுவே. ஒரு ஜன்மத்தில் வாழ்நாளை எப்படி உபயோகிக்கிறோமோ அதுவே மறுஜன்மத்தின் தலைச்சுமை.

கக

## கர்மவிதிக்கு ஆட்சேபங்கள்

"எல்லாம் விதிக்கு அடங்கியது. நான் என்ன செய்தால் என்ன?" என்று பாமரமக்கள் எண்ணுகிறார்கள். கர்ம விதி என்றால் அதுவல்ல. கர்ம விதி யென்று ஹிந்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கொள்கை வேறு; மனிதப் பிரயத்தனத்தில் பயனில்லை, எல்லாம் "தெய்வ"ச் என்கிற கொள்கை நம்முடைய சாஸ்திரமல்ல. மனிதப் பிரயத்தனம் அவசியம், அதுவே முக்கியமானது என்பது தான் வேதாந்தத்தில் சொல்லும் கர்ம விதி. புருஷப் பிரயத்தனத்தில் பயனில்லை என்று சொல்லுவதற்குக் கர்ம விதி நேர் எதிரிடை. நேற்றுச் செய்த செயலின் பயன் இன்று அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்பது மனிதனுடைய சுதந்திரத்தை அபகரித்துக்கொள்வது ஆகாது. எல்லாம் கடவுளின் இஷ்டம், அவ்வப்போது கடவுளுக்கு என்ன தோன்றுகிறதோ அதுதான் நடைபெறும் என்பது வேறு மதத்தினரின் கோட்பாடு. அக் கோட்பாடுகள் புருஷப் பிரயத்தனத்தினரின் சக்தியைக் குறைப்பதாகும், ஹிந்து மதக் கொள்கையிலேதான் பூரண பொறுப்பும் பூரண சுதந்திரமும் மனிதனுக்கு உண்டு. கடவுள் செயலும் கடவுள் அனுமதியு மின்றி ஒன்றுமில்லை என்பது உண்மைதான். ஆனால் கர்ம விதியும் கடவுள் செயலே யன்றி வேறில்லை. கர்ம விதி யென்பது தெய்வமல்ல; அது தெய்வத்தால் ஏற்படுத்தப் பெற்ற விதி. ஜகத்து முழுவதும் ஓர் அமைப்புக் கிரமத்திற்கு உட்பட்டிருக்கிறது. அந்த அமைப்புக் கிரமத்தில் கர்ம விதியும் ஒன்று.

கடவுளால் அமைக்கப்பட்ட ஒழுங்கின்படி ஏதும் நடைபெறவேண்டும். அந்த ஒழுங்குக்குப் பெயர் கர்மவிதி.

"ஆமாம்! இது ஒரு கற்பனையே தவிர வேறில்லை. தாய் தகப்பன் முகச் சாயல், தாய் தகப்பன் குணம், பெற்றோர்களுடைய வியாதி இவை தான் மக்களைத் தொடருகின்றன. இதுவே நம்முடைய அனுபவம். அதற்குமேல் பூர்வ ஜன்ம கர்மம் என்பது எதற்கு?" என்று சொல்வது கர்ம விதிக்கு ஆட்சேபனை யாகாது. எந்த ஆத்மா எந்த உடலைத் தரிக்கிறான் ஏன்பது வேறு; தகப்பனைப்போல் மகன் என்னும் தேக தர்மம் வேறு. மகனுடைய தேகமும் குணமும் தகப்பனைக் கொண்டதாயிருக்கும். ஆனால் எந்தத் தகப்பனுக்கு எவன் மகனாகப் பிறந்தான் என்பது யாருக்குத் தெரியும்? அதைத்தான் கர்ம விதி நிச்சயிக்கிறது.

தீரா நோயோ அல்லது தீய குணங்களையோ கொண்ட ஒருவனுடைய வயிற்றில் பிறப்பவன் அந்த நோயையும் அக் குணங்களையும் பெறுவான். ஆனால் அப்படிப் பெறுவதற்கு எந்த ஆத்மா தன் கர்மத்தினால் தகுதியடைந்து இருக்கிறதோ அந்த ஆத்மாதான் அந்தத் தகப்பன் வயிற்றில் பிறக்கும். ஆஸ்தி, உடல், குணம் இம் மூன்றும் அரசாங்க விதியாலோ, இயற்கை தருமத்தினாலோ பரம்பரையாக வரும். இந்தப் பரம்பரை பாத்தியத்தை யார் பெறுவது என்று தீர்மானிப்பது அந்தப் பிறவி எடுக்கும் ஆத்மாவின் கர்மம். ஒருவன் தன் வீட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கலாம். அதற்குத் தகுந்த ஏழை ஒருவன் பிந்தி அதை விலைக்கு வாங்கியோ, வாடகை கொடுத்தோ அதில் குடியிருக்க வருகிறான். அதேமாதிரி தகப்பன் தன் உடலையும் குணத்தையும் கெடுத்துக்கொண்டு தனக்குப் பிறக்கும் குழந்தைகள் உடலையும் குணத்தையும் முன்ன

தாகவே கெடுக்கக் கூடும். ஆனால் அந்த உடல்களுக்குத் தகுந்த ஆத்மாக்கள் அவனுக்கு மக்களாகப் பிறக்க வேண்டி வரும். "அவுரஸ புத்திரன்" என்பது உடலைப் பொறுத்த மட்டில்தான். எந்த ஆத்மாவுக்கும் எந்த ஓர் ஆத்மாவும் மகன் அல்ல. கர்மத்துக்குத் தக்கபடி ஸ்வீகார புத்திரனைப்போல வந்து சேருவதுதான். ஆகையால் பூதம் பிரகிருதி சாஸ்திரங்களில் சொல்லப்பட்டதும் நம்முடைய அனுபவத்தில் கண்டதுமான பரம்பரா விதியாகிய தேகதர்மம், கர்ம விதியைக் குறுக்கிடாது. இரண்டும் கூடவே வேலை செய்கின்றன. கர்ம விதியைப் பற்றி முன் படித்த சுலோகங்களைத் தவிர கீழ்க்கண்ட சுலோகங்களையும் படித்துச் சிந்திக்கலாம்.

ப்ரக்ருதிம் புருஷஞ் சைவ
 வித்த் யனாதீ உப்ராவபி |
விகா ரன்ச்ச குணாம்ச்ச ஏவ
 வித்தி ப்ரக்ருதி ஸம்ப்வான் ||

பிரகிருதி, புருஷன் இவ் விரண்டும் அநாதி யென்று உணர்வாய். உருவ வேறுபாடுகளும், குணங்களும் பிரகிருதியிலே பிறப்பன வென்று உணர்வாய். (13-19)

இவ்விடத்தில் பிரகிருதி என்றால் தேகம். அவ்வாறே அடியிற்கண்ட சுலோகங்களிலும்.

கார்ய காரண கர்த்ருத்வே ஹேது:
 ப்ரக்ருதி ருச்யதே |
புருஷ: ஸுகதுக்: கானாம் போக்த்ருத்வே
 ஹேது ருச்யதே ||

உடலும் உடலிலுள்ள பொறிகளும் செய்யும் செயல்களுக்குக் காரணம் பிரகிருதிப் பொருள். சுக துக்கங்களை நுகர்வதற்குப் புருஷன் நிற்கிறான். (13-21)

புருஷ: ப்ரக்ருதி ஸ்தோ ஹி
புங்க்தே ப்ரக்ருதி ஜான் குணான் |
காரணம் குணஸங்கோ'
ஸ்ய ஸதஸத்யோனி ஜன்மஸு ||

புருஷன் பிரகிருதியில் இருந்துகொண்டு பிரகிருதியினிடம் பிறக்கும் குணங்களின் பயன்களை அனுபவிக்கிறான். குணங்களிடம் இவனுக்குள்ள பற்றுதலே நல்லனவும் தீயனவுமான ஜன்மங்களில் இவன் பிறப்பதற்குக் காரணமாகிறது. (13-22)

கஉ

## பிரகிருதி : ஜீவன் : பரமாத்மா

பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிரற்ற வஸ்துக்களும், ஸ்தாவர, ஜங்கம, பிராணிகளுடைய தேகங்களும், பிராணிகளுடைய இந்திரிய மனோபுத்தி சூட்சுமங்களும் உள்பட, எல்லாவற்றிற்கும் சேர்ந்து "பிரகிருதி" என்று பெயர். ஒவ்வொரு பிராணியின் வெளி உருவத்திற்குப் பின்னாலும், அதன் எஜமானாக இருந்துகொண்டு அதை நடத்தி அதன்மூலம் விஷயங்களை அனுபவித்து வருவது ஜீவன். இந்தப் பிரகிருதி, ஜீவன் இவைகள் இரண்டுக்கும் பின் மறைந்து நின்றுகொண்டு, மாறி மாறி வரும் பிரபஞ்சத்தை யெல்லாம் தாங்கி, ஓர் அமைப்பாக ஆண்டு வருகின்ற, மாறுதலும் அழிவும் இல்லாத பரமாத்மாவுக்குத்தான் ஸ்ரீமந் நாராயணன் என்றும், இன்னும் அனேக பெயர்களும். அவன் எந்த வஸ்துக்குள்ளும் மறைந்து கிடக்கிறான்; எந்த உயிருக்கும் உயிராக நிற்கிறான்; தனித்தும் நிற்கிறான்.

ஈசுவரன் அல்லது பரம்பிரம்மம் என்பது ஒரு சேதனமற்ற தத்துவம் அல்ல. தாய், தகப்பன், அன்பன் என்று கருதத்தக்கவன். அவனிடம் பக்தி செலுத்த வேண்டும் என்பது கீதையின் உபதேசம்.

ஜகத்தின் அமைப்பைப்பற்றியும், ஈசனைப்பற்றியும் கீதையின் 7-வது, 9-வது, 15-வது, அத்தியாயங்களில் சொல்லப்படுகிறது. அவைகளின் கருத்து மேலே சுருக்கமாகச் சொல்லப்பட்டது. முக்கியமான சுலோகங்கள் :-

த்வா விமௌ புருஷௌ
லோகே க்ஷரச்சாக்ஷர ஏவ ச |
க்ஷர: ஸர்வாணி பூதாநி
கூடஸ்தோ'க்ஷர உச்யதே. ||

உலகத்தில் க்ஷரம், அக்ஷரம் என இரு வகைத் தத்துவங்கள் உள. க்ஷரம் என்பது மாறுதல் பெறும் எல்லா பிராணிகளின் உடலையும் குறிக்கும்; அவற்றினில் மாறுதலற்ற பொருள் அக்ஷரம். (15-16)

உத்தம: புருஷ ஸ்த்வந்ய:
பரமாத்மேத் யுதாஹ்ருத: |
யோ லோகத்ரய மாவிச்ய
பிபர்த்திய வ்யய ஈச்வர : ||

இவைகளினும் உத்தமப் பொருள் வேறு. அதுவே பரமாத்மா. அவன் மூன்று உலகங்களினுள் புகுந்து அவற்றைத் தரிக்கிறான்; அவ்யயன், ஈசுவரன். (15-17)

யஸ்மாத் க்ஷரமதீதோ'ஹம் அக்ஷரா தபிசோத்தம: |
அதோ'ஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ||

நான் ஈசுவரன். க்ஷரத்தைக் கடந்தோன். அக்ஷரத்தைக் காட்டிலும் உத்தமன். ஆதலால் உலகத்தாராலும் வேதங்களிலும் புருஷோத்தமன் என்று கூறப்படுகிறேன். (15-18)

பூமிராபோ' நலோ வாயு: கம் மநோ' புத்தி ரேவச |
அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி ரஷ்டதா. ||

# பிரகிருதி : ஜீவன் : பரமாத்மா

மண், நீர், தீ, வாயு, ஆகாசம், மனம், புத்தி, அகங்காரம் என எட்டு வகையாக நான் தரிக்கும் பிரகிருதி பேதப்பட்டிருக்கிறது. (7-4)

அப்ரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் |
ஜீவபூதாம் மஹாபாஹோ! யயேதம் தார்யதே ஜகத். ||

இது கீழ்ப்பட்ட இயற்கை. இதினின்றும் வேறுபட்டதாகிய என் மேலியற்கையினால் இவ்வுலகு தரிக்கப்படுகிறது. (7-5)

ஆத்மாவினுக்கு அந்தராத்மாவாக விருந்து அதைத் தாங்கி நிற்கும் பகவானுடைய செயல் இங்கே கூறப்பட்டது. பகவானாலே நேரில் சொல்லப்பட்டதாக அமைத்திருக்கும் கீதையில் ‘நான்’ என்பதெல்லாம் கடவுள்தத்துவம்.

ஏதத்யோநீநி பூதாநி ஸர்வாணீத்யுபதாரய |
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா. ||

எல்லா உயிர்களுக்கும் அது காரணமென்று உணர். உலகம் முழுவதும் என்னிலிருந்து உண்டாகிறது; மறைந்து இல்லாமல் போவதும் எனக்குள் மறைந்துவிடுகிறது. (7-6)

மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய! |
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ |

நானின்றி நிற்கும் பொருள் எதுவுமில்லை. நூலில் மணிகளைப் போல் இவ் வையகமெல்லாம் என்னில் கோக்கப்பட்டு நிற்கிறது. (7-7)

ரஸோ'ஹம் அப்ஸு கௌந்தேய !
ப்ராபாஸ்மி சசி ஸூர்யயோ : |
ப்ரணவஸ் ஸர்வவேதேஷு
சப்த: கே பௌருஷம் ந்ருஷு. ||

நீரிலுள்ள நீர்மை நான், நானே சூரிய சந்திரர்களின் ஒளி. எல்லா வேதங்களிலும் நான் பிரணவம். ஆகாசத்தில் சப்தம் நான். மக்களிடத்து ஆண்மையும் நானே. (7-8)

புண்யோ கந்த: ப்ருதிவ்யாஞ்ச தேஜச்சாஸ்மி விபாவஸௌ |
ஜீவநம் ஸர்வபூதேஷு தபச்சாஸ்மி தபஸ்விஷு. ||

பூமியின் தூய மணமும், தீயின் தேஜஸும் எல்லா உயிர்களின் உயிரும் நான் ; தவஞ் செய்வோரின் தவம் நான். (7-9)

பீஜம் மாம் ஸர்வபூதாநாம் வித்தி பார்த்த ! ஸநாதநம் |
புத்திர்புத்திமதா மஸ்மி தேஜ ஸ்தேஜஸ்விநா மஹம் ||

எல்லா உயிர்களுக்கும் நான் ஸநாதனமாகிய விதையென்று உணர். புத்தியுடையோரின் புத்தி நான். ஒளியுடையோரின் ஒளி நான். (7-10)

பலம் பலவதாம் அஸ்மி காமராக விவர்ஜிதம் |
தர்மாவிருத்தோ பூதேஷு காமோ'ஸ்மி பரதர்ஷப ! ||

வல்லோரிடத்தே ஆசையும் சினமுமற்ற வலிமை நான். உயிர்களிடத்து தருமத்துக்கு மாறுபாடில்லாத காமம் நான். (7-11)

## பிரகிருதி: ஜீவன்: பரமாத்மா

யேசைவ ஸாத்விகா பாவா ராஜஸா ஸ்தாமஸாங்ச யே |
மத்த ஏவேதி தாந்வித்தி நத்வஹம்-தேஷு-தே மயி ||

ஸத்வ, ரஜஸ், தாமஸ குணங்களைச் சார்ந்த மன நிலைகளெல்லாம் என்னிடத்தே பிறந்தன. அவை என்னுள் இருக்கின்றன. அவற்றைக் கடந்தவனான நான் அவற்றுள் இல்லை. (7-12)

த்ரிபிர்குணமயைர்பாவை: ஏபி: ஸர்வமிதஞ் ஜகத் |
மோஹிதம் நாபிஜாநாதி மா மேப்ய: பரமவ்யயம் ||

இந்த மூன்று குணங்களாகிய எண்ணங்களால் உலகம் முழுதும் மயங்கிப்போய் இவற்றைத் தாண்டி நிற்கும் அழியாப் பொருளாகிய என்னை உணரவில்லை. (7-13)

தைவீ ஹ்யேஷா குணமயீ மமமாயா துரத்யயா |
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாந்தரந்திதே ||

குணங்களாகிய இந்த தேவமாயை கடத்தற்கு அரிது. என்னையே யார் சரணடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள். (7-14)

நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத |
மூடோயம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம் ||

யோக மாயையால் சூழப்பட்டு நான் அனைவருக்கும் வெளிப்படுவதில்லை. இந்த அறிவில்லா உலகம் பிறப்பும் அழிவுமில்லாத என்னை தெரிந்துகொள்ள முடியாது. (7-25)

இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்தமோஹேந பாரத |
ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப ||

இச்சை துவேஷம் என்பவைகளால் உண்டாகும் இருவகை மோகத்தால் எல்லா உயிர்களும் உலகத்தில் மயங்கிக் கிடக்கின்றன. (7-27)

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா |
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி நசாஹம் தேஷ்வவஸ்திதஃ ||

அவ்யக்த வடிவாய் நான் இவ்வுலக முழுமையும பரந்து நிற்கிறேன். என்னில் பூதங்க ளெல்லாம் நிலை பெற்றிருக்கின்றன. நான் அவைகளுக்கு ஆதாரம், அவை எனக்கு ஆதாரம் அல்ல. (9-4)

ந ச மத்ஸ்தாநி பூதாநி பச்யமே யோகம் ஐச்வரம் |
பூதப்ருந்ந ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவந ||

என் ஆட்சி விசித்திரத்தைப் பார், உயிர்கள் உண்டாவதனைத்தும் என்னால்; உயிர்களைத் தாங்குவதும் நானே; ஆயினும் உயிர்களினின்று விலகி நிற்கிறேன்; உயிர்கள் என்னைப்பற்றி நிற்பது அவைகளுக்குக் காணப்படாது. (9-5)

பிரகிருதி தர்மப்படி ஜகத்தெல்லாம் நடைபெற்று வருகிறது. இந்தப் பிரகிருதி தர்மத்தைப் பௌதிகப் புலவர்கள் ஆராய்ச்சி செய்து நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள்; இன்னும் செய்துகொண்டு மிருக்கிறார்கள். இந்தப் பிரகிருதி தர்மம் எப்படி உண்டாயிற்றென்று பௌதிக சாஸ்திரத்தில் காண முடியாது. ஒரு கட்டடம் அல்லது யந்திரம் அல்லது உயிருள்ள தேகத்தின் உருவம், அங்க அமைப்பு, குணம், வேலைக்கிரமம் இவைகளைப் பரிசோதித்து நிச்சயித்துக் கொடுப்பது பௌதிக நூல்களின் விஷ

யம். அந்தப் பிரகிருதி நியமம் எப்படி உண்டாயிற் றென்பது அந்த நூல்களில் அடங்காது. "பிரகிருதி விதி" "இயற்கை நியமம்" முதலியவற்றின் பொருள், "இயற்கை" என்ற ஓர் தனி சக்தி யுண்டு என்றும், அது ஏற்படுத்திய சட்டப்படி பூத பதார்த்தங்கள் நடந்து வருகின்றன வென்று மல்ல. நாம் ஆராய்ந்து பார்த்துக் கண்டுகொண்ட நிகழ்ச்சித் தொகுதிக்குச் சங்கிரகமாக நாம் வைத்தபெயர், "இயற்கை" என்பது. அப்படிப் பெயர்வைத்த மாத்திரத்திலேயே மூலகாரணம் கண்டு பிடித்து விட்டபடியாகாது. ஒரு பெயரே காரணமாகி விடாது. சுரம் வந்தவனுக்குத் தலைவலி உண்டாகிறது. "சுரம் தலைவலி யுண்டாக்கிற்று" என்கிறோம். "காமாலை, கண்ணை மஞ்சள் வர்ணமாக்கிற்று'! என்கிறோம். காமாலை என்ற ஒரு பேயோ பூதமோ அம்மாதிரி செய்தது என்றல்ல. காலராவோ, ப்ளேக் சுரமோ பல பேரைக்கொன்றது என்றால் கலரா என்ற ஓர் அரக்கன் அல்லது ப்ளேக் என்ற ஓர் அசுரன் இத்தனை பேரைத் தனக்கு இரையாக்கிக் கொண்டான் என்றல்ல பொருள். நோயின் போக்கைப்பற்றி நாம் கண்ட விஷயங்களைச் சங்கிரமாகச் சொல்லும் முறையே தவிர, காரியத்திற்குக் காரணத்தைக் கண்டு பிடித்த வகையி லன்று. இதுபோலவே ஒன்றைப்பற்றி "பிரகிருதி விதி" என்றால், காரணம் கண்டு பிடித்து விட்டோ மென்பதன்று. பிரகிருதி தர்மம் என்பதும், ஈசுவர சங்கல்பம் என்பதும் ஒன்றே. ஈசுவர சங்கல்பத்தினால் பிரகிருதி விதி ஏற்பட்டிருக்கிறது. ஈசுவரன் இருக்கிறான் என்று வைத்துக்கொண்டோமானால், பிரகிருதி விதியை அவன் சங்கல்பமாக வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய வேடிக்கை அல்லது சந்தோஷத்திற்காக ஈசுவரன் தன்னுடைய சங்கல்பத்தை

மாற்றமாட்டான். இயற்கை நியதி என்பது அவன் சங்கல்பம். அது தினமும் மாறி மாறி, அதாவது ஒரு நாள் உள்ளது மறு நாளில்லாமல், வியவஸ்தையின்றி உலகம் நடப்பதைக் கண்டோமானல்தான், ஈசுவரன் என்ற ஒரு சேதன சக்தி யுண்டென்று ஒப்புக்கொள்ள முடியும் என்று வாதிப்பது மூர்க்கம். இந்த மூர்க்க எண்ணத்தில்தான் ஆஸ்திகத்திற்கு ஆதாரமாக ஏதாவது இயற்கைக்கு விரோதமான ஆச்சரிய சம்பவங்களையே தேடிக்கொண்டிருப்பது. சாதாரணமாய் நாம் தினமும் பார்க்கும் பிரகிருதி தர்மமே பேராச்சரியம். அதற்குக் காரணம் இருக்க வேண்டும் என்று உணர்ந்தால் போதும், ஈசுவர பக்திக்கு ஆதாரமும் தூண்டுகோலும். இன்று சூரியன் உதயமாகி, அஸ்தமனமாகி, நாளை மறுபடி உதயமாகாமல் போனதான் ஈசுவர சங்கல்பம் நிரூபிக்கப்பட்டது என்று சொல்லலாமா? அப்படியானாலுங்கூட அதுவும் பிரகிருதி அல்லது இயற்கை தருமத்தில் ஒன்றாகச் சேருமே யொழிய அது மட்டில் தனித்து நின்று ஆஸ்திகத்துக்குப் பிரமாணமாகிவிடாது. மழையும் மின்னலும் காற்றும் பூகம்பமும் ஒருவாறு நியமமற்ற நிகழ்ச்சிகளைப் போல்தான் தோன்றுகின்றன. ஒரு நாளுள்ளபடி மறு நாளில்லை. அதைக் கண்டு திருப்தி யடைகிறோமா? எது நேரிடினும், எது எவ்வகையாகக் காண்பினும் அவை யனைத்தையும் தொகுத்து அதற்கு ஒரு பெயர் நாம் கொடுத்திருக்கிறோம், "பிரகிருதி" அல்லது "சுபாவம்" என்று. ஆகையால் திடீர் என்று நூதனமாக நியமம் தவறி நடந்தால் ஒரு பாபமும் இல்லை. "இயற்கை" என்பது புத்தகத்தில் எழுதி யிருப்பது அல்ல. இதுவரையில் நடவாத ஒன்றைப் புதிதாக காண்பினும் அதுவும் அந்தப் பிரகிருதி சுபாவ நியமத்தில்தான் சேர்ந்துவிடும்.

## பிரகிருதி : ஜீவன் : பரமாத்மா

ஈசுவரனுடைய சங்கல்பம், தான் மறைந்திருந்து சகல மும் காரண காரிய ரூபமாக நடைபெற வேண்டுமென்று. இதைத்தான் மேலே எடுத்தெழுதப்பட்ட கடைசி இரண்டு சுலோகங்கள் சொல்லுவது. "மறைந்து நிற்கிறான் ஈசுவரன்" என்பதன் பொருள் என்ன? ஆராய்ச்சி செய்கிற நாம், எந்தப் பொருளை ஆராய்ச்சி செய்கிறோமோ அதற்குள் அடங்கி யிருக்கிறோம். ஆராய்ச்சி செய்யப் பட்ட விஷயத்தில் நாமும் நம்முடைய புத்தியும் அடங்கி விட்டபடியால் இந்த "மறைவு" ஏற்படுகிறது.

ஒரு மந்திரவாதி ஒரு குளத்தைச் சிருஷ்டித்து அதில் மீன்களும் உண்டாக்குகிறான் என்று வைத்துக்கொள் வோம். தண்ணீரிலுள்ள மாயா மீன்கள் அந்தக் குளத்தை சுபாவ சிருஷ்டியாகத்தான் நினைக்கும். ஆகாரம் சம்பா தித்துக்கொண்டு ஒன்றும் ஆச்சரியப்படாமல் தம் வாழ்க்கை வியாபாரத்தை நடத்தி வரும். மந்திரவாதியி னால் சிருஷ்டிக்கப்பட்ட அதன் புத்திக்கு மந்திரவாதியின் உண்மையும் சங்கல்பமும் எட்டா. திடீரென்று அவன் அந்தக் குளத்தின் நீரை வெந்நீராக்கி மீன்களுக்குத் துக்கம் ஏற்படுத்தினாலுங்கூட மீன்கள் அதற்கு ஒரு கார ணம் கண்டுபிடித்து சாந்தியடையும் அல்லது இறக்கும். அவ்வளவுதான். மந்திரவாதி வெளிப்படையாக மாட் டான். அல்லது வெந்நீரிலுங்கூட அந்த மாந்திரீக மீன்கள் பிழைத்திருக்குமாறு மந்திரவாதி ஏதாவது செய்தாலும் அதையும் மீன்களுக்குள் பௌதிக சாஸ்திரிகளாய் ஆராய்ச்சி செய்யும் மீன்கள், தங்கள் சுபாவ விதிப் புத் தகத்துக்குள் சேர்த்துக்கொள்ளும். இப்படியேதான் ஈசுவரனும் மறைந்து நிற்கிறான்.

எல்லாம் ஈசுவர நியமனத்திற்குட்பட்டு நின்றாலும் காரணகாரிய சம்பந்தத்திலிருக்கும் பெரிய சுதந்திரத்தை

அனுபவிக்கிறோம். காரணத்திற்கும் காரியத்திற்கும் ஏற்பட்டிருக்கிற மாறாத பந்தம் ஒரு புறம் நமக்குப் பெரும் தடையாயிருந்தாலும் அதுவே நமக்குக் கர்ம சுதந்திரத்தையும் தருகிறது.

ஜகத் சிருஷ்டியும் நடப்பும், ஈசுவரனால்தான்; பிரகிருதி என்பது அவன் கருவியே என்பதை அடியில் கண்ட சுலோகங்கள் சொல்லுகின்றன:

யதா ஆகாசஸ்த்திதோ நித்யம்: வாயு ஸர்வத்ரகோ மஹாந் |
ததா ஸர்வாணி பூதாநி மத்ஸ்தாநிஇதிஉபதாரய ||

எங்கும் இயலும் மகா பலமுள்ள காற்று எப்படி எப்போதும் ஆகாசத்தில் நிலை பெற்றிருக்கிறது? அப்படியே பொருள்களெல்லாம் என்னுள் நிலைபெற்றிருக்கின்றனவென்று அறிவாய். (9-6)

ப்ரக்ருதிம் ஸ்வாம் அவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந |
பூதக்ராம இமம் க்ருத்ஸ்நம்: அவசம் ப்ரக்ருதேர்வசாத் ||

எனக் கடங்கிய பிரகிருதியில் நின்று நானே மீட்டும் மீட்டும் பூதத்தொகுதி முழுதும் இயற்கையின் பலத்தால் தானாக உண்டாகுமாறு செய்கிறேன். (9-8)

மயா அத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் |
ஹேதுநாநேந கௌந்தேய! ஜகத் விபரிவர்த்ததே ||

என் மேற்பார்வையில் சராசர உலகங்களை பிரகிருதி படைக்கிறது. இந்த ஹேதுவால் உலகம் சுழன்று வருகிறது. (9-10)

# பிரகிருதி : ஜீவன் : பரமாத்மா

அஹம் க்ரது அஹம் யஜ்ஞ: ஸ்வதாஹம் அஹ மௌஷதம் |
மந்த்ரோஹ மஹ வேவாஜ்யம் அஹம்அக்நி ரஹம் ஹுதம் ||

நானே க்ரது, யஜ்ஞயம் ஸ்வதா என்கிற பல வேறு யாகங்களும்; நானே ஔஷதம், நானே மந்திரம், நானே நெய், நானே அவியும். (9-16)

பிதாஹ மஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ: |
வேத்யம்பவித்ரம் ஓங்கார ருக்ஸாம யஜுரேவச ||

இந்த ஜகத்தின் தகப்பன் நான்; தாயும் நான்; இதைத் தாங்கி வளர்ப்பவன் நான்; நானே பிதாமஹன். அறியப்படுபொருள் நான். பவித்திர மாக்குபவன் நான்; ஓங்காரம் நான்; ருக் ஸாம யஜுஸ்ஸும் நான். (9-17)

கதி: பர்த்தா ப்ரபுச ஸாக்ஷீ: நிவாஸ: சரணம் ஸுஹிருத் |
ப்ரபவ: ப்ரளயஸ்தாநம் நிதாநம்பீஜ மவ்யயம் ||

இவ்வுலகத்தின் வழியும் நான், பர்த்தாவும் நான்; பிரபு, சாக்ஷி, இருப்பிடம், சரண், தோழனும் நான். இதன் தொடக்கம், ஸ்தானம், வீடு, அழியா பீஜமும் நான். (9-18)

தபாமிஅஹம் அஹம்வர்ஷம் நிக்ருஹ்ணாமித் ஸ்ருஜாமிச் |
அம்ருதஞ்சைவ ம்ருத்யுச்ச ஸ்தஸ்ச்சாஹ மர்ஜுந ||

நான் வெப்பம் தருவேன். மழையைக் கட்டுவதும் பெய்விப்பதும் நான். நானே சாகாத ஆத்மா. நானே மரணமும். உள்ளது நான், இல்லதும் நான். (9-19)

கரு

# கர்மயோகம்

ஹிந்து மதத்தில் மாறுதலுக்கும் சீர்திருத்தத்திற்கும் இடமில்லை என்பது சிலர் எண்ணம். நைந்துபோன பழையனவைகளைக் கழிப்பதும் புதியன புகுத்தலும் வைதிக மதத்தில் முடியாது என்று ஹிந்து மதத்தைத் தூஷிப்பது வழக்கம். முன்னோர்களையும் பழைய நூல்களையும் கௌரவித்து நடப்பது ஒரு மதத்தின் அபிவிருத்திக்குத் தடையாகாது. ஹிந்து தருமம் என்பது மாறுதலும் விருத்தியும் அடையாத ஒரு மதமல்ல. உண்மை எது வென்று தற்காலத்தில் பௌதிக சாஸ்திர நிபுணர்கள் எப்படி சத்தியம் ஒன்றிற்கே பத்தப்பட்டு ஆராய்ச்சி செய்கிறார்களோ, அப்படியே வேதாந்தத்திலும் நம்முடைய முன்னோர்கள் ஆராய்ந்தார்கள். உண்மையையே பிரதானமாகக்கொண்டு, புத்தியைப் புறமும் உள்ளும் எவ்வளவு தூரம் செலுத்த முடியுமோ அவ்வளவு செலுத்தி, எதையும் தடையாக எண்ணாமல் சத்திய சோதனை செய்து அடைந்த விஷயங்களே வேதாந்தம் என்பது. அதுவே ஹிந்து மதம்.

பழைய உண்மைகளையும் அனேக நாட்களாக உதவி வந்த வழக்கங்களையும் தகுந்த காரணமின்றித் தள்ளி விடக்கூடா தென்கிற மனோபாவமானது அபிவிருத்திக்குத் தடையாகாது. அது இன்றியமையாத காப்பு ஆகும். காப்பின்றி அபிவிருத்தியடைய முடியாது. உண்மையில் ஹிந்து மதம் மாறி மாறியே வந்திருக்கிறது. புத்தகங்

களை மாற்ற முடியாது. ஆனால் மனிதர்களுடைய எண்ணங்களும் நம்பிக்கைகளும் சேர்ந்துதான் ஒரு மதமாகின்றது. சேதனமுள்ள மனிதக் கூட்டத்தின் மனத் தோற்றங்கள் மாறுங்கால் அவர்களுடைய மதமும் மாறுதலடைந்துதான் வருகிறது. இந்த முறையில் ஹிந்து மதம் அனேக மாறுதல்கள் அடைந்திருக்கிறது. ஹிந்து மதம் மனிதனுடைய புத்திக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து வந்திருக்கிறது. எவ்விதத் தடையும் இன்றிப் புத்தியைச் செலுத்தி ஆராய்ச்சி செய்யும் சுதந்திரத்தைத் தந்திருப்பதில், உலகத்தில் வேறு எந்த மதத்தையும் ஹிந்து மதத்திற்கு ஒப்பிட முடியாது.

ஹிந்துக்கள் புனிதமாக மதிக்கும் அனேக புராணங்கள் ஸ்மிருதிகள் முதலிய நூல்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தைப் பிரதானமாக வைத்துச் சொல்லும். உண்மைக்குப் பல முகங்கள் உண்டு. ஒவ்வொரு முகத்தை ஒவ்வொரு நூல் ஆராதிக்கிறது. ஹிந்து தர்மத்தை வளர்த்துவந்த மகா பிராக்ஞர்கள் அவரவர்கள் அவ்வப்போது கண்ட உண்மைகளை அவ்வப்போது எழுதி வந்தார்கள். பதினாயிர வருஷக்கணக்காக ஹிந்து தருமம் வளர்ந்து வந்திருக்கிறது. அது மிகப் பழைய ஆலமரம். அதன் நிழலில் நாம் வாழ்கிறோம். ஒரு கிளையைப்போல் மற்றொரு கிளை யில்லை. சில கிளைகள் வளைய வில்லை; சில வளைந்திருக்கின்றன. பார்ப்பதற்கு அதிக வேறுபாடுகளிருக்கும்; ஆனால் அனைத்தும் ஒருயிர். வித்தியாசங்களைக் கண்டு மயங்கிவிடக் கூடாது.

பகவத்கீதையானது ஹிந்து மதத்தில் அனைவரும் ஒப்புக்கொண்டு மதிக்கும் நூல். அதை எல்லா சம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்களும் சாஸ்திரமாக அங்கீகரிக்கிறார்கள். இரண்டு முக்கியமான விஷயங்களில் ஹிந்து மதம் பகவத்

கீதையினால் புத்துயிர் அடைந்ததாகச் சொல்லலாம். ஒன்று பகவத்கீதையினால் கேவலம் யாகாதி கிரியைகளுக்கு, அதாவது வேள்வி மார்க்கத்திற்குப் பிராதான்யம் குறைந்தது. இரண்டாவது, துறவு மார்க்கம் ஒன்றே மோக்ஷ சாதனம் என்ற அபிப்பிராயமும் திருத்தப்பட்டது. வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களை நடத்தியே தருமத்தில் நிற்கலாம் என்ற உண்மையைக் கீதை நன்றாக ஊர்ஜிதப்படுத்திவிட்டது. சமுதாய க்ஷேமத்திற்கு வேண்டிய காரியங்கள் நடைபெற வேண்டுமென்றும், அந்தக் காரியங்களில் அவனவன் தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்து முடிப்பதில் மோக்ஷத்திற்குத் தடை ஏற்படாதென்றும், அதுவே கர்ம பந்தத்தினின்று விடுபடுவதற்கு வழி யென்றும் கீதை வற்புறுத்தி உபதேசித்திருக்கிறது.

தருமநெறியில் நிற்பவன் தனக்குச் சமுதாயத்தில் என்ன வேலை இடப்பட்டிருக்கிறதோ அதை நிறைவேற்ற வேண்டியது. தன் சுபாவ குணத்தினாலோ, தான் பிறந்த குலம், குடும்பம், அமர்ந்த ஸ்தானம் முதலிய தகுந்த காரணங்களினாலேயோ, சமுதாயத்தின் ஒழுங்குப்படி தனக்கு ஏற்பட்டிருக்கும் காரியங்களை யெல்லாம் சரிவரச் செய்ய வேண்டும். ஆனால் அக் காரியங்களினால் தனக்குச் சுகமோ லாபமோ அடைய வேண்டுமென்ற விருப்பங்கொண்டு செய்யக் கூடாது. என் கடமையை நான் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தவிர, மனதில் காரியத்தின் பயனைப்பற்றித் தனக்காக ஓர் ஆசை வைத்துக்கொள்ளக் கூடாது. வெளிப்பார்வைக்கு, ஆசை வைத்தும் லாபம் கருதியும் மற்றவர்கள் செய்வதுபோலவே கர்மயோகியும் தான் செய்யும் காரியத்தில் கண்ணும், கருத்தும் வைத்துச் செய்வான்; உதாசீனமாக இருக்க

மாட்டான். மற்றவர்களைப் போல் வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும் உள்ளத்தில் காரியத்தின் பலனுக்கும் இவனுக்கும் ஆசை என்கிற பந்தம் இல்லாமல் தனிப்பட்டு நின்றே வேலை செய்வான். சுயநலங் கருதாமல் கடமைகளைச் செய்வதுடன், காரியம் சித்தியானால் மகிழ்ச்சியின் மயக்கமும், சித்தியாகாமல் போனால் துயரமும் அடைவது கிடையாது. காரியத்தில் கஷ்டங்களும் தடைகளும் ஏற்பட்டால், அவைகளை எப்படிச் சமாளிப்பது என்று மாத்திரம் யோசித்துச் செய்வானே யொழிய, அவைகளுக்காகத் துக்கப்பட்டு மனங்கலங்க மாட்டான். காரியத்தின் பலனில் சுயநலம் கருதாதவனுக்கு இந்த சாமார்த்தியமும் சாந்தமும் தாமாக வரும். சுகமும் துக்கமும் ஜயமும் அபஜயமும் அவனைத் தீண்டா.

இப்படிப் பற்றற்றுக் கடமையைச் செய்யப் பழகிக்கொண்டவன் யோகத்தில் மேலே ஏறவேண்டிய படிகளில் செல்லும் சக்தி சீக்கிரத்தில் அடைவான். அடிக்கடி ஆழ்ந்து சிந்தித்து, மனதை ஒருவழிப்படுத்தி, இந்திரியங்களையும் உள்ளத்தையும் விஷயங்களில் திரியவிடாமல் அடக்கிக்கொண்டு, தியானம் செய்வான். அப்படித் தியானம் செய்து பெற்ற ஞானத்தினால் எல்லா ஜீவன்களிலும் தன் ஆத்மாவைக் காண்பான். அனைத்தும் பகவான் திருவுள்ளத்தில் நிற்பதையும் காண்பான்.

கீதையில் சொல்லப்பட்ட மார்க்கம் லோக விவகாரத்தை நடத்திக்கொண்டே உள்ளத்தை பற்றறச் செய்து கொள்ளும் மார்க்கம். உண்மைத் துறவு ஒருவன் செய்ய வேண்டிய காரியங்களை விட்டுவிடுவதல்ல; காரியத்தின் பலன்களுன்மேல் ஆசை செலுத்தாமல் செய்யவேண்டியதைச் செய்வதும் பற்றைத் துறப்பதுமே துறவு. மோக்ஷம் அல்லது விடுதலைக்கு வழி, காரியப் பிரவிருத்திகளில் சுய

நலப் பற்றை யறுத்து ஆத்மாவை விடுவித்துக்கொள்வதே. அந்த சுயநலப் பற்று அறுந்தபின் எந்தக் காரியம் செய்தாலும் அது ஆத்மாவைக் கரும பந்தத்தில் கட்டாது. இதுவே கீதா சாஸ்திரத்தின் ஸாரம். இப்படிச் சுயநலம் கருதாமல் ஜயாபஜயங்களில் மனமாறுதல் ஏற்படாமல் அவனவன் தன்தன் கடமையைச் செய்து வந்தால் கர்ம யோக மார்க்கத்திற்கும் ஸந்நியாஸ மார்க்கத்திற்குமுள்ள வித்தியாசம் மறைந்து போகிறது.

கிம் கர்ம கிம் அகர்மஇதி
கவயோபி அத்ர மோஹிதா: |
தத் தே கர்ம ப்ரவக்ஷ்யாமி
யத்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே அசுபாத் ||

எது கருமம், எது அகருமம் என்ற விஷயத்தில் பண்டிதர்களும் மயங்குகிறார்கள். கருமத்தின் இயல்பை உனக்கு விளக்கிச் சொல்கிறேன். இதைத் தெரிந்து கொண்டாயானால் பாபத்தினின்று விடுபடுவாய். (4-16)

கர்மண்ய கர்மய: பச்யேத்
கர்மணிச கர்மய: |
ஸபுத்திமாந் மநுஷ்யேஷு
ஸயுக்த: க்ருத்ஸ்ந கர்மக்ருத் ||

செயலில் செயலின்மையும், செயலின்மையில் செயலும் உண்டு. அதை எவன் உணர்கிறானோ, அவனே

மானிடருள் அறிவுடையோனுவான். எல்லா வேலைகளை யும் செய்துவந்தே அவன் யோகத்திலிருப்பான். (4-18)

செயலில் செயலின்மையாவது: சுயநலத்து அல்லா மல் செய்யப்பட்ட கருமம் துறவுக்குச் சமம். செய லின்மையில் செயலாவது: செயலற்றிருந்தாலும் ஆசை களை நீக்காமலிருத்ததினு லுண்டாகும் மனோவேகங்களே கருமபந்த முண்டாக்கும்.

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா:
காமஸங்கல்ப வர்ஜித: |
ஜ்ஞாநாக்னி தக்தகர்மாணம்
தமாஹு: பண்டிதம் புதா: ||

எவனுடைய வேலைகளெல்லாம் ஆசையால் தொடங் கப்படாமலும் ஞானம் என்ற அக்கினியால் சுடப் பட்டவைகளாகவும் இருக்கின்றனவோ, அவனைத்தான் பெரியோர் அறிவுடையோனுகக் கருதுவர். (4-19)

யத்ருச்சா லாபஸந்துஷ்டோ
த்வந்த்வாதீதோ விமத்ஸர: |
ஸம: ஸித்தௌ அஸித்தௌ ச
க்ருத்வாபி ந நிபத்யதே ||

தானுக வந்து எய்தியதை அடைந்து சந்தோஷப்பட்டு, துக்கந்தருவன சுகந்தருவன என்கிற வேற்றுமையைக் கடந்து, காரியசித்தி பெற்ருலும் பெறவில்லையாயினும் சம நிலையிலிருந்து, மனதில் குறைகளுக்கு இடந் தராமல் நிற்கும் ஒருவன் கருமம் செய்தாலும், அதனுல் கட்டுப் படுவதில்லை; உள்ளம் சுதந்தர நிலையிலிருக்கும். (4-22)

கசா

# கர்மயோகமே வேள்வியும்

வேதத்தில் யக்ஞம் செய்ய வேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கிறது. யக்ஞம் அல்லது வேள்வியின் முக்கிய அம்சம் தியாகம். சுயநலத்தையும், ஆசையையும் விடுவதே வேள்வியின் சாரம். ஆகையால் வேள்வி பல விதத்தில் செய்யக்கூடிய காரியம். இப்படிப் பலவிதத்தில் செய்யப்பட்ட வேள்விகளுக்கும் வேதத்தில் சொல்லப் பட்ட பலனுண்டு. ஆகையால் மோக்ஷத்தை விரும்பு கிறவன் சகல காரியங்களையும் வேள்வியாகவே செய்து விடுதலை பெறலாம். பற்றற்றுச் செய்யப்பட்ட தொழில் ஒரு வேள்வியே யாகும்.

கீதையில் உபதேசிக்கப்படும் முக்கிய தத்துவங்களின் இது ஒன்று. ஆனால் இதுவுங்கூட பழைய உபநிஷத்தாகிய சாந்தோக்கியத்தில் சொல்லப்படிருக்கிறது. மனித னுடைய வாழ்க்கை முழுதும் ஒரு யாகம் என்று அந்த உபநிஷத்து மூன்றுவது அத்தியாயம் 16, 17 காண்டங் களில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. கண்ணன் உப தேசத்திற்கு அதுவே பீஜம் என்றுகூடச் சொல்லலாம்.

யஜ்ஞஸிஷ்டாம் ருதபுஜோ
யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம் : |
நாயம்லோகோஸ்த்ய அயஜ்ஞஸ்ய
குதஅந்ய: குருஸத்தம ||

யக்ஞ சேஷமான அமுதத்தை உண்போர் மாறுத பிரமபதத்தை எய்துகிறர்கள். யக்ஞம் செய்யாதோருக்கு

இவ் வுலகமில்லை. அப்படியிருக்க அவர்களுக்குப் பரலோகமும் ஏது? (4-31)

பிறர் நன்மையை உத்தேசித்து பகவானுக்கு அர்ப்பணமாக செய்யப்படுவதற்கு வேள்வி என்று பெயர். அவ்வாறு வேள்வியாக செய்யப்பட்ட தொழிலில் உனக்கும் ஏதாவது நன்மை உண்டாயின் அதை வேள்வியில் மிஞ்சிய பிரசாதத்தைப் புசிப்பதுபோல் அனுபவிப்பாயாக. அது நன்மை தரும் என்பது இதன் பொருள்.

ஏவம் ப்ஹு-விதா யஜ்ஞா
விததா: ப்ராஹ்மணோ முகே |
கர்மஜாந் வித்தி தாந்ஸர்வாந்
ஏவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே: ||

வேதங்களில் பலவித வேள்விகள் விவரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவை யெல்லாம் தொழில் செய்துதான் உண்டாகும். இதை உணர்ந்தால் வீடு பெறுவாய். (4-32)

ச்ரேயாந் த்ரவ்யமயா த்யஜ்ஞாத்
ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப: |
ஸர்வம் கர்மஅகிலம் பார்த்த
ஜ்ஞாநே பரிஸமாப்யதே ||

சாமக்கிரியைகள் கொண்டு செய்யப்படும் சாதாரண வேள்வியைக் காட்டிலும் ஞானத்தால் செய்யும் வேள்வி சிறந்தது. எத்தகைய கிரியையும் ஞானத்தில்தான் முடிவு பெறுகிறது. (4-33)

ஞான யக்ஞம் என்பது ஞானத்தால் செய்யப்பட்ட வேள்வி. நெய் முதலிய திரவியங்களில்லாமல் ஞானம் என்ற திரவியத்தைக்கொண்டு செய்யப்படுவது ஞான யக்ஞம். அதாவது உலக வாழ்க்கைக்கு வேண்டிய கடமைகளைப் பற்றற்றுச் செய்வது. எந்தக் கருமம் செய்யினும் அக் கருமத்தின் பலனைப்பற்றி ஆசை கொள்ளமல் மனதை நிதானப்படுத்துவதே கருமத்தைப்பற்றிய ஞானம். இதனால் வர வர வேற்றுமை யுணர்ச்சி கரைந்து, சகல ஜீவன்களிலும் தன்னுடைய ஆத்மா நிற்பதைக் காணுவான். அப்படியே எல்லா ஜீவன்களும் பரமாத்மாவில் அடங்கி நிற்பதையும் காணுவான். இதைக் காணக் காண, பற்றற்று வேலை செய்வதும் எளிதாகும். எந்த கருமம் செய்யும்போதும் அதைத் தூண்டும் நோக்கத்தை பிரிசுத்தப்படுத்திக்கொண்டோமானல் பாபமும் கரும பந்தமும் நம்மைச் சேரா. இப்படிப் பரிசுத்த நோக்கத்தை கொள்ளச் செய்வது ஞானம்.

யதைத்தாம்ஸி ஸமித்தோக்நிர்
பஸ்மஸாத் குருதேஅர்ஜுந |
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி
பஸ்மஸாத் குருதே ததா ||

நன்கு கொளுத்துண்ட அக்கினி விறகுகளைச் சாம்பராக்கி விடுதல் போல, ஞானத்தீயானது எல்லாக் கருமங்களையும் சுட்டுச் சாம்பலாக்கிவிடும். அதாவது விடுதலைக்குத் தடையாகாது. (4-37)

நஹி ஜ்ஞாநேந ஸத்ருசம்
பவித்ர மிஹ வித்யதே |

தத்ஸ்வயம் யோகஸம்ஸித்த:
காலேநஆத்மநி விந்ததி ||

ஞானத்தைப்போல் பவித்திரமாக்கும் பொருள் இவ்வுலகத்தில் வேறெதுமில்லை. யோகத்தில் நல்ல பழக்கமடைந்தவன் தக்க பருவத்தில் இந்த ஞானத்தைத் தானுகவே கிடைக்கப் பெறுவான். (4-38)

யோகஸந்யஸ்த கர்மாணம்
ஜ்ஞாந ஸஞ்சிந்நஸம்சயம் : |
ஆத்மவந்தம் ந கர்மாணி
நிபத்நந்தி தநஞ்ஜய ||

யோகமுறையை உணர்ந்து, தான் செய்யும் கருமங்களில் பற்று என்பதை வெட்டித் தள்ளி, தன்னைத் தான் ஆட்கொண்டோனைக் கருமங்கள் கட்டுப்படுத்த மாட்டா. (4-41)

தஸ்மாத் அஜ்ஞாநஸம்பூதம்
ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநா ஆத்மந: |
சித்வாஏநம் ஸம்சயம் யோகம்
ஆதிஷ்டோத்திஷ்ட பாரத ||

ஆகையால், அஞ்ஞானத்தால் தோன்றி இதயத்தில் நிலைகொண்டிருக்கும் ஐயத்தை ஞானவாளால் வெட்டித் தள்ளி, யோகம் என்ற நிலையில் நின்று, உன் கருமங்களைச் செய்ய ஆயத்தமாகுவாயாக. (4-42)

கரு

## கர்மயோகமே துறவும்

ஒருவன் சுயநல நோக்கமும் ஆசைப்பற்றும் நீக்கிக் கொண்டு உலகம் முழுதும் ஒன்றே என்னும் ஞானத்தை அடைந்துவிட்ட பின் சகல லௌகிக கருமங்கள் செய்து கொண்டே யிருப்பினும் அவன் சந்நியாசியே யாவான்.

கருமத்தைப்பற்றிய ஞானத்தை நாம் அடைந்தபின் சாங்கிய மார்க்கத்திற்கும் யோக மார்க்கத்திற்கும் ஸந்யாஸத்திற்கும் கர்மயோகத்திற்கு முள்ள வேற்றுமை ஒழிந்து விடுகிறது. ஞானமும் கர்மமும் சேர்ந்தால் கர்மயோகம்.

ஸாங்க்யயோகௌ ப்ருதக்பாலா:
ப்ரவதந்தி ந பண்டிதா: |
ஏக மப்யாஸ்தித: ஸம்யக்
உபயோர் விந்ததே பலம் ||

ஸாங்கியத்தையும் யோகத்தையும் வெவ்வேறென்று சொல்லுவோர் பாலர்கள். பண்டிதர்கள் அங்ஙனம் கூறார். இவற்றில் யாதேனு மொன்றில் நன்கு நிலை பெற்றோன் இரண்டின் பயனையும் எய்துகிறான். (5-4)

அநாச்ரித: கர்மபலம்
கார்யம் கர்ம கரோதி ய: |
ஸஸந்யாஸீ ச யோகீச
ந நிரக்நி: ந சாக்ரிய ||

செய்கையில் தனக்கென்று பலனை எதிர்பாராமல், செய்யவேண்டியதைச் செய்வோனே துறவி; யோகியும் அவனே. தீ வளர்க்காதவனும் கிரியைகளை விட்டவனுமே சந்நியாசி என்று எண்ணுவது தவறு. (6-1)

## கர்மயோகமே துறவும்

யம் ஸந்யாஸ இதிப் ராஹு:
யோகம் தம் வித்தி பாண்டவ : |
நஹி அ ஸந்யஸ்த ஸங்கல்ப:
யோகீ பவதி கச்சந ||

எதனை சந்யாஸம் என்கிறார்களோ, அதுவே யோகமும் என்று தெரிந்துகொள். இதை அடைய இதைச் செய்வேன், அதை அடைய அதைச் செய்வேன் என்ற எண்ணங்களைத் துறக்காத எவனும் யோகியாக மாட்டான். (6-2)

யோகயுக்தோ விசுத்தாத்மா
விஜிதாத்மா ஜிதேந்த்ரிய : |
ஸர்வபூதாத்ம பூதாத்மா
குர்வந்நபி ந லிப்யதே ||

யோக மார்க்கத்தை அனுசரித்தால் ஆத்ம சுத்தியடைந்து தன்னைத்தான் வென்று ஜிதேந்திரியன் ஆகி எல்லா உயிர்களும் தானே யானவன்; தொழில்கள் செய்து கொண்டிருப்பினும் அவை அவனைத் தீண்டுவதில்லை. (5-7)

காயேந மநஸா புத்த்யா
கேவலை: இந்த்ரியை:அபி : |
யோகிந: கர்ம குர்வந்தி
ஸங்கம் த்யக்த்வாத்ம சுத்தயே ||

கருமங்களின் பலன்களைக் கருதி உண்டாகும் பற்றைக் களைந்துவிட்டு யோகிகள் ஆத்ம சுத்தியின் பொருட்டாக உடம்பாலும், மனதாலும், புத்தியாலும், கேவலம் இந்திரியங்களாலுங்கூடத் தொழில் செய்வார்கள். (5-11)

துறவு மார்க்கத்தை யனுசரிக்க எத்தனப்படுவதைக் காட்டிலும், பற்றில்லாமல் கருமங்களைச் செய்வதே மேலான வழியென்று கீதையில் பலவிடங்களில் பலவாருக வற்புறுத்திச் சொல்லப்படுகிறது. கடைசி அத்தியாயத்திற்குப் பெயர் "ஸந்யாஸ யோக"மென்று சொல்லியிருப்பினும், அந்த அத்தியாயம் ஆரம்பிக்கையிலேயே இந்த உபதேசத்தை ஊர்ஜிதப்படுத்திப் பகவான் சொல்லுகிருன்.

காம்யாநாம் கர்மணும் ந்யாஸம்
ஸந்யாஸம் கவயோ விது: |
ஸர்வ கர்மபலத்யாகம்
ப்ராஹுஸ் த்யாகம் விசக்ஷணு: ||

துறவு என்பது பலன்களை விரும்பிச் செய்யப்படும் கருமங்களைத் துறப்பது என்று அறிஞர்கள் அறிவார்கள். அவ்வாறே தியாகம் என்பது செயல்களின் பலன்களை முற்றிலும் தியாஜிப்பது அதாவது தள்ளுவது என்றும் அவர்கள் கூறுவர். (18-2)

நியதஸ்ய து ஸந்யாஸ:
கர்மணே: நோபபத்யதே: |
மோஹாத்தஸ்ய பரித்யாகஸ்
தாமஸ: பரிகீர்த்தித: ||

செய்ய வேண்டிய கருமத்தைத் துறத்தல் தகாது. மதி மயக்கத்தால் அதனை விட்டுவிடுதல் தமோ குணத்தால் நேர்வது என்பதை யாவரும் அறிய வேண்டும். (18-7)

## கர்மயோகமே துறவும்

கார்யமித்யேவ யத் கர்ம
நியதம் க்ரியதே அர்ஜுந: |
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ
ஸ: த்யாக: ஸாத்விகோ மத: ||

நியமிக்கப்பட்ட கருமத்தை, இது செய்தற்குரியது என்று செய்து, அதன் பலனைப்பற்றிய எண்ணத்தையும் சுயநலத்தையும் ஒருவன் விட்டுவிடுவானாயின், அந்த தியாகமே சாத்விக மெனப்படும். (18-9)

ந ஹி தேஹப்ருதா சக்யம்
த்யக்தும் கர்மாண்ய சேஷத: |
யஸ்து கர்மபலத்யாகி
ஸ: த்யாகீ இதி அபி தீயதே ||

உடம்பெடுத்த வாழ்க்கையில் செய்கைகளை முழுதுமே விட்டுவிட முடியாது. செய்கைகளின் பயனைத் துறந்தவனே தியாகி யெனப் படுவான். அதுவே சாத்தியமானது. (18-11)

லோகநாதனுடைய இஷ்டத்திற்கு எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவன் அருளையே நம்பி சகலத்தையும் அவனுக்கு அர்ப்பணமாகச் செய்ய வேண்டு மென்று அடியில் கண்ட முக்கியமான சுலோகங்களில் சொல்லப்படுகிறதும் இந்த தத்துவமே. பற்றற்ற செயலே ஈசனுக்கு அர்பணமாகும்.

ஸர்வகர்மாணி அபி ஸதா
குர்வாணோ மத்வ்யாபாச்ரய: |

மத்ப்ரஸாதா தவாப்நோதி
சாச்வதம் பத மவ்யயம் ||

என்னையே சார்பாகக் கொண்டோன் எல்லாத் தொழில்களையும் எப்போதும் செய்துகொண்டிருந்தாலும், எனதருளால் அழிவற்ற நித்ய பதவியை எய்துகிறான். *(18-56)*

சேதஸா ஸர்வகர்மாணி
மயி ஸந்யஸ்ய மத்பர: |
புத்தியோகமு பாச்ரித்ய
மச்சித்த: ஸததம் பவ ||

செய்யும் செயல்களை யெல்லாம் ஈசனாகிய எனக்கு என்று மனதில் தீர்மானித்து, அர்ப்பணம் செய்துவிட்டு, என்னிடத்தே ஈடுபட்டு, புத்தி யோகத்தை ஆச்ரயித்து எப்போதும் என்னைச் சித்தத்தில் கொண்டிருப்பாயாக. *(18-57)*

# அமைதியற்ற துறவு

மனம் அமைதியடைய அடிக்கடி தியானம் செய்ய வேண்டியது அவசியம். தியானம் என்றால் ஆத்மா, உலகம், கடவுள் இவைகளின் சொரூபத்தை ஆழ்ந்து சிந்திப்பது. தியானத்தினால் மனதில் கிளம்பும் உத்வேகங்கள் அடங்கும். ஆனால், தியானம் மட்டும் அமைதியைத் தராது. அதனுடன் தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் செய்வதும் செய்யும் கருமங்களில் சுயநலப் பற்றுகளின்றி யிருப்பதும் மன அமைதிக்கு இன்றியமையாத வழியாகும்.

பக்குவப்படாத மனதுடன் துறவியாய்ப் போகப் பார்ப்பதில் பயனில்லை. அதனால் மன அமைதி உண்டாக மாட்டாது. துறவியின் பெருமையும் முக்கிய அம்சமும் ஆசைகளை நீப்பதே. ஆசைகளை நீக்கிக் கருமம் செய்தால் கருமம் செய்பவனும் துறவியாவான். ஞானத்துடன் கருமங்களைச் செய்யும் கர்ம யோகியும் சந்நியாஸியே யாவான் என்பது பகவத்கீதையின் உபதேசம்.

பகவானுவாச

லோகே ஸ்மிந் த்விவிதா நிஷ்டா
புராப்ரோக்தா மயா நக |
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம்
கர்மயோகேந யோகிநாம் ||

பகவான் சொன்னதாவது: இவ்வுலகத்தில் இரண்டு வித நிஷ்டை முன்னர் என்னால் கூறப்பட்டது, ஸாங்கியர்

கள் சொல்லும் ஞான யோக முறையும், யோகிகள் சொல்லும் கர்மயோக முறையும். (3-3)

என்றால் முன்னர் கூறப்பட்டது என்று சொன்ன தின் பொருள், பகவானுடைய முன் அவதாரங்களில் உப தேசிக்கப்பட்டது என்பது. கீதை பகவானால் நேரில் உப தேசிக்கப்பட்டதாகப் பாரதத்தில் அமைக்கப்பட்டிருக்கிற படியால் 'நான்' என்பதெல்லாம் கடவுள் தத்துவம்.

நகர்மணும் அநாரம்பாத்
நைஷ்கர்ம்யம் புருஷநுதே |
நச ஸந்யஸநாத் ஏவ
ஸித்திம் ஸமதிகச்சதி ||

தொழில்களை மேற்கொள்ளாம லிருப்பதனாலேயே மனிதன் செயலற்ற நிலையடைவதில்லை. துறவு பூணுவதி லேயே மனிதன் ஈடேற்றம் அடைந்துவிட மாட்டான். (3-4)

நஹி கச்சித் க்ஷணமபி
ஜாது திஷ்டத்ய கர்மக்ருத் |
கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ:
ப்ரக்ருதிஜைர் குணை: ||

ஒரு கணப்பொழுதேனும் செய்கையின்றி எவனும் இருக்க முடியாது. இயற்கையில் விளையும் வேதங்களே உயிர்களைத் தூண்டி தம்வசமின்றி தொழில் புரிவிக் கின்றன. (3-5)

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய
ஆஸ்தே மநஸாஸ்மரந் |
இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா
மித்யாசார ஸ உச்யதே ||

ஒருவன் தன் கர்மேந்திரியங்களை அடக்கிக்கொண்டு, இந்திரிய விஷயங்களை மனதால் ஸ்மரித்துக்கொண்டிருந்தானாகில் அவன் மூடன் ஆவான். அவனுடைய ஒழுக்கம் பொய்யொழுக்கம் என்று சொல்லப்படும். (3-6)

யஸ்த் விந்த்ரியாணி மநஸா
நியம்யாரபதே'ர்ஜுந |
கர்மேந்த்ரியை: கர்மயோக
மசக்த: ஸ விசிஷ்யதே ||

எவன் இந்திரியங்களை மனதால் கட்டுப்படுத்திக் கொண்டு பற்றுகளை ஒழித்து கர்மேந்திரியங்களை கர்ம யோக முறையில் செலுத்தி வாழ்க்கையை நடத்துகிறானோ, அவனே சிறந்தவன். (3-7)

நியதம் குரு கர்ம த்வம்
கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: |
சரீரயாத்ரா'பி ச தே
நப்ரஸித்யே அகர்மண: ||

விதிக்கப்பட்ட தொழிலைச் செய். அதுவே தொழி லின்மையைக் காட்டிலும் சிறந்தது. தொழிலின்றிச் சரீர யாத்திரையுங்கூட உனக்கு இயலாமல் போய்விடும். (3-8)

யஜ்ஞார்த்தாத் கர்மணோ'ந்யத்ர
லோகோ'யம் கர்மபந்தந: |
ததர்த்தம் கர்ம கௌந்தேய
முக்தஸங்க: ஸமாசர ||

வேள்வியாக செய்யப்படும் காரியம் தளையாகாது. அவ்வாறு செய்யப்படாத கருமங்களே மக்களுக்குத் தளையாகும். ஆதலால் பற்றைக் களைந்து தொழில் செய்து கொண்டிருப்பாயாக. (3-9)

கர்மண்யேவாதி காரஸ்தே
மாபலேஷு கதாசந |
மாகர்ம பலஹேதுர் பூர்மாதே
ஸங்கோ' ஸ்த்வ கர்மணி ||

தொழில் செய்யவேதான் உனக்கு அதிகாரம். அதன் பயன்களில் எப்போதுமே உனக்கு அதிகாரமில்லை. செய்வதன் பயனைக் கருதாதே. தொழில் செய்யாமலிருப்பதில் விருப்பங் கொள்ளாதே. (2-47)

யோகஸ்த: குரு கர்மாணி
ஸங்க த்யக்த்வா தநஞ்ஜய |
ஸித்த்யஸித்த்யோ: ஸமோபூத்வா
ஸமத்வம் யோக உச்யதே ||

யோகமுறையில் நின்று, பற்றை நீக்கி, தொழில்களைச் செய். எண்ணம் நிறைவேறியதும் நிறைவேறாததும் ஒன்றெனக் கருது. இந்த சமநிலையே யோகமெனப்படும். (2-48)

# அமைதியற்ற துறவு

மனதில் வைராக்கிய புத்தி புகுந்தவுடன், உலக வாழ்க்கையை முற்றும் துறப்பதே நலம் என்ற மனோபாவம் உண்டாகிறது. வேதாந்தத்தில் பழைய உபதேசங்களின் போக்கும் அனேகமாய் இப்படியே. ஆனால் கீதையில் பக்குவமற்ற துறவைக் கண்டித்து வேறு வழிகாட்டப் பட்டிருக்கிறது.

பூர்வ கர்ம பலனாகச் சில பிறவிக் குணங்களுடன் பிறக்கிறோம். அக்குணங்களை பலாத்காரமாக அடக்குவதில் பயனில்லை. மனம் பக்குவப்படாதிருக்கும்போது குணங்களுக்கு வெளியே செல்ல வழிவிடாமல் அடக்கு முறை ஆரம்பித்தால், அவை உள்ளே குடைந்து வேலை செய்துகொண்டே போகும். காமக்குரோதாதி வேகங்கள் மனதைக் கலக்கிக்கொண்டேயிருக்கும். வெளியில் சுத்தமும் உள்ளே அசுத்தமும் கொண்டிருப்பதில் ஒரு பயனுமில்லை. புறத்தாரை மோசம் செய்வதோடு தன்னையும் மோசம் செய்துகொள்வதாகும். சுயநலமின்றிக் கடமைகளைச் செய்து பற்றுகளை நீக்கிக்கொண்டு வாழ்க்கை நடத்தும் முறையே, ஜன்மாந்தர கர்ம விதியாலுண்டாயிருக்கும் சுபாவ குணங்களினின்று ஜீவனை விடுவித்துக்கொள்ளும் முறையாகும்.

ப்ரக்ருதே: க்ரியமாணானி குணை:
கர்மாணி ஸர்வச: |
அஹங்கார விமூடாத்மா
கர்தா'ஹமிதி மந்யதே ||

எவ்வகையிலும் பிறப்போடு வந்த குணங்களால் தூண்டப்பட்டே செய்கைகள் செய்யப்படுகின்றன.

அஹங்கார உணர்ச்சியின் மயக்கத்தால், தான் நிர்மானித்துச் செய்வதாக ஒருவன் நினைத்துக்கொள்ளுகிறன். (3-27)

தத்வ வித் து மஹாபாஹோ
குணகர்ம விபாகயோ: |
குணு குணேஷு வர்தந்தே இதி
மத்வா ந ஸஜ்ஜதே ||

குணம் கருமம் இவைகளின் பாகுபாடுகளையறிந்தோன் குணங்கள் குணங்களுக்குரிய காரியங்களில் பிரவர்த்திக்கின்றன வென்று கருதி கலக்கமற்றிருப்பான். (3-28)

ஸத்ருசம் சேஷ்ட தேஸ்வஸ்யா:
ப்ரக்ருதே: ஜ்ஞாநவாநபி |
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி
நிக்ரஹ: கிம் கரிஷ்யதி ||

ஞானவானுங்கூடத் தன் சுபாவத்தின்படியே நடக்கிறன். உயிர்கள் அனைத்தும் தத்தம் சுபாவத்தைத் தொடர்ந்து செல்லுகின்றன. சுபாவத்தை பலாத்காரமாக அடக்கப் பார்ப்பதில் பயனில்லை. (3-33)

கஎ

## கர்மயோகமும் வாழ்க்கை நலமும்

**லோ**க ஸங்கிரஹத்திற்காக நாம் உலக காரியங்களைச் செய்தே தீரவேண்டும் என்று பகவான் கீதையில் வற்புறுத்துகிறார். ஆத்மாவின் இலக்கணங்களைப்பற்றி விளக்கிய உண்மைகள் எவ்வாருயினும் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத கருமத்தை விடக்கூடா தென்கிருர். மற்ற ஆட்சேபனை சமாதானங்கள் ஒருபுறமிருக்க உலக வாழ்க்கை நடைபெற வேண்டிய அவசியத்தை உணர்ந்து நாம் கருமத்தில் ஈடுபட வேண்டும் என்கிருர். "வேதாந்தம் அறியாதவர்கள் உலக வாழ்க்கையைக் காப்பாற்றுவார்கள். நான் அதில் கலந்துகொள்ள வேண்டியதில்லை. நீ வாழ்க்கையை நீத்தால் மற்றவர்களும் அதே தர்மத்தைத்தான் அனுசரிப்பார்கள். நீ எதை நலமென்று கருதுகிருயோ அதுவே மற்றவர்களுக்கும் பிரமாணமாகும். நீ மட்டில் துறவியாகி, மற்றவர்கள் உலகத்தை நடத்துவார்களென்று எதிர்பார்க்கக் கூடாது," என்கிருர். ஆகையால் லோக நன்மைக்காக ஞானவானும் கர்மங்களைச் செய்ய வேண்டும் என்பது சித்தாந்தம். கீதையானது உலக வாழ்க்கையை நன்ருகக் கவனித்துச் செய்யப்பட்ட தருமோபதேசம். "மாபெரும் ஞானிகளான ஜனகன் முதலானேரே கருமம் செய்யும் முறையை அனுஷ்டித்தார்களென்ருல் உனக்கு வேறு வழியுண்டோ?" என்கிருர் பகவான்.

கர்மணைவ ஹி ஸம்ஸித்திம்
ஆஸ்த்திதா: ஜநகாதய: |
லோக ஸங்க்ரஹம் ஏவாபி
ஸம்பச்யந் கர்த்து மர்ஹஸி ||

உலக வாழ்க்கை நலத்தைக் கருதியும் நீ தொழில் புரிதல் தகும். ஜனகன் முதலியோர் கருமஞ்செய்தே சித்தி பெற்றூர்கள். (3-20)

யத்ய தாசரதி ச்ரேஷ்ட:
தத்ததேவேதரோ ஜந: |
ஸ யத் ப்ரமாணம் குருதே
லோகஸ்த தநுவர்ததே ||

எதனை உயர்ந்தோன் செய்கிருனே, அதையே மற்ற மனிதர் பின்பற்றுகிருர்கள். அவன் எதைப் பிரமாண மாக்குகிருனே, அதையே உலகத்தாரும் அனுசரிப்பார் கள். (3-21)

ஸக்தா: கர்மண்ய வித்வாம்ஸோ
யதா குர்வந்தி பாரதா |
குர்யாத் வித்வாம்ஸ்ததா' ஸக்த
சிகீர்ஷுர் லோக ஸங்க்ரஹம் ||

வேதாந்த ஞானம் அடையாதார் பயனிலே பற்று வைத்து எவ்வாறு ஊக்கத்துடன் தொழில் செய்கிருர் களோ, அவ்வாறே அறிவடைந்தவன் பற்றை நீக்கி உலக

வாழ்க்கை நலத்தை மட்டும் நாடித் தொழில் செய்ய வேண்டும். (3-25)

ந புத்திபேதம் ஜநயேத்
அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் |
ஜோஷயேத் ஸர்வ கர்மாணி
வித்வாந் யுக்தஸ்: ஸமாசரந் ||

பற்றுதல்கொண்டு தொழில் செய்யும் பாமரர்களுக்கு அறிவடைந்தவன் தன்னுடைய செயலால் புத்தி பேதம் விளைவிக்கக் கூடாது. தர்ம யோக மார்க்கத்தில்தான் நின்று தொழில்களைச் சரியாகச் செய்து மற்றவர்களும் மகிழ்ச்சியுடன் எல்லாத் தொழில் செய்யுமாறு நடந்து கொள்ள வேண்டும். (3-26)

ப்ரக்ருதேர் குண ஸம்மூடா:
ஸஜ்ஜந்தே குணகர்மஸு |
தாநக்ருத்ஸ் நவிதோ மந்தாக்ருத்ஸ
நவிந் நவி சாலயேத் ||

இயற்கை குணத்தால் மயங்கி அந்த குணத்துக்குத் தக்கவாறு கர்மங்களில் பற்றுதல் அடைகின்றார்கள். சிற்றறிவுடன் ஏதேனும் ஒரு நோக்கத்தைக் கொண்டு சமூக வாழ்க்கைக்கு உதவிபுரியும் பாமரர்களின் புத்தியை முழுதுணர்ந்த ஞானி தன் செயலால் குழப்பம் செய்யக் கூடாது. (3-29)

கஅ

## மனதைக் காத்தல்

இவ்வாறு கீதையில் செய்யப்பட்ட உபதேசமானது உலக வாழ்வைத் துறக்க மனமில்லாதவர்களுக்காக ஒரு வித சமாதானமாகவோ, ஆறுதலாகவோ சொல்லப்பட்ட யுக்திவாத மல்ல. உண்மையில் எல்லா ஆண் பெண்பால ரும் தம் வாழ்வை இந்த முறையில் நடத்தி, எந்தக் கருமத் தையும் சுயநல நினைவே யில்லாமல் ஜனசமூக நன்மைக் காகவே சமபுத்தியுடன் செய்வதைப் பழகிக்கொள்வதற் காகக் கீதையிலுள்ள உபதேசம் ஏற்பட்டது. பழகப் பழக எதுவும் சுபாவமாகி விடுகிறது. பற்றற்றுக் கருமம் செய்வதும் இப்படியே அப்பியாசத்தால் சுபாவமாகும். இது மட்டு மல்ல. செய்யும் கருமத்தை நன்கு முடிப்பதற் கும் இதுவே முறையாகும். ஆசையும் பற்றும் காரிய சாதனங்களல்ல. மனதில் கவலையையும் பயத்தையும் உண் டாக்குகின்றன. ஜயாபஜயக் கவலையினால் புத்தி சாதுர் யம் குறைகிறது. ஆகையால் பற்றற்றுச் சுயநலம் நீக்கிக் கருமம் செய்வதே கருமங்களை நன்கு முடிக்கும் வழி. தண்ணீரில் நீந்தும் வாத்து தண்ணீரைவிட்டு வெளி வந்த தும் தன் சிறகிலிருந்து தண்ணீரை எளிதில் உதறி விடுவது போல், கருமம் செய்யும்போது கண்ணுங் கருத்தும் வைத்து, காரியம் தீர்ந்தபின் பற்றோ ஜயாபஜயக் கவலையோ இல்லாமல் செய்துக்கொள்ள வேண்டும். உலக வாழ்வில் கலந்து கொள்ளும்போது இவனைவிட, கவனமும், சுறுசுறுப்பும், சாமர்த்தியமும் இருக்க முடி

யாது என்று பார்ப்பவர்கள் நினைக்குமாறு சுத்தமாகவும் சுறுசுறுப்பாகவும் வேலைகளைச் செய்ய வேண்டும். விட்ட பின் அதன் பலன்களைப்பற்றிக் கவலையே இருக்கக் கூடாது. இந்த நிலையை அடையப் பழக்கம் வேண்டும். முக்கியமாக மனோவேகங்களை அடக்கும் முறையை அப்பியசிக்க வேண்டும்.

மனச் சாந்திக்குச் சத்ருப்படை, காமக் குரோத லோபங்கள். கர்மயோகத்துக்கு வேண்டிய மனத் தூய்மையும் பற்றற்ற நிலையும் அடைய விரும்பினால், இந்தச் சத்ருக்களுக்கு இடம் தராமல் எப்போதும் ஜாக்கிரதையாக மனதைக் காக்க வேண்டும். மனதைச் சரியாகக் காத்தோமானால் மற்றவை யனைத்தும் எளிதாகும். நன்மை, தீமை இரண்டுக்குமே மனதில் புகும் எண்ணங்களே மூலம். மனதை அடக்கியாளாமல் விட்டுவிட்டோமேயானால், பிறகு நிச்சயமாய் ஏமாந்து போவோம். ஆசையெண்ணங்களைக் கோட்டைக்குள் புகவிட்டால், அவை பிறகு நம்மை ஆட்கொண்டுவிடும். இந்திரியங்களில் இடம் பண்ணிக்கொண்டு, மனதைக் கவர்ந்து, புத்தியைக் கெடுத்து, ஆத்மாவைப் பள்ளத்தில் தள்ளிவிடும். ஆகையால் கோட்டை வாயிலை அதாவது மனத்தைப் பலமாக அடைக்க வேண்டும். கெட்ட யெண்ணங்களை இவை வெறும் எண்ணங்கள்தாமே என்று அலட்சியம் செய்யாமல் மனதினின்று அப்புறப்படுத்தியே வைக்கவேண்டும்.

அர்ஜுன உவாச |

அதகேந ப்ரயுக்தோ'யம்
பாபம் சரதி பூருஷ: |
அநிச்சந்நபி வார்ஷ்ணேய
பலாதிவ நியோஜித: ||

அர்ச்சுனன் கேட்கிறான் :—

பாவம் செய்ய இச்சையில்லாதபோதும் மனிதனை வலியக் கொண்டு பாவத்தில் புகுத்துவது யாது? (3-36)

ஸ்ரீ பகவானுவாச

காம ஏஷ க்ரோத ஏஷ
ரஜோகுண ஸமுத்பவ: |
மஹாசநோ மஹாபாப்மா
வித்தியேநம் இஹ வைரிணம்: ||

ஸ்ரீ பகவான் சொல்லுகிறார் :—

மனிதனுடைய கேட்டுக்கு மூலம் ரஜோ குணம். அதுவே காமமும் சினமும் ஆகிறது. அதற்கு இரை போட்டு மாளாது. மிகவும் தீங்கிழைப்பது. வாழ்விற்குச் சத்துரு அதுவே என்றறிவாய். (3-37)

தூமேநா'வ்ரியதே வந்ஹிர்யதா
ஆதர்சோர் மலேந ச |
யதோல் பேநாவ்ருதோ
கர்பஸ்ததா தேநேத மாவ்ருதம் ||

தீயைப் புகை சூழ்வது போலவும், கண்ணாடியைக் களிம்பு மூடுவது போலவும், கர்ப்பத்தைக் கர்ப்பப்பை மூடி நிற்பது போலவும் இது மனிதனுடைய அறிவைச் சூழ்ந்துகொள்ளுகிறது. (3-38)

ஆவ்ருதம் ஜ்ஞாநமேதேந
ஜ்ஞாநிநோ நித்ய வைரிணா |
காமரூபேண கௌந்தேய!
துஷ்பூரேணா நலேந ச ||

ஞானவானுக்கு ஓயாத பகையான இது ஆசை வடிவம் கொண்டு, அறிவைச் சூழ்ந்துகொண்டு, அதைக் கெடுக்கிறது. இதற்கு எவ்வளவு உணவு போட்டாலும் திருப்தி உண்டாகாது. போடப்போட அதிகமாகப் பற்றி எரியும், தணியாது. (3-39)

இந்த்ரியாணி மநோ புத்தி
ரஸ்யாதிஷ்டான முச்யதே |
ஏதைர் விமோஹயத்யேஷ
ஜ்நா மாவ்ருத்ய தேஹிநம் ||

இந்திரியங்களும், மனமும், புத்தியும் இதற்குத் தங்குமிடம் என்று அறிந்தோர் சொல்லுகிறார்கள். அவற்றைக் கொண்டு ஞானத்தை மறைத்துவிட்டு இது ஜீவனை ஏமாற்றுகிறது. (3-40)

தஸ்மாத்வ மிந்த்ரியாண்யாதௌ
நியம்ய பரதர்ஷப |
பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம்
ஜ்ஞாந விஜ்ஞாந நாசநம் ||

ஆதலால் தொடக்கத்திலேயே இந்திரியங்களைக் காத்து இந்தக் கொடிய சத்துருவைக் கொல்லுவாயாக. இல்லையேல் அது உன் பகுத்தறிவையும் ஞானத்தையும் அழித்துவிடும். (3-41)

த்ரிவிதம் நரகஸ்யேதம்
த்வாரம் நாசந மாத்மந: |
காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மா
தேதத்ரயம் த்யஜேத் ||

ஆத்ம நாசத்துக்குக் காரணமான காமம், குரோதம், லோபம் ஆகிய இம் மூன்றும் நரகத்திற்கு வாயில்கள். ஆதலால், இம் மூன்றும் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டியவை. (16-21)

ஏதைர் விமுக்த: கௌந்தேய
தமோத்வாரை ஸ்த்ரிபிர் நர: |
ஆசரத்யாத்மந: ச்ரேயஸ்ததோ
யாதி பராம் கதிம் ||

இந்த மூன்று இருள் வாயில்களினின்றும் விலகி நிற்பவன் தன் ஆத்மாவுக்கு நலந் தேடிக்கொள்கிறான். அதனால் பரகதி அடைகிறான். (16-22)

யததோ ஹ்யபி கௌந்தேய
புருஷஸ்ய விபச்சித: |
இந்த்ரியாணி ப்ரமாதீநி
ஹரந்தி ப்ரஸபம் மந: ||

ஒருவன் அறிவுபடைத்துத் தவமுயற்சியும் செய்து கொண்டிருந்தாலுங்கூட ஆபத்து கொண்டுவரும் இந்திரியங்கள் மனதை வலிய பிடித்துக்கொண்டு சென்று விடுகின்றன. (2-60)

தாநி ஸர்வாணி ஸம்யம்ய
யுக்த ஆஸீத மத்பர: |
வசே ஹி யஸ்யேந்த்ரியாணி
தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ||

அவற்றை நன்ருக அடக்கி, யோகத்தில் நிலைகொண்டு, மனதை என்னிடம் செலுத்தினல், புலன்கள் வசப்படும். அவனைத்தான் நிலைகொண்ட ஞானம் படைத்தவனுகக் கொள்ளலாம். (2-61)

த்யாயதோ விஷயாந்பும்ஸ:
ஸங்கஸ்தேஷூபஜாயதே |
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமாத் க்ரோதோ'பி ஜாயதே ||

மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் அடங்கா விருப்பமுண்டாகிறது. விருப்பத்தினின்று சினம் உண்டாகிறது. (2-62)

க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம: |
ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்தி நாசோ
புத்தி நாசாத் ப்ரணசயதி ||

சினத்தால் மயக்கம் உண்டாகி, மயக்கத்தால் நினைவு தவறுதல் உண்டாகும்,—அதாவது அறிந்ததும் அனுபவ ஞானமும் மறந்துபோகும். மறப்பினல் புத்தி அழிந்து விடுகிறது; புத்தி அழிந்ததும் மனிதன் நாசமடைகிருன். (2-63)

இந்த்ரியாணும் ஹி சரதாம்
யன்மனோ' நுவிதியதே |
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம்
வாயுர் நாவமி வாம்பஸி ||

இந்திரியங்களை விஷயங்களில் செலுத்துகையில் ஒருவனுடைய மனமும் இந்திரியங்களோடு செல்லும். அதன் பின் கடலில் கப்பலைப் புயல்காற்று தூக்கிச் செல்லுவது போல் அவனுடைய மதி அடிபட்டு அலையும். (2-67)

முதலில் ஆசை மனமகிழ்ச்சிகள் அமிருதம்போலிருந்து பின்பு விஷமேயாகும், இவற்றினின்று மனிதன் உண்மைச் சுகம் பெறமாட்டான்; துக்கமாகத்தான் முடியும். புலன்களையும் மனதையும் அடக்குதல் முதலில் விஷம் போல் கசக்கும். ஆனால் அம்மருந்தே பின்பு ஞானத்தால் உதிக்கும் சுகானந்தத்தைத் தரும். ஆகையால் உண்மை இன்பம் வேறு; பொய் இன்பம் வேறு.

ஸுகம் த்விதானீம் த்ரிவிதம்
ச்ருணு மே பரதர்ஷப |
அப்யாஸாத் ரமதே யத்ர
து:காந்தம் ச நிகச்சதி ||

எதனிலே பயிலப் பயில ஒருவன் மனதில் மகிழ்ச்சி உண்டாகிறதோ, எதனால் ஒருவனை எய்திய துக்கங்கள் தீருவதைக் காண்கின்றோமோ, (18-36)

யத்ததக்ரே விஷமிவ பரிணாமே
அம்ருதோபமம் |
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்த
மாத்ம புத்தி ப்ரஸாதஜம் ||

எது தொடக்கத்தில் விஷத்தைப்போலிருந்தாலும், முடிவில் அமிர்தத்தைப்போல் ஆகிறதோ, அந்த இன்பமே ஸாத்வீகமும். அந்த இன்பம் உள்ளத்தில் அமைதியுண்டாவதினால் உண்டாகும். (18-37)

## கசு

## தியானம்

எந்த வேலை செய்யும்போதும் தன்னுடைய இந்திரிய அனுபோக சுகங்களைக் கருதாமல் செய்யவேண்டிய வேலையைச் செய்யப் பழக்கிக்கொண்டால், அதன் பிறகு, ஒருபடி மேல் செல்லலாம். செய்ய வேண்டியதைச் செய்வதே தன் கடமையும் அதிகாரமும் என்று அறிந்து அதன் முடிவைப்பற்றிக் கவலைப்படாமல், அது எந்த விதமாயினும் அதற்காக மகிழ்ச்சியோ துயரமோ அடையாமலிருக்க முயற்சி செய்ய வேண்டும். செய்யும் முயற்சியில் வெற்றி பெறினும் அபஜயமாயினும் மனங்கலங்கக் கூடாது. சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாவிக்க வேண்டும். அதாவது, மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் ஏற்பட்டாலும், மன அமைதி இழக்காமல் இருக்குமாறு வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். சுகம் வருமுன் அதைப்பற்றி நினைத்து நினைத்து ஆசைப்பட்டு மனங்கலங்குவதும், வந்து போனபின் அதை மறுபடியும் நினைத்து நினைத்துத் துக்கப்படுவதும் சுகதுக்கத்தின் இடைவிடாதத் தொடர்ச்சி யாகும். சுகமும் துக்கமும் ஒன்றின்றி மற்றொன்று இருக்க முடியாது. ஒரு சுகம் நேர்ந்தால் அது ஏதேனும் ஒரு சமயம் முடிந்தே தீரவேண்டும். அதன்பின் துக்கம் நிச்சயம். துக்கம் என்கிற உணர்ச்சியனுபவம் இல்லாமல் சுக உணர்ச்சியும் இருக்க முடியாது. இவை யிரண்டும் சேர்ந்தே ஒன்றன்பின் ஒன்றாக வரும். துக்கமே இல்லாவிடின் சுகமே துக்கமாகும். இரண்டும்

பொருள்களின் சேர்க்கையால் உண்டாகி, க்ஷணமாத்திரம் இருந்து மறையும் மனோபாவங்களே யொழிய வேறல்ல. இவை ஆத்மாவைத் தீண்டா. அதாவது அதை அழிக்கவோ மாற்றவோ அவைகளால் முடியா. வெளியிலிருந்து வரும் எந்தச் சுகமும் துக்கமும் ஆத்மாவுக்கு பாக்கியத்தை உண்டாக்காது; குறைக்கவும் முடியாது. தன் உள்ளத்தில் எண்ணும் எண்ணங்களும், தான் செய்யும் செயல்களுமே ஆத்மாவின் முன்னேற்றத்திற்கும் பிற்போக்குக்கும் காரணம்; வேறு எதுவுமல்ல. ஆத்மாவைப்பற்றியே மனிதன் கவலை செலுத்த வேண்டும். அதைப் புறச் சுகங்களும் துக்கங்களும் தீண்டா என்கிற பெரிய உண்மையை நன்றாக உணர்வதே சாந்திக்கு வழி.

மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய
சீதோஷ்ண ஸுகதுːகதாː |
ஆகமாபாயிநோ'நித்யாஸ்தாம்
ஸ்திதிக்ஷஸ்வ பாரத ||

குளிரும் வெப்பமும், இன்பமும் துன்பமும், பூதப் பொருள்களின் அணுக்களுடைய தீண்டுதலினால் தோன்றும், மறையும்; காலவரைக்குப் பின் மறைந்து போகும். அவற்றைப் பொறுத்துக்கொள். (2-14)

யம்ஹி ந வ்யதயந்த்யேதே
புருஷம் புருஷர்ஷப |
ஸமதுːக ஸுகம் தீரம்
ஸோ'ம்ருதத்வாய கல்பதே ||

எவன் இவற்றால் துயரம் அடையாமல் இன்பமும் துன்பமும் நிகரெனக்கொள்கிறானோ அந்தத் தீரன்

அமிருதத்வத்தை அடைந்தவனாகவே வைத்துக்கொள்ள லாம். (2-15)

ஸுகது:கே ஸமே க்ருத்வா
லாபாலாபௌ ஜயாஜயௌ |
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ
நைவம் பாபமவாப்ஸ்யஸி ||

சுகமும் துக்கமும், பொருளை இழத்தலும் பெறுதலும், வெற்றியும் தோல்வியும், இவற்றை நிகரெனக்கொண்டு போருக்கு ஒருப்படு. இவ்வண்ணம் கருமம் புரிந்தால் உன்னைப் பாவம் தீண்டாது. (2-38)

யேஹி ஸம்ஸ்பர்சஜா
போகா து:கயோநய ஏவ தே |
ஆத்யந்தவந்த: கௌந்தேய
ந தேஷு ரமதே புத: ||

புறத்தீண்டுதல்களினால் உண்டாகும் இன்பங்கள் துக்கத்திற்குப் பிறப்பிடங்களாய் முடியும். அவ்வின்பங் கள் எல்லாம் தொடக்கமும் இறுதியு முடையன. அறி வுடையோன் அவற்றில் களியுறுவதில்லை. (5-22)

சக்நோதீ ஹைவ ய: ஸோடும்
ப்ராக் சரீர விமோக்ஷணாத் |
காமக்ரோதோத்பவம்
வேகம் ஸ யுக்த: ஸ ஸுகி நர: ||

சரீரத்தினின்று விடுபடுவதற்கு முன் இவ்வுலகத்தி லேயே காமக் குரோதங்களால் விளையும் வேகத்தை

எவன் பொறுக்கப் பயில்கிருனே அவனே யோகி. அந்த மனிதனே உண்மையில் சுகத்தை யடைந்தவன். (5-23)

ஆத்ம ஞானத்தின் பயனுக மனதில் சாந்தியடைந்தால் அதுவே பரமாநந்தம். பரமபதத்தில் அடையக் கூடிய சுகத்திற்கு ஒருவாறு சமமாய்ச் சொல்லக்கூடியதும் இவ்வுலகத்திலேயே அடையக்கூடியதும் இந்த சாந்தமே.

யோ'ந்த: ஸுகோ'ந்தரா ராமஸ்த தா
ந்தர்ஜ்யோதி ரேவ ய: |
ஸ யோகி ப்ரஹ்ம நிர்வாணம்
ப்ரமபூதோ'தி கச்சதி ||

புறப்பொருளின் பயனுக இல்லாமல் தனக்குள்ளே இன்பமுடையவனுய், தனக்குள்ளே களியுறுவோனுய், தனக்குள்ளே ஒளி பெற்றவனுகிய யோகி பிரம்மநிலை யடைந்து பிரம்ம நிர்வாணம் எய்துகிருன். (5-24)

காமக்ரோத வியுக்தா நாம்
யதிநாம் யதசேதஸாம் |
அபிதோ ப்ரஹ்ம நிர்வாணம்
வர்ததே விதிதாத்மநாம் ||

காமமும் குரோதமும் தவிர்த்து, சித்தத்தைக் கட்டுப் படுத்திய ஆத்ம ஞானிகளுக்குப் பிரம்ம நிர்வாணம் அருகி லேயே உள்ளதாகும். (5-26)

யதேந்த்ரிய மநோபுத்திர்
முநிர்மோக்ஷ பராயண: |
விகதேச்சா பயக்ரோதோ ய:
ஸதா முக்த ஏவ ஸ: ||

இந்திரியங்களையும் மனதையும் புத்தியையும் கட்டுக்குள் அடக்கி, மோக்ஷமே வாழ்க்கையின் இலக்கு என்று கண்டுகொண்டு, ஆசை, பயம், குரோதம் இவைகளை ஒழித்தவன் முனியே ஆவான்; முக்தனே யாவான்.

(5-28)

எந்தக் காரியம் செய்தபோதிலும் அதைச் சுயநல எண்ணமில்லாமல் செய்வதில் நன்ருய்ப் பழகி, அதுவே சுபாவமாகச் செய்துகொண்டுவிட்டால், பிறகு மனம் பக்குவப்படும். அதன்மேல் கருமங்கள் எப்படி முடிந்தாலும் சாந்தம் குலையாமல் நிற்கச் சக்தியுண்டாகும். ஆசைப் பற்றுகளை விட்டாலொழிய இது முடியாது. உண்மைச் சுகம் அந்தராத்மாவில் உண்டாவதுதான். புலன்கள் வழியால் அடையும் சுகபோகங்கள் ஆத்ம சுகத்தைத் தரா என்பதை நன்கு உணர வேண்டும்.

ஆருருக்ஷோர்முநேர் யோகம்
கர்ம காரண முச்யதே ।
யோகாரூடஸ்ய தஸ்யைவ
சம: காரண முச்யதே ॥

யோக நிலையை அடைய விரும்பும் முனிக்குக் கருமமே சாதனமாகக் கூறப்படுகிறது. யோக நிலையை அடைந்தபின் அதனாலுண்டாகும் உள்ளச் சாந்தமே அவனுக்கு அடுத்தபடியான சாதனமாகிறது. (6-3)

யதா ஹி நேந்த்ரியார்தேஷு
ந கர்மஸ்வ நுஷஜ்ஜதே ।
ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸீ
யோகாரூடஸ்த தோச்யதே ॥

இந்திரிய சுகம் கொடுக்கும் விஷயங்களிலும் உலக விவகாரங்களிலும் பற்றுவைக்காமல், இதைச் செய்து முடிக்க வேண்டும் அதைச் செய்து முடிக்க வேண்டும் என்கிற ஆசையும் எண்ணமும் இல்லாமல் இருந்தால்தான் ஒருவன் யோகநிலை யடைந்தவனாவான். (6-4)

உத்த்ரே தாத்மநா''த் மாநம்
நா''த்மாநமவ ஸாதயேத் |
ஆத்மைவ ஹ்யாத்மநோ
பந்துராத்மைவ ரிபுராத்மந: ||

தன்னை உயர்த்திக்கொள்ளும் சாதனம் ஒருவனுக்குத் தன்னிடமே இருக்கிறது. அதைப் பயன் படுத்திக்கொள்க. உள்ளத்தைக் கெடுத்துக்கொண்டு தாழ்வு அடைய வேண்டாம். ஒருவனுக்குத் தானே நண்பன்; தானே சத்துருவுமாவான். (6-5)

பந்துராத்மா''த்ம நஸ்தஸ்ய
யேநா''த்மைவா த்மநாஜித: |
அநாத்மநஸ்து சத்துருத்வே
வர்தேதா''த்மைவ சத்துருவத் ||

தன் மனத்தை ஒருவன் வென்றால் தனக்குத்தானே நண்பனாகிறான். மனத்தை வெல்லாதவனுக்குத் தன் உள்ளமே பகையாகி அவனைக் கெடுக்கும். (6-6)

ஜிதாத்மந: ப்ரசாந்தஸ்ய
பரமாத்மா ஸமாஹித: |
சீதோஷ்ண ஸுகது:கேஷு
ததா மாநாப மாநயோ: ||

தன்னைத்தான் வென்று ஆறுதல் அடைந்தவனுடைய உயரிய ஆத்மா சீதோஷ்ணங்களிலும், சுக துக்கங்களிலும், மான அவமானங்களிலும் சமநிலைப்பட்டு விளங்கும். (6-7)

சுகத்திலும் துக்கத்திலும் மனங்கலங்காத சமத்துவ நிலையை அடையத் தியானம் அவசியம். கர்மயோகம் பழகிய பின், அதாவது தனக்கேற்பட்ட கடமைகளைச் சுயநலம் கருதாமல் செய்து, கருமங்களின் முடிவைப் பற்றிக் கவலையும் மனக் கலக்கமுமில்லாமல் இருக்கப் பழகியபின், அவ்வப்போது தனிமையிடத்தில் தங்கி, சித்த மலங்களை நீக்கி, தியானத்தில் அமர்வதினால் மனதில் ஸ்திரமுண்டாகும். இத்தகைய தியானத்தை அப்பியசிப்பதுதான் கீழ்க்கண்ட சுலோகங்களில் "யோகம்" என்று சொல்லப்படுவது.

யோகீ யுஞ்ஜீத ஸததம்
ஆத்மாநம் ரஹஸி ஸ்தித: |
ஏகாகீ யதசித்தாத்மா
நிராசீர பரிக்ரஹ: ||

அடிக்கடி ஜன சஞ்சாரமில்லாத இடத்தில் தனியாக இருந்து உள்ளத்தையும் பொறிகளையும் அடக்கியாண்டு, பொருள்களை அடைய விரும்பாமலும் பொருள்களை சேமித்துவைத்துக்கொள்ளாமலும் அப்பியசித்து, தன்னைத் தான் அடக்கி யோகநிலையை அடையவேண்டும். (6-10)

சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய
ஸ்திரமாஸநமாத்மந: |
நாத்யுச்சரிதம் நாதிநீசம்
சைலாஜி நகுசோத்தரம் ||

சுத்தமான இடம் பார்த்து, அதிக உயரமில்லாமலும் அதிகத் தாழ்வில்லாமலும், ஓர் உறுதியான ஆசனம் சமைத்துக்கொண்டு, துணி, மான் தோல், தர்ப்பை இவற்றைப் போட்டு உட்கார வேண்டும். *(6-11)*

தத்ரை காக்ரம் மந: க்ருத்வா
யதசித்தேந்த்ரிய க்ரிய: |
உபவிச் யாஸ்நே யுஞ்ஜ்யாத்
யோகமாத்ம விசுத்தயே ||

மனதை ஒருமுகமாக்கி உள்ளத்தையும் இந்திரியச் செயல்களையும் நன்கு கட்டுப்படுத்தி ஆசனத்திலமர்ந்து மனத் தூய்மை யடையும்படி யோகத்திலே பொருந்தக் கடவன். *(6-12)*

ஸமம் காய சிரோக்ரீவம்
தாரயந் நசலம் ஸ்திர: |
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம்
ஸ்வம் திசச்சா நவலோகயந் ||

உடம்பையும் தலையையும் கழுத்தையும் நேராக அசையாமல் உட்கார்ந்து, மூக்கு நுனியில் திருஷ்டி யெல்லாம் வைத்து, இங்குமங்கும் பார்க்காம லிருக்கவேண்டும். *(6-13)*

ப்சாந்தாத்மா விகதபீர்
ப்ரஹ்மசாரி வ்ரதே ஸ்தித: |
மந: ஸம்யம்ய மச்சித்தோ
யுக்த ஆஸீத மத்பர: ||

ஆறுதல் எய்திய உள்ளத்துடன் அச்சம் என்பது இல்லாமல், பிரமசரிய விரதத்தில் நிலைகொண்டு, மனத்தை அடக்கி, என்மேல் சித்தத்தைச் செலுத்தி அடைய வேண்டிய பரம்பொருளாக என்னையே தியானித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பான்.

நாத்யச்நதஸ்து யோகோ'ஸ்தி
ந சைகாந்த மநச்நத: |
ந சாதி ஸ்வப்ந சீலஸ்ய
ஜாக்ரதோ நைவ சார்ஜுந ||

மிகைபட உண்போனுக்கு யோகமில்லை; முற்றிலும் உபவாசமிருப்பதினாலும் பயன் இல்லை. மிகுதியாக உறங்குவோனுக்கும் யோகம் முடியாது; அப்படியே தூக்கம் விட்டதனாலும் பயனில்லை. (6-16)

யுக்தாஹார விஹாரஸ்ய
யுக்த சேஷ்டஸ்ய கர்மஸு |
யுக்தஸ்வப்நாவ போதஸ்ய
யோகோ பவதி து:கஹா ||

ஒழுங்குக்கு உட்பட்ட உணவும், விளையாட்டும், கருமங்களைச் செய்வதில் ஒழுங்குக்கு உட்பட்ட முறையும், ஒழுங்குக்கு உட்பட்ட உறக்கமும் விழிப்புங் கொண்டவனே துயரம் என்பதை யொழிக்கும் தியான யோக நிலையை அடைவான். (6-17)

யதாதீபோ நிவாதஸ்தோ
நேங்கதே ஸோபமா ஸ்மிருதா |

யோகிநோ யதசித்தஸ்ய
யுஞ்ஜதோ யோகமாத்மந: ||

சித்தத்தைக் கட்டிப்பிடித்து ஆத்ம யோகத்தில் நிற்கும் யோகிக்கு, காற்றில்லாத இடத்தில் அசைவின்றி நிற்கும் விளக்கை, முன்னோர்கள் உவமையாகக் காட்டினார்கள். அதாவது புறவிஷயங்கள் தீண்டாமல் மனத்தைக் காத்தால் உள்ளம் அசையாமல் நிற்கும். (6-19)

எந்த விஷயத்திலும் வரம்புமீறிப் போகக்கூடாதென்பதைக் கீதை வற்புறுத்துகிறது. நோன்புகளிலும் அளவுக்கு மிஞ்சிப் போக வேண்டாம் என்று மேலே சொல்லியிருப்பதை கவனிக்க. யோக சித்திக்கு முக்கியமான சாதனம் மனதைக் காப்பது. மனமானது ஓடித் திரியவே பார்க்கிறது. மனத்தில் உத்பவமாகும் நினைவுகளை அடக்கியாளாமல் போனால், அவை உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு ஓடிவிடும். எப்போதும் இழுத்துப் பிடித்தே யிருக்க வேண்டும். எவ்வளவு சிரமப்பட்டு அடக்கினாலும், மறந்து மறந்து மறுபடியும் நினைவுகள் ஓடித் திரியும். அதைக் கண்டு கலக்கமடையாமல் அவ்வப்போது மனத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு பரமாத்ம சிந்தனையில் நிற்க வேண்டும்.

ஸங்கல்ப ப்ரபவாந் காமாந்
ஸ்த்யக்த்வா ஸர்வாந் அசேஷத: |
மநஸை வேந்த்ரிய க்ராமம்
விநியம்ய ஸமந்தத: ||

மனத்தில் கற்பித்துக்கொள்ளும் எண்ணங்களினின்று எழும் விருப்பங்களை யெல்லாம் மிச்சமறத்

துறந்துவிட்டு, எல்லா விஷயங்களினின்றும் விலகுமாறு இந்திரியங்களை மனத்தால் கட்டப்படுத்தி, (6-24)

சநை: சநைருபர்மேத்
புத்த்யா த்ருதிக்ருஹீதயா |
ஆத்மஸம்ஸ்தம் மந: க்ருத்வா
ந கிஞ்சிதபி சிந்தயேத் ||

ஸ்திர புத்தியுடன் மனதை ஆத்மாவில் நிறுத்தி, வர வர அதிலேயே மகிழ்ச்சி பெறப் பழகி, வேறு எதிலும் மனத்தைச் செலுத்திக் கவலையுரு திருக்கக் கடவன். (6-25)

யதோ யதோ நிச்சரதி
மநச் சஞ்சல மஸ்திரம் |
ததஸ்ததோ நியம்யைத்தாத்
மந்யேவ வசம் நயேத் ||

மனம் சஞ்சலமாய் ஸ்திரமின்றி உழலும்போதெல்லாம், உடனுக்குடனே அதைக் கட்டுப்படுத்தி ஆத்மாவுக்கு வசமாக்கிக்கொள்வான். (6-26)

ப்ரசாந்த மநஸம் ஹ்யேநம்
யோகிநம் ஸுக முத்தமம் |
உபைதி சாந்த ரஜஸம்
ப்ரஹ்ம பூதம் அகல்மஷம் ||

ரஜோ குணம் ஆறி, மனம் சந்தமாகி மாசு நீங்கி, பிரம்மநிலை யடைந்த யோகிக்கு மிகச் சிறந்த சுகம் இடைக்கிறது. (6-27)

மன அமைதி யடைந்தவன் எவ்வாறிருப்பான் என்பதை அடியில் காணலாம் :

அத்வேஷ்டா ஸர்வபூதாநாம்
மைத்ர: கருண ஏவச |
நிர்மமோ நிரஹங்கார:
ஸமது:க ஸுக: க்ஷமி ||

எவ்வுயிரையும் பகைத்தலின்றி நட்பும் கருணையும் உடையவனாய், யான் என்பதும் எனது என்பதும் நீங்கி, சுகத்தையும் துக்கத்தையும் நிகராகக் கொண்டு, (12-13)

ஸந்துஷ்ட: ஸததம் யோகீ
யதாத்மா த்ருட நிச்சய: |
மய்யர்பிதம் அநோபுத்தியோர்
மே பக்த: ஸ மே ப்ரிய: ||

எப்போதும் மன மகிழ்ச்சியுடையவனாய், உள்ளத்தை வசப்படுத்தியவனாய், திட நிச்சய முடையவனாய், என்னிடத்திலேயே மனத்தையும் அர்ப்பணம் செய்த யோகி என் பக்தன், எனக்கு இனியவன். (12-14)

யஸ்மாந் நோத்விஜதே லோகோ
லோகாந்நோத் விஜதே ச ய: |
ஹர்ஷாமர்ஷ பயோத்வேகை:
முக்தோ ய: ஸ ச மே ப்ரிய: ||

எவன் ஜனங்களுக்கு வேதனை உண்டாக்காமலும், ஜனங்களின் செயல்களால் வேதனை அடையாமலும் வாழ்கிறானோ, எவன் களிப்பாலும், அச்சத்தாலும், சினத்

தானும் விளையும் கொதிப்புகளின்று விடுபட்டானோ, அவனே எனக்கு இனியவன். (12-15)

அநபேக்ஷ: சுசிர்தக்ஷ
உதாஸீநோ கதவ்யத: |
ஸர்வாரம்ப பரித்யாகீ
யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: ||

எதனையும் வேண்டி எதிர்பார்த்தலின்றி, தூயோனாய், கடமைகளைச் செய்து தீர்ப்பதில் திறமுடையோனாய், பற்றுகளற்றவனாய், கவலை நீங்கியவனாய், சுய காரிய திட்டங்களை அறவே துறந்து என்னிடம் பக்தி செலுத்துவோனே எனக்கு இனியவன். (12-16)

யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி
ந சோசதி ந காங்க்ஷதி |
சுபா சுப பரித்யாகீ
பக்திமாந்ய: ஸ மே ப்ரிய: ||

களித்தலும் பகைத்தலும், துயர்ப்படுதலும், அவாவுறுதலுமின்றி நன்மை தீமை வேற்றுமையைத் துறந்த பக்திமானே எனக்கு இனியவன். (12-17)

ஸம: சத்ரௌ ச மித்ரே ச
ததா மாநாப மாநயோ: |
சீதோஷ்ண ஸுக து:கேஷு
ஸம: ஸங்க விவர்ஜித: ||

பகைவனிடத்தும் நண்பனிடத்தும், பிறர் மதித்தலிலும் அவமதித்தலும், குளிரிலும் வெப்பத்திலும், இன்பத்திலும் துன்பத்திலும் சமமாக இருந்து பற்றுகளை நீக்கி, (12-18)

துல்யநிந்த்ரா ஸ்துதிர்மௌநீ
ஸந்துஷ்டோ யேநகேநசித் |
அநிகேத: ஸ்திரமதிர்
பக்திமாந்மே ப்ரியோ நர: ||

புகழையும் இகழையும் நிகராகக்கொண்டு, பயனற்ற பேச்சின்றி, யாது வரினும் அதில் மகிழ்ச்சியுற்று, தன் வீடு இது என்பதில்லாமல், ஸ்திர புத்தியுடனிருக்கும் பக்தன் எனக்கு இனியவன். (12-19)

இவ்வாறு இந்திரிய நிக்ரகத்தினாலும், தினசரி நியமங்களாலும் தியானத்தாலும் அடைந்த சாந்தியையுங்கூட, பூர்வ ஜென்ம கர்மவசுகப் பிறக்கும்போது தேகத்தோடு கூடவந்திருக்கும் பிரகிருதி குணங்கள் கலைத்துக் கொண்டேயிருக்கும். ஞானமடைந்த பின்னும் இந்தக் குழப்பம் உண்டாகும். அதைக் கண்டு தயங்க வேண்டியதில்லை. அது சுபாவம் என்று உணர்ந்து, அடிக்கடி தியானத்தினாலும் பக்தியினாலும் பரம்பொருளை நினைவூட்டிக் கொண்டு சாந்தியை இழக்காமல் காத்துக்கொள்ள வேண்டும். பிரகிருதி குணங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும். குணங்களைத் தாண்டினவன் யாரெனில்,

ப்ரகாசம் ச ப்ரவிருத்திம் ச
மோஹமேவ ச பாண்டவ |
ந த்வேஷ்டி ஸம்ப்ரவிருத்தாநி
ந நிவ்ருத்தாநி காங்க்ஷதி ||

மனப் பிரகாசம், தொழில் செய்யத் தூண்டும் குணம், அறிவு நீங்கிய நிலை, இவை முறையே தோன்றும்போது வெறுக்காமலும் மிருப்போன், (14-22)

## தியானம்

உதாஸீநவதாஸீநோ
குணைர்யோ நவிசால்யதே |
குணாவர்தந்த இத்யேவ
யோ'வதிஷ்டதி நேங்கதே ||

சுபாவ குணங்களால் மனங்கலங்காமல் உதாஸீனமாக அமர்ந்து, "குணங்கள் சுழல்கின்றன" என்றெண்ணி அசைவற்று நிற்பவன், (14-23)

ஸமது:க ஸுக: ஸ்வஸ்த:
ஸமலோஷ்டாச்மகாஞ்சந: |
துல்ய ப்ரியாப்ரியோ தீரஸ்துல்ய
நிந்தாத்ம ஸம்ஸ்துதி: ||

துக்கத்தையும் சுகத்தையும் சமமாகக்கொண்டு ஆத்ம நிலையில் நிற்பவன், மண்ணாங்கட்டியையுங் கல்லையும் பொன்னையும் நிகராகக் காண்பவன், பிரியம் உள்ளவரிடத்தும் பிரியம் இல்லாதவரிடத்தும் சமமாக நடப்பவன், இகழையும் புகழையும் நிகராகக்கொள்ளும் தீரன், (14-24)

மாநாப மாநயோஸ் துல்யஸ்
துல்யோ மித்ராரி பக்ஷயோ: |
ஸர்வாரம்ப பரித்யாகீ
குணாதீத:ஸ உச்யதே ||

கௌரவத்தையும் அவமதிப்பையும் நிகராகக் கருதுபவன், நண்பரிடத்தும் பகைவரிடத்தும் நடுநிலைமை பூண்டவன், தனக்கென்ற தொழிலாரம்பங்கள் அனைத்தையும் துறந்தவன், இத்தகையோனே குணங்களைக் கடந்தவன் என்று மதிக்கப்படுவான். (14-25)

உ௦

## இயற்கைக் குணங்கள்

மனிதன் ஏன் தவறான வழியில் செல்கிறான் என்பதன் உண்மைக் காரணத்தை அடிக்கடி நினைவுக்குத் தந்து கொள்ள வேண்டும். தீச் செயல் செய்தவர்களைக் கண்டு சாந்தம் இழக்காமல் அவர்கள்பால் அன்பு பாராட்டவும் மனம் கலங்கும்போ தெல்லாம் அமைதி யடையவும், இது மிகவும் பயன்படும்.

தன்னைத்தான் அடக்கி யாளாமல் மனதை அஜாக்கிரதையாக விட்டபோதெல்லாம், பிறப்புடன் வந்திருக்கும் இயற்கை சுபாவத்தின் வேகம் வேலை செய்யும். இயற்கைச் சுபாவம் என்பது அனைவரையும் வேதனைப்படுத்துகிறது. அது செய்கை ரூபமாக வெளிப்படுகிறது. இதை ஒருவனிடம் கண்டு நாம் கோபிக்கலாமா? மற்றவர்கள் செயலைக் கண்டு வெறுப்படையும்போ தெல்லாம், அவனவன் தத்தம் குறைகளை நினைவுக்குத் தந்துகொள்ள வேண்டும். உன் மனம் சுத்தமாக இருக்கிறதா? உன் இயற்கைச் சுபாவம் உனக்குத் தெரியுமே? மற்றவர்களுக்கு வெளிப்படை யாகாவிடினும் அது உள்ளே செய்யும் வேலையை நீ கண்டிருக்கிறாயே? அதை அடக்கினது உன் பாக்கியம். மற்றவர்கள் அந்தப் பாக்கியத்தை அடை

யாமல் போனதற்கு வருந்துவாயாக. பகவானுடைய பிரஸாதத்தை அடைந்தாலல்லவோ ஆத்மா இந்தச் சுபாவ கர்ம மூட்டையினின்று தப்ப முடியும்? உலகத்தில் நடப்பதெல்லாம் பகவான் சங்கற்பம். எது தீமை, எது நன்மை என்று நீ தீர்மானிக்கலாமா? முடிவில் தீயது எது, நன்மை எது என்பது ஆண்டவனுக்கேதான் தெரியும்; ஜகத்தின் அமைப்பை அறியாத நாம் தீர்மானிக்க முடியாது. உண்மையான அடக்கத்துடன் அவனவன் தத்தம் வாழ்க்கைக் கடமைகளைச் செய்துகொண்டு போகவேண்டும்.

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி
க்ரியமாணாநி ஸர்வச: |
ய: பச்யதி ததா''த்மாநம்
அகர்தாரம் ஸ: பச்யதி ||

எவ்வகையிலும் தொழில்கள் தேகத்தோடு வந்த பிரகிருதியாலேயே செய்யப்படுகின்றன. ஆதலால், ஆத்மாவானது கர்த்தா அல்ல என்று கண்டுகொண்டோனே உண்மையைக் கண்டவன். (13-29)

ஸத்வம் ரஜஸ்தம இதி குணா:
ப்ரக்ருதி ஸம்பவா: |
நிபத்நந்தி மஹாபாஹோ
தேஹே தேஹிந மவ்யயம் ||

ஸத்வம், ரஜஸ், தமஸ், இந்தக் குணங்கள் பிரகிருதியில் எழுகின்றன. மாறுத சுபாவம் படைத்ததாயினும் உடம்பில் நிற்கும்போது ஆத்மா இக்குணங்களால் கட்டுப்படுகின்றது. (14-5)

நாந்யம் குணேப்ய: கர்தாரம்
யதா த்ரஷ்டா'நு பச்யதி |
குணேப்யச்ச பரம் வேத்தி
மத்பாவம் ஸோ'திகச்சதி ||

*செய்யும் காரியங்களுக்குக் குணங்களைத் தவிர வேறு மூலகாரணம் இல்லையென்பதை ஜீவன் கண்டுகொண்டு, குணங்களுக்கு மேலுள்ள மெய்ப்பொருளை அறிவானாயின் என்னை யடைந்தவனாவான்.* (14-19)

ந தத்ஸ்தி ப்ருதிவ்யாம்
வா திவி தேவேஷு வா புந: |
ஸத்த்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம்
யதேபி:ஸ்யாத்த்ரிபிர்குணை: ||

*இயற்கையில் தோன்றும் இம்மூன்று குணங்களினின்றும் விடுபட்டு நிற்கும் உயிர் மண்ணுலகத்திலுமில்லை, வானுலகத்தில் தேவருள்ளும் இல்லை.* (18-40)

ஸ்வபாவஜேந கௌந்தேய
நிபத்த: ஸ்வேந கர்மணா |
கர்தும் நேச்சாஸி யந்மோஹாத்
கரிஷ்யஸ்ய வசோபித்த் ||

*பிறப்பில் தோன்றிய சுவபாவத் தொழிலால் கட்டுண்டிருக்கும் நீ மோகங்கொண்டு அதனைச் செய்ய விரும்பாயெனினும் உன் வசமின்றியே நீ அதைச் செய்வாய்.* (18-60)

ந கர்த்ருத்வம் ந கர்மாணி
லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: |
ந கர்மபலம் ஸம்யோகம்
ஸ்வபாவஸ்து ப்ரவர்ததே ||

பிரகாசப்பேறு பெற்ற ஜீவன், செயல், செய்கை, செய்யப்பட்டதின் பயன், இவற்றுள் எதனையும் தன தென்று உண்டாக்கிக்கொள்வ தில்லை. அந்நிலைமை யடைந்த ஜீவனைப் பொறுத்த மட்டில் இயற்கையே நடை பெறுகிறது. (5-14)

நாதத்தே கஸ்யசித் பாபம்
ந சைவ ஸுக்ருதம் விபு: |
அஜ்ஞானேந ஆவ்ருதம் ஜ்ஞாநம்
தேந முஹ்யந்தி ஜந்தவ: ||

சுபாவ ஞானமானது அஞ்ஞானத்தால் சூழப்பட் டிருப்பதால், ஜீவன்கள் மயக்கம் எய்துகின்றன. பிரகாச மடைந்த ஆத்மா, எதையும் தீய செய்கை அல்லது நற் செய்கை என்று வெறுப்பதும் ஏற்பதுமில்லை. (5-15)

அநாதித்வாந் நிர்குணத்வாத்
பரமாத்மா'' யமவ்யய: |
சரீரஸ்தோ'பி கௌந்தேய
ந கரோதி ந லிப்யதே ||

ஆத்மாவுக்கு ஆதியின்மையாலும், குண மின்மையா லும் குணங்களைக் கடந்த மாறுதலற்ற ஆத்மா உடம்பில் நின்றாலும், செயலற்று, பற்றற்று நிற்கும். (13-31)

ஈச்வர: ஸர்வ பூதாநாம்
ஹ்ருத்தேசே'ர்ஜுந திஷ்டதி |
ப்ராமயந் ஸர்வபூதாநி
யந்த்ராரூடாநி மாயயா ||

எல்லா உயிர்களின் உள்ளத்திலும் ஈசுவரன் இருக்கிறான். மாயையைக் கருவியாகக்கொண்டு அவன் எல்லா உயிர்களையும் சக்கரத்திலேற்றிய பிரதிமைகளைப் போல் சுழற்றுகிறான். (18-61)

இந்த சுலோகங்களால் என்ன தெரிந்துகொண்டோம்? பிறக்கும்போது என்ன குணங்களுடன் பிறக்கிறோமோ அவை நம்மைத் தூண்டுகின்றன. பாவம் செய்தான் என்று ஒருவனையும் துவேஷிக்கக் கூடாது; இழிவாகவும் நடத்தக்கூடாது. அவன் அந்தப் பாவத்தைச் செய்தான், நான் செய்யவில்லையென்று கர்வப்படவுங் கூடாது.

ஈசுவரனே அனைத்துக்கும் கர்த்தா என்று சொல்லுவதனால், தன் பொறுப்பு தனக்கில்லையென்று பொருள் செய்துகொள்ளக் கூடாது. எல்லாம் பிறப்புச் சுபாவம் என்று விட்டுவிட்டு, பொறுப்பற்று நடக்க இந்த சுலோகங்களைப் பிரமாணமாக வைத்துக்கொள்ளுவது மூடத்தனமாகும். ஆத்ம சக்தியினால், சுபாவ குணங்களை, அதாவது தான் முன்ஜன்மத்தில் செய்த கருமங்களின் பலனாகத் தான் சம்பாதித்த சுபாவ குணங்களை அடக்கியாள முடியும்; அடக்கியாண்டு அவற்றை வென்று விடுதலையடைக் கூடும். எவ்வாறு குணங்களை பெற்றோமோ அவ்வாறே நீக்கிக்கொள்ளவும் வேண்டும். சுபாவ குணங்

களைப் பற்றிக் கீதையில் சொல்லுவதெல்லாம் மற்றவர்களை அன்புடன் பாராட்டவும் தனக்குள் மனங்கலங்காமலிருக்கவும் சாதனமாக உண்மையை எடுத்துக்காட்டவேயொழிய, அவனவன் தன்னைப்பற்றி ஆத்ம பொறுப்பை இழந்துவிட்டுப் பிரயத்தனமின்றிக் கெட்டுப் போகவல்ல. இந்த உபதேசம் மற்றவர்களை இவர்கள் பூர்வ கர்மத்தின் பயனாக இழிகுலம் அல்லது இழிகுணம் கொண்டவர்கள் என்று இகழ்ந்து குரூரமாகவும் அசூயையுடனும் கர்வங்கொண்டும் நடத்த ஆதாரமாகாது. அப்படி ஒருவன் செய்தால் தன்னுடைய ஆத்மாவைத் தாழ்த்திக்கொண்டவனாவான்.

ஆத்மா ஒன்றாலும் மாறுதலடையாது. அது தனித்து நிற்கிறது. பிரகிருதி குணங்களே எல்லாச் சேஷ்டைகளையும் செய்கின்றன. அந்த சேஷ்டைகளால் ஆத்மா மாறுதலடையாது என்று சொல்லப்பட்டதெல்லாம் அதன் சொரூபத்தை உணர்த்துவதற்காகச் சொன்னதாகும். பாலில் மோர்விட்டால் பால் தயிராய்ப் போவதுபோல், தேகத்துடன் சேர்ந்த ஆத்மாவின் சொரூபம் பாபபுண்ணியத்தால் மாறிவிடாது. 'தனித்து நிற்கிறது', 'மாறுதலடையாது' என்பவற்றின் கருத்து இதுவேயொழிய ஆத்மாவுக்குப் பொறுப்பில்லையென்று சொன்னபடியல்ல. செய்யும் செயல்களின் பாபபுண்ணிய பலன் அதைத் தீண்டாது என்றல்ல. தீண்டும். தீண்டாதவாறு செய்யவே கண்ணன் வழிகாட்டியது.

சுபாவ குணங்கள் ஜடப் பிரகிருதியான தேகத்தில் நாட்டப்பட்டனவாயினும், அவை இந்திரியங்களையும் மனத்தையும் தம் ஆதீனமாக்கிக்கொண்டு, அவைகளின் வழியாய் ஆத்மாவையும் சிறைப்படுத்திவிடும். ஆனால், குணங்களுடன் போர்செய்து வென்று, சிறை செய்யப்படாமல்

தப்புவதற்கு ஆத்மாவுக்குச் சக்தியும் சுதந்திரமும் உண்டு. இதற்கு ஞானம் என்ற ஒப்பற்ற துணை வேண்டும்.

ஞானம் என்பது, கேவலம் படிப்பினாலும் ஆராய்ச்சியினாலும், தியானத்தினாலும் மட்டுமே வராது. பயன்படும் அறிவுதான் ஞானம். பயன்படுமாறு உண்மை அறிவு அடைய விரும்பினால் புலன்களையும், மனதையும், செயலையும் அடக்கியாள வேண்டும். இப்படி அடக்காவிடின் அடைந்த அறிவு உள்ளத்தில் புகுந்து ஆத்மாவிற்குத் துணையாகாது. எண்ணெய்மேல் ஜலம்விட்ட மாதிரி பயனற்றுப்போகும். உண்மையறிவு அடையாமல், செயலையும் மனதையும் அடக்கியாளாமல், சுபாவ குணங்களை எதேச்சையாய் வேலைசெய்ய விட்டுவிட்டோமானால் கர்மச்சுமை விருத்தியாய்க்கொண்டே போகும்.

௨க

# அனைவருக்கும் விடுதலை

மகா பாபம் செய்தவனாயினும், எனக்கு ஏது கதி என்று ஏங்கி யாரும் நிராசை அடைய வேண்டியதில்லை. அவனுக்குங்கூட, தான் செய்த பாவச் செயலைப்பற்றித் துக்கப்பட்டு, பகவானைச் சரணமடைந்தால் விடுதலை யுண்டு. இது கீதையின் இறுதிமொழி.

இதென்ன? கர்மபந்தம் இவ்வளவு சுலபமாகத் தீர்த்துக்கொள்ள முடியுமா என்று சந்தேகப்பட வேண்டியதில்லை. செய்த பாவச் செயல்களைப்பற்றியும், நினைத்த பாப எண்ணத்தைப்பற்றியும் உண்மையாகத் துயரப்பட்டு மனங்கரைந்துருகினால் அதுவும் ஒரு கர்மமே யாகும். அதன் நற்பயனையும் ஆத்மா அடையும். பகவானைச் சரண் அடைந்தால் கர்ம மூட்டை தீர்ந்துவிடும் என்பது கர்ம விதிக்கு மாறாகாது. ஆனால் மந்திரங்கள் சொல்லிப் பின்னால் பிராயசித்தம் செய்துகொள்ளலாம் என்று மனதறிந்து பாவச்செயல் செய்தால் தப்ப முடியாது. உண்மையாக மனமுருகினா லொழிய, வேறு மென்று செய்தவனுக்கு உண்மையான பச்சாதாபம் ஏற்படமாட்டாது. தான் செய்த பாவத்திற்குத் தகுந்த அளவில் ஒருவன் பச்சாதாபப்பட்டால், அந்தப் பச்சாதாபமே அவனுக்குப் பெரும் துயரமும் துக்கமும் தந்து மற்றவர்கள் விதிக்கும் தண்டனையைவிடப் பெருந் தண்டனை ஆகும். அவ்விதமான துயரத்தைத் தானே அனுபவிப்பதால் தன்னைத் தானே தண்டித்துச் சுத்தி செய்துகொண்டதாகும். ஆனால்

எவ்வளவு தூரம் உண்மையாகத் துயரப்படுகிறோமோ, அதாவது நாமே துக்கத்தில் ஆழ்ந்து தண்டனை செய்து கொள்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் முன் செய்த பாவத்திலிருந்து தப்புகிறோம்.

பச்சாத்தாபப்படுவதும், பகவானைச் சரண் அடைவதும் உள்ளத்தில் உண்டாகும் ஆத்மாவின் வேகமே யொழிய, வெறும் மந்திரமாவது, பேச்சாவது, ஜபங்களாவது, சடங்காவது அல்ல; புரோகிதனோ, குருவோ சொல்லும் க்ஷமா மந்திரத்திலேயே பிராயசித்தம் முடிவடைவதில்லை. மந்திரமும், சடங்கும், புரோகிதனும், குருவும் உபயோகம் அற்றன வன்று. புனித மாவதற்கு ரிஷிகளும் முன்னோர்களும் உபயோகப்படுத்தின பாதங்களும் காரியங்களும் சமிக்ஞைகளும் நாமும் உபயோகப்படுத்துவதனல், எண்ணங்களும், தைரியமும், பக்தியும் உண்டாகும். மற்றவர்கள் அறியச் செய்யும் சடங்குகளால், செய்த பாவத்திற்குத் தக்க மருந்தான வெட்கமும் உண்டாகும். இவையெல்லாம் மனதைப் புனிதப்படுத்தக் கூடிய கருவிகள்; அவ்வளவே யொழிய, அவைகளைக்கொண்டு சத்தியத்தை ஏமாற்ற முடியாது. ஒருக்கால் மற்றவர்களை ஏமாற்றலாம்; தன்னைத் தானேயும் மோசம் செய்து கொள்ளலாம்; ஆனல் உண்மையையே ஒருவன் எவ்வகையினலும் ஏமாற்ற முடியாது. கர்மவிதி என்பது, உண்மையின் உருவமே. ஆகையால் அதை ஏமாற்ற முடியாது. ஒரு வியாபாரி பொய்த் தராசு அல்லது அளவில் குறைந்த படி வைத்துக்கொண்டு ஜனங்களை ஏமாற்றலாம். ஆனல், எந்த வியாபாரியாலும் தன் கணக்கையே தான் ஏமாற்ற முடியாது. வைத்தியன் நோயாளியிடம் பொய் சொல்லலாம்; ஆனல் ஜுரத்தை யளக்கும் கருவியாகிய சுரமானியையே அவனல் ஏமாற்ற முடியாதல்லவா?

## அனைவருக்கும் விடுதலை

வேறு சாஸ்திர புஸ்தகங்களில் எவ்வாறு சொல்லி யிருந்தபோதிலும் பகவானைச் சரணடைந்து விடுதலை பெறுவதற்கு ஜாதியாவது, குலமாவது பாதிக்காது. ஆண் பெண் வித்தியாசமுமில்லை. வழி தவறிப்போனவனுக்கும் கதி உண்டு என்பது கண்ணன் உறுதிமொழி. இதற்குச் சுலோகங்கள் வருமாறு :

ஸமோ'ஹம் ஸர்வ பூதேஷு
நமேத்வேஷ்யோ' ஸ்தி நப்ரிய: |
யேப்ஜந்தி துமாம் பக்த்யா
மயிதே தேஷு சாப்சஹம் ||

நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன், நான் யாரையும் வெறுப்பதுமில்லை, விரும்புவதுமில்லை. என்னைப் பக்தியுடன் யார் வழிபடுகிறார்களோ அவர்கள் என்னகத்துள் அமர்ந்திருப்பார்கள், அவர்கள் அகத்துள் நான் இருப்பேன். (9-29)

அபிசேத்ஸு தாசாரோ
பஜதே மாமநந்யபாக் |
ஸாதுரேவ ஸமந்தவ்ய:
ஸம்யக்வ்ய ஸிதோஹிஸ: ||

மிகவும் தவறான நடையோனாயினும் வேறு வழியில் மனத்தைச் செலுத்தாமல் என்னை வழிபட்டால் அவன் நல்லோனே ஆவான். அவன் முயற்சி நன்முயற்சியே ஆகும். (9-30)

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா
சச்வச்சாந்திம் நிகச்சதி |
கௌந்தேய ப்ரதிஜாநீஹி
ந மே பக்த: ப்ரணச்யதி ||

அன்னவன் விரைவிலே தர்மாத்மா ஆவான், நித்ய சாந்தியு மெய்துவான். நிச்சயமாய் அறிவாயாக. என் பக்தன் எவனுக்கும் நாசம் இல்லை. (9-31)

மாம் ஹி பார்த வ்யபாச்ரித்ய
யே'பி ஸ்யு: பாபயோநய: |
ஸ்த்ரியோ வைச்யாஸ்த்தா
சூத்ராஸ்தே'பி யாந்தி பராம்கதிம் ||

ஊழ்வினைகளின் பயனுக பாபஜென்மம் அடைந்தவர்களும், மாதர்களும், வைசியர்களும், சூத்திரர்களும் யாரேனும் என்னைச் சரண்புகுந்தாராயின் பரகதி அடைவார்கள். (9-32)

கடவுளை ஆராதிப்பவன் எக்குலமும், ஆணு பெண்ணு, என்ற வித்தியாசங்கள் எப்படி ஒரு பொருட்டல்லவோ, அதுபோலவே எந்த முறையில் ஆராதனை செய்கிறுன் என்பதும் தடையாகாது. இது கீதையில் காணும் மகத்தான விஷயம்; ஹிந்து மதத்திற்குப் பெரிய கீர்த்திதரும் விஷயம். கடவுளைப் பலர் பலவிதமாக ஆராதிப்பார்கள்; மத சம்பிரதாய பேதங்களை நான் பொருள்படுத்துவதில்லை என்று கீதையில் பகவான் வியக்தமாகச் சொல்லுகிருர்.

# அனைவருக்கும் விடுதலை

யேயதா மாம் ப்ரபத்யந்தே
தாந்ஸ்ததைவ பஜாம்யஹம் |
மம வர்த்மாநுவர்தந்தே
மநுஷ்யா: பார்த ஸர்வச: ||

யாவர் என்னை எங்ஙனம் வழிபடுகிறார்களோ, அவர்களை நான் அங்ஙனமே அருள் செய்வேன். மனிதர் எந்த மார்க்கத்தை அனுசரித்தாலும் அது என்னை யடையும் வழியே ஆகும். (4-11)

யேபிஅந்ய தேவதாபக்தா
யஜந்தே ச்ரத்தயா'ந்விதா: |
தே'பி மாமேவ கௌந்தேய
யஜந்த்ய விதி பூர்வகம் ||

அந்நிய தேவதைகளைச் சிரத்தையுடன் தொழும் பக்தரும் முறை தவறி என்னையேதான் தொழுகின்றனர். (9-23)

பத்ரம் புஷ்பம் பலம் தோயம்
யோ மே பக்த்யா ப்ரயச்சதி |
ததஹம் பக்த்யுப ஹ்ருதம்
அச்நாமி ப்ரயதாத்மந: ||

இலை, பூ, கனி, நீர், எதையேனும் பக்தியுடன் எனக்கு ஒருவன் அளிப்பானாயின், தன்னைத்தான் அடக்கியாண்டு அவ்வாறு பக்தியுடன் அளித்ததை, பசிக்கு உணவைப்போல் அவனுடன் ஒப்புக்கொள்வேன். (9-26)

யத்கரோஷி யத்ச்நாஸி
யஜ்ஜுஹோஷி ததாஸி யத் |
யத்தபஸ்யஸி கௌந்தேய
தத்குருஷ்வ மதர்பணம் ||

நீ எது செய்யினும், எதை உண்பினும், எதை ஹோமம் பண்ணினும், என்ன தானம் கொடுத்தாலும், எத் தவம் செய்தாலும் எனக்கு அர்ப்பணம் என்றே செய். (9-27)

காமைஸ்தைஸ்தைர் ஹ்ருதஜ்ஞாநா:
ப்ரபத்யந்தே அந்நிய தேவதா |
தம் தம் நியமம் ஆஸ்தாய
ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ||

பல விருப்பங்களால் கவரப்பட்ட மதியுடையோராய், தத்தம் பிரகிருதியால் கட்டுண்டு, வெவ்வேறு நியமங்களைத் தழுவி, சிலர் அந்நிய தேவதைகளை வழிபடுகின்றனர். (7-20)
ஆனால்,—

யோ யோ யாம் யாம் தநும் பக்தா:
ச்ரத்தயார்'ர்சிதும் இச்சதி |
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம்
தாமேவ விததாம்யஹம் ||

எந்த பக்தன் சிரத்தையுடன், கடவுளை எந்த வடிவத்தில் அர்ச்சிக்க விரும்பினாலும், அவனுடைய சிரத்தை அவ்வாறு நிலைத்திருப்பதற்கு நான்தான் காரணம். (7-21)

ஸ தயா ச்ரத்தயா யுக்தஸ்
தஸ்யாராதநமீஹதே |
லபதே ச தத: காமாந் மயைவ
விஹிதாந்ஹி தாந் ||

அவன் தன்னுடைய நம்பிக்கையைக்கொண்டு அவ் வடிவத்தை ஆராதிக்கிறன். தான் விரும்பினவற்றையும் அதனல் அடைகிறன். எனினும் அவற்றை வகுத்துக் கொடுப்போன் நானேதான். (7-22)

இவ்வாறு மதமோ, சம்பிரதாயமோ, முறையோ எவ்விதமிருந்தாலும் எல்லா வழிபாடுகளும் பகவானையே சேரும் என்று கீதையில் சொல்லியிருப்பது, அக்காலத்தில் ஜனங்கள் அனுசரித்து வந்த, சம்பிரதாயங்களைப் பற்றித் தான் சொன்னது. பிந்தி உண்டான புற மதங்களையும் முறைகளையும் பற்றி அப்போது சொல்லி யிருக்க முடியாது, சொன்னதுமல்ல. ஆயினும், சொல்லியிருக்கும் வாக்கியங்களில் பிந்திவந்த புற மதங்களும் உள்பட பூரணப் பிரயோகம் செய்யக்கூடிய பொருளும் தத்துவ மும் அடங்கியிருக்கின்றன. சர்வ மதங்களையும் அங்கீ காரம் செய்யும் மாணிக்கம் போன்ற இந்த உபதேசத்தை நாம் கௌரவித்து நடந்துகொள்ள வேண்டும். இதையே நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

"அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே"

என்றும் "நும் இன்கவிகொண்டு நும் இட்டா தெய்வ மேத்தினல், செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே" என்றும் பாடினர்.

௨௨

## நாஸ்திகம் கூடாது

கடவுளை வழிபடுவதற்குச் சாதனமான சர்வ மதங்களை யும் முறைகளையும் பகவான் அங்கீகரிக்கிறார் என்று கீதை சொன்னபோதிலும், நாஸ்திகம் அல்லது அநாத்ம வாதத்தை அது கண்டிக்கிறது. நாஸ்திக வாதத்தைப் பற்றி பல ஆண்டுகளுக்குமுன் எழுதிய அடியில் கண்ட சுலோகங்கள் சொல்லும்போது, 'தர்மமாவது என்ன, சத்தியமாவது என்ன, ஒன்றும் கிடையாது; மனிதர்கள் சேர்ந்து தங்கள் சுகத்திற்காக வைத்துக்கொண்டிருக்கும் ஏற்பாடே தருமம்' என்று தற்காலத்தில் பேசும் பேச்சுக் களையே குறிப்பது போல இருக்கின்றன.

ப்ரவ்ருத்திஞ் ச நிவ்ருத்திஞ் ச
ஜநா ந விதுராஸுரா: |
ந சௌசம் நாபி சாசாரோ
ந ஸத்யம் தேஷு வித்யதே ||

அஸுரத்தன்மை கொண்டோர் தொழில் செய்யும் முறையும் அறியார்; தொழிலை நீப்பதும் அறியார்; தூய் மையேனும் ஒழுக்கமேனும் வாய்மையேனும் அவர்க ளிடம் இல்லை. (16-7)

அஸத்யம் ப்ரதிஷ்டம் தே
ஜகதாஹுர் நீச்வரம் |
அபரஸ்பர ஸம்பூதம்
கிமந்யத் காம ஹைதுகம் ||

## நாஸ்திகம் கூடாது

அவர்கள், 'இவ்வுலகத்தில் சத்தியம் என்பதொன்றில்லை, உலகம் தருமத்தில் நிலைபெற்றிருப்பது மில்லை, ஆளும் ஈசுவரனுமில்லை' யென்பார்கள். ஒன்றோடொன்று கலந்து அந்தப் புணர்ச்சியால் எல்லாம் பிறந்தன வென்றும், உலகத்திற்குக் காமமே ஹேது வென்றும் சொல்லுவார்கள். (16-8)

அநாத்மவாதிகளுடைய மதத்தின்படி மனிதன் அடையும் அசுர முன்னேற்றத்தையும் நாஸ்திக நாகரிகத்தையும் விவரிக்கிறார் :

ஏதாம் த்ருஷ்டிம் அவஷ்டப்ய
நஷ்டாத்மநோ' அல்பபுத்தய: |
ப்ரபவந்த்யுக்ர கர்மாண:
க்ஷயாய ஜகதோ'ஹிதா: ||

அற்ப புத்திகொண்டும் உள்ளங் கெட்டவர்களுமான இவர்கள் இந்த நோக்கத்தில் தங்கள் மனதைச் செலுத்தி, கொடிய தொழில்கள் செய்து, உலகத்திற்குத் தீங்கிழைத்து அதன் நாசத்திற்குக் காரணமாகிறார்கள். (16-9)

காமம் ஆச்ரித்ய துஷ்பூரம்
தம்பமாந மதாந்விதா: |
மோஹாத் க்ருஹீத்வா' ஸத்க்ராஹாந்
ப்ரவர்தந்தே' சுசிவ்ரதா: ||

ஆற்றவொண்ணாத காமத்தை ஆச்ரயித்து, டம்பமும் கர்வமும், மதமும் பொருந்தியவர்களாய், மோகத்தால் பொய்க்கொள்கைகளைக்கொண்டு அசுத்த விரதங்களுடையோர்களாய்த் தொழில் புரிகிறார்கள். (16-10)

சிந்தாம் அபரிமேயாம்
ச ப்ரலயாந்தாம் உபாச்ரிதா: |
காமோப போகபரமா
ஏதாவதிதி நிச்சிதா: ||

மரணம் அடையும் வரையிலும் தீராத எண்ணற்ற கவலைகளில் பொருந்தி, காம விருப்பங்களைத் தீர்த்துக் கொள்வதிலேயே ஈடுபட்டோராய், உண்மையே இவ்வளவுதான் என்று நிச்சயம் செய்துகொண்டு, (16-11)

ஆசாபாச சதைர்பத்தா:
காமக்ரோத பராயணா: |
ஈஹந்தே காமபோகார்தம்
அந்யாயேநார்தம் ஸஞ்சயாந் ||

நூற்றுக் கணக்கான ஆசைக்கயிறுகளால் கட்டுண்டு, காமத்திற்கும் குரோதத்திற்கும் ஆட்பட்டோராய்க் காமபோகத்துக்காக அநியாயங்கள் செய்து பொருட் குவியல்கள் சேர்க்க விரும்புகிறார்கள். (16-12)

தற்காலத்தில் உலகம் இருந்துவரும் ஸ்திதி இதுவே யன்றோ? தனிப்பட்ட மனிதர்களின் ஆசைகளும் செயல் களுமே யன்றி, ஜாதிக்கூட்டங்களின் நோக்கங்களும் செயல்களும் இவ்வாறே இருந்துவருகின்றன. கடவுளை மறந்த நாகரிகம் எவ்வாறு செல்லும் என்பதை இன்னும் பார்க்க :

இதமத்ய மயா லப்தமிமம்
ப்ராப்ஸ்யே மநோரதம் |
இதமஸ்தீதமபி மே
பவிஷ்யதி புநர்தநம் ||

"இன்று இன்ன லாபம் அடைந்தேன்; இன்ன மனோரதத்தை இனிமேல் எய்துவேன்; இன்ன பொருள் அடைந்துவிட்டேன்; இன்ன பொருளை இனி அடைவேன்; (16-13)

அஸௌ மயா ஹத: சத்ருர்
ஹநிஷ்யே ச அபராநபி ।
ஈச்வரோ'ஹமஹம் போகீ
ஸித்தோ'ஹம் பலவாந் ஸுகீ ॥

"இன்ன பகைவரைக் கொன்றுவிட்டேன்; இனி மற்றவர்களையும் கொல்வேன்; நான் அரசு புரிவேன்; நான் போகி; நான் சித்தன்; நான் பலவான், நான் சுகப்படுவேன்" என்றிவ்வா றெல்லாம் எண்ணுவார்கள். (16-14)

அநேக சித்தவிப்ராந்தா:
மோஹஜால ஸமாவ்ருதா: ।
ப்ரஸக்தா: காமபோகேஷு
பதந்தி நரகே அசுசௌ ॥

பலவித சித்தப் பிராந்தியடைந்து, மோகவலையில் அகப்பட்டு, காமபோகங்களில் பற்றுண்டு, அசுத்தமான நரகத்தில் விழுகிறார்கள். (16-16)

ஆட்யோ'பிஜநவாந் அஸ்மி
கோ'ந்யோ'ஸ்தி ஸத்ருசோ மயா ।
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்யே
இத்யஜ்ஞாந விமோஹிதா ॥

"நான் செல்வன்; எனக்குச் சொந்தக்காரக் கூட்டம் அதிகம்; எனக்கு நிகர் யாருளர்? தெய்வ பூசை செய்கிறேன்; தானங்கள் கொடுக்கிறேன்; சுகங்களடைவேன்" என்றிவ்வாறு அஞ்ஞானத்தில் மயங்கினவர்களாவார்கள். (16-15)

ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா
தநமாந மதாந்விதா: |
யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே
தம்பேநா விதிபூர்வகம் ||

தற்புகழ்ச்சியில் உழல்வார்கள்; பிடிவாதம் பிடிப்பார்கள்; செல்வச் செருக்கும் மதமுங்கொள்வார்கள்; டம்பத்துக்காக விதி தவறி, பெயர் அளவில் வேள்விகள் செய்வார்கள். (16-17)

அஹங்காரம் பலம் தர்பம்
காமம் க்ரோதம் ச ஸம்சிதா: |
மாமாத்ம பரதேஹேஷு
ப்ரத்விஷந்தோ'ப்யஸூயகா ||

அகங்காரத்தையும், பலத்தையும், செருக்கையும், காமத்தையும், சினத்தையும் பற்றியவர்களாய் இவர்கள் தம் உடம்புகளிலும் பிற உடம்புகளிலும் பரமாத்மாவாக உள்ள என்னையே பகைக்கிறார்கள். (16-18)

மோசமும் மிருகபலமுங் கொண்டு சம்பாதித்த பொருளும், அதை யொட்டிய நாகரிகமும், வெளி வேஷத்திற்கும் மனதைத் திருப்தி செய்துகொள்ளுவதற்குமாகச் செய்யும் தானங்களும் "பொது நன்மை"க் காரியங்களும் அதர்மத்தை அஸ்திவாரமாகக்கொண்டு நிற்கின்றன. அதர்மம்

எந்த காரணத்திலும் தர்மமாகாது. இத்தகைய அதர்ம வாதமும் நாஸ்திகமும் முடிவில் நாசத்திற்கே வழியாகும்.

முன்னோர் கண்ட உண்மைகளை இழந்துவிடக் கூடாது. அவர்கள் தங்கள் ஆழ்ந்த சிந்தனையினாலும், தவத்தாலும், தியானத்தாலும் கண்ட சத்தியத்தை மறு படி நாம் முதலிலிருந்து எத்தனித்து நாமாகக் காண முயலுவது உசிதமல்ல. சம்பாதித்த பொருளை வைத்துக் கொண்டு மேலே சம்பாதிக்க வேண்டியதுதான் கடமை. முன்னோர் கண்ட உண்மைகளுக்குத்தான் சாஸ்திரம் என்று பெயர். 'சாஸ்திரம்' என்றால் இக்காலத்திற்குத் தகாத பழய பேச்சு என்று வைத்துக்கொள்ளக் கூடாது. உண்மைகளை ஆராய்ச்சி செய்வதில் ஒவ்வொருவனும் மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிப்பது என்றால் முடியாத காரியமாகும். முன்னோர் கண்டதை வைத்துக்கொண்டு மேலே செல்லவேண்டும்.

யஃசாஸ்த்ரவிதி முத்ஸ்ருஜ்ய
வர்ததே காம காரத: |
ந ஸ ஸித்திம் அவாப்நோதி
ந ஸுகம் ந பராம் கதிம் ||

சாஸ்திர விதிகளைப் புறக்கணித்து, காமத்தின் வயப் பட்டு நடப்பவனுக்குச் சித்தியுமில்லை, சுகமுமில்லை, பரகதியுமில்லை. (16-23)

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யா கார்ய வ்யவஸ்திதௌ |
ஜ்ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம்
கர்ம கர்த்தும் இஹார்ஹஸி ||

ஆகையால் நீ எதைச் செய்யலாம் எதை நீக்கலாம் என்று வியவஸ்தை செய்துகொள்வதற்குச் சாஸ்திரத்தையே பிரமாணமாக வைத்துக்கொள். சாஸ்திர விதானத்தை யறிந்து நீ கருமங்களைச் செய்து வாழ்க்கையை நடத்துவாயாக. (16-24)

உ௩

## குண விபாகம்

நம்முடைய பிரகிருதி குணங்களுக்குத் தகுந்தவாறு உபாஸனைக்கு மூர்த்தி தேடிக்கொள்ளுகிறோம். நாம் எதை உபாஸிக்கிறோமோ அந்தக் குணம் நமக்கு உண்டாகும். இப்படி உபாஸனை செய்பவன் குணமும், உபாஸனைக் கிரமமும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுகிறது.

எந்தவிதமான சிரத்தை அல்லது நம்பிக்கையுடன் கருமங்களைச் செய்கிறோமோ அதுவும் இவ்விதமே. படைத்த குணத்துக்குத் தகுந்த சிரத்தை மனதில் உண்டாகும்; கொண்ட சிரத்தைக்குத் தக்க குணம் வந்து சேரும்.

ஆசாரமும் உணவும் இப்படியே. இவைகளெல்லாம் நாம் படைத்த குணத்திற்குத் தகுந்தவாறு ஏற்படும். குணமும் அவைகளைத் தொடர்ந்து மாறும். அடுப்பில் நெருப்புக்கும் விறகுக்கும் உள்ள சம்பந்தம் மாதிரி; முதலில் நெருப்பு விறகை எரிக்கிறது. விறகு எரிவதால் நெருப்பு வளர்கிறது, பரஸ்பர உதவி ஏற்படுகிறது. நல்ல குணம் படைத்தவன், நல்ல குரு, நல்ல தெய்வம், நல்ல மனோபாவனைகள், நல்ல இலட்சியங்கள் வைத்துக்கொள்ளுவான். அதனால் இன்னும் குணம் மேன்மையடையும். நல்ல உணவில் அவனுக்கு ருசியுண்டாகும். நல்ல ஆகாரமும் அவனுக்குச் சந்தோஷத்தைத் தரும். அவைகளால் அவனுடைய நல்ல குணம் இன்னும் வளரும். குணமில்லாதவனுடைய புத்தியோ, உபயோகமற்ற உபாஸனை, உபயோகமற்ற தாமஸ உணவு, துராசாரம் இவைகளில் செல்லும்; வர வர தாமஸ குணம் அதிகரிக்கும்.

இந்தச் சுழலிலிருந்து தப்பும் வழி என்னவென்றால், கர்மத்தைப்பற்றி முன் சொன்னதை நினைவுக்குத் தந்து கொள்ளவேண்டும். ஆத்மாவுக்குச் சுதந்திர புத்தி யிருக்கிறது. செயலுக்கு அதிகாரமு முண்டு. அதை உபயோகித்து, கர்ம பந்தத்திலிருந்தும் பிறவிக் குணங்களின் போக்கினின்றும் மீள்வதற்குச் சாதனமான உபாஸனை, ஆசாரம், ஆகாரம் இவைகளை நித்திய நியமமாக வைத்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால் ஆத்மா மேன்மையடையும். பூர்வ கர்ம பலனுக்கும் இந்த ஜன்மத்தில் செய்யும் கருமத்திற்கும் பீஜாங்குர சம்பந்தம். செடியிலிருந்து விதை உண்டாகிறது; விதையிலிருந்து செடி முளைக்கிறது. காரணம் காரியமாகும்; காரியம் காரணமாகும். இதுவே தினசரி ஆசாரத்திற்கும் குணத்திற்கும் பரஸ்பர சம்பந்தம்; ஒன்றிற்கு மற்றொன்று காரணமாகும்.

த்ரிவிதா பவதி ச்ரத்தா
தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா |
ஸாத்த்விகீ ராஜஸி சைவ
தாமஸீ சேதி தாம் ச்ருணு ||

உடலெடுத்த ஆத்மாக்களிடம் பிறவியுடன் தோன்றும் சிரத்தை மூன்று வகையானதாகும்: சாத்விகம், ராஜஸம், தாமஸம் என. (17-2)

ஸத்த்வாநுருபா ஸர்வஸ்ய
ச்ரத்தா பவதி பாரத |
ச்ரத்தா மயோ'யம் புருஷோ யோ
யச்சருத்த: ஸ ஏவ ஸ: ||

யாவருக்கும் தத்தம் பிறப்பியல்புக்குக் தக்கவாறு சிரத்தை உண்டாகிறது. ஆனால் ஜீவன் தான் கொண்ட சிரத்தையால் தன்னை ஆக்கிக்கொள்கிறான். எவன் எந்தப் பொருளில் சிரத்தை யுடையவனோ, அந்தப் பொருளே தானாகிறான். (17-3)

வேஷத்திற்குச் செய்யப்படும் தவமும், ஆசாரமும் பயன் தருவனவல்ல. லாபத்தைக் கருதிச் செய்யப்படுவதும் அப்படியே.

அசாஸ்த்ர விஹிதம் கோரம்
தப்யந்தே யே தபோ ஜநா: |
தம்பாஹங்கார ஸம்யுக்தா:
காமராக பலாந்விதா ||

சிலர் டம்பமும் அகங்காரமும் கொண்டு, காமத்தாலும் சித்த விகாரத்தாலும் தூண்டப்பட்டு, சாஸ்திரத்தில் நியமிக்கப்படாத கோரமான தவம் செய்கிறார்கள். (17-5)

கர்சயந்த: சரீரஸ்தம்
பூதக்ராமம் அசேதஸ: |
மாம் சைவாந்த: சரீரஸ்தம்
தாந்வித்தியா ஸுரநிச்சயாந் ||

இங்ஙனம் மதிகெட்டவர்கள் தம் உடம்பிலுள்ள பூதத் தொகுதிகளையும் அகத்திலுள்ள என்னையும் வருத்துகிறார்கள். இவர்கள் அசுர எண்ணத்தோர் என்றறிவாய். (17-6)

தவம் என்பது மனோவாக்குக் காயம் மூன்றிலும் செய்யப்படும். நேர்மை, சுசி, பெரியோரிடம் வணக்கம்,

பிரம்மசரிய விரதம், பூததயை இவை தேகத்தால் செய்யப் படும் தவம். வாக்குத்தவம் என்பது சத்தியமும் அன்பும் ஹிதமும் கொண்ட பேச்சு, நல்ல தர்மநூல்கள் படித்தல் முதலியன. மனதை அமைதி நிலையில் வைப்பதும், சுத்த எண்ணங்கள் எண்ணுவதும், போக எண்ணங்களை நீப்பதும் மன நோன்பு ஆகும். இப்படிப் பலவித நோன்புகளையும், லாபம் கருதாமலும் பிறருடைய மதிப்பைப் பெறுவோம் என்று எண்ணாமலும், நோன்பின் சிறப்பைக் கருதியே செய்யவேண்டும். பிறருக்குத் துன்பம் உண்டாக்கவோ, அல்லது பிடிவாதப் புத்தியினாலேயே நோன்பு கொள்வது சுத்தத் தவறு.

தேவத் விஜகுரு ப்ராஜ்ஞ
பூஜநம் சௌச மார்ஜவம் |
ப்ரஹ்மசர்யம் அஹிம்ஸா ச
சாரீரம் தப உச்யதே ||

தேவர், அந்தணர், குருக்கள், அறிஞர் இவர்களைப் பூசித்தல்; தூய்மை, நேர்மை, பிரம்மசரியம், உயிர்களை இம்சை செய்யாமை; இவை சரீரத்தைப் பற்றிய தவம். (17-14)

அநுத்வேககரம் வாக்யம்
ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் |
ஸ்வாத்யாயாப்யஸநம் சைவ
வாங்மயம் தப உச்யதே ||

பிறருக்கு மனக்கலக்கம் உண்டாக்காததும், சத்தியம் பொருந்தியதும் பிறருக்கு நலங்கருதியதுமான பேச்சுப் பேசுதல்; சாஸ்திரம் ஓதிப் பயிலல்; இவை வாக்கால் செய்யப்படும் தவம். (17-15)

மந:ப்ரஸாத: ஸௌம்யத்வம்
மௌநம் ஆத்மவிநிக்ரஹ: |
பாவஸம் சுத்திரித்யேத்ததபோ
மாநஸம் உச்யதே ||

மன அமைதி, உள்ளமகிழ்ச்சி, பேச்சடங்கல் உள்ளத்தைக் கட்டி யடக்கல், எண்ணத் தூய்மை; இவை மனதால் செய்யப்படும் தவம். (17-16)

தானமும் இப்படியே; என்ன நோக்கத்துடன் செய்யப்படுகிறதோ அவ்வாறு அது வகுக்கப்படும். கொடுக்க வேண்டும் என்கிற கடமையை உத்தேசித்து, மகிழ்ச்சியுடன் கைம்மாறு எதிர்பாராமல் கொடுப்பதே சரியான தானம். புண்ணியம் சம்பாதிக்க வென்று கொடுப்பதுங் கூட இரண்டாம் பக்ஷமே.

தாதவ்யமிதி யத்தாநம்
தீயதே அநுபகாரிணே |
தேசே காலே ச பாத்ரே ச
தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் ||

கொடுத்தல் கடமை யென்றறிந்து, கைம்மாறு வேண்டாமல், தகுந்த இடமும், காலமும், பாத்திரமும் நோக்கிச் செய்யப்படும் தானம் சாத்விக தானமாகும். (17-20)

யத்து ப்ரத்யுபகாரார்தம்
பலம் உத்திச்ய வா புந: |
தீயதே ச பரிக்லிஷ்டம்
தத்தாநம் ராஜஸம் ஸ்ம்ருதம் ||

கைம்மாறு வேண்டியோ, பயனைக் கருதியோ, மன தில் வருத்தத்துடனே கொடுக்கப்படும் தானம் ராஜஸ மாகும். (17-21)

அதேசகாலே யத்தாநம்
அபாத்ரேப்யச்ச தீயதே |
அஸத்க்ருதம் அவஜ்ஞாதம்
தத்தாமஸம் உதாஹ்ருதம் ||

தகாத இடத்தில், தகாத காலத்தில், தகாதாருக்குச் செய்யப்படுவதும், தானம் பெறுபவனை மதிக்காமல் இகழ்ச்சியுடன் செய்யப்படுவதுமான தானம் தாமஸ தானமாகும். (17-22)

நாம் தினமும் உண்ணும் உணவு நம்முடைய குணங் களை ஓரளவு மேல்தூக்கவும் கீழ்தள்ளவும் செய்கிறன. சாத்விக உணவு எது, சாந்த சித்தத்திற்குத் தடையான ராஜஸ உணவு எது, புத்தியைக் கொல்லும் தாமஸ உணவு எது என்பன கீதையில் சுருக்கமாகக் குறிக்கப்பட்டிருக் கின்றன.

ஆஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய
த்ரிவிதோ பவதி ப்ரிய: |
யஜ்ஞஸ்தபஸ் ததா தாநம்
தேஷாம் பேதம் இமம் ச்ருணு ||

வேள்வியும், தவமும், தானமும் மும்மூன்று வகை யாக அமையும். அவரவருக்குப் பிரியமான உணவும் மூன்று வகை. அவற்றின் வேற்றுமையைக் கேள். (17-7)

ஆயு: ஸத்வபலா ரோக்ய
ஸுகப்ரீதி விவர்த்தநா: |
ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா:
ஹ்ருத்யா: ஆஹாரா: ஸாத்விகப்ரியா ||

ஆயுள், சக்தி, பலம் நோயின்மை, சுகம், பிரீதி, இவற்றை விருத்திப்படுத்துவன; ரஸமுடையன; பிசினுள்ளன; உறுதியாயிருப்பன; மகிழ்ச்சி தருவன; இவ்வுணவுகள் சத்வகுண முடையோருக்குப் பிரியமா யிருக்கும். (17-8)

கட்வம்ல லவணாத்யுஷ்ண
தீக்ஷ்ண ருக்ஷ விதாஹிந: |
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா
து:க சோகாமய ப்ரதா: ||

கசப்பும், புளிப்பும், உப்பும், அதிக உறைப்பும், அதிகச் சூடும் கொண்டன; உலர்ந்துபோயினவை; எரிச்சலுண்டாக்குவன; இவ்வுணவுகளை ரஜோ குணத்தோர் விரும்புவார்கள். இவை துக்கம், சோகம், நோய் இவற்றிற்குக் காரணமாகும். (17-9)

யாதயாமம் கதரஸம் பூதி
பர்யுஷிதம் ச யத் |
உச்சிஷ்டமபி சாமேத்யம்
போஜநம் தாமஸப்ரியம் ||

பழையது, ரஸம்போனது, அழுகியது, கெட்டுப்போனது, பிறர் உண்டு மிகுந்தது, அசுத்தமானது, இத்தகைய உணவுகளிலே தமோ குணமுடையோர் பிரியம் கொள்ளுவார்கள். (17-10)

பல்லாயிரம் வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட சுலோகங்கள் இவை என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, இவைகளின் சாராம்சத்தைக் கிரகித்து, தினசரி வாழ்க்கையை நடத்திவர வேண்டும்.

உசு

# பிரபத்தி

அவ்யக்தமான பரம்பொருளை நேரில் உபாஸிப்பது கடினம். ஸர்வ கலியாண குணங்களும் பொருந்திய சர்வேசுவரனை உபாஸித்தலே சுலபமான வழி என்பது கீதையின் கருத்து. கர்மயோக மார்க்கத்தில் சொல்லிய வாறு சுயநலமற்று, பற்றுக்களை யொழித்து, சமசித்தத்துடன் கடமைகளைச் செய்வதோடு, நாம் செய்யும் கருமங்களையெல்லாம் நாராயணனுக்கு அர்ப்பணமாகச் செலுத்தி விடவேண்டும். முடிவில் அவன் அருள்தான் நம்மைக் காப்பாற்றும், வேறில்லை. அவன் அருள் இருந்தால் புலன்களை யடக்கியாள முடியும்; சம உணர்ச்சியும் சாந்தமும் மனதில் அமைத்துக்கொள்ள முடியும். ஆசை, ஐயம், மயக்கம் இவற்றினின்று நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், பகவானுடைய அருள் இல்லாமல் முடியாது. ஆகையால் எக்கருமத்தைச் செய்யும்போதும் ஈசுவரனை உத்தேசித்து அவனுக்கு அர்ப்பணமாய் அதைச் செய்ய வேண்டும். இதைத்தான் பக்தி என்று போற்றுவது. பக்தி மார்க்கம் என்பது கர்ம யோகம் என்று சொல்லப்பட்ட மார்க்கத்திற்குப் பதிலாகக் கொள்ளக் கூடிய ஒரு தனி மார்க்கமல்ல. கர்ம யோகத்தில் சொல்லப்பட்ட மனோபாவமில்லாதவன் பக்தி யோகம் செய்ய முடியாது. ஈசுவர நினைவும் பக்தியும் இல்லாதவன் கர்ம யோகமுறையை அனுஸரிப்பதும் அரிது. பக்தி யோகமும் கர்ம யோகமும் ஒன்றுக்கொன்று துணை. சில அம்சங்களை விளக்கி வற்புறுத்திச் சொல்லும்போது வித்தி

யாசம் தோற்றினும், சரிவர அப்பியஸிக்க முயன்ருல் இரண்டும் ஒன்றே என்பது விளங்கும்.

ஸ்ரீமந் நாராயணனைச் சரண் அடைவதே எல்லா மார்க்கங்களிலும் முடிவில் முக்கியமாக நிற்கும் சாதனம். மற்ற விஷயங்களைப்பற்றி விவகரித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. இது கீதையின் முடிவான உபதேசம். எத்தகை ஞானியாயிருந்தாலும் அவனைச் சரண் புகாமல் ஈடேற முடியாது. எத்தகைய பாபியா யிருந்தாலும் பகவானை மனப்பூர்வமாகச் சரண் அடைந்தவன் நாசமடைய மாட்டான்.

க்லேசோ'தி கதரஸ்தேஷாம்
அவ்யக்தாஸக்த சேதஸாம் |
அவ்யக்தா ஹி கதிர் து:கம்
தேஹவத்பிர் அவாப்யதே ||

அவ்யக்தத்தில் மனம் ஈடுபட்டோர்க்குத் தொல்லை யதிகம். உடம்பு என்பது இருக்கும் வரையில் அதன் தொல்லைகள் உண்டு. ஆகையால் அவ்யக்த உபாஸனை மிகவும் கஷ்டம். (12-5)

யே து ஸர்வாணி கர்மாணி
மயி ஸந்யஸ்ய மத்பரா: |
அநந்யே நைவ யோகேந
மாம் த்யாயந்த: உபாஸதே ||

எல்லாத் தொழில்களையும் ஈசனுக்கு என்று செய்து விட்டு, மனதை முற்றிலும் பகவானைப்பற்றியே செலுத்தி, பிறழாத யோகத்தால் பகவானைத் தியானித்து வழிபட வேண்டும். (12-6)

தேஷாமஹம் ஸமுத்தர்தா
ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத் |
பவாமி ந சிராத் பார்த் மயி
ஆவேசித சேதஸாம் ||

இவ்வாறு பகவானிடம் அறிவைப் புகுத்தியவர்களை அவன் விரைவில் மரணம் ஸம்ஸாரம் என்ற கடலினின்று கை தூக்கிவிடுவான். (12.7)

மாம் ச யோ'வ்யபி சாரேண
பக்தியோகேந ஸேவதே |
ஸ குணாந் ஸமதீத்யைதான்
ப்ரஹ்ம பூயாய கல்பதே ||

தவறாத பக்தி யோகத்தால் நாராயணனை உபாஸிப்பவன் குணங்களைக் கடந்து பிரம்ம நிலையடையத் தகுதி பெறுவான். (14-26)

மச்சித்தா மத்கதப்ராணா
போதயந்த: பரஸ்பரம் |
கதயந்தச்ச மாம் நித்யம்
துஷ்யந்தி ச ரமந்தி ச ||

கண்ணன் சொல்லுகிறான்: என் பக்தர்கள் எப்போதும் சித்தத்தை என்பால் செலுத்தி, உயிரை என்னுளே புகுத்தி, என்னைப்பற்றி ஒருவரோடொருவர் பேசி அறிவூட்டிக்கொண்டு, திருப்தியும் மகிழ்ச்சியும் அடைவார்கள். (10-9)

## பிரபத்தி

தேஷாம் ஸதத யுக்தாநாம்
பஜதாம் ப்ரீதி பூர்வகம் |
ததாமி புத்தியோகம் தம்
யேந மாம் உபயாந்தி தே ||

எப்போதும் உள்ளத்தை யடக்கி, அன்புடன் என்னை வழிபடும் அன்னோருக்கு நான் புத்தியோகம் அளிப்பேன். அதனால் அவர்கள் என்னை யடைவார்கள். (10-10)

தேஷாமேவாநுகம் பார்தம்
அஹம் அஜ்ஞாநஜம் தம: |
நாசயாம் யாத்மா பாவஸ்தோ
ஞாநதீபேந பாஸ்வதா ||

அன்னவர்க் கிரங்கி, அவர் மனோபாவங்களில் புகுந்து ஞான விளக்கை ஏற்றி அவருடைய அஞ்ஞான இருளைத் தொலைப்பேன். (10-11)

புத்தியோகம் என்றால் ஆசையும் பற்றும் இன்றி, கடமைகளைச் செய்வதற்கு வேண்டிய ஞானமும் ஆற்றலும். இதை நான் தருவேன் என்கிறான் கண்ணன்.

அநந்யாச் சிந்தயந்தோ
மாம் யே ஜநா: பர்யுபாஸதே |
தேஷாம் நித்யாபியுக்தாநாம்
யோகக்ஷேமம் வஹாம்யஹம் ||

வேறு எதையும் சிந்தியாமல் என்னை உபாஸிப்பவரான நித்திய யோகிகளின் யோக க்ஷேமத்தை நானே பொறுப்பேன். (9-22)

தமேவ சரணம் கச்ச
ஸர்வபாவேந பாரத |
தத்ப்ரஸாதாத்பராம் சாந்திம்
ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம் ||

முற்றிலும் அவனையே சரண் அடைவாயாக. அவனருளால், அனைத்தையும் கடந்த சாந்தியையும் சாசுவதமான வீட்டையுமடைவாய். (18-62)

ஸர்வ குஹ்யதமம் பூய: ச்ருணு
மே பரமம் வச: |
இஷ்டோ'ஸிமே த்ருடமிதி
ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் ||

மீண்டு ஒருமுறை எல்லாவற்றிலும் ஆழ்ந்த ரகசியமாகிய எனது பரம வசனத்தைக் கேள். எனக்கு நீ அன்பன். ஆதலால் உனக்கு ஹிதத்தை உறுதியாய்ச் சொல்லுகிறேன். (18-64)

மந்மநா பவ மத்பக்தோ
மத்யாஜீ மாம் நமஸ்குரு |
மாமேவைஷ்யாஸி ஸத்யம் தே
ப்ரதிஜாநே ப்ரியோ'ஸி மே ||

உன் மனதை எனதாக்கிவிடு. என்மேல் பக்தி செலுத்து. எனக்கெனவே வேள்விகளை யெல்லாம் செய். என்னையே வணங்கு. என்னை எய்துவாய், இது உண்மை. உனக்கு உறுதி கூறுகிறேன். நீ எனக்குப் பிரியமானவன். (18-65)

## பிரபத்தி

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய
மாமேகம் சரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ
மோக்ஷயிஷ்மி மா சுச: ||

மற்றெல்லா நெறிகளையும் கருதிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு என்னையே சரண்புகு. எல்லாப் பாவங்களி னின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன், துயரப்படாதே. (18-66)

"துயரப்படாதே!" என்றான் கண்ணன். அருச்சுன னுக்கு அதையே இன்னும் சொல்லுகிறான். அனைவருக் கும் சொல்லுகிறான். "என்னைச் சரண் புகுந்தால் யாருமே துயரப்பட வேண்டியதில்லை" என்பது கண்ணன் கொடுக்கும் உறுதிமொழி.

உரு

## அனைத்தும் ஒன்று

ஒழுக்கத்தையும் மனதையும் காத்து, செய்யும் கருமங்களைப் பகவானுக்கு அர்ப்பணமாகவே செய்துவந்தால், அதன் பயனாக எல்லா உயிரும் ஒன்றே யென்கிற ஞானப் பிரகாசம் உண்டாகும். தான் என்பதும் மற்றவர்கள் என்பதும் ஒழிந்து, எல்லா உயிரும் பரமாத்மாவில் அடங்கி நிற்பதைக் காணும் மனோபாவத்தை அடைவதே கீதையில் செய்யப்பட்ட ஞானோபதேசத்தின் நோக்கம். ஆத்மாவை அஞ்ஞானமானது சூழ்ந்துகொண்டு ஞான ஒளியை மறைக்கிறது. இந்த அஞ்ஞானத்தைப் போக்கி ஆத்மாவில் ஞானப் பிரகாசம் உதயமாகச் செய்து கொண்டால், அப்படிப்பட்டவன் கண்ணுக்கு, வித்தையும் கலைகளும் சீலமும் அடைந்த பண்டிதனும் யாதும் கற்காத ஒரு பிராகிருதனும் ஒன்றாகவே தோன்றும்; அதாவது, இவ்விருவருள்ளும் வாஸுதேவனைக் காண்பான். மனிதர்களில் மேலோன், கீழோன் என்கிற வித்தியாசம் ஒழிந்துபோகும். பிராணிகளுடைய அங்க வித்தியாசங்களுங்கூட ஞானமடைந்தவன் கண்ணுக்கு வித்தியாசமாகத் தோன்றாது. மாடு, யானை, நாய், நாயைத் தின்போன், படிப்பும் சிக்ஷையும் அடைந்த பிராமணன், இவர்களுக்குள் அவயவ அமைப்பு முதலிய சகல வித்தியாசங்களும் அவன் காட்சியில் ஒழிந்து, எல்லாம் ஒன்றாகத் தோன்றும்.

ஜ்ஞானேந து தத்ஜ்ஞானம்
யேஷாம் நாசிதமாத்மந: |
தேஷாமாதித்யவத்ஜ்ஞானம்
ப்ரகாசயதி தத்பரம் ||

அஞ்ஞானத்தை ஆத்ம ஞானத்தால் அழித்தவர்களுடைய ஞானம் சூரியனைப்போல் பிரகாசித்துப் பரம்பொருளைக் காட்டும். (5-16)

வித்யாவிநய ஸம்பந்நே
ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி |
சுநி சைவ ச்வபாகே ச
பண்டிதா: ஸமதர்சிந: ||

கல்வியும் சிக்ஷையும் பெற்ற பிராமணனையும், பசுவையும், யானையையும், நாயையும், நாயைத் தின்போனையும், அறிவடைந்தோர் சமபார்வையுடன் பார்ப்பார். (5-18)

யதா பூதப் ருதக்பாவம்
ஏகஸ்தம் அநுபச்யதி |
தத ஏவச விஸ்தாரம்
ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ||

ஆத்மாவுக்கு ஆதியின்மையாலும், குணமின்மையாலும் குணங்களைக் கடந்த, மாறுதலற்ற ஆத்மா உடம்பில் நின்றாலும், செயலற்று, பற்றற்று நிற்கும். (13-31)

ஸர்வபூதேஷு யேநைகம்
பாவமவ்யயமீக்ஷதே |
அவிபக்தம் விபக்தேஷு
தஜ்ஞானம் வித்தி ஸாத்விகம் ||

பிரிவுபட்டு நிற்கும் எல்லா உயிர்களிலும், பிரிவற்றதும் நாசமற்றதுமான ஒரே வஸ்துவைக் காணும் ஞானம் சாத்விக ஞான மென் றறிவாய். (18-20)

ஸர்வ பூதஸ்தமாத்மாநம்
ஸர்வ பூதாநி சாத்மநி |
ஈக்ஷதே யோக யுக்தாத்மா
ஸர்வத்ர ஸமதர்சந: ||

யோகமுறையில் தேர்ந்தவன் அனைத்திலும் சமபார்வைகொண்டவனாய் எந்த உயிரைக் கண்டாலும் அதனில் இருப்பதாகவே உணர்ச்சி பெறுவான். தன்னுள் எல்லா உயிர்களு மிருப்பதாகவும் உணர்வான். (6-29)

யோ மாம் பச்யதி ஸர்வத்ர
ஸர்வம் ச மயி பச்யதி |
தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி
ஸ ச மே ந ப்ரணச்யதி ||

எவன் எங்கும் பரமாத்மாவைக் காண்கிறானோ, எவன் எல்லாவற்றையும் பரமாத்மாவில் அடங்கியிருப்பதாகக் காண்கிறானோ, அவனுக்கு நான் எப்போதும் இல்லாமல் போகமாட்டேன். எனக்கும் அவன் எப்போதும் இல்லாமல் போகமாட்டான். (6-30)

ஸர்வபூதஸ்திதம் யோ மாம் பஜத்
யேகத்வமாஸ்தித: |
ஸர்வதா வர்த்தமாநோ'பி ஸ:
யோகீ மயி வர்ததே ||

## அனைத்தும் ஒன்று

*அனைத்தும் ஒன்று என்கிற அறிவில் நிலைகொண்டவனாய், எல்லா உயிர்களினிடத்திலுமுள்ள என்னைத் தொழுவோன், எத்தொழில் செய்தபோதிலும், அவன் யோகியாவான், என் வழியில் செல்பவனாவான். (6-31)*

கீதையில் தன்னடக்கத்தைப்பற்றியும் ஞானயோகத்தைப்பற்றியுமிருக்கும் உயர்ந்த உபதேசங்கள், வெறுமனே புஸ்தக பூஷணமாகவோ, அல்லது படித்து மனனம் செய்து காலத்தைக் கழிக்கவோ சொல்லப்பட்டவை அன்று. உண்மையில் சாதாரண ஜனங்கள், ஆண்களும் பெண்களும் அதில் சொல்லியபடி வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற உத்தேசத்தைக்கொண்டு உபதேசிக்கப்பட்டவை. மொழிகளுக்குப் பலவழியில் பொருள் சொல்லிக் கேட்போரை வியக்கச்செய்து வேதாந்த பாண்டித்யத்தைக் காட்டிச் சந்தோஷப்பட எழுதியது அன்று. வயது முதிர்ந்தவர்களும், இளைஞர்களும், லௌகிக விஷயங்களில் ஈடுபட்டவர்களும் உள்பட எத்தகையிலுள்ளவர்களுக்கும் பயன்படச் செய்யப்பட்ட உபதேசம். எல்லாக் காலத்திற்காகவும் சொல்லப்பட்டது. தனிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திற்காக மட்டும் சொன்ன உபதேசமன்று.

மற்ற மத நூல்களைப்போல் கீதையும் சாசுவத தருமத்தை உபதேசிக்கும் ஒரு நூலாயினும், எழுதிய காலத்தில் எத்தகைய பழக்க வழக்கங்கள் அனைவரும் அனுசரித்து வந்தார்கள், அக்காலத்தில் சமுதாய அமைப்புக் கிரமம் என்னவாயிருந்தது என்பதை நினைவில் வைத்துக் கொண்டால்தான், உபதேசத்தின் உண்மைப் பொருளைக் கிரகிக்க முடியும்.

தற்காலத்தில் உண்டாயிருக்கும் சில இயக்கங்கள் அக்காலத்திலில்லை என்பதை மறந்து விடக்கூடாது. ஜாதி

வித்தியாசங்களை யொழித்து அனைவரும் ஒரு ஜாதியாக இருக்க வேண்டும் என்னும் இயக்கத்திற்கும், தீண்டாமையை ஒழித்து ஹரிஜனங்களையும் மற்ற ஜாதியாருடன் சமமாக்க வேண்டும் என்னும் இயக்கத்திற்கும், சுலோகங்களை ஆதாரமாக எடுத்துக்காட்டுவதற்காகப் பகவத் கீதை எழுதப்பட்டதல்ல. அப்படி ஆதாரமாக எடுத்துச் சொல்ல கீதையில் சரியான சுலோகங்களில்லையே யென்பது பல்லாயிர வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட ஒரு நூலைப்பற்றி நியாயமான ஆக்ஷேபமு மாகாது.

ஆயினும் இவ்வித சமத்வ இயக்கங்களுக்குங்கூடப் போதிய உதவி தரக்கூடிய பிரமாணங்களும் கீதையில் இருந்து வருகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். எல்லாச் சமுதாயங்களிலும் தொழிலைப்பற்றிய ஒழுங்கு முறையானது முக்கியமான அம்சம். இது ஜாதிக் கிரமமாக, அதாவது அந்தந்த ஜாதிக்கு அந்தந்த வேலை யென்ற முறையாகவு மிருக்கலாம்; அந்தந்தக் குடும்பம் அந்தந்த வேலைக்கு என்றும் இருக்கலாம்; அல்லது பிறப்பு முறையை நீக்கி வேறு முறையாகவும் இருக்கலாம். எந்த முறையை அனுசரித்தாலும் கீதா வாக்கியங்களின் தத்துவம் முற்றிலும் பொருந்தும். இந்த வேலை உயர்ந்தது, இதுதான் நல்லது, இதைச் செய்வேன், எனக்கிட்ட வேலை வேண்டாம் என்று யாரும் சொல்லல் கூடாது; இதுதான் கீதா வாக்கியம். சமுதாய வாழ்க்கைக்கு அவசியமான தொழில்களில் ஏற்றத் தாழ்வு இல்லை. இது எக்காலத்திற்கும் எந்த சமுதாய முறைக்கும் பொருந்தும். பழைய காலத்திய ஜாதியமைப்புக்கும், ருஷ்யாவில் நடை பெறுவதாகச் சொல்லும் பொதுவுடைமை அமைப்பிற்கும் சமமாகப் பொருந்தும். நெருப்பில் புகை இருப்பதுபோல் உலகத்தில் செய்யக்கூடிய எல்லாத் தொழிலிலுந்தான்

குற்றம் தோன்றும். எத்தொழிலையும் புனிதமாக்கக் கூடியது ஒன்று உண்டு. தனக்கென்று லாபமோ சுகமோ தேடாமல், சமுதாய வாழ்க்கைக்காகக் கடமையைச் செய்கிறேன் என்ற மனோபாவந்தான் அது. அதுவே சகல கல்மிஷத்தையும் போக்கக்கூடிய கங்கா தீர்த்தம். இதுவே கீதாவாக்கியத்தின் முக்கிய அம்சம். அக்காலத்தில் ஜாதிக்கிரமமாகத் தொழில் வகுக்கப்பட்டிருந்ததை வைத்துக்கொண்டு முக்கிய தத்துவத்தை வற்புறுத்தி உபதேசம் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் தத்துவம் எவ்விதத் தொழில் பாகுபாட்டுக்கும் பொருந்தும். நிற்கும் சுவரின்மேல் சித்திரம் எழுதப்படும். படத்தைக் கனிக்க வேண்டுமே யொழியச் சுவரின் அமைப்பை ஆராய்ந்து குற்றம் காண்பதில் பயனில்லை. கவனிக்க வேண்டிய பொருள் எழுதப்பட்ட சித்திரம். அக்காலத்தில் வழங்கிய வழக்கங்களையும், நடைபெற்றுவந்த சமுதாய முறையையும் வைத்துக்கொண்டு மிகச்சிறந்த சமத்துவ உண்மை போதிக்கப்பட்டது. அந்த தத்துவத்தை உணரவேண்டும்.

**ஸ்வே ஸ்வே கர்மண்ய பிரத:**
**ஸம்ஸித்திம் லபதே நர: |**
**ஸ்வகர்ம நிரத: ஸித்திம்**
**யதா விந்ததி தச்சணு ||**

தனக்குரிய தொழிலில் மகிழ்ச்சியுறும் மனிதன் சித்தி பெறுகிறான். தத்தமக்குரிய தொழிலில் இன்புறுவது சித்தியடையும் வழி யெவ்வாறாகும் என்பதைக் கேள்: (18-45)

யத: ப்ரவிருத்திர் பூதாநாம்
யேந ஸர்வமிதம் ததம் |
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய
ஸித்திம் விந்ததி மாநவ: ||

தனக்குரிய தொழிலைச் செய்தால் உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாய், இவ் வையக மனைத்தும் பரவி நிற்கும் பகவானைப் பூஜை செய்வதாகும்; அதனால் மனிதன் சித்தியடைகிறான். (18-46)

எல்லாப் பொருள்களிலும் பகவான் இருக்கிறான்; எல்லாத் தொழில்களிலும் அவன் கலந்து நிற்கிறான். ஆகையால் எந்தத் தொழிலும் தெய்வ பூஜையே ஆகிறது. ஆனால் சுயநல எண்ணமும் அகங்காரமும் இன்றிச் செய்யவேண்டும். இந்த மனோநிலை முக்கியமே யொழிய எந்தத் தொழில் செய்தால் மேலானதாகும் எது தாழ்ந்த தொழில் என்கிற சந்தேகம் வேண்டாம்.

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் |
ஸ்வபாவநியதம் கர்ம
குர்வந்நாப்நோதி கில்பிஷம் ||

பிறர்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும் குணக் குறைவானதாயினும் தனக் குரிய தர்மத்தைச் செய்தல் நன்று. தன் சுபாவத்தினாலேற்பட்ட தொழிலைச் செய்வதனால், அத் தொழிலின் இயல்பிலுள்ள தோஷத்தை ஒருவன் அடையமாட்டான். (18-47)

ஸஹஜம் கர்ம கௌந்தேய
ஸதோஷமபி ந த்யஜேத் |
ஸர்வாரம்பா ஹி தோஷேண
தூமேந அக்நிரிவாவ்ருதா: ||

கூடப்பிறந்த தொழில் குறையுடைய தாயினும், அதைக் கைவிடலாகாது. தீயைப் புகை சூழ்ந்திருப்பது போல், எல்லாத் தொழில்களையும் குறைகள் சூழ்ந்தே நிற்கின்றன. (18-48)

அஸக்த புத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா
விகதஸ் ப்ருஹ: |
நைஷ்கர்ம்யா ஸித்திம் பரமாம்
ஸந்யாஸேநாதிகச்சதி ||

எத்தொழில் செய்யும்போதும் அதனுடைய பயன் தனக்கு உண்டாகும் என்கிற எண்ணமும், அதனால் உண்டாகும் பற்றும் இல்லாத உள்ளத்தைக் கொண்டு, தன்னைத்தான் வென்று, ஆசைகளை நீக்கி நின்றால், அதனாலேயே துறவு மார்க்கத்தின் நோக்கமாகிய உயர்ந்த சித்தியை யடைவான். (18-49)

உலகத்தில் காணப்படும் பல்வேறு தோற்றங்களிலும் மறைந்து கிடக்கும் பரம்பொருளைச் சிந்திக்கவேண்டும். பிறப்பும் இறப்பும், தோற்றமும் மறைவுமே யாகும். குழந்தைகளுக்குப் பகலும் இரவும் எப்படியோ அப்படியே உலகத்தில் தோற்றமும் நாசமும். பிரம்மா கண் மூடுவதும் விழிப்பதுமே சிருஷ்டியும் நாசமும். ஞானோதயம் அடைந்த மனிதன் புலனுக்குத் தோன்றுவன அனைத்தும்,

மனதிலுண்டாகும் உணர்ச்சிகள் அனைத்தும், செய்யும் கருமங்கள் அனைத்தும் பரப்பொருளின் உருவங்களே யாகும். பல கோடி தோற்றங்களும் ஒன்றே என்பதைக் காண்பான். யோகத்தின் முடிவு இதுவே.

அவ்யக்தாத் வ்யக்தய: ஸர்வா:
ப்ரப்வந்த்ய ஹராகமே |
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே
தத்ரைவாவ்யக்த ஸம்ஜ்ஞகே ||

பிரம்மாவின் பகல் வந்ததும் அவ்யக்தத்தினின்று உருக்கள் தோன்றுகின்றன. இரவு வந்தவுடன் மீண்டும் அவ்யக்த மென்பதற்குள் கரைந்து மறைந்து போகின்றன. (8-18)

பூதக்ராம: ஸ ஏவாயம்
பூத்வா பூத்வா ப்ரலீயதே |
ராத்ர் யாகமே'வச: பார்த
ப்ரபவத்யஹ ராகமே ||

இந்த பூதத் தொகுதி திரும்பத் திரும்பத் தன் வசமின்றியே இரவு வந்தவுடன் அழிகிறது. பகல் வந்தவுடன் மீண்டும் உண்டாகிறது. (8-19)

பரஸ்தஸ்மாத்து பாவோ'ந்யோ
அவ்யக்தோ அவ்யக்தாத் ஸநாதந: |
ய: ஸ ஸர்வேஷு பூதேஷு
நச்யத்ஸு ந விநச்யதி ||

## அனைத்தும் ஒன்று

அவ்யக்தத்திலும் அவ்யக்தமாய் அதற்கும் மேலான மாற்றமில்லாத பொருள் ஒன்றிருக்கிறது. எல்லா உயிர்களும் அழிகையில் அது அழியாது. (8-20)

புருஷ: ஸ பர: பார்த
பக்த்யா லப்யஸ்த்வ நந்யயா |
யஸ்யாந்த: ஸ்தானி பூதானி
யேந ஸர்வமிதம் ததம் ||

வேறு பொருள்களில் செல்லாத பக்தியால் அந்தப் பரம் பொருளை அடையலாம். அதனுள்ளே எல்லாப் பொருள்களும் நிலைகொண்டு நிற்கின்றன. அது இவ்வுலக மெங்கும் பரவி நிற்கின்றது. (8-22)

கவிம் புராணமநுசாஸிதாரம்
அணோரணீயாம்ஸ மநுஸ்மரேத்ய: |
ஸர்வஸ்ய தாதாரம சிந்த்ய ரூபம்
ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் ||

பேரறிவாளனை, பழையோனை, ஆண்டவனை, அணுக்குள் அணுவான பரம்பொருளை, எல்லாவற்றையும் தரிப்பவனை, எண்ணுதற்கரிய வடிவுடையோனை, ஆதித்யனுடைய ஒளியைப் படைத்தவனை, இருள் தீண்டாதவனை எவன் தியானிக்கிறானோ அவன், (8-9)

ப்ரயாணகாலே மநஸா அசலேந
பக்த்யா யுக்தோ யோகபலேந சைவ |
ப்ருவோர் மத்யே ப்ராணமாவேச்ய
ஸம்யக் ஸ தம் பரம் புருஷமுபைதி திவ்யம் ||

இறுதிக் காலத்தில் சஞ்சலமற்ற மனதுடன், புருவங்களினிடையே பிராணனை நிறுத்திக்கொண்டு, யோக பலத்தாலும் பக்தியாலும் அந்தத் திவ்ய புருஷனை அடைகிறான். (8-10)

ஸர்வத்வாராணி ஸம்யம்ய
மநோ ஹ்ருதி நிருத்ய ச |
மூர்த்நயாதாயா''த்மந: ப்ராணம்
ஆஸ்திதோ யோகதாரணாம் ||

மனதின் எல்லா வாயில்களையும் நன்கு மூடி, மனதை அகத்திலேயே நிறுத்தி, தன் பிராணனைத் தலையின் உச்சியில் நிறுத்தி, யோகநிலை தரித்து, (8-12)

ஓமித் ஏகாக்ஷரம் ப்ரஹ்ம
வ்யாஹரந்மாமநுஸ்மரந் |
ய: ப்ரயாதி த்யஜந்தேஹம்
ஸ யாதி பரமாம் கதிம் ||

ஓம் என்ற சிறந்த ஏகாக்ஷர வேதத்தை ஜபித்துக் கொண்டு என்னை ஸ்மரிப்பவனாய் உடலைத் துறப்போன் பரகதி பெறுகிறான். (8-13)

அநந்யசேதா: ஸததம்
யோ மாம் ஸ்மரதி நித்யச: |
தஸ்யாஹம் ஸுலப: பார்த
நித்ய யுக்தஸ்ய யோகிந: ||

வேறு நினைப்பின்றி என்னை எந்நாளும் எப்போதும் ஸ்மரிக்கும் நித்ய யோகிக்கு நான் எளிதில் கிடைப்பேன். (8-14)

# அனைத்தும் ஒன்று

வேதேஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ
தாநேஷு யத்புண்யபலம் ப்ரதிஷ்டம் |
அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா யோகீ
பரம் ஸ்தாநம் உபைதி சா''த்யம் ||

இதனை யறிந்த யோகி வேள்விகளாலும், தவங்களாலும், தானங்களாலும் அடையக்கூடியதாக வேதங்களில் சொல்லப்படும் நற்பயன்களைக் காட்டிலும் மேலானதான பரமபதத்தை அடைகிறான். (8-28)

சாகும் தருவாயிலுங்கூட மனதை ஸ்திரப்படுத்திக் கொண்டு பகவானைத் தியானித்து உயிர்விட்டால் பரகதி அடையலாம் என்பது சநாதனக் கொள்கை. மேலே 9, 10, 12, 13, சுலோகங்களில் இது சொல்லப்பட்டது. மரண காலத்தில் 'நாராயணா' என்று சொல்லிவிட்டுப் பிராணனை விட்டால் போச்சு, இப்போது எல்லாப் பாவங்களையும் செய்யலாம் என்பதல்ல இந்த சுலோகங்களின் உபதேசம். உபதேசத்தின் பொருள் என்ன வென்றால் :—

(1) எவ்வித வாழ்க்கை நடத்தியவனுக்கும் நற்கதி உண்டு. ஒரு தருமமும் செய்யவில்லையே, ஒரு புண்ணிய தீர்த்தத்திலும் முழுகவில்லையே, பல பெரும் பாவங்களைச் செய்தேனே, அவகாசம் தராமல் மரணம் வந்ததே என்றிவ்வாறு ஏக்கப்பட வேண்டியதில்லை. உயிர் விடும் சமயத்திலேனும் பகவானிடம் பக்தி செலுத்தினால் அதுவே நற்கதியைக் கொடுக்கும். தைரியமாயும் பக்தியுடனும் மரணத்தை எதிர்கொள்ள வேண்டும்.

(2) சாகும் தருவாயிலுங்கூடப் பல பற்றுகளை மனதில் வைத்துக்கொண்டு, உயிரைவிட மனமில்லாமல் துக்கப்பட்டுக்கொண்டு உயிர் நீத்தல் முறையல்ல. பக

வானைத் தியானம் செய்துகொண்டு உயிர் நீத்தலே நலம் என்பது இரண்டாவது.

(3) மரணம் எப்போது வரும் என்று சொல்ல முடியாது. எத்தருணத்திலும் மரணம் வரலாம். ஆகையால் மரண காலத்தில் இவ்விதமாய் மனதை நிறுத்திப் பகவானைத் தியானித்தல் வேண்டும் என்பது, சதாகாலமும் அவ்விதமிருக்க ஏதுவாகும் என்பது மூன்றாவது.

உ௬

## அத்துவைதமும் கர்ம யோகமும்

அத்துவைதத்தைப்பற்றிக் குருவின் மூலம் உபதேசம் பெருமல் அந்த சித்தாந்தத்தில் சில பாகம் மட்டும் மேலாகத் தெரிந்துகொண்டு திருப்தி யடைந்தவர்களுக்கு இவ்விடத்தில் ஒரு சந்தேகம் தோன்றலாம். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் தனியல்ல, இரண்டும் ஒன்றே என்கிற மதம் உண்மையானல் இந்திரியங்களை யடக்கல் முதலிய சிரமமான முறைகள் என்னத்திற்காக? தானே பிரம்மம் என்று அறிந்தவுடன் வேறு ஒன்றும் கவலைப்படாமல் இருக்கலாமே?

இது உண்மைதான்; ஆனல் கண்ணை மட்டும் ஏமாற்றும் ஒரு பொய்த் தோற்றத்தை இவ்வாறு உதாசீனமாய் விட்டுவிடக் கூடும். சாதாரணப் பொய்த் தோற்றம் ஒன்று காணப்பட்டால், கண் ஏமாந்தபொழுது காது உதவும்; காதும் ஏமாந்தால் கிட்ட நெருங்கித் தொட்டுப் பார்த்து உண்மையை அறியலாம். அதுவும் இல்லையாயின் புத்தியைச் செலுத்தி அனுபவங்களைப் பயன்படுத்தி ஆராய்ந்து பொய் யென்பதை அறியலாம். அத்துவைத வேதாந்தத்தில் சொல்லப்பட்ட அவித்தை அவ்வித லேசான "டாக்கி" தோற்றமல்ல. கண், செவி, மூக்கு, தேகத்திலுள்ள சகல உணர்ச்சிகள், அந்தரங்க மனம், புத்தி, எல்லாவற்றையும் கவர்ந்த இந்த அவித்தையானது

தேகத்தையும் புத்தியையும் ஆத்மாவையும் ஊடுருவி அனைத்திலும் கலந்து நிற்கிறது.

கண்ணைத் தேய்த்துக்கொண்டு இது வெறுந் தோற்றந் தான் என்று சொன்ன மாத்திரத்தில் முடிந்து போகாது. உடம்பிலும் மனதிலும் உள்ள ஒவ்வொரு சூக்ஷ்ம அணுவையும் தட்டி யெழுப்பி, மயக்கம் தெளியச் செய்ய வேண்டியதா யிருக்கிறது. அதற்கு ஒழுக்கம், இந்திரிய நிக்ரஹம், பற்றறுத்தல் எல்லாம் வேண்டும். மாயையி லிருந்து கண் விழிக்க வேண்டும் என்கிற உண்மையை அறிந்தால் மட்டும் போதாது. மாயையிலிருந்து நீங்க வேண்டும் என்று அறிவது ஒன்று, அறிந்த வண்ணம் நீங்குவது வேறு. நான் காலையில் நாலு மணிக்கு எழ வேண்டும் என்று எண்ணுவது ஒன்று, அப்படி விழித்து எழுந்திருப்பது வேறு அல்லவா? அவித்தையை உண்மை யில் நீத்தல்தான் மோக்ஷம். நீக்கவேண்டும் என்று அறிந்துவிட்டால் மட்டும் மோக்ஷம் ஆகாது. அதற்காகத் தான் பெரியோர்கள் தவமிருந்து கண்ட ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து கண்ணன் உபதேசித்தது. அத்துவைத தத்தின்படி, ஜீவனை அவித்தையிலிருந்து விடுவிப்பதும், துவைதத்தின்படி ஜீவனை கர்ம பந்தத்திலிருந்து நீப்பதும், இரண்டுக்கும் வழி ஒன்றே. அத்துவைத வாக்கியத்தைக் கேட்டு "ஆம்" என்று புத்தியானது சொன்னதுமே, அவித்தை நீங்கவில்லை. உண்மையில் அது நீங்கவேண்டு மானல் கர்ம பந்தத்திலிருந்து மோக்ஷமடையத் துவைத வாதிகள் என்னென்ன செய்யவேண்டும் என்கிருர்களோ, அவ்வளவும் அத்துவைதவாதியும் செய்ய வேண்டியிருக் கிறது; இப்படிச் செய்தால்தான் மோகமானது நீங்கும். ஆகவே கர்ம பந்தமும், அதை நீக்கிக்கொள்ளும் வழி

களும் துவைதக் கொள்கையினாலாவது அத்துவைதக் கொள்கையினாலாவது வித்தியாசப்படாது. இதுவே ஆசார்யர்களின் உபதேசம்.

எல்லா உயிர்களின்பாலும் சாதாரண ஜீவகாருண்ய உணர்ச்சியே மனதில் உண்டாகாமலிருக்கையில், ஜீவனும் பரமாத்மாவும் ஒன்று என்ற அத்துவைத ஞானம் எவ்வளவு தூரம்? ஆசார்யர்கள் எழுதிய நூல்களிலிருந்து ஜீவனும் பிரம்மமும் உண்மையில் ஒன்று என்று மதக் கொள்கையாகத் தெரிந்துகொள்வது வேறு, உண்மையான ஞானப் பிரகாசம் வேறு. ஞானப்பிரகாசம் அடைவதற்கு அறிவு தேவையே; ஆனால் அறிவு மட்டும் போதாது. தீய ஒழுக்கத்தை விடாதவனும், மனதில் சாந்தம் பெறாதவனும், இந்திரியங்களை அடக்காதவனும், ஆசை எண்ணங்களை விடாதவனும் அறிவு பெற்றபோதிலும் ஆத்மாவைக் காணமாட்டான் என்பது கடோபனிஷத்து வாக்கியம். இந்திரியங்களை அடக்கியாள்வது, மனதை விஷயங்களில் செல்லாமல் தடுப்பது, கடமைகளைச் சுயநல ஆசையும் பற்றுக்களுமின்றிப் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்து முடிக்கப் பழகுவது, சுக துக்கங்களையும், இன்ப துன்பங்களையும் ஒரே மாதிரி எதிர்கொள்வது. இந்த அப்பியாசங்களெல்லாம் அவித்தையை நீக்கிக்கொண்டு அத்துவைத மனோபாவத்தை அடைவதற்குச் சாதனங்கள்; இவையே மோகத்திற்கும் பேதபுத்திக்கும் சிகிச்சைக் கிரமங்கள். இவற்றைக் கைக்கொள்ளாமல் விஷயங்களை அனுபவிப்பதில் ஆசையைச் செலுத்தி, மனதை அடக்காமலிருந்தால், பிரம்மமும் ஜீவனும் ஒன்று என்ற உண்மையறிவு ஒரு நாளும் உண்டாகாது. பத்தியமில்லாதபடியால் வியாதி அதிகரிப்பதுபோல் வரவர மயக்கமும் பேத புத்தியும் அதிகரிக்கும். நூல்களினின்று தெரிந்துகொண்ட மருந்து

பத்தியமின்றி அஞ்ஞானம் என்ற நோயைத் தீர்க்காது. வெறும் சித்திரத்துக்கும், உயிருள்ள மனிதனுக்கு முள்ள வித்தியாசத்தைப் போலாகும் அத்தகைய உபயோகமற்ற அறிவுக்கும், உண்மையான அத்துவைத ஞானப்பிரகாசத் திற்கு முள்ள பேதம். உண்மையான அத்துவைத ஞானம் உதயமானுல் வாழ்க்கை தானுகவே சுத்தப்பட்டுப் போகும்; விஷயப்பற்றுகள் கரைந்துபோகும். விஷயப் பற்றுகள் தீரத் தீர ஞானம் பின்னும் வளரும்.

இதனுலேதான் பகவத்கீதையானது துவைத, அத்து வைத, விசிஷ்டாத்துவைத மதங்களைச் சேர்ந்தவர்கள் அனை வருக்கும் சாஸ்திரமாக இருந்து வருகிறது. பிரம்மமும் ஜீவனும் ஒன்ரு? வெவ்வேரு? பரப்பிரம்மம் என்பது கலி யாண குணங்கள்கொண்ட நாராயணனு? அல்லது சுத்த நிர்குண வஸ்துவா? என்கிற பிரச்னைகள், பகவத்கீதை யில் உபதேசிக்கப்பட்ட அனுஸக்த கர்மயோகம், ஞான யோகம், பக்தியோகம், பிரபத்தி மார்க்கம் இவைகளை ஒருவிதத்திலும் பாதிக்காது.

## விச்வரூப தரிசனம்

பகவத்கீதை 11-வது அத்தியாயத்தில் பகவான் அருச்சுனனுக்கும் விச்வரூப தரிசனம் காட்டியதாகச் சொல்லப்படுகிறது. நன்மை தீமை, சுகம் துக்கம், இருள் தேஜஸ் என்ற துவந்தங்களைக் கடந்து நிற்கும் பகவானுடைய சர்வ வியாபகமான விச்வரூபத்தை அருச்சுனன் பார்க்குமாறு அவனுக்கு ஞான திருஷ்டியருளித் தரிசனம் தந்தார்.

இதன் பொருள் என்ன? அகத்தூய்மையும் புறத்தூய்மையும் கொண்ட சுத்த வாழ்க்கையை ஒருவன் நடத்தி, சகல கருமங்களையும் பற்றின்றிப் பகவானுக்கு அர்ப்பணமாய்ச் செய்து, புத்தியை ஸ்திரமாக நிறுத்திக் கொண்டு, அடிக்கடி தியானம் செய்துவந்தால், பக்தனுக்குப் பகவானுடைய உண்மைச் சொரூபம் வெளியாகும்; அதாவது ஞானேயமாய் பிரபஞ்சத்திலுள்ள அனைத்திலும் பரந்து நிற்கும் பகவானை அனுபவிப்பான் என்பதே. அந்தத் தரிசனத்தைப்பற்றிச் சஞ்சயன் சொல்லுகிறன்:

**ஸஞ்ஜய உவாச**

ஏவமுக்த்வா ததோ ராஜன்
மஹாயோகேச்வரோ ஹரி: |
தர்சயாமாஸ பார்தாய
பரம் ரூபமைச்வரம் ||

சஞ்சயன் சொல்லுகிறன்:—

அரசனே, இவ்வாறுரைத்துவிட்டு, அப்பால் மகாயோகேசுவரனுகிய ஹரி தன் பரம ஐசுவர்ய ரூபத்தைப் பார்த்தனுக்குக் காட்டினன். (11-9)

திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய
பவேத்யுகபதுத்திதா |
யதி பா: ஸத்ருசீ ஸா ஸ்யாத்
பாஸஸ்தஸ்ய மஹாத்மந: ||

வானத்தில் ஒரே க்ஷணத்தில் ஆயிரம் சூரிய பிம்பங்கள் கிளம்பினால் எவ்வாறு பிரகாசிக்குமோ அவ்வாறு இருந்தது அந்த மகாவடிவத்தின் தேஜஸானது. (11-12)

தத்ரைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம்
ப்ரவிபக்தமநேகதா |
அபச்யத் தேவதேவஸ்ய
சரீரே பாண்டவஸ்ததா ||

அப்போது பல பகுதிகளாகவிருந்த ஜகத்சிருஷ்டி முழுதும் அந்த தேவதேவனுடைய சரீரத்தில் ஒன்றுகூடி நிற்பதைப் பாண்டவன் கண்டான். (11-13)

உண்மையை முற்றிலும் உணர்ந்து அனுபவிக்கும் வேதாந்திகள் எப்போதும் இந்த விசுவரூபத்தைக் காண்பார்கள்.

அருச்சுனனுடைய ஸ்துதி :—

அர்ஜுந உவாச |

பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே
ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் |
ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம்
ருஷிம்சச ஸர்வாநுரகாம்ச திவ்யாந் ||

தேவனே, உன் தேகத்தில் எல்லா தேவர்களையும் காண்கிறேன். பூத வகைகளின் தொகுதிகளை எல்லாம் காண்கிறேன். கமலாசனப் பிரமனாகிய ஈசனையும் எல்லா ரிஷிகளையும் திவ்ய ஸர்ப்பங்களையும் உன்னில் காண்கிறேன். *(11-15)*

அநேக பாஹூதர வக்த்ர நேத்ரம்
பச்யாமி த்வாம் ஸர்வதோ' நந்தரூபம் |
நாந்தம் ந மத்யம் ந புநஸ்தவாதிம்
பச்யாமி விச்வேச்வர விச்வரூப ||

எந்த திக்கு நோக்கினும் பல தோளும், பல வயிறும், பல வாயும், பல கண்களுமுடைய எல்லையற்ற வடிவிலே நின்னைக் காண்கிறேன். எல்லாவற்றிற்கும் ஈசனே, அகில பிரபஞ்சத்தை வடிவாகக் கொண்டவனே, உனக்கு முடிவேனும், இடையேனும், தொடக்கமேனும் காண்கிலேன். *(11-16)*

கிரீடிநம் கதிநம் சக்ரிணம் ச
தேஜோராசிம் ஸர்வதோ தீப்திமந்தம் |
பச்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்
தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம் ||

கிரீடமும், கதாயுதமும் சக்கரமும் தரித்தவனாய், தேஜோராசியாய், எப்பக்கமும் ஒளிவீசுகிறாய்; தழல் விட்டெரியும் தீயைப்போலும் ஞாயிறைப் போலும் பார்க்கமுடியாத ஒளி வீசுவதைக் காண்கிறேன். *(11-17)*

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம்
த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதாநம் |
த்வமவ்யய: சாச்வத தர்மகோப்தா
ஸநாதநஸ்த்வம் புருஷோ மதோ மே ||

அழிவிலாய், அறிதற்குரிய பொருள்களில் பரமனே, உலகத்தின் அகமே, கேடிலாய், என்றும் இயலும் தருமத்தைக் காப்பவனே, மாருதவனே, உன்னைக் கண்டு கொண்டேன். (11-18)

த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்
த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதாநம் |
வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம
த்வயா ததம் விச்வம் அநந்தரூப ||

ஆதி தேவன் நீ, ஆதி ஆத்மா நீ, நீயே அகிலத்தின் பரம நிலயம். அறிவோனே, அறியப்படு பொருளே, பரம பதமே, அனந்தரூபா, உலக மனைத்தும் ஊடுருவிப் பரந்து கிடக்கிறாய். (11-38)

வாயுர்யமோ'க்நி: வருண: சசாங்க:
ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹச்ச |
நமோ நமஸ்தே'ஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
புநச்ச பூயோ'பி நமோ நமஸ்தே ||

வாயுவும் நீயே, யமனும் நீயே, அக்னியும் நீயே, வருணனும், திங்களும், பிரமனும் நீயே. உன்னை ஆயிர முறை நமஸ்கரிக்கிறேன். மீண்டும் மீண்டும் உன்னை வணங்குகிறேன். (11-39)

நம:புரஸ்தாத்த ப்ருஷ்டதஸ்தே
நமோ'ஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ |
அநந்தவீர்யாமித விக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்நோஷி ததோ'ஸி ஸர்வ: ||

முன்புறம் உனக்கு நமஸ்காரம், பின்புறம் நமஸ்காரம். எல்லாமாவாய்! உன்னை எல்லாப்புறமும் கும்பிடுகிறேன். எல்லை கடந்த வீர்யமுடையாய், அளவு கடந்த வலிமையுடையாய், அனைத்தின் பூரணமுமாவாய், அனைத்துமாவாய் நீயே. (11-40)

பிதா'ஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யச்ச குருர்கரீயாந் |
ந த்வத்ஸமோ' ஸ்த்யப்யதிக: குதோ'ந்யோ
லோகத்ரயே'ப்யப்ரதிமப்ரபாவ ||

சராசர உலகமனைத்திற்கும் தந்தையாவாய், பூஜ்யனே, மிகச் சிறந்த குருவே, உனக்கு நிகர் யாருமில்லை; எனின் உனக்குமேல் வேறு யாருளர்? மூன்றுலகங்களிலும் உன் பிரபாவம் ஒப்பற்றது. (11.43)

தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம்
ப்ரஸாதயே த்வாமஹம் ஈசம் ஈட்யம் |
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும் ||

உடல் குனிய வணங்கி நின் அருள் வேண்டுகிறேன், பெருமானே! ஈசா, மகனைத் தந்தை போலும், தோழனைத் தோழன்போலும், காதலியைக் காதலன் போலும் என்னைப் பொறுத்தல் வேண்டும், தேவனே! (11-44)

# முடிவுரை

ஆக நாம் படித்த விஷயங்களைச் சங்கிரகமாகச் சொல்லின்: முன் ஜன்மத்தில் செய்த கருமங்களினுலும், கொண்ட பற்றுகளாலும் விரும்பிய விருப்பங்களாலும் நாம் சில குணங்களுடனும், உடல் பிரகிருதிகளுடனும் பிறக்கிறோம். இந்தச் சுபாவ குணங்கள் ஜீவனைக் கட்டுப்படுத்தி நிற்கின்றன. அவற்றை முழுதும் நிக்ரகித்து விடலாமென்று பக்குவமடையாத காலத்தில் துறவியாய்ப் போகப் பிரயத்தனப்படுவதில் பயனில்லை. ஆனுல், இந்தச் சுபாவ குணங்களை வென்று விடுதலையடைய முயற்சி செய்யும் சுதந்தரமும், சக்தியும் ஜீவனுக்கு உண்டு. இந்த ஜன்மத்தில் ஜீவன் எப்படி நடந்துகொள்ளுகிறுனே அதன் படியாகும் அவனுடைய வரப்போகும் சரித்திரம். ஒருவன் பழைய கருமத்தினின்று ஸம்பூரணமாகவோ, அல்லது கொஞ்சம் கொஞ்சமாகவோ விடுதலையடைவதும், அல்லது முன்னிருந்த பந்தத்திற்கு இன்னும்கூடச் சேர்த்து அதிக பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளுவதும் இது அவன் இந்த ஜென்மத்தில் எப்படி நடந்துகொள்ளுகிறுனே அதைப் பொறுத்திருக்கிறது.

பகவானுடைய திருவருளால் எத்தகைய பந்தத்தினின்றும் ஜீவன் விடுதலை யடையலாம். திருவருளின் சக்தி இது. அந்தத் திருவருளைச் சம்பாதிக்க ஜீவன் செய்ய வேண்டிய பிரயத்தனம் என்னவென்ருல் கர்ம விதிப்படி பூர்வ கர்ம பந்தத்தை அறுக்கக்கூடிய புண்ய வாழ்க்கை.

பகவான் திருவருளை யடைவதற்கு வழி கீதையில் சொல்லப்படுகிறது. இதற்குத்தான் யோகம் என்று பெயர். யோகம் என்றால் மூச்சை நிறுத்துவதல்ல.

பகவத்கீதையில் உபதேசிக்கப்பட்ட யோகம் ஒரே தடவை ஒரே முறையில் செய்துவிடக் கூடியதல்ல. பல முறைகளும் கலந்து, படிப்படியாய் அனுசரிக்க வேண்டிய வழி. கீதையில் உபதேசித் திருப்பதை அனுசரிப்பதில் தோல்வியோ நஷ்டமோ இல்லை. பிரயத்தனத்தினாலேயே லாபம் அடைவோம்.

கீதையில் சொல்லப்பட்ட யோகத்தின் அங்கங்களாவன :

(1) இந்திரியங்களைக் காத்தல், சுத்தமான வாழ்க்கை, தினசரி ஆசாரம். அதாவது உபாஸனை, வேலை, ஆகாரம், ஓய்வு, தூக்கம் முதலியவைகளில் திட்டப்படி நடந்து கொள்வது.

(2) சுபாவத்தாலோ, சமுதாயத்தில் தான் அடைந்த ஸ்தானத்தினாலோ, சந்தர்ப்பத்தாலோ, தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சுய நலப் பற்றின்றி, ஆனால், கண்ணுங்கருத்துமாய்க் குறைவின்றிச் செய்து முடித்தல்.

(3) ஜயாபஜயங்களை சமபுத்தியுடன் அனுபவித்தல்; கஷ்டங்களைக் கண்டு மனங்கலங்காமல், துயரமோ மகிழ்ச்சியோ எது வரினும் தைரியமும் அமைதியும் இழக்காமலிருக்க மனதைப் பழக்கிக்கொள்ளுதல்.

(4) மனதை இடைவிடாமல் காத்து, காமம், குரோதம், ஆசை என்ற வேகங்களுக்கு இடங்கொடாமலிருத்தல்.

(5) இப்படி உள்ளும் புறமும் சுத்தமாய் வைத்து மனதை ஸ்திரப்படுத்திக்கொண்டு, அவ்வப்போது அத்யாத்ம தியானம் செய்தல்.

(6) பகவானிடம் பூரணமாய்ச் சரணகதி புகுதல்.

மேற்சொல்லப்பட்ட அங்கங்களில் ஒவ்வொன்றை யும் தனியாக எடுத்துச் சொல்லும் பொழுது, கர்ம யோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற பெயரிட்டுப் பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆனால், உண்மையில் அப்பியாசம் செய்யும்போது இவையெல்லாம் ஒன்றோ டொன்று கலந்து நிற்கும். ஒன்றின்றி மற்றொன்று அமையாது. ஆகையால் கீதையில் இவ்வெல்லா முறை களையும் ஒருங்கே சேர்த்து ஒரு வழியாகப் பகவான் உபதேசித்திருக்கிறார்.

பக்தியுடனும் கவனத்துடனும் இதைப் படித்தவர் களுள் சிலருக்கு முடிவில் ஒரு சந்தேகம் தோன்றலாம். கீதையில் சொல்லியிருப்பதெல்லாம் நன்றே. ஆயினும், சாதாரண மனிதர்களுக்கு இது பயன்படுமா? இதில் காட்டப்பட்ட இலட்சியங்கள் அனைத்தையும் அடையும் சக்தி நமக்கு இல்லையே? இது நமக்கு எவ்வாறு உதவும்? மகாத்மாக்களுக்குத்தான் இதில் சொல்லப்பட்டிருப்பது சாத்தியம் என்றிவ்வாறு திகைக்கலாம்.

கண்ணன் காட்டிய வழி மட்டுமல்ல, உலகத்தில் ஜனங்கள் தழுவும் எல்லா மதங்களும் மார்க்களும் இந்த ஆக்ஷேபத்துக்கு இடம் தரும். எந்த உயர்மதக் கொள் கையும், எந்தத் தரும நூலில் உபதேசிக்கப்பட்ட வாழ்க்கை முறையும், குறைவின்றி முழுவதும் அநுசரிப் பது அனைவராலும் முடியாது. உதாரணமாக, ஏசுநாத ருடைய உபதேசத்தை எடுத்துக்கொள்ளுவோம். அவர் நடத்திக் காட்டிய வாழ்வுக்கும், சொன்ன உபதேசங் களுக்கும் முற்றிலும் இணங்க யார் வாழ முடியும்? ஆயி னும், அவருடைய மார்க்கத்தைத் தழுவி நிற்பவர்களுக்கு அதில் பயனில்லையா? எத்தனையோ மக்களை அது காப் பாற்றி, உய்வித்திருக்கிறது. மகான்களுக்கு மட்டுமல்ல;

பாமர ஜனங்களுக்குங்கூட, உடலுக்கு அன்னம் எவ்விதமோ, அவ்விதம் உள்ளத்திற்குப் பசியாற்றும் அன்னமாக அந்த உபதேசம் பயன்பட்டு வந்திருக்கிறது. அத்தகையனவே எல்லா மார்க்கங்களும்; அத்தகையதே நம்முடைய கீதையும்.

கையில் விளக்கெடுத்துச் செல்லுங்கால் நம்முடைய நிழலே வழியில் குறுக்கிடும். மரமும், புதரும், வெளிச்சத்தைத் தடுக்கும். ஆயினும் இது விளக்கின் குற்றமல்ல. விளக்கும் பயனற்றுப் போகவில்லை. பாவமும், கஷ்டமும், சந்தேகமும், ஆசையும், ஆத்திரமும் தடையாக வந்தாலும், கீதையில் உபதேசிக்கப்பட்ட இலட்சியங்களை வைத்துக்கொண்டு நடந்தோமானால் இருளைத் தாண்டி ஈடேறலாம்.

ஒவ்வொருவராலும் ஒவ்வொன்றையும் செய்ய முடியாதாயினும், அனைவரும் ஒரே உயர் இலட்சியத்தைக் கொண்டு நடப்பதினால் அனைவருடைய வாழ்க்கைக் கிரமமும் ஒழுங்குபட்டு, அனைவருக்கும் கூட்டுறவு சுகமுண்டாகும்.

சாதாரணமாய் உடலின் சுகாதாரத்திற்காகச் சொல்லப்படும் முறைகளையுங்கூட எல்லாரும் குற்றமின்றிக் குறைவின்றி முழுதும் நடத்திவிட முடியாது. ஆயினும் குறைகளுடன் தழுவப்பட்ட சுகாதார உபதேசங்களினால் மிகப் பெரிய நன்மைகள் ஏற்படுவதைக் காண்கிறோம். உடல் சுகாதாரத்தைவிட ஆத்ம சுகாதாரம் கடினமல்லவோ? அதற்காக உபதேசிக்கப்படும் முறைகளும் கடினமாகத்தா னிருக்கும். அனைவரும் அவற்றைக் குற்றங் குறையின்றித் தழுவி நடப்பது அசாத்தியமாய்த்தா னிருக்கும். ஆயினும் உபதேசமாவது முயற்சியாவது பயனற்றதாய்ப் போகாது. உயர் இலட்சியம் மனித வாழ்க்

கைக்கு இன்றியமையாதது. முற்றிலும் அடைய முடியாதென்று தரும விளக்கை அணைத்துவிட்டு இருட்டில் நிற்பதுபோல் இலட்சியமேயின்றி நிற்கலாகாது. கீதையிலேயே பகவான் சொல்லி யிருக்கிறார் :—

நேஹாபிக்ரம நாசோ'ஸ்தி
ப்ரத்யவாயோ ந வித்யதே |
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய
த்ராயதே மஹதோ பயாத் ||

இந்த முறையில் எடுத்த முயற்சிக்கெல்லாம் பலனுண்டு; நஷ்டம் கிடையாது. பத்தியம் தவறிய மருந்தைப்போலல்ல. குற்றங் குறைகள் ஏற்பட்டதால் அபாயம் எதுவுமில்லை. இந்தத் தருமத்தில் சிறிது நடத்தினாலும் ஸம்ஸாரமென்ற பேரச்சத்தினின்று காப்பாற்றிக்கொள்ளலாம். (2-40)

# ஆத்ம சிந்தனை

# வரலாறு

ஜனக மகாராஜாவுக்குப் பின் உலகத்தில் புகழ்பெற்ற இராஜ ரிஷிகள் இருவராவர். ஒருவர் பரத கண்டத்தை ஆண்ட அசோக மன்னர். மற்றொருவர் மேல்நாட்டில் ரோம ராஜ்யத்தை ஆண்ட மார்க்க அரேலிய சக்ரவர்த்தி. இவர் அசோகருக்குப் பின், சுமார் நானூறு வருஷங்களுக்குப் பிறகு கி. பி. 161 முதல் 180-ம் வருஷத்தில் தேக வியோகமாகும்வரை அரசு புரிந்தார்.

மார்க்கருடைய "ஆத்ம சிந்தனை" பிறர் படிக்க வேண்டி எழுதிய ஒரு நூல் அன்று. அவர் இறந்து பல நூற்றுண்டுகளுக்குப்பின் கையெழுத்து ஏடுகள் கிடைத்துப் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டது. ஒரே காலத்தில் எழுதியதுமல்ல. அவ்வப்போது தனக்குள் தோன்றிய எண்ணங்களைத் தன் மனோநிலையைத் திடப்படுத்திக்கொள்ளுமாறு தனக்குத் தானே உபதேசித்துக்கொண்ட முறையில் அவர் எழுதிய குறிப்புகள். அவைகளில் 'நீ' என்பது மார்க்கரே. பிறருக்குச் செய்யும் உபதேசமல்ல. தன் உள்ளத்தோடு தானே ஆட்சேபணை சமாதானம் சொல்லிக் கொண்டு போகிறார். ஆனால், அவர் தனக்காக எழுதிய இக் குறிப்புகளின் தொகை உலகத்தார் எக்காலமும் படிக்கத்தக்க சிறந்த வைராக்கிய தீபமாக விளங்கும் நூலாகும்.

ஆயிரக்கணக்கான மக்களுக்கு இந்நூல் சாந்தமும் சக்தியும் தந்திருக்கிறது. பல பெரியோர் இதைக் கொண்டு கடைத்தேறியிருக்கிறார்கள் என்று ஜான் ஸ்டுவர்ட் மில், ஜான் மார்லி என்கிற ஆங்கில ஞானிகள் எழுதியிருக்

கிறார்கள். விருப்பு, வெறுப்பு இரண்டையும் நீக்கிய உண்மைத் தவமும் ஒப்புரவறிந்து செய்தலாகிய இல்லறமுமே மார்க்க அரேலியருடைய ஆத்ம சிந்தனைகளிலிருந்து அடையக்கூடிய உபதேசம். இன்பமும் துன்பமும் ஒருவன் சுதந்திரம். அவை உள்ளத்தின் நிலையேயன்றிப் புறப்பொருளில் இல்லை என்பதைப் பலவாறு அவர் வற்புறுத்துகிறார். உலகம் முழுதும் ஓர் உயிர் கொண்ட அமைப்பு; அதில் ஓர் அங்கமாவாய் நீ; அதன் நன்மையை நாடுவதே உன் இயற்கைத் தருமம்; ஆகவே ஒப்புரவறிந்து செய்தலே உன் கடமை; அதுவே உனது நலம்; நேர்வனவெல்லாம் தனியொருவனுக்குத் துன்பம் போலத் தோன்றினும் உலகத்தின் பொது நலனுக்காகவே நேரும்; ஆகையால், எது நேரினும் மனம் கலங்காமல் பொறுத்துக்கொள்ளக் கடவாய் என்று தன் மனதைத் தாமே அடிக்கடி பலவேறு விதங்களில் உறுதிப்படுத்திக் கொள்கிறார். சாந்த சமநிலையே தெய்வபக்தி; அதுவே ஆனந்தம் என்பது மார்க்கர் கொள்கை. இந்நிலையை அடையச் சாதாரண மனிதனுங்கூடத் தைரியமாக முயலுமாறு அவர் வழிகாட்டி யிருக்கிறார்.

ரோமாபுரிச் சக்ரவர்த்தி
மார்க்க அரேலியருடைய

# ஆத்ம சிந்தனை

காலையில் எழுந்ததும் அடியிற் கண்டபடி உனக்குள் சிந்தித்துக்கொள் :—

இன்று நான் கலகக்காரனைக் காண்பேன். குரூரமான இம்சையைப் பார்ப்பேன். நன்றி கெட்டவனைக் காண்பேன். மரியாதை யற்றவன், மோசக்காரன், பொறாமைக்காரன் முதலிய எல்லோரையும் சந்திப்பேன். அவர்கள் குற்றங்களுக் கெல்லாம் காரணம், நன்மை தீமை அறியாத அவர்களுடைய அறியாமையே யாகும். ஆனால், நானோ, நன்மை தீமைகளை நன்கு அறிவேன். நன்மையில் எனக்கு அழகு தோன்றுகிறது. தீமையில் அழகின்மையும் அவலக்ஷணமும் காண்கிறேன். என்பால் ஒருவன் தீங்கு செய்தால், அவன் எனது உறவினன் என்பது எனக்குத் தெரியும். உடல் உறவால் உடன்பிறந்தானல்லனாயினும், ஆன்ம நேய ஒருமைப்பாட்டால் அவன் எனக்கு உடன்பிறந்தவனே. பரம்பொருளில் ஒரு பாகம் நம்மிருவர் உள்ளத்திலும் இருக்கிறதல்லவா? அவன் எனக்கு என்ன தீங்கு செய்ய முடியும்? என்னைத் தவிர, யாரும் என்னைக் கெடுக்க முடியாது. தீங்கிழைப்பவன் எனது தம்பியே யாதலின், அவன்மீது நான் கோபமோ, வெறுப்போ கொள்ளலாகாது.

உலகத்திலுள்ள நாம் எல்லோரும் ஒன்றுபட்டு வாழப் பிறந்திருக்கிறோம். உடலிலுள்ள கைகளும் கால்

களும் கண்ணிதழ்களும் மேல்வரிசை கீழ்வரிசைப் பற்களும்போல, நாமும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இக்கடமையை மறந்து ஒருவருக்கொருவர் மாருக வேலை செய்வது இயற்கை அமைப்புக்கு முரணாகும். வெளியே காட்டாமல் ஒருவன்மீது உள்ளத்தில் கோபமாவது வெறுப்பாவது கொள்வதும் முரண்படுவதே யாகும்; இயற்கை யமைப்பின்படி உடன்பாட்டுழைப்பு ஆகாது.

2. 'நான்' என்று சொல்லும் இவ்வுருவம் உண்மையில், தசை, மனம் இவற்றின் கூட்டுறவே. ஆகையால், எக்கணமும், இப்பொழுதும்கூட இறக்கும் தருணமே என்று கருது. இவ்வூனுடலைப் பெரிதாகக் கருதாதே. உடல் என்பது ரத்தமும் எலும்பும் தசையும் இவ்வளவே; வேறல்ல. உயிரும்தான் என்ன? வெறுங் காற்றேயாகும். இப்பொழுது இருந்த காற்று அடுத்த கணத்தில் இல்லை. அது மாறி மாறி உட்சென்று வெளியே வருகின்றது.

உடலும் உயிரும் தவிர்த்து, சரீரத்தை ஆண்டுவரும் உள்ளமே எஞ்சி நிற்கிறது. சிந்தித்துப்பார். உனக்கு வயதாய்விட்டது. ஏன் இந்த மனம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டும்? இங்கும் அங்கும் அலை கடலில் அலையும் துரும்புபோல் ஏன் அல்லற்பட வேண்டும்? உலகத்தில் உடன்பிறந்த மக்களைப்பற்றி ஒரு நினைவுமின்றி உனக்கு நேர்ந்த விதியைப்பற்றி ஏன் வருந்தவேண்டும்? வரப்போவதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

3. உலகத்தின் நன்மைக்கே எல்லாம் நடக்கிறது. பூத அணுக்கள் சேருவதும் பிரிவதுமே எல்லாப் பொருள்களின் தோற்றத்துக்கும் காரணம். அணுக்களாலான மக்கள் தேகங்களும் போவதும் கூடுவதும் பிரிவதும் உலக அமைப்புக்கு அவசியமாகும். விதிவசத்தால் நடப்

பதுங்கூட உலக அமைப்புக்கு வேண்டியதே யாகும். சகலமும் தெய்வாதீனமே. அதற்குமாருக ஓர் அணுவும் அசையாது. உலகத்தின் ஒரு பாகமாகிய நீ உலகத்திற்காக நடக்கும் எதையும் துக்கமாக எண்ணக்கூடாது. உலக அமைப்பைக் காப்பதற்கு வேண்டியதும், உலக அமைப்பில் இயல்பாய் உண்டாவதுமான ஒரு நிகழ்ச்சியை, அந்த அமைப்பில் ஒரு சிறு பகுதியான நீ நன்மை யென்றே கருத வேண்டும். உலகத்திலிருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் சதா காலம் உருவம் மாறிவருவதும் சிதைவு படுவதும் இயல்பாகும். அப்படிச் சிதைவுபடுவதும் மாறுவதுமே உலகத்திற்கு உயிராகும். இந்த உண்மையை அறிந்து நீ சாந்தி அடைய வேண்டும். இந்தத் தத்துவத்தைக்கொண்டு உன் வாழ்க்கையையும் நடத்த வேண்டும். புத்தகப் படிப்பைத் தள்ளு. அது உதவாது. மரணத் தருவாயில் கற்றதும் கேட்டதும் திருப்தி அளியாது. அடைந்த சுகங்களைப்பற்றித் தெய்வத்திற்கு உண்மையில் நன்றியுள்ளவனாய், பட்ட துன்பங்களெல்லாம் உலக அமைப்பில் இன்றியமையாத நிகழ்ச்சிகள் என்று உணர்ந்து, சாந்த சிந்தையுடன் உயிர்விடவேண்டும்.

4. மனதை உறுதிப்படுத்தாமல் நீ எத்தனை நாட்கள் கழித்திருக்கிறாய்? எவ்வளவு காலத்தை வீணாக்கி யிருக்கிறாய்? நினைத்துப் பார். இனி தாமதிக்கக் கூடாது. இப்போதாவது உண்மையை அறிந்து சாந்த நிலையை அடைய வேண்டும். உன்னை ஒரு பாகமாகக்கொண்ட இந்த உலக அமைப்பு எத்தகையது? அந்த அமைப்பை நடத்தும் பராசக்தி எது? அந்த சக்தியிலிருந்து நீ பறந்ததோர் பொறி. உனக்குள்ள காலம் மிகக் குறுகியது. அதற்குள் ஞான வெளிச்சத்தை உள்ளேவிட்டு உன் புத்தியை மூடிக் கொண்டிருக்கும் இருளை நீக்கிக்கொள்ளாவிடில் உனக்

குள்ள ஆயுள் முடிந்தே போகும். அவகாசமே இராது.

நல்ல குலத்தில் பிறந்த நீ, மானுட ஜன்மம் எடுத்த நீ, உனக்கென்று அமைந்த காரியத்தை, தருமமும் ஆடம்பர மற்ற பெருந்தன்மையும் பொருந்திய முறையில், செய்து முடிப்பாயாக. ஜீவகாருண்யம், சுதந்திரம், நியாயம் இம் மூன்றையும் புறக்கணிக்காத முறையில் செய். அதனால் சாந்தி பெறுவாய். இது என் கடைசி வேலை, இத னுடன் என் ஆயுள் முடிந்தது என்று எண்ணி ஒவ்வொரு வேலையையும் செய்து முடிப்பாயாக. புத்தியைக் கெடுக்கும் ராகத்துவேஷாதிகளை விட்டு, ஆணவம், பொய்வேஷம், தெய்வத்தின்பேரில் அதிருப்தி, இந்த உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் உன் கடமைகளைச் செலுத்து. தருமத்தி னின்று பிறழாமல் உள்ளத்தில் அமைதியை நிறுத்திக் கொண்டு வாழ்க்கையை நடத்தல் உண்மையில் மிக எளிது என்பதைக் காண்பாய். இதற்கு மேல் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

ஐயோ மனமே கேட்டையே தேடுகிறாயே! இதற்கு முடிவு இல்லையா? உன் ஆன்மாவுக்காக நல்லது செய்து கொள்ள உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம் தீர்ந்து போய்விடுமே! உன் வயது என்ன? அந்திய காலம் கிட்டிவிட்டதே. இன்னும் உனக்கு அறிவு வரவில்லையே! உன் உள்ளத்தை அநாதையாக விட்டுவிட்டு மற்றவர்கள் உள்ளத்தை நம்பிப் பிழைக்கப் பார்க்கிறாயே, மூட மனமே!

புற உலகத்தில் இதுவும் அதுவும் உன் உள்ளத்தை துன்புறுத்துகிறதா? ஏதேனும் நல்ல காரியத்தில் உள்ளத் தைச் செலுத்தித் துன்பத்தை மறப்பாயாக. ஆனால் வாழ்க் கையின் உண்மைப் பொருளை அறியாமல் இதுவும் அதுவும்

செய்வதில் உயிரை மாய்த்துக்கொண்டு அமைதி யிழந்து போவது மதியீனம். எல்லாக் காரியங்களும் எல்லா எண்ணங்களும் ஒரு தருமத்திற்குள் அடங்கி நிற்கும் படிச் செய்துகொள்வாயாக. அதுவே அமைதிக்கு வழி.

மற்றவர்கள் உள்ளத்தில் என்ன நடைபெறுகிறது, அவர்கள் என்ன நினைக்கிறார்கள் அவர்கள் என்ன நினைக்க வில்லை என்றிவ்வாறு கவலைப்பட்டுச் சாவதில் துக்கமே விளையும். உன் உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக்கொள். அதுவே சுகம். தன் உள்ளத்தின் நிலையைக் கவனியாமல் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படுகிறவனுக்குச் சுகம் இல்லை.

கோபத்தினால் செய்யும் அக்கிரமங்களைவிட ஆசையி னால் செய்யும் அக்கிரமங்களில் பாபம் அதிகம். கோபத் துக்கு இரையானவன், அதனாலேயே ஓரளவு துன்பப்படு கிறான். மதியை இழக்கும்போது அவன் உள்ளமும் நோவு அனுபவிக்கிறது. காம வேகத்துக்கு ஆளாகியோ, வேறு ஆசைகளால் தூண்டப்பட்டோ ஒருவன் செய்யும் குற்றத்தில் இது கிடையாது: நோதல் இன்றி, பாபகாரி யம் செய்கிறான். ஆகையால் அதுவே பெரும் குற்றம்.

5. எப்போதும் மறவாமல் நினைவில் வைக்கவேண் டியது இது. "உலகம் முழுவதும் ஒரு ஜீவ அமைப்பு. அதன் இயல்பு என்ன? அந்த உலக அமைப்பில் ஒரு பாக மாகிய "நான்" என்பதன் இயல்பு என்ன? அதற்கும் இதற்கும் என்ன பரஸ்பர சம்பந்தம்? சமஸ்த ரூபத்திற் கும், நான் என்னும் இந்தப் பகுதிக்குமுள்ள சம்பந்த த்தை அறியவேண்டும். அந்த சமஸ்த ரூபத்தின் இயல் புக்கு இசைந்தே அதன் பகுதியாகிய நானும் நடந்து கொள்ள வேண்டும். அந்த ஜீவ சம்பந்தத்திற்கும் இதற் கும் எதுவும் தடையாக இருக்கக்கூடாது.

6. எந்த நிமிஷத்தில் உயிர்நீங்கிப் போக வேண்டுமானாலும் அதற்குச் சித்தமாய் இருக்குமாறு எல்லா விஷயங்களிலும் உன் எண்ணமும் பேச்சும் செயலும் இருக்கவேண்டும்.

உயிர் நீங்கிப்போவதில் என்ன துன்பம்? மனிதர்களை விட்டுத் தேவர்களுடன் வாழ்வதில் என்ன கஷ்டம்? மனிதர்கள் தீங்கிழைப்பார்கள். தேவர்கள் தீங்கிழைக்க மாட்டார்கள். தேவர்கள் இருப்பது உண்மையல்லவென்றாலும், அல்லது அவர்கள் இவ்வுலகத்தை நடத்துவது பொய் என்றாலும், அப்போதும் தான் என்ன? தெய்வத்தால் நடத்தப்படாத உலகத்தில் உயிர் நீங்கிப்போவதில் துன்பம் என்ன? ஆனால் உண்மை இதுவல்ல. உலகம் கடவுளால்தான் நடத்தப்படுகின்றது. மேலும் மனிதன் துன்பத்தில் அகப்பட்டுக்கொள்ளாமல் தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ள அவனுக்குப் பூரண சுதந்திரமும் உபாயங்களும் கடவுள் கொடுத்திருக்கிறார். எது உண்மையில் தீங்காகுமோ, அதிலிருந்து தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ள மனிதனுக்கு வழியுண்டு, எந்தத் தீங்குகளைத்தான் நீக்கிக்கொள்ள முடியாதோ அவை அவனுக்கு உண்மையான துன்பங்களாய் இருந்தால், அவைகளினின்று தப்பவும் தெய்வம் மனிதனுக்கு வழிகாட்டியிருக்கும். புற உலகத்திலிருந்து வரும் விஷயம் எதாயினும் அது ஆத்மாவைப் பாதிக்காது. ஒரு மனிதனுடைய ஆத்மாவைக் கெடுக்கக்கூடாத ஒரு விஷயம் எப்படி அவனுக்குத் துன்பமாகும்? ஒருவனுடைய ஆத்மாவைப் பாதிக்காத எதையும் உண்மையில் தீங்கு என்று சொல்ல முடியாது. தெய்வம் அவைகளை அறியாமல், அல்லது அறிந்து நீக்கமுடியாமல், அல்லது அவைகளினின்று மனிதன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தகுந்த

உபாயம் தேடிக்கொடுக்க முடியாமல் விட்டுவிட வில்லை.

உலகத்தில் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் வேற்றுமையின்றித் தாறுமாருய்ச் சுகமும் துக்கமும் உண்டாகின்றன. இவை உண்மையான சுகமும் துக்கமுமானல் இவற்றைத் தடுக்க தெய்வத்தால் முடியவில்லையா? நல்லவர்களுக்குச் சுகமும், தீயவர்களுக்குத் துக்கமும் உண்டாகுமாறு செய்ய முடியாமல் தெய்வம் இப்படி விட்டுவிடவில்லை. ஒவ்வொரு மனிதனுடைய சுகமும் துக்கமும், நன்மையும் தீமையும் அவனுடைய சுதந்திரத்தில் இருக்கின்றன. மதிப்பும் அவமதிப்பும், சுகமும் துக்கமும், செல்வமும் வறுமையும் மக்கள் குணத்திற்குத் தகுந்தபடி இராமல், தக்கவர்களுக்கும் தகாதவர்களுக்கும் நேர்கின்றன. ஆராய்ந்து பார்த்தால், இவைகளில் உண்மையான நன்மையும் கிடையாது; தீமையும் கிடையாது. அவைகளைக் கண்டு இவை நல்லவை, இவை தீயவை, இவை இன்பம், இவை துன்பம் என்று கருதலாகாது.

7. நமக்குள் அறிவை உபயோகித்து நாம் சிந்திக்க வேண்டும். உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் எவ்வளவு சீக்கிரம் அழிந்து போகின்றன? மனிதனுடைய தேகம் போகிறது; அழிந்து பஞ்சபூதங்களுடன் சேர்ந்து மறைந்து அவனைப்பற்றிய நினைவுகூடச் சில நாட்களுக்குப் பின் இல்லாமற்போகிறது. உலக விஷயங்களின் உண்மை என்ன? சில நமக்குச் சுகம் தருவனபோல் ஏமாற்றி நம்மை வலையில் இழுக்கும். சில கஷ்டம் தருவனபோல் பயமுறுத்தும். சில நம்முள் அகங்காரத்தை உண்டாக்கும். இவை எல்லாம் உண்மையில் எவ்வளவு அற்பமானவை; பயனற்றவை; இழிவானவை; நிலையற்றவை. புகழ்

என்பது உண்மையில் என்ன? எப்பேர்ப்பட்டவர்களுடைய மதிப்பும் பேச்சும் கூடிப் புகழ் என்பது உண்டாகிறது? மரணம் என்றால் என்ன? அதை நன்கு ஆராய்ந்தால், அது பிரகிருதியின் ஒரு இயல்பே தவிர வேறொன்றுமில்லை என்பது புலப்படும். இயல்பாய் நடக்கும் ஒரு விஷயத்தைக் கண்டு குழந்தைகள் அஞ்சும். அறிந்தவர்கள் ஏன் அதைக் கண்டு மனம் கலங்கவேண்டும்? மனிதன் இறப்பது இயல்பு மாத்திர மல்ல. இறப்பதால் பிரகிருதியில் புத்துயிர்கள்கூட உண்டாவதற்கு வழி யாகும்.

அறிவாளியானவன் ஆராய்ந்து பார்க்கவேண்டியது இதுவே: "மனிதன் தெய்வத்தை எவ்விதம் அணுகுவான்? தன்னிலிருக்கும் எந்த அம்சம் தெய்வீகமானது? ஒரு மனிதன் எந்தநிலையில் இருக்கும்போது அவனுடைய தெய்வீகமான சுபாவம் மேலிட்டுத் தெய்வத்தை அணுகும்?"

8. உண்மையில் தன்னுடைய சுகத்திற்கு ஏது அல்லாத பல விஷயங்களில் மனதைச் செலுத்தியும், அயலான் மனதிலுள்ள எண்ணங்களைத் தோண்டிப் பார்க்கக் கவலை கொண்டும் இருப்பவனுடைய நிலைமை வருந்தத் தக்க நிலையாகும். மனதைத் தனக்குள் செலுத்தி உள்ளே மறைந்து கிடக்கும் ஆன்மாவை கண்டுகொண்டு அதற்கு உண்மையான தொண்டு செய்வதில் சிந்தனையைச் செலுத்துவதே வழி யென்பதை அறியாமல் பல முயற்சிகளில் தலையிட்டுக் கவலைப்படுகிறான். தன்னுள் மறைந்து நிற்கும் ஆத்மாவுக்கு நன்மை செய்துகொள்வது எப்படியென்றால், காமமும், அவிவேகமும், மனக்கலக்கமும் தன் உள்ளத்தில் சேராமல் காத்துக்கொள்வதே. விதியால் வந்த சுகமும், விலக்க முடியாத துக்கமும், உலகத்தை நடத்தும் தெய்வம் கொடுத்த வரப்பிரசாதமென்று வணக்கத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனிதர்கள் செய்த செயல்களை, அவை தனக்கு நன்மையே யாயினும் தீமையேயாயினும், உறவினர் செய்தது என்று விருப்பத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். எவனாவது ஒருவன் உனக்கு ஒரு தீங்கிழைத்தால், நன்மை தீமை என்னும் வித்தியாசத்தை அறியாத ஒருவன் செய்த செயல் என்று அவன்பால் இரங்கவேண்டும். கண்தெரி யாத குருடனுக்கு வெண்மை, கருமை என்பது தெரியா தல்லவா? அவனைக் கண்டு கோபிக்காமல் இரங்குவதைப் போல், நன்மை தீமை என்னும் வித்தியாசம் அறியாதவர் களைக் கண்டும் நாம் இரங்கவேண்டும் அல்லவா?

மூவாயிர ஆண்டுகள் பிழைத்துச் செத்தாலும், அல்லது முப்பதினாயிரம் ஆண்டுகளே பிழைத்தாலும் மரணம் என் பது ஒரு க்ஷணத்தைப்பற்றிய நிகழ்ச்சி. அதற்கு மேற் பட்ட விபத்தல்ல. கழிந்த காலங்கள் தீர்ந்துபோயின. அவை உனதல்ல, வருங்காலம் உனதல்ல வென்று சொல்ல வேண்டியதில்லை. கைக்கு வாராத பொருளை ஒருவன் இழந்தான் என்றால் பொருளற்ற பேச்சு. ஆகையால் மரணத்தால் ஒருவன் இழப்பது அப்போது நிகழுங்கால மாகிய ஒரு கணமே யாகும். எவ்வளவு நீண்ட ஆயுளும், மிகக் குறைந்த ஆயுளும் ஒன்றே யாகும். ஒவ்வொரு நாளும் தீர்ந்து தீர்ந்துபோய் எஞ்சி நிற்பது நிகழும் காலம் ஒன்றே. அது எல்லாருக்கும் ஓரளவு கொண்டதே. இதை உணரவேண்டும். தவிர, உலகத்தில் நாம் காணும் விஷ யங்கள் அனைத்தும் திரும்பத் திரும்பப் பழைய விஷயங் களே யாகும். புதிய தொன்று மில்லை. ஒன்றையே நூறு வருஷம் பார்த்தால் என்ன? இருநூறு வருஷம் திரும்பத் திரும்பப் பார்த்தால் என்ன? இதற்காக மரணத்தைப் பற்றிக் கவலைப்படுவானேன்? ஆயுளைப்பற்றி ஆசை கொள்வானேன்?

எந்த நிகழ்ச்சியும் நாம் எவ்வாறு பயன்படுத்து கிறோமோ அதன்படி நல்லதோ கெட்டதோ ஆகிறது. நம்முடைய புற நிகழ்ச்சிகள் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. அவற்றை எவ்வாறாயினும் செய்துகொள்ளும் சக்தி மனதுக்கு உண்டு.

9. உலகம், அதிலுள்ள கோடிக்கணக்கான பிராணி கள், உயிரற்ற வஸ்துக்கள் இவை அனைத்தும் ஒன்றுக் கொன்று பரஸ்பர சம்பந்தத்துடன் அமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பாகும். உலகத்திலிருந்து ஒருவன் தன்னை வேறுபடுத்திக்கொண்டு வாழ்வது உடம்பில் ஒரு கொப் புளம் அல்லது பரு உண்டாவது போலாகும். சரீர சம் பந்தம் இருந்தும் அந்த சரீரத்தின் அமைப்பில் சரியாய்ச் சேராமல் நோய் இழைப்பது கொப்புளம் அல்லது புண். ஒருவன் உலகத்திலுள்ள ஜீவராசிகளுடன் ஐக்கியப்படா மல் தன்னை வேறுபடுத்திக்கொள்வதும் ஆத்மத் துரோக மாகும். இந்த உலகத்தில் ஒரு பாகமாகிய எனக்கு நேரிடும் எந்த சம்பவத்தைக் குறித்தும் நான் வருத்தப் படக்கூடாது. வருத்தப்பட்டால் உலக அமைப்பில் சேரு வதற்கு இணங்காமல் அதற்கு இடையூறு விளைவித்ததைப் போலாகும். உலகம் முழுவதும் அடங்கியுள்ள பராசக் திக்கு அது துரோகமாகும். ஒருவனைத் துவேஷித்தாலும், அல்லது ஒருவன்மேல் கோபங்கொண்டு தீங்கு செய்ய நினைத்தாலும் அது உலகத்தினின்று வேறுபடும் குற்ற மாகும். நேர்ந்த இன்பத்தினாலாவது, துன்பத்தினாலாவது மனநிலை கெட்டால் அதுவும் துரோகமாகும். கபடம், பொய், மோசம் இவை கலந்த பேச்சும் செயலும் துரோக மாகும். பயனில்லாத செயலும், சிந்தனையும், குறி கோளற்ற வாழ்க்கையும் அவ்வாறே துரோகமாகும். எந்தச் சிறிய காரியத்தையும் மனதில் நிலைகொண்ட

தருமத்தின்படி செய்ய வேண்டும். அரசன் கட்டளைகளுக்கும் அமைப்புக்கும் கீழ்ப்பட்டு நாம் நடப்பதுபோல், பகுத்தறிவு உள்ள ஒவ்வொருவனும் எல்லா ஆட்சிகளுக்கும் மேலானதும் வழிகாட்டியுமான ஆட்சியும் அமைப்புமான இந்த உலக இமைப்பின் தெய்வீக தருமத்தை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிடில் பிரபஞ்ச ஆட்சிக்குத் துரோகம் செய்தவாறுகும். அதனுல் ஆத்ம துரோகமு மாகும்.

10. மனிதனுடைய ஆயுளில் கழிந்த காலம் போக உண்மையில் இருப்பது ஒரு கண நேரமே. வாழ்வு என்பது ஆற்று நீரைப்போல் ஓடி ஓடி கழிந்துபோகும் ஒரு நிகழ்ச்சியே, அவன் மனதைக் கவரும் விஷயங்களும் நிலையற்றவை. மனிதனுடைய உணர்ச்சியும் தெளிவற்றது. உடலும் அழிந்துபோகும் பொருள்களால் ஆக்கப்பட்டது. மனமும் ஆற்ருேட்டத்தில் ஒரு சுழி போன்றது. விதியும் அறியக்கூடாதது. புகழும் அறிந்தோர் ஆக்குவ தல்ல, ஒழுங்கற்றது. சுருங்கச் சொல்லின், உடலுக்குச் சம்பந்தப்பட்ட தெல்லாம் நீரோட்டம். மனதுக்குச் சம்பந்தப்பட்ட தெல்லாம் நிலையும் உருவமுமற்ற கனவு. ஆயுள் நாளெல்லாம் ஒரு போராட்டம், அல்லது தேசாந்திரியின் யாத்திரை. இறந்தபின் அடையும் புகழும் வெறும் அந்தகாரம். இவற்றினிடையில் மனிதனுக்கு எது வழிகாட்டியாகும்? ஞானம் ஒன்றே. இந்த ஞானம் எதுவென்ருல், ஒவ்வொருவன் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் தெய்வத் தன்மையுடைய ஆத்மாவுக்குத் தீங்கு நேரிடாமல் சுத்தமாக வைத்துப் பாதுகாப்பதே. சுகத்திற்கும் துக்கத்திற்கும் மேலாக ஆத்மாவை நிறுத்திவைப்பதே ஞானமாகும். பயனில்லாச் செயல், மோசம், கபடம் இவைகளைச் செய்யாதிருத்தலே ஞானம். தனக்கு மற்ருெருவன்

இது செய்யவேண்டும், இது செய்யாமல் ஒழியவேண்டும் என்று எதிர்பாராதிருத்தலே ஞானம். எது நேரிட்டாலும் எந்தக் கடவுள் என்னைப் படைத்தாரோ, அல்லது எந்தப் பிரகிருதி அமைப்பில் நான் ஒரு பாகமாய்ப் பிறந்தேனோ, அந்தத் தெய்வம், அந்தப் பிரகிருதியே அதற்கும் காரண மென் றறிந்து, நேரும் சுகம் துக்கம் இரண்டையும் வருத்தமின்றி ஒப்புக்கொள்வதே ஞானம். முடிவில் சாந்த சித்தத்துடன் மரணத்தை எதிர்கொள்வதே ஞானமாகும். மரணம் என்றால் என்ன? எந்த மூலதாதுக்கள் சேர்ந்து உடல் உண்டாயிற்றோ, அந்தந்தத் தாதுக்களாக மறுபடி உடல் பிரிந்துபோவதே மரணம். இதைக் கண்டு ஏன் கலங்கவேண்டும்? நாம் யார்? சில தாதுக்களின் சேர்க்கை யினால் தானே நாம் உண்டாயிருக்கிறோம். அந்தத் தாதுக் கள் ஓயாமல் உருவம் மாறியும் அமைப்பு மாறியும் இருந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். அதைப்பற்றிக் கவலையில்லை. அவ்வாறிருக்க, அந்தப் பொருள்களின் சேர்க்கையாகிய இந்த உடலின் மாறுதலைக் கண்டு ஏன் அஞ்சவேண்டும்? மரணம் பிரகிருதியின் இயல்பாகும். இயல்பான ஒரு விஷயம் எப்போதும் தீங்காகாது.

கடமைகளைச் செய்து முடிப்பதை ஒத்திப்போட வேண்டாம். ஆத்ம சுத்திக்கு வேண்டிய முயற்சிகளையும் ஒத்திப்போட வேண்டாம். ஒவ்வொரு நாள் கழிந்ததும் உனக்குள்ள ஆயுளில் ஒரு பாகம் கழிந்துபோயிற்று. மீதியுள்ள நாட்களிலும் எவ்வளவு காலம் விவேகமும் ஆத்மசுத்திக்கு வேண்டிய ஞானமும் பெற்றிருப்பாயோ தெரியாது. சரீரத்தைப் பொறுத்த மட்டில், ஜீரண சக்தியும் ஆசைகளும் முன்போலவே இருக்கலாம். அது மட்டும் இருந்தால் என்ன பயன்? விஷயங்களை உணரும் சக்தியும் கடமைகளை விவேகத்துடன் செய்துமுடிக்கும் அறிவும்

இருக்க வேண்டுமல்லவா? மூப்பில் இவை யெல்லாம் குறையும். ஆயுள் மட்டும் போதாது. மரணம் வருவதற்கு முன்னேயே அறிவு போய்விடும். உணர்ச்சி நுட்பம் அழிந்துபோய்விடும். மனோபலம் போய்விடும். விவேகம் தீர்ந்துபோகும். ஆகையால் ஒத்திப்போடக் கூடாது. அவசரப்பட வேண்டும்.

இயற்கை அழகை உணர்ந்து அனுபவிக்கத் தெரிய வேண்டும். குற்றம்போலும் குறைபோலும் தோன்றுவதிலும் உண்மை அழகு இருக்கிறது. பதனாக வெந்த ரொட்டி அங்கங்கே கறுப்புப் புள்ளிகள் கொண்டிருப்பதில் ஒரு பிரத்தியேக அழகு உண்டு. அதுவே நம்முடைய நாக்கில் தண்ணீர் ஊறச் செய்கிறது. நன்றாகப் பழுத்த பழம் தோல் விரிந்து வெடித்திருப்பதே ஒரு தனி அழகல்லவா? அதை ஒரு குற்றமாக எண்ணுகிறோமா? நெல் கதிர் முற்றிப் பயிர் வணங்கியிருப்பதின் அழகைப் பாருங்கள். என், காட்டு மிருகத்தின் முகத்திலும் வாயிலும் பற்களிலுங்கூட அழகு இருக்கிறது. தனித்து நின்றால் இவை கோரமாகத்தான் இருக்கும். ஆனால், அந்த மிருகங்களின் முழுத் தோற்றத்தில் கலந்து நிற்கும்போது, அழகாகவே இருக்கின்றன. பிரகிருதி அழகை அனுபவிக்கத் தெரிந்தவர்களின் கண்களுக்கு அழகில்லாத வஸ்துக்களே இல்லை. ஒவ்வொன்றிலும் ஒரு தனிப்பட்ட அழகை அனுபவிக்கலாம். சிலையில் செய்யப்பட்ட புலி, கரடி, நாய், பன்றி இவைகளை எவ்வாறு மிக்க அழகென்று அனுபவிக்கிறோமோ, அவ்வாறே உயிர் கொண்ட அந்தப் பிராணிகளின் உறுப்புகளும் அழகாகவே தோன்றும். இயற்கையைப் பற்றி ஞானம் பெற்றவன், விருத்தாப்பிய நிலை அடைந்த ஆண் பெண்களிலும் முதிர்ந்த அழகைக் காண்பான்; இளமைப் பருவங் கூடிய அழகைக் கண்டாலும் அவன்

உள்ளம் கற்பு இழக்காது. மாசு படியாத பார்வை செத்து தியே அழகை மட்டும் அனுபவிப்பான். இயற்கை எவ்வாறு வேலை செய்கிறது என்பதை உணர்ந்த ஞானி இன்னும் பல விஷயங்களில் மற்றவர்கள் காணாதவை களைக் காண்பான்.

11. உன்னுடைய யாத்திரை முடிந்தது. படகிலிருந்து இறங்கும் தருணம் வந்தது. இறங்கிக் கரை ஏறு. மரணத் தைக் குறித்துப் பயப்படாதே. இந்த உயிரை விட்டு நீங்கி வேறு உலகம் சென்றால், அதுவும் தெய்வ ஆட்சிக் குள் அடங்கிய உலகந்தான். ஆகையால், ஏன் பயப்பட வேண்டும்? "இறந்தபின் வேறு உலகம் கிடையாது; உயிர் கிடையாது; உணர்ச்சி கிடையாது" என்றாலும் அதைப்பற்றித்தான் கவலை என்ன? இன்பம் துன்பம் என்று அலைந்து இந்த உடலுக்காக எப்போதும் பாடுபடு வதை விட்டுச் சுகமாக இருக்கலாமல்லவா? அழுகிப் போகும் இந்த ஈன சரீரத்திற்காக எந்நேரமும் தொண்டு செய்வதிலிருந்து பரிசுத்தப் பொருளாகிய இந்த ஆன்மா விடுபடுவது நன்மையேயாகும். சித்தமயமானதும் ஜோதிப் பொருளுமான ஆத்மா ஏன் அழுகி துர்க்கந்த மாகப் போகும் உடலுக்கு அடிமையா இருக்கவேண்டும்?

12. உனக்கு உள்ள காலம் மிகக் குறைவு. அதை வீணாக்க வேண்டாம். உலகத்துக்கு ஏதேனும் ஒரு காரியம் செய்ய அந்தக்காலம் பயன்படுமாயின் சரி, இல்லாவிடில் அயலாரைப்பற்றிச் சிந்தனை செய்துகொண்டு காலத்தை வீணாகக் கழிக்கவேண்டாம். அவன் என்ன செய்கிறான்? இவன் என்ன செய்கிறான்? அதை ஏன் அவன் செய்கிறான்? இவன் என்ன நினைக்கிறான்? அவன் உள்ளத்தில் என்ன எண்ணம், என்ன சூழ்ச்சி? இவை போன்ற கவலைகளைக் கொண்டு, தத்தம் ஆத்ம சுத்தியை மறந்துவிட்டு மற்றவர்

களைக் குறித்தே அறிவையும் காலத்தையும் வீணாக்கிவிடுகின்றோம். பயனில்லாமல் எதேச்சையாக மனம் செல்லுவதைத் தடுத்துக்கொள்ள வேண்டும். அதிலும் தீய எண்ணங்களை அறவே ஒழித்தல் வேண்டும். திடீரென்று ஒருவர், "நீ என்ன நினைத்துக்கொண் டிருக்கிறாய்?" என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளதை உள்ளபடியே, "இதை நினைத்தேன். இது என் மனதிலுள்ள எண்ணம்" என்று எளிதில் சொல்லக் கூடியவாறு மனதைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பிறருக்குச் சொல்லத்தகாத எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும். நீ நினைக்கும் எண்ணங்க ளெல்லாம் பிறருக்கு நன்மை பயக்கத்தக்கவை, தீங்கற்றவை, சுயநலங் கருதாதவை என்று இருக்க வேண்டும். கேவலம் காம இன்பம், துவேஷம், பொறாமை முதலிய இழிவான எண்ணங்கள் மனதில் உதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எந்தக் காலத்திலும் உன் உள்ளம் உள்ளது உள்ளபடி பலர் அறிய வெளிப்பட்டாலும், அதில் வெட்கப்படக் கூடியது எதுவும் இல்லாதபடி வைத்துக்கொள்வாயாக.

இப்படி மனதைப் பழக்கப்படுத்திக்கொண்டு நன்மையே நாடிவரும் மனிதன் தன் சரீரத்தில் கோயில் கொண்டிருக்கும் கடவுளின் உண்மை அடியான் ஆவான். தனக்குள் குடியிருக்கும் தேவாம்சமான ஆத்மாவை எந்த இன்பமும் மாசுபடுத்தாமலும், எந்தத் துன்பமும் நோவுபடுத்தாமலும் அவன் காப்பாற்றிக்கொள்வான். பிறருடைய துவேஷம், அவமரியாதை, குற்றம் ஆகியவைகளால் தன் மனதைக் கலங்கச் செய்யவிடான். இவ்வாறு தன் உள்ளத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு ஆத்மாவைத் துன்புறுத்தும் காமக் குரோதாதிகளுடன் போர் செய்து வெற்றியடைவான். நடுநிலை கொண்டவனாவான்.

சுகம் துக்கம், நன்மை தீமை, எது நேரிடினும் மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வான். உலகத்தின் நன் மைக்கு வேண்டினைன்றிப் பிறர் செயலும், சொல்லும், எண்ணமும் என்னவென்று கவலைப்படாமல் தன் கடமை யைக் கருதி வாழ்வான். தன் செயலையும், சொல்லையும், எண்ணத்தையும் பிழையறக் காப்பான். உலக அமைப் பில் தனக்கு நேர்ந்த சுகம், துக்கம் இரண்டையும் சம மாகவே பாவிப்பான். அறிவுள்ள ஜீவகோடிகள் எல் லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் ஆவர் என்பதை மறக்கமாட்டான். மற்றவர்கள் நலத்தை நாடு வதே மனிதனுடைய இயல்பான தருமம் என்று அறி வான். நல்வாழ்வு வாழ்பவர்களுடைய மதிப்பை மாத் திரம் கருதுவான். தரும வழியில் நில்லாத மற்றவர் களுடைய ஒப்புதலையும், பாராட்டுதலையும் நாட மாட் டான். அவர்களுடைய மதிப்பை ஒரு பொருளாகக் கரு தாது தள்ளுவான். தங்கள் மதிப்பையே தாங்கள் பெருத மதியீனர்களுடைய நன்மதிப்பு எனக்கு என்ன பயன் என்று தள்ளிவிட்டு, விசுவரூப உண்மையைக் கண்டு இயற்கைத் தேவியுடன் ஒத்துவாழும் ஞானிகளின் நன் மதிப்பை அடையத்தான் பாடுபடுவான்.

13. மனமொவ்வாத செயலைச் செய்யாதே. சமூக நன்மைக்கு மாறுபாடாகவாவது, விவேகக் குறைவாக வாவது, மனப்புகைச்சலுடனாவது நடந்துகொள்ள வேண் டாம். பேச்சுத் திறமையினால் உண்மையை மறைக்க வேண்டாம். வீண்பேச்சுப் பேசவேண்டாம். பிறர் காரி யத்தில் பயனின்றித் தலையிட வேண்டாம். உனக்குள் இருக்கும் பரம்பொருளை கௌரவிப்பாயாக. தைரியமும் நீதியும் பொருந்திய மன்னனாக வாழ்வாய். எந்த நிமிஷத் தில் வேண்டினும் உத்தரவு வந்தவுடன் செல்லுவதற்குத்

தயாராக இருக்கும் போர்வீரனைப்போல், மரணத்திற்குச் சித்தமாக இரு. சாட்சியாவது ஆணைச்சொல்லாவது வேண்டாத சத்தியவானாய் இரு. பிறருடைய ஆதரவை எதிர்பாராமல் சிரித்த முகத்துடன் சுதந்திரமாய் வாழ்வாய். பிறருடைய ஆறுதலை வேண்டாமல் உள்ளத்தில் சாந்தத்தை அமைத்துக்கொள்வாய். பிறர் மேல் சாராது நிற்பதே உண்மை சுதந்திரம்.

14. மனிதனுக்கு உலகத்தில் நன்மை எது? யோசித்துப் பார். நீதி, சத்தியம், தெளிவான புத்தி, தைரியம் இவைகளைவிட வேறு எது சுகம் தரும்? அவனவன் உள்ளத்தை அவனவன் சுத்தமாய் வைத்துக்கொண்டு அறிவுள்ளவனாக நடந்துகொள்வது ஒவ்வொருவனுக்கும் உள்ள சுதந்திரம். தன் செயலுக்கு மீறியது விதி. அதை ஒருவன் தடுக்கவாவது மாற்றவாவது முடியாது. ஆனால், ஒருவனுக்கு நேர்ந்தது நல்லதேயாயினும், தீயதேயாயினும் இரண்டையும் சமமாகக் கொள்ள அவனவன் மனமே காரணம். இவ்விதம் மனிதன் தன் மனதை நிறுத்திக்கொள்ளும் வகையினால் எவ்விதத்திலும் சுகம் அடையலாம். இதைத் தவிர்த்து வேறு சிறந்த வழி உண்டென்று உனக்குத் தோன்றினால், உண்மையில் அதனைப் பின்பற்றிப் போவதில் தடையில்லை. ஆனால், மனிதனுக்குள் இருக்கும் தெய்வீக தத்துவமே எல்லாவற்றிலும் உயர்ந்தது. அதைக்கொண்டு மனதை அடக்கி, எண்ணங்களைக் காத்து, புலன்களால் இழுக்கப்படாமல் விலகி நின்று, தெய்வத்திற் கடங்கி உலகத்தின் நன்மையை நாடி நடப்பதே சிறந்தது. மற்றது எல்லாம் அற்பம், விரும்பத் தகுந்ததல்லவென்று நீ கண்டுகொள்வாயானால், பிறகு எதைச் சிறந்ததென்று அறிந்தாயோ, அதையே உறுதியாகக் கடைப்பிடித்து மற்றவைகளில் மனம் போகவிடாதே.

மேலான நன்மை பயக்காது என்று கண்டுகொண்ட விஷயங்களில் உன் மனம் செல்ல ஒரு சமயம் விட்டுவிட்டாயானுல், பிறகு அதைத் தடுப்பது அரிது. எது கைகண்ட மருந்தோ அதை அடைய முடியாமல் போகும். உலக நன்மையும் மேலான அறிவுக் கிசைந்ததுமான ஒரு பொருள் இருக்க, அதை விட்டுவிட்டுப் பொன்னும், மண்ணும், புகழும், போகமும் தேடிப்போவது மூடத்தனமாகும்.

ஒரு வேளை நினைக்கலாம்: "இச் சுகபோகங்களை நாடினுலும் அதன் கூடவே உண்மைப் பொருளான ஆத்ம நிலையையும் காப்பாற்றிக்கொள்ளலாம். சிற்றின்ப வேட்டை என் மனதை முழுதும் கவரவில்லை. ஆசைகளை அதிகரிக்கவிடாமல் அடக்கி நடத்தலாம்" என்று நீ நினைக்கலாம். இது மோசம் போகும் வழியாகும். சில காலம் உனக்கு அடங்கினுற்போலத்தான் இவை யிருக்கும். பிறகு நிச்சயமாய் உன்னை முழுதும் கவிழ்த்துத் தள்ளிவிடும். இடங்கொடுத்தபின் அவைகளைப் பின்னுல் எதிர்க்க முடியாது. மற்ற எண்ணங்களுக்கு இடங்கொடுக்காமல், மனதைச் சுத்தமாயும் சுதந்திரமாயும் அமைத்துக்கொண்டு, எது உறுதிப்பொருள் என்று கண்டாயோ அதையே பின்பற்று. அதுதான் சாதனம்.

"இன்பம் தருவதை ஏன் விலக்க வேண்டும்?" என்று சிலர் வாதிப்பார்கள். ஆனுல், ஆராயவேண்டியது இன்பம் என்பது யாது? கேவலம் மிருகப் பிராயமான சுகம் சுகமல்ல. மனிதன் அறிவுள்ள ஜன்மம் எடுத்திருக்கிருன். அந்த அறிவுக்கு இயைந்த உயர்வான இன்பந்தான் உண்மையான இன்பம். உடலுக்கு மாத்திரம் இன்பம் தருவதை ஒரு பொருளாக மதிக்க வேண்டாம். இப்படி உன் அறிவை உபயோகித்து மதிக்கத்தகாததை உறுதி

யுடன் விலக்கு. ஆனால், அப்படி விலக்குவதிலும் கர்வம் கொள்ளாமல் அடக்கத்துடன் நடந்துகொள்.

சத்தியத்தை விட நேரிடும்படியான எதையும் சந்தோஷம் தரும் என்று ஆசைப்படாதே. அவ்வாறே எந்தப் பொருளில் உன் கௌரவத்துக்கு ஹானி உண்டாகுமோ அது விரும்பத் தகாதது. பிறரை வெறுக்கவோ, விரோதிக்கவோ, அல்லது உண்மையை மறைத்து வேஷம் போடவோ செய்யும் எந்தப் பொருளும் உனக்கு நன்மை தராது. அதைத் தேட வேண்டாம். பிறர் அறியாமல் திரைக்குப் பின்னும் சுவருக்குப் பின்னும் மறைந்து அனுபவிக்கும் எந்தச் சுகமும் உனக்கு நன்மையல்ல, அதை ஆசைப்படாதே. ஒவ்வொருவன் உள்ளத்திலும் அறத்தைப்பற்றி நிற்கும் தெய்வம் ஒன்று இருக்கிறது. அதை நம்பி, தன் வாழ்க்கையை நடத்துகிறவனுக்கு துக்கம் என்பது கிடையாது. அவன் வனத்தைத் தேடியும் போகவேண்டாம் அவனுக்குச் சுற்றத்தாரின் கூட்டமும் வேண்டாம்; அவன் எதற்காகவும் தேடி அலைய மாட்டான். எதையும் வெறுத்து ஓடமாட்டான். அவன் தன் உயிர் உடலில் இருக்க வேண்டும் என்று கவலைப்பட மாட்டான். ஆயுள் நீடித்தாலும் ஒன்றே, உடனே உயிர் நீத்தாலும் ஒன்றே என்று இருப்பான். ஞான வாழ்வு நடத்திவருபவனுக்கு மரணம் எப்போது வரினும் ஒன்றே; மலம் கழிப்பதுபோல் உயிரை சந்தோஷமாக நீப்பான்.

15. எதிலும் ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வரும் விவேகம் படைத்திருக்கிறாய். இந்த விவேகத்தைப் பயபக்தியுடன் உபயோகிக்கக் கடவாய். இதுவே மனிதனைக் காக்கும் பெருந்துணை. இயற்கைத் தருமத்திற்கும் மனித சொரூபத்திற்கும் மாறுபட்ட எண்ணங்கள் மனதில் மறுபடியும் தோன்றாதவாறு தள்ளிக் காப்பது இந்த

விவேகமே. இதற்கு விஷயங்களை நிதானித்து ஆராய வேண்டும். நல்ல ஜனங்களோடு அன்புடன் நெருங்கிப் பழக வேண்டும். தெய்வ பக்தி இருக்க வேண்டும்.

16. உன் வாழ்வில் இடையே எது நேர்ந்தாலும் அதை உள்ளது உள்ளபடி கிரமமாய் ஆராயுந் தன்மையை நீ அடைய வேண்டும். அதுவே பெருந்தன்மையை உண்டாக்கும். எதைக் கண்டாலும் இதனால் உலகத்திற்கு என்ன பயன்? உலக அமைப்பில் இதற்கு என்ன ஸ்தானம்? மனிதனுக்கு இதனால் நன்மை தீமை என்ன என்பதை ஆராய வேண்டும். பிரபஞ்சம் முழுதும் ஒரு பெரிய ராஜ்ஜியம். உலகத்திலுள்ள பல தேசங்களும் ஆட்சிகளும் அதனுள் அடங்கிய சிறு குடும்பங்களைப் போன்றன வென்பதை நீ நினைவில் வைக்கவேண்டும்.

ஒரு சம்பவம் நேரிட்டால், "இந்தச் சம்பவம் எத் தகையது? எப்பொருள்கள் சேர்ந்து இது உண்டாயிருக் கிறது? இது எவ்வளவு காலம் இருக்கும் இயல்புள்ளது? இதனால் என் உள்ளத்தில் பொறுமை, தைரியம், சத்தியம், நம்பிக்கை, சுவாதந்திரியம் முதலிய குணங்கள் உண்டா கின்றனவா?" என்று இவ்வாறு ஆராய வேண்டும்.

எது நேர்ந்தாலும், "இது ஆண்டவன் செயல். இது நெய்யும் வஸ்திரத்தில் ஊடும் பாவும் போல், உலகவாழ் வின் இயல்பில் நெய்யப்பட்ட ஒரு சம்பவம். இதை ஏன் நான் துக்கமாகப் பாவிக்க வேண்டும்?" என்று சிந்தித்துக் கொள்ள வேண்டும்.

எவனாவது தீங்கு செய்தானேயாகில், "இவன் என் குலத்தைச் சேர்ந்தவன்; என் உறவினன்; என் தோழன்; அறிவில்லாதவன். தன் இயல்புக்கு இசைய இவன் நடந்து கொண்டிருக்கிறான். நானோ அறியாதவ னல்ல. ஒன்று பட்டு வாழவேண்டிய சமூக தருமத்தை நான் மறக்கக்

கூடாது; நீதியுடனும் கருணையுடனும் நான் நடந்து கொள்ள வேண்டும். உண்மையில், இன்பமும் துன்பமு மற்ற பொருள்களை நான் அதனதன் பயனை உள்ளபடி அறிந்து அவைகளை மதிக்க வேண்டும்'' என்று இவ்வாறு சிந்திக்க வேண்டும்.

17. நடந்துபோனதைப்பற்றிய துயரமும், வரப் போவதைப்பற்றிய கவலையும் விட்டு, நிகழும் காரியங் களில் மனம், இடபுத்தி, தயை இவைகளை அறிவுடன் செலுத்தி அறநெறி வழுவாது வாழ்வை நடத்து. உன் ஆன்மா கற்பழியாத கன்னியைப்போல் மாசற்றிருக்க வேண்டும். எப்போது மரணம் நேரிடினும் ஆண்டவ னிடம் ஒப்புவிக்கத்தகுந்த நிலையில் அது பரிசுத்தமாக இருக்க வேண்டும். ஒன்றை அடையப்போகிறேன் என்று எதிர்பாராமலும், எதைக் கண்டும் பயந்து அதனின்று தப்பிப் பிழைக்க வேண்டு மென்ற எண்ணம் இல்லா மலும் தெய்வத்தோடு இயைந்து வாழ்வு நடத்து. உன் பேச்சுகளில் தைரியமும், சத்தியமும் பொருந்தி யிருக்க வேண்டும். அப்போதுதான் சுகமாக இருப்பாய். உன் மகிழ்ச்சிக்கு எதனாலும் குறைவு நேராது.

18. சஸ்திர வைத்தியன் எப்போதும் தனக்கு வேண் டிய கருவிகளை வேண்டிய நிமிஷத்தில் உபயோகிக்க எல்லா வற்றையும் சித்தமாக வைத்திருப்பதுபோல், நீயும் தெய்வாதீன சம்பவங்களும் மனிதர்களுடைய செயல் களும் உன்னைத் தாக்கியவுடன், அவைகளால் உனக்கு மனவேதனை உண்டாகாமல் அவைகளைச் சரிவர ஆராய்ந்து நடந்துகொள்ள, உனக்குத் துணையாகப் பேருண்மைகளை உன் உள்ளத்தில் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வாயானால் எந்தச் சிறிய காரியத்திலும் உலகத்தில் மற்றவர்களுக்கும் உனக்குமுள்ள அழியாத

தரும பந்தத்தை மறவாமல் நடந்துகொள்வாய். பரம் பொருளைக் கருதாமல் உலக வாழ்வைச் சரிவர நடத்த முடியாது. உலகத்தின் இயற்கை அமைப்பை மறந்து விட்டுப் பாரமார்த்திக தருமத்தை நடத்தவும் முடியாது. இரண்டும் வேவ் வேறன்று.

**19.** உலகமனைத்தும் ஒரு உயிர். அதில் தான் ஒரு உறுப்பு என்கிற ஞானம் அடைந்து அந்த ஞானத்திற்கு இசைந்த வாழ்வில் ஒருவன் வாழ்ந்தால், என்ன நேரிடினும் அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ள அவனுக்கு ஆற்றல் உண்டாகிறது. எந்தச் சம்பவம் நேரிடினும் எளிதில் அதைத் தாங்குவதற்கு மனந் தடுமாறுமல் கால தேச வர்த்தமானங்களுக் கேற்றவாறு வாழ்வை நடத்து வது அத்தகையோனுக்கு எளிதாகும்; அவனுக்கு இப் பொருள் வேண்டும், அப்பொருள் வேண்டு மென்பது கிடையாது. எந்தப் பொருள் இருப்பினும், இல்லாவிடி னும் சாந்தத்தை அடைய அவனுக்குத் தன் சாதனத்தால் ஆற்றல் உண்டாகும். என்ன இடையூறு நேர்ந்தாலும் அதையும் தன் ஆத்மசக்தியின் வளர்ச்சிக்கு ஒரு துணை யாகவே கொள்ளுவான். நல்ல தீயின்மேல் போட்ட பொருள்கள் அதை அணைக்காது; அவைகளே அந்த தீயில் எரிந்து சுவாலையை இன்னும் வளர்க்கும். சிறிய சுடரை அணைத்துவிடக்கூடிய பொருள்கள் கொழுந்துவிட்டு எரி யும் தீயை அணைக்க முடியாது. இன்னும் பெருஞ் சுவாலை யாக எரிய உதவும். கொழுந்துவிட் டெரியும் நெருப்பைப் போல உன் மனத்தை வைத்துக்கொள்.

**20.** தனிமையை நாடிச் சிலர் ஆசிரமம் கட்டிக் கொள்கிருர்கள். சிலர் கடற்கரைக்குப் போகிருர்கள். மலைகளிலும், காடுகளிலும் ஜனசஞ்சார மில்லாத இடங் களிலும் இருக்க விரும்புகிருர்கள். நீயும் அப்படியே

செய்ய விரும்புகிறாய். இது அறியாமையினும் அறியாமை. எந்த வேளையில் வேண்டினாலும் நீ இருந்த இடத்திலேயே நல்ல தனிமையை அடையலாமே. அமைதியும் உலகக் குழப்பமற்றதுமான தனியிடம் வேண்டுமானால், ஒருவன் தன் உள்ளத்திலே அதைக் காண வேண்டும். அதைப் போன்ற ஏகாந்தம் வெளியே எங்கும் கிடையாது. அதி லும் ஒருவன் தன் உள்ளத்தில் சாந்த சித்தத்தைத் தரும் எண்ணங்களை முன்னரே சேர்த்து வைத்திருந்தானே யானால், வேண்டியபோது ஆறுதலும் அமைதியும் எளிதில் தன் உள்ளத்திலேயே அடைவான். ஆகையால், உன் உள்ளமாகிய தனி ஆசிரமத்தில் அவ்வப்போது மௌன மாக இருந்து மனவலிமையை அடைவாயாக.

இப்படி உன் உள்ளத்தோடு தனியே யிருந்து சிந்திக் குங் காலத்தில், பல விஷயங்களில் மனதைச் செலுத்தாமல், மூலாதார உண்மைகளை மட்டும் சிந்திப்பாயாக. அந்த உண்மைகள் அரசாங்க துக்கங்களை மறக்கச் செய்யும். லௌகிக விவகாரங்களில் நீ மறுபடியும் கலந்து வாழும் போது, வருத்தம் உண்டாகும் விஷயங்கள் நேர்ந்தால் அவற்றினுக்கு இது மருந்தாகும்.

நீ ஏன் வருத்தப்பட வேண்டும்? தீயோர் செயலைக் கண்டு வருந்துகிறாயா? அப்படி வருந்தும்போது சிந்திப் பாயாக: "அறிவுள்ள பிராணிகள் பிறந்திருப்பது ஒருவரோ டொருவர் ஒத்துவாழவே. ஒருவர் செய்த குற்றத்தை மற் றொருவர் பொறுப்பதுதான் கடமை. எவனும் தீய வழியில் இறங்கும்போது மனம் ஒவ்வாமல்தான் இறங்கு கிறான். இதற்கு முன் எத்தனை கோடிப் பேர்கள் ஒருவரை ஒருவர் பகைத்தும் வெறுத்தும், போராடியும் பிறகு இறந்து சாம்பலாய்ப் போயிருக்கின்றனர்? இவ்வாறு சிந் தித்து நீ அமைதி யடைவாய்.

## ஆத்ம சிந்தனை

ஒருவேளை உன் அதிர்ஷ்டத்தைக் கண்டு வருந்துகிருயா? அப்போதும் நீ யோசிப்பாயாக: இந்த உலகம் தெய்வத்திற்குக் கீழ்ப்பட்டதா? அல்லது அணுக்களின் சுதந்திர சேஷ்டையா? உலகம் தற்செயலல்ல. அது ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு நடந்து வருகிறது என்பதற்கு அளவற்ற காரணங்கள் இருக்கின்றன.

ஒரு வேளை உன் உடலை நோய் வருத்துகிறதா? உடல் வேறு, உள்ளம் வேறு. உடலின் நோய் மனத்தை வருத்தாமல் காக்க முடியும். தன் வலிமையை அறிந்த மனம் உடலின் நோயை ஒரு பொருட்டாகக் கருதாது. சரீரத்தைப்பற்றியும் நோயைப்பற்றியும் சுகத்தைப்பற்றியும் என்ன வென்னவோ சொல்லக் கேட்டிருக்கிருய். நீயும் எழுதித் தீர்த்திருக்கிருயே; அவைகளை யெல்லாம் நினைவுக்குத் தந்துகொள்.

ஒரு வேளை நீ அற்பப் புகழைப்பற்றிக் கவலை கொண்டு வருந்துகிருயோ? உலகத்தில் எவ்வளவு விரைவில் எல்லாம் அழிந்து விடுகிறது பார். கழிந்து போன யுகங்கள் கணக்கற்றவை. வருங் காலமும் அளவிறந்தது. இதற்கிடையில் புகழ் என்ருல் என்ன? உன் புகழ் ஒரு சிறு குமிழி போன்ற பொருளில்லாத ஆரவாரமே யல்லவா? நிலையான அபிப்பிராயம் கொள்ளாத அறிவில்லாதவர்கள் உன்னைப் புகழ்கிருர்கள். அவ்விதப் புகழை அடைந்தாலும் அது எம்மட்டில் பரவும்? பிரபஞ்சத்தில் இப் பூமண்டலம் ஒரு சிறு அணுமாத்திரம். இப் பூமண்டலத்தில் நாம் இருக்கும் மூலை எவ்வளவு சிறியது? அதிலும் எத்தனை பேர்? எத்தகையோர் உன்னைப் போற்றுவார்கள்?

ஆகையால் உன் உள்ளம் என்கிற மௌன சாலைக்குள் மறைந்து ஆத்ம சிந்தனை செய். சஞ்சலப்படாதே. வீண் சிந்தனை வேண்டாம். சுதந்திரனுக இரு. எந்த விஷ

யத்தைச் சிந்திக்கும்போதும் நீ உலகத்தில் ஒருவன் என்பதையும், மானிட குடும்பத்தில் ஒருவன் என்பதையும், ஒரு நாளில் நீ இறந்துபோவாய் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு அந்த விஷயத்தைச் சிந்திப்பாயாக. இரண்டு பெரிய உண்மைகளை எப்போதும் உன் உள்ளத்தில் உறுதியாக அமைத்துக்கொள். அவை எப்போதும் உனக்குப் பயன் படும். ஒன்று : உன் ஆத்மாவை விஷயானுபவ இன்பங்களும் துன்பங்களும் தீண்டா. அவை வெளிப்புறமாகத் தனித்துக் கிடக்கும். சஞ்சலத்திற்குக் காரணம் உன் உள்ளத்திலேயே முளைப்பது தான். மன்றொன்று : உனக்குப் புலப்படும் சகல உருவங்களும் முடிவில் அழிந்து போகவேண்டியவை. நீ பார்த்த அளவிலேயே எத்தனை அழிவைக் கண்டிருக்கிறாய் ? அதை அடிக்கடி நினைத்துப் பார். மாறுவதே உலகத்தின் இயல்பு. மனிதன் எண்ணங்களே அவன் வாழ்வு.

21. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பொதுவாய் அறிவு என்பது உண்டு. அதிலிருந்து ஒவ்வொருவனுக்கும் ஓரளவு விவேகம் என்பது உண்டாகிறது. இதனால் இது செய்யத் தகுந்தது, இது செய்யத் தகாதது என்ற பகுத்தறிவு எல்லாருக்கும் பொதுவாகிறது. இதனால் தருமம் அனைவருக்கும் ஒன்றாகிறது. மக்கள் அனைவருக்கும் தருமம் ஒன்றாதலின், அனைவரும் ஒரு ஆட்சிக்கு உட்பட்டவர்களே யாவார்கள். எனவே, உலகம் முழுவதும் ஒரு அமைப்பு, ஒரு வரையறைக்குள் அடங்கியதாகும்.

பிரகிருதியிலிருந்துதான் என் உடலிலிருக்கும் ஒவ்வொரு பகுதியும் உண்டானது. எப்பொருளும் உள்ள பொருளினின்றே உண்டாக வேண்டும். இல்லாமலிருந்து உண்டாவது எதுமில்லை. என் உடல் நிலத்திலிருந்து ஒரு பாகமும், நீரிலிருந்து ஒரு பாகமும், வாயுவிலிருந்து ஒரு

பாகமும், தீயிலிருந்து ஒரு பாகமும் உருவம் மாறி உண்டானதுதான். அவ்விதமே அறிவு உருவமான என் உள்ளமும் ஒரு மூலப்பொருளிலிருந்தே உண்டாயிருக்க வேண்டும். அதுவே பரம்பொருள். சூன்யத்திலிருந்து எப் பொருளும் உண்டாக முடியாது. இருக்கும் எப் பொருளும் சூன்யமாகாது. ஆகையினால் என் உள்ளம் ஒரு சித்தப் பரம்பொருளில் உண்டாகிய ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்.

22. பிறப்பைப் போலவே இயற்கையில் இறப்பும், பூதங்களின் சேர்க்கை பிறப்பாகும்; பிரிவு மரணமாகும். இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பிறப்பின் இயல்பே இறப்பும்.

தங்கள் தங்கள் சுபாவம் போல்தான் மனிதர்கள் நடந்துகொள்வார்கள். ஆலமரத்தில் பால் இல்லாமல் இருக்க முடியுமா? இவ் வாயுள் எத்தனை நாள் இருக்கப் போகிறது? சீக்கிரத்தில் அனைவரும் மாண்டுபோய் எல்லாம் பொய்யாகும்.

23. ஒரு துன்பம் நேரிடின் அதைப்பற்றி எண்ணுவதை விடு. எண்ணுவதை விட்டால் துன்பம் நேரிட்ட நினைவு போகும். அந்நினைவு நீங்கியபின் துன்பம் எங்கே?

24. என்னுடைய குணத்தைப் பழுதுபடுத்தாத எதுவும் என்னுடைய வாழ்வுக்குத் தீங்கிழைத்தது ஆகாது. ஆகையால், அது என்னை எவ்விதத்திலும் துன்புறுத்த முடியாது.

25. உனக்கு ஒருவன் தீங்கு செய்தானானால், நீ அவனுடைய தீய எண்ணங்களை உன் மனதிலும் கொள்ளாமல் இருக்க வேண்டும். உன் மனதில் என்ன எண்ணம் உண்டாக்க அவன் விரும்புகிறானோ, அதற்கு நீ இடங்

கொடாதே. அப்போது அவன் செய்த தீங்கு உன் உள்ளத்தைப் பழுதுபடுத்தாது. பொருள்களை உள்ளது உள்ளபடி மனக் கலக்கமின்றி ஆராய்வாயாக.

26. இரண்டு குணங்களை நீ பெறவேண்டும், ஒன்று: மக்கள் நன்மையைக் கருதி உன் அரசியல் அதிகாரத்தை எவ்வாறு செலுத்த வேண்டுமென்று உன் அறிவுக்குத் தோன்றுகிறதோ அவ்வாறே செய். மற்றொன்று: நீ எண்ணின எண்ணம் தவறென்று ஒருவன் எடுத்துக் காட்டி அது சரி யென்று தோன்றினால் உன் எண்ணத்தை விட்டுவிடு. ஆனால், நியாயம், பொது நலம், அல்லது வேறு தகுந்த காரணத்தைச் சரிவர மனதில் விசாரித்துத்தான் எண்ணத்தை மாற்ற வேண்டுமே யொழிய, சௌகரியம் என்றாவது ஜனங்கள் பாராட்டுவார்கள் என்றாவது மாற்றக்கூடாது.

27. எந்தப் பிரகிருதியிலிருந்து அதன் ஒரு பாகமாக நீ உண்டானாயோ, அதனுள் நீ மறைந்து போவாய். உன்னைப் பெற்றெடுத்த பொருளுடன் மறுபடி நீ சேர்ந்து அதுவாகவே போய்விடுவாய். அதனால் என்ன?

28. பதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கப் போவதைப்போல் வாழ்க்கையை நடத்த வேண்டாம். மரணம் நிச்சயம். இன்றோ நாளையோ, அது எப்போதும் வரக் காத்திருக்கிறது. உயிருள்ளபோதே அவகாச மிருக்கும் போதே உள்ளத்தை சுத்தப்படுத்திக்கொள்.

மற்றவர்கள் என்ன பேசினார்கள், என்ன செய்தார்கள், என்ன எண்ணுகிறார்கள் என்பதி லெல்லாம் காலம் வீணாக்காமல், தன்னையே கவனித்து அறவழியில் நின்றால் எவ்வளவு நேரம் ஒருவனுக்கு மிஞ்சும்! மற்றொருவனுடைய உள்ளத்தில் என்ன தீமை இருக்கிறது என்று ஏன் தேடி அலையவேண்டும்? உன் நன்மையை நீ தேடு.

அதை உத்தேசித்து இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பிப் பாராமல் நேராகச் செல்.

இறந்தபின் வரப்போகும் புகழுக்கு ஆசைப்பட்டு அலையாதே. நீ இறந்தபின் உன்னைப்பற்றி யார் என்ன சொன்னால் உனக்கு என்ன? உன் காதுக்கு அது எட்டாது. உனக்குப் பின் உயிருடன் இருப்பவர்கள் காதில் விழும். உன்னைப்பற்றி என்ன சொன்னால் அவர்களுக்கு என்ன? ஆகையால் அறிவைச் செலுத்தி அறத்தைச் சோதித்து உன் வேலையைச் செய். உனக்குப்பின் உலகம் உன்னைப்பற்றி என்ன சொல்லப்போகிறது என்பதைப் பற்றி கவலைப்படாதே.

29. ஒரு பொருளுக்கு அழகு உண்டாயின் அவ்வழகு அதனுள்ளே அமைந்திருக்கிறது. பிறர் போற்றுவதனால் அது உண்டாவ தல்ல. பிறர் கண்டு வியப்பதால் அதன் அழகு அதிகமாவது மில்லை, குறைவது மில்லை. புலனுக்குத் தோற்றமாகும் பொருள்களின் வெளி அழகே இவ்வித மிருக்க, பேரழகு கொண்ட உண்மைப் பொருளாகிய தருமம், நீதி, சத்தியம், அன்பு அடக்கம் இவைகளுக்குப் பிறருடைய புகழ்ச்சி வேண்டியதில்லை. இந்த நற்குணங்களில் எதாவது பிறர் புகழ்வதால் அழகாகுமா? பிறர் குறை கூறுவதால் பழுது படுமா? அழகிய மரகத மணியை ஒருவன் புகழாமல் போனால், அதன் அழகு குறைந்து விடுமா? தங்கம், தந்தம், பட்டு அல்லது யாழ், வாள், புஷ்பம், செடி முதலியவைகளில் இப்படித்தானே அதனதன் அழகு அதன் அதனுள்ளேயே அமைந்திருக்கிறது.

30. ஏ பிரபஞ்சமே! உனக்கு எது இசைந்ததோ, அதுவே எனக்கும் இசைந்தது. உனக்கு எது சமயமோ, அதுவே எனக்கும் தகுந்த சமயம். பிரகிருதியே! உன்

அமைப்பில் பக்குவகால மென்று உண்டானவை யெல்லாம் எனக்கும் பக்குவகாலத்துப் பலனே யாகும். உன்னிட மிருந்தே எல்லாம் உண்டாகிறது. எல்லாவற்றையும் நீயே தாங்குகிருய். எல்லாம் மறுபடியும் உன்னையே அடையும். என் அருமை தேசம், என் அருமை ஊர் என்று தேசபக்தன் சொல்லவில்லையா? அவ்வாறே உலகம் ஆண்டவனுடைய ராஜதானி யாகும்.

சாந்தி விரும்பினையானல் பல சங்கற்பங்கள் செய் யாதே என்ருர் ஒரு முனிவர். எது இன்றியமையாத காரி யாமோ, எது சமூக நன்மைக்கு வேண்டுமோ அதை மட்டும் செய். செய்யவேண்டி நேரிட்டபோது செய். காரியங்களைக் குறைத்துக்கொண்டு செய்யவேண்டியதை நன்னெறியில் செய்வதே சாந்தியைத் தரும். நம்முடைய பேச்சுகளிலும் செயல்களிலும் பத்தில் ஒன்பது பங்கு யாருக்கும் வேண்டாதவை. அவற்றை நீக்கிக்கொண்டால் கவலையும் மனக்கசப்பும் மிஞ்சும், காலமும் வீணுகாது. எந்தச் செயலையும் முதலில் இது அவசியமில்லாத விஷயமா என்று ஆராய்ந்துப்பார். செயல் சிக்கனத்தோடு எண்ணங் களையும் அவ்வாறே ஆராய்ந்து, வேண்டாதவற்றைத் தள்ளிவிடு. எண்ணங்களை ஒழித்தால் செயல் தானுக ஒழியும்.

ஒரு பரிட்சை செய்துபார். கிட்டினது போதும். உல கத்தில் உனக்கென்று வகுக்கப்பட்ட பங்கு உனக்குப் போதும் என்று திருப்தியாக இரு. உன்னுடைய செயல் கள் நியாயமாக இருந்தால் போதும்; மற்றவர்களுடைய காரியங்கள் எவ்வாருயினும் இருக்கலாம். உன்னுடைய உள்ளத்தில் அன்பு நிறைந்திருந்தால் போதும்; மற்றவர் கள் உள்ளத்தில் என்ன குற்றம் இருப்பினும் அதைப் பற்றி எண்ணுவதைத் தள்ளிவிடு. இவ்வாறு செய்துபார். சந்தோஷ முண்டாகும்.

விஷயத்தை ஒருபுறம் பார்த்தாயிற்று. அது போதும். மற்றொரு விதமாக பரிசீலனை செய்துபார். சந்தேகப்பட வேண்டாம் உனக்கு தீங்கு செய்யப்பட்டது உண்மை. அந்தத் தீமை அதைச் செய்தவனைத்தான் பாதிக்கும். உனக்குக் கஷ்டம் நேர்ந்ததா? அதனாலென்ன? இந்த நிகழ்ச்சி முந்தியே விதியில் அமைந்து கிடந்ததல்லவா? அது உனக்கென்று ஏற்கெனவே ஏற்பட்டதாயிற்றே. அதற்காக சஞ்சலமேன்? ஆயுள் சீக்கிரம் முடிவுபெறும். இந்த நேரம் உன் கையில் இருக்கிறது. அதைப் பயன் படுத்திக்கொள். ஞானத்தோடும் அறவழியில் நின்றும் பயன் படுத்திக்கொள்.

31. இந்த உலகம் ஆண்டவனால் ஒழுங்காய் அமைக்கப்பட்டதே யாயினும் சரி, அணுக்கள் தற்செயலாய்க் கலந்து உண்டானதே யாயினும் சரி, எவ்விதத்திலும் ஒழுங்குபட்டு அமைந்து நிற்கிறது. ஒன்றிலிருந்தொன்று வெகு தூரத்தில் சிதறி வெவ்வேறாகக் கிடக்கும் அண்டங்களும், அணுக்களும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு ஒழுங்குடன் இருக்கின்றன. உன் உள்ளத்திலும் ஒழுங்கு இருக்கிறது. இவ்வளவு ஒழுங்குடன் நிற்கும் இந்த ஜகத்தை ஆளும் சர்வேசுவரன் ஒழுங்கின்றி இருப்பானா? ஏன் வருத்தம்?

32. உன் உள்ளத்தில் எவ்வளவு கெட்ட எண்ணங்கள் நிறைந்திருக்கின்றன? எவ்வளவு அச்சம்? எவ்வளவு இரக்கமின்மை? மிருகத்தனம், சோம்பல், இச்சகம் பேசுதல், லோபித்தனம், கொடுமை?

33. வேறு தேசத்திலிருந்து வந்த அன்னியன் ஒருவனுக்கு ஊரிலிருக்கும் விஷயங்கள் தெரியாது. அவ்வாறே, நடக்கும் சம்பவங்களின் பொருளை அறிந்து ஒப்புக்கொள்ளாதவன் உலகத்திற்கே அன்னியனாவான். ஜனங்களை

ஒன்றாகக் கட்டுப்படுத்தி அமைத்து வரும் சமூக தருமத்தை ஒத்துநடவாமல், வேறுபடுகிறவன் பரதேசி யாவான். அறிவு என்னும் கண்ணை மூடிக்கொள்கிறவன் குருடனாவான். சுகம் தரும் சுவாதந்திரியத்தை விட்டுப் பிறரை எதிர்பார்க்கிறவன் யாசகனே யாவான். நாம் எதிலிருந்து உண்டானோமோ, அதிலிருந்தே சகல சம்பவங்களும் உண்டாகின்றன. தனக்கு நேரிட்ட சம்பவங்களைப்பற்றி வெறுப்புக்கொண்டு விசுவதருமத்திலிருந்து வேறுபடுகிறவன் உலகத்திற்கு ஒரு புண்ணைப் போலாவான். அறிவுள்ள பிராணிகள் எல்லாம் ஒரு ஜீவ அமைப்பாக இருக்கத் தன்னை வேறாக நினைத்து வாழ்பவன் குலப்பிரஷ்டனாவான்.

தெய்வத்தை நம்பி உனக்கு எஞ்சியுள்ள நாட்களை முடித்துக்கொள். நீ படைத்தது அனைத்தையும் தெய்வத்திற்குச் சமர்ப்பித்தாய் என்று சந்தோஷமாக இரு. மற்றவர்களை நான் அக்கிரமமாக நடத்தவில்லை. எவனுடைய சுதந்திரத்தையும் நான் ஆக்கிரமிக்க வில்லை. நானும் யாருக்கும் அடிமையாகாமல் சுதந்திரமாகக் காலம் கழித்தேன் என்று சந்தோஷமாக இரு.

34. உலகத்தில் எதுவும் நிலையில்லை. நடந்த தெல்லாம் கதையே யாகும்; பிறகு முற்றும் மறக்கப்பட்டு மறையும். புகழோங்கி வளர்ந்தவர்களும் இப்படி மறைந்து போவார்கள். மற்றவர்கள் கதியோ சொல்ல வேண்டியதில்லை. உயிர் விட்டுக் கண் மறைந்தவுடன் யாரும் அவர்களை நினைக்க மாட்டார்கள். புகழும் பேரும் தான் என்ன? வெறும் பேச்சு. பின் நாம் கடைப்பிடிக்கவேண்டியது எது? நடுநிலைமை, ஒப்புரவு, வாய்மை, பொறை. எது நேரிடினும் அனைத்திற்கும் ஆதியும் மூலமும் எதுவோ அதிலிருந்து இதுவும் வந்தது, இது அவசி

யமே என்று நேரிட்டதை எதிர்கொண்டு ஒப்புக்கொள்ளும் தன்மையே மனிதனுக்கு வேண்டியது.

35. உலகத்தில் பொருள்கள் மாறி மாறி மறைந்து புதுமையாய் மறுபடியும் தோன்றுவதை ஆராய்ந்து பார். பொருள்களைச் சிதையவிட்டு அவைகளிலிருந்து புதிய புதிய பொருள்களை அமைத்துத் தருவதே இயற்கைச் சக்தியின் இடைவிடாத் தொழில். எதையும் அழித்து அதைப்போன்ற வேறொரு உருப்படி உண்டாக்குவதே பராசக்தியின் விநோத வேடிக்கை. உலகத்தி லிருக்கும் ஒவ்வொரு பொருளும் அதைப் போன்ற புதியன விளைவதற்கு வித்தாகும். மண்ணில் புதைத்து முளைப்பது மட்டும் வித்தல்ல.

36. அடுத்த க்ஷணம் இறந்து போவாயே! ஆயினும் உள்ளத்தைச் சுத்தப்படுத்திக்கொள்ள வில்லையே! சாந்தம் அடையவில்லையே! துன்பத்தைக் கண்டு அச்சம் நீங்க வில்லையே! நடுவு நிலைமையே சுகம் தரும் என்பதை இன்னும் அறிய வில்லையே!

ஞானமடைந்த பெரியோர்கள் எதை நாடுகிறார்கள் எதனின்று விலகிச் செல்கிறார்கள் என்பதை நன்றாய்க் கவனித்துப்பார்.

37. அடிக்கடி இதை நீ சிந்தித்து நினைவுக்குத் தந்து கொள்வாயாக. இந்த உலகம் முழுவதும் சேர்ந்து ஒரு ஜீவன்; ஓர் உடல், ஓர் ஆத்மா. சகல ஜீவகோடிகளும், பொருள்களும் சேர்ந்து ஜீவநரம்பு பாய்ந்த ஒரு சரீரக் கட்டாகும். எல்லாவற்றிற்கும் உயிர் ஒன்றே. நிகழ்ச்சி ஒவ்வொன்றும் உலகம் முழுதும் சேர்ந்து நடத்தும் நிகழ்ச்சியாகும். நாம் காணும் ஒவ்வொரு பொருளும், எல்லாம் சேர்ந்து உண்டாகியதுதான். பிற பொருள்களினின்று வேறுபட்டுத் தனியாய் எதுவும்

உண்டாகாது. எல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்து அடர்த்தியாக நெய்யப்பட்ட ஊடும் பாவும் போலும் உலகம் நெய்யப்பட்டு நிற்கிறது.

எபிக்தேதர் சொன்னதுபோல் இந்த உயிர் வாழ்க்கை யாவது என்ன? ஒரு பிணத்தைச் சுமந்துகொண்டு அலைகிறது ஆன்மா, அவ்வளவே அல்லவா?

அழியும் உடலுக்கு எது நேரினும் என்ன தீமை?

உலகம் என்பது என்ன? வேகமாக ஓடிச்செல்லும் ஒரு ஆறு. எது உண்டாயினும் எது நிகழ்ந்தாலும் கண்ணுக்குத் தென்பட்ட உடனே கால வெள்ளம் அதை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. வேறொன்று அதன் இடத்திற்கு வருகிறது. பிறகு, அதுவும் பிரவாகத்தில் சென்று மறைந்துபோகிறது.

உலகத்தில் நடைபெறும் சம்பவங்களில் புதியது ஒன்றுமில்லை. எல்லாம் பார்த்தவையே. பூவும் பழமும் அதனதன் காலத்தில் தோன்றி மறைவதுபோல் அனைத்தும் நடைபெறுகிறது. வியாதியும் மரணமும், பழியும், மோசமும் துரோகமும், சுகமும் சந்தோஷமும் அனைத்தும் இவ்வாறே. அறிந்தோர் இவற்றினால் மகிழ்ச்சியும் அடையார், துயரமும் படார்.

நாளை இறந்து போவாய், இல்லையேல் அதற்கு மறுநாள் இறப்பாய் என்று யாரேனும் சோதிடன் சொன்னால், நாளையா அல்லது மறுநாளா என்கிற சந்தேகத்தைப் பற்றி பெரிய வித்தியாசமாக எண்ணி ஆராய மாட்டாய். இதைப்போலவேதான் எத்தனை நாள் கழித்து இறப்பதாயிருந்தாலும், நாளையானால் என்ன? சில வருஷங்கள் கழித்தானாலென்ன?

வியாதியில் படுத்திருந்தவர்களைப் பார்த்து சொஸ்தப் படுத்துகிறேன் என்று சொல்லி எத்தனை வைத்தியர்கள்

தாமே இறந்து விட்டார்கள்! மற்றவர்கள் இறக்கும் நாட்களைத் சொல்லிவந்த எத்தனை சோதிடர்கள் தாமே செத்துவிட்டார்கள்! மரணத்தைப்பற்றியும், மரணமின்மையைப்பற்றியும் சலிப்பின்றி வாதித்துவந்த எத்தனை பண்டிதர்கள் தாமே மாண்டு போனார்கள்! பல்லாயிரக்கணக்காக ஜனங்களைக் கொன்ற எத்தனை போர்வீரர்களும் தாமும் மாண்டார்கள்! தங்களுக்குச் சாவே கிடையாது போல் எத்தனை அரசர்கள் அகங்காரப்பட்டு பிரஜைகளின் உயிர்களின் பேரில் அதிகாரம் செலுத்திவந்தார்கள். அவர்களுடைய ஆட்டம் என்னவாயிற்று? இருந்த இடம் தெரியாமல் மறைந்தார்கள். எத்தனை பெரிய நகரங்கள், கலகலவென்று வாழ்ந்தவை, செத்த சவம்போல் மாண்டு போயின. உலகத்தில் எந்த ஜீவனுக்கும் மாண்டுபோக வேண்டியதே முடிவு; சுக்கிலமாக ஆரம்பித்து சாம்பலாக முடியவேண்டியது. இதன் மத்தியில் நியாயமாய் யோக்கிமாய் கூடிய மட்டில் லக்ஷணமாய் நடந்துகொள். மரத்தில் உண்டாகி கீழே விழுந்துபோகும் பழத்தைப்பார். தன் வாழ்க்கையை எவ்வளவு அழகாகவும் சந்தோஷமாகவும் லகுவாக நடத்தி மரத்தினின்று நழுவி தான் பிறந்த மண்ணில் மறுபடி அடங்கிப்போகிறது. அதைப் பின்பற்றுவாயாக.

விருத்தாப்பியம் வந்தது, மரணம் நெருங்கிவிட்டது என்றெல்லாம் கவலைப்படுவது என்? வேறு ஒரு தத்துவ ஞானமும் வேண்டாம். எத்தனை நாள் வாழ்ந்தவர்களும் முடிவில் இறந்துதான் போனார்கள். சிறுவயதில் இறந்தவர்களைவிட நீண்டநாள் இருந்து செத்தவர்கள் என்ன லாபம் பெற்றார்கள்? பலர் இறந்ததைக் கண்டும் அந்தச் சவங்களைத் தூக்கி அடக்கம் செய்ததே இவர்கள் பெற்ற லாபம். குறைந்த ஆயுளுக்கும், நீண்ட ஆயுளுக்கும்

என்ன வித்தியாசம்? நெடுநாள் பிழைத்தவர்களின் சுகம் என்ன? மூப்பில் அவர்களுக்கு அமைந்த சகாக்களைப்பற்றியும் சுமக்கவேண்டி யிருந்த உடலின் நிலைமையைப்பற்றியும் யோசித்துப்பார். சில ஆண்டுகள் நீடித்து வாழ்ந்ததில் என்ன பயன் ஏற்பட்டது. உலகத்தின் காலப்போக்கைச் சிந்தித்துப்பார். நீ பிறப்பதற்கு முன் எல்லையற்ற காலம், இறந்தபின்னும் எல்லையற்ற காலம். இதன் மத்தியில் மூன்று மாதம் இருந்து செத்தால் என்ன? மூன்னூறு வருஷங்கள் இருந்தால்தான் என்ன?

38. பாறையின் மேல் அலைகள் மோதி மோதிப் புரண்டுகொண் டிருந்தாலும் கல்லானது அசையாமல் நிற்கும். அதைப்போல் உன் உள்ளம் அமைதி பெற்றிருக்க வேண்டும். பேரிரைச்சலுடன் அலைகள் மோதினும் இறுதியில் அடங்கி ஓய்ந்து கிடக்கும்.

'ஐயோ! என் துர்ப்பாக்கியம்! இந்த விபத்து எனக்கு வந்ததே,' என்பாய். அப்படியல்ல நீ எண்ணவேண்டியது. 'ஆ! இத்தகைய விபத்து நேரிட்டபோதிலும் தீரத்துடன் நிகழ்வதைக் கண்டு கலங்காமலும், வருவதை நினைத்து அஞ்சாமலும் இருக்கின்றேனே, நான் என்ன பாக்கியவான்! இதைப் போன்ற கஷ்டம் யாருக்கு வரலாம்? ஆனால், எல்லோரும் என்னைப்போல் தீரத்துடன் தாங்க மாட்டார்கள். வந்தது விபத்தேயாயினும், எனக்கு வாய்ந்த மனோநிலை நல்ல பாக்கியம் அன்றோ!' என்று எண்ணி சந்தோஷப்பட வேண்டும். மனிதனுடைய உள்ளத்தைப் பழுதுபடுத்தாத ஒரு சம்பவம் எப்படி விபத்தாகும்? வாழ்வின் நோக்கம் கெடாதவரையில் எது நேர்ந்தால் என்ன? நீ எதற்காக வாழ்கிறாய்? இந்த விபத்து உன்னுடைய வாழ்வின் உண்மையான நோக்கங்களுக்கு என்ன தடையாகும்? உன் நடுநிலைமையைக்

கெடுக்குமா? உன் பெருந்தன்மைக்குத் தடையாகுமா? தெளிவான அறிவு, விவேகம், ஆராய்ந்து செய்தல், சத்தியம், அடக்கம், சுதந்திரம் இத்தகைய குணங்களுக்கு இச்சம்பவத்தால் ஏதாவது கேடு வந்ததா? இக்குணங்களுடைய புருஷனுக்குத் தன் பரிசுத்தமே தனக்கு இன்பம் அல்லவா? எந்த விபத்தும் விபத்தல்ல. அதைப் பொறுக்கும் ஆற்றலுடைமையே பாக்கியம். இதை நினைவில் வை.

காலையில் நேரத்தோடு எழுந்திருக்காமல் என் படுக்கையில் இருக்க ஆசைப்படுகிறேன். குளிருக்குப் பயந்து கம்பளி போர்த்துக்கொண்டு படுக்கையில் படுக்கவா நான் உண்டாயிருப்பது? செய்ய வேண்டியதைச் செய்ய இன்று என் வாழ்நாளுக்கு ஒரு நாள் சேர்க்கப்பட்டது என்று எண்ணி, சீக்கிரம் எழுந்திருக்க வேண்டுமல்லவோ? படுக்கையில் கிடப்பது சுகமாகத்தான் இருக்கிறது. ஆனால் சுகமாகக் கிடப்பதற்காகத்தானா உன்னை உண்டாக்கியது? கருமம் செய்ய வேண்டியவனா நீ அல்லது நிகழ்ச்சிகள் நிகழ வெறும் செயப்படுபொருளாக இருப்பதே உன் உயிரின் பயனா? உன்னைச் சுற்றிலும் இருக்கும் செடியைப் பார், சிறு பறவையைப் பார், எறும்பைப் பார், பூச்சியைப் பார், ஈயைப் பார், தத்தம் வேலையை ஒவ்வொன்றும் செய்வதைப் பார். உலக அமைப்பில் அதற்கென்று நியமிக்கப்பட்ட வினையை ஜீவகோடிகளுள் ஒவ்வொன்றும் யாரும் ஏவாமல் எவ்வாறு செய்துகொண்டு போகிறது என்பதை கவனித்துப் பார். உன் வேலையை நீ செய்யவேண்டாமா? ஓய்வு வேண்டாமா என்பாய். ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், அதற்கும் அளவு உண்டு. உணவுக்கும் பானத்துக்கும் பசியும் தாகமும் அளவு காட்டுகிறது. அளவுக்குமேல் உண்ணவும் குடிக்கவும் முடியாது. அம்மாதிரி ஓய்வுக்கும் அளவு

வேண்டாமா? செய்யவேண்டிய செயல்களை உன்னால் ஆகக்கூடிய அளவு செய்யமாட்டாய். ஓய்வு எடுப்பதில் வேண்டியதற்கு மேல் எடுத்துக்கொள்ளப் பிரியப்படுகிறாய்.

39. மன நிம்மதியைக் கெடுக்கும் எந்தப் பொருளையும் விலக்கிக்கொள்வது உண்மையில் எவ்வளவு எளிது. நமக்குள்ள சக்தியை நாம் அறியவில்லை.

புத்தி கூர்மையை நீ படைக்கவில்லை. அதைப்பற்றி நீ ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் வேறு எத்தனையோ குணங்களைப் படைத்திருக்கிறாய். அவற்றைப்பற்றி நீ சாக்குச் சொல்ல இயலாது. அவற்றைச் செலுத்தி வாழ்க்கையை நடத்து. உண்மை வாழ்க்கை நடத்தவும் நடை பாவனைப் பெருந்தன்மையும் மெய்வருத்தம் பொறுத்தலும் சுகபோகங்களை நீத்தலும் உன்னால் முடியும்படியான காரியங்கள். இவற்றில் குறைவு ஒன்றும் இல்லையே. ஏன் அவற்றில் சிக்கனம் செய்யப் பார்க்கிறாய்? திருப்தியற்றிருக்க யாராவது உன்னைக் கட்டாயப்படுத்துகிறார்களா? பிறர் பொருளில் ஆசை வைக்க ஏதேனும் கட்டாயமா? இச்சகம் பேசும்படி ஏதேனும் நிர்ப்பந்தமா? வீண் பெருமை பேசும்படி ஏதேனும் புறத்திலிருந்து உன்னைக் கட்டாயப்படுத்துகிறதா? இவற்றில் உனக்குப் பிறவிக்குறை ஒன்றும் இல்லையே? நீ படைத்திராத மதிநுட்பத்தை யாரும் உன்னை செலுத்தச் சொல்லவில்லை. ஆனால் மற்ற குணங்களைப்பற்றி ஏன் செய்யக்கூடியதைச் செய்யவில்லை. கூர்மையான மூளை இல்லை என்பதில் கூட பயிற்சியால் அடையக்கூடிய நுட்பத்தை அடைய முயன்றாயா? கவனியாமல் விட்டது உன் குற்றமே.

40. மரமும் லோகமும் கொண்டு வேலை செய்யும் தச்சனும் கம்மாளனும் தன்னுடைய தொழிலில் தனக்

குள்ள ஆசையினால் குளிப்பதையும் சாப்பிடுவதையும்கூட மறந்து தொழிலிலேயே கண்ணாய் இருப்பார்கள். தச்சனுக்குத் தன் வேலையிலுள்ள ஆர்வத்தைப்போல் அவன் வேலை செய்யும் பொருளைவிடச் சிறந்த பொருளான உன் மனத்தூய்மையில் உனக்கு அதிக ஆர்வம் இல்லையே! நாடகக்காரனுக்குத் தன் நடனத்திலுள்ள மனப்பற்று அளவுகூட உன் நன்மையில் உனக்கு இல்லையே! உலோபிக்குப் பணத்திலுள்ள ஆசையளவும் ஸ்துதிப்பிரியர்கள் பிறர் புகழ்ந்து பேசுவதை விரும்பும் அளவும்கூட உனக்கு உன் கடமையில் கருத்தில்லையே. இவர்கள் தத்தம் நோக்கங்களிலே வைத்திருக்கும் பற்றினால் உண்ணுவதையும் உறங்குவதையும்கூட மறந்துவிட்டுத் தாம் வேண்டும் பொருளை அடைவதிலேயே கருத்தாக இருப்பார்கள். இவர்கள் விரும்பும் பொருள்களைக் காட்டிலும் உன்னுடைய கடமை உனக்குப் பெரிதாகத் தோன்றவில்லையா?

41. பிறன் ஒருவனுக்கு ஒரு நன்மை செய்தால் அதைக் கணக்கில் குறித்துக்கொண்டு பிறகு, சிலர் அதற்குப் பதில் எதிர்பார்ப்பார்கள். சிலர் இப்படிச் செய்யாராயினும் தாம் செய்த உதவியை என்றும் நினைவில் வைத்துக் கொண்டு, உதவிபெற்றவனைக் கடனாளியாகவே பாவிப்பார்கள். ஆனால் சிலர் தாம் செய்த உதவியை நினைக்கவும் மாட்டார்கள். கொடிமுந்திரி அதன் பருவக்காலத்தில் நல்ல பழம் கொடுத்தபின் அதைப்பற்றி மறுபடியும் சிந்திக்காது. தன் இயல்புக்கு இசையத் தன்னால் உதவக்கூடியதை உதவிவிட்டு, பிறகு அதைப்பற்றிக் கருதாது. குதிரை ஓடுவதும் இப்படித்தான். நாயும் இவ்வாறே வேட்டைக்குப் போகும். தேனீயும் தேனைச் சேர்ப்பது இப்படியே. இத் தன்மையையுடைய மனிதனும் ஒப்புரவறிந்து உதவிய

பின், அதைப்பற்றிப் பிறருடன் பேசான். கொடிமுந்திரி தான் முன் ஈன்ற பழங்களைப்பற்றி நினையாமல் மறுபடியும் அடுத்த பருவத்தில் பழம் தருவதுபோல், இவனும் உதவி செய்தபின் மறுபடியும் தான் செய்யக்கூடிய வேறு உதவியைப் பற்றியே நினைப்பான்.

42. வைத்தியன் நோயாளிக்கு மருந்தும் பத்தியமும் நியமிப்பதுபோல் தெய்வம் மனிதர்களுக்குக் கஷ்டம் அளிக்கும். நோயும், அங்கஹீனமும், பொருள் நஷ்டமும் இவைபோன்ற எல்லாச் சம்பவங்களும் இவ்வாறு விசுவரூப தெய்வத்தின் வைத்திய நியமங்களாகவே கருதப்படவேண்டும். உடலின் நோய் தீருவதற்காக வைத்தியன் சொல்லும் பத்தியம் உடலின் தனி உறுப்பொன்றுக்குக் கஷ்டமாகவே இருக்கலாம். அதைப்போல் உலக நடைக்கு வேண்டிய சம்பவங்கள் தனிமனிதனுக்குத் துன்பங்களாகவே தோன்றலாம். உலகம் முழுவதும் ஓர் உடல். எல்லோருடைய உடல்களும் சேர்ந்து ஓர் உலக உடலாகிறது. எல்லாக் காரண காரியங்களும் சேர்ந்து உலக காரண காரியமாகிறது. அதுதான் உலகம். அதுதான் விதி என்று நீ எண்ணுவது. இது என் விதி ஆயிற்றே என்று வெறுப்பது உலகத்திற்கு உலக வைத்தியன் நியமித்த ஒரு பத்தியத்தை வெறுப்பது போலவேயாகும். விவேகமுள்ள ஒருவன் வைத்தியனுடைய கட்டளைகளைச் சந்தோஷமாய் ஒப்புக்கொள்வது போலவே விதியையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மருந்து கசக்கும்; பத்தியம் கஷ்டமாய்த்தான் இருக்கும். ஆனல், நோய் தீருமென்று அதை ஒப்புக்கொள்ளுகிறோம். உன் உடலின் நோயைத் தீர்க்க எவ்வாறு விரும்புகிறாயோ, அவ்வாறு உலகம் முழுவதும் திரண்ட ஓர் உயிராகக் கருதி, அதன் நன்மையையும் விரும்பு. கஷ்டமாகத் தோன்றினாலும்

பூதியாக வந்ததைச் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளக் கடவாய். அது உலக நலத்திற்காக உலகப் பிரகிருதி செய்துகொண்ட மருந்தே யாகும்.

ஆகவே, உனக்கு எது நேரிடினும், அதை நீ மனக் குறைவின்றி ஒப்புக்கொள்ள இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது: உனக்கென்று ஏற்பட்ட சம்பவம் இது. நீ எந்தக் காரண காரியப் பரம்பரையிலிருந்து உண்டானாயோ, அதில் ஒன்றுபட்டு இணைபிரியாத சம்பவம் இதுவும் ஆகும். ஆகையால் இதை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டாவது: எல்லா ஜீவராசிகளின் க்ஷேமத்திற்கும், உலகம் வளர்ந்து பரிபூர்ணமாவதற்கும் தனி ஜீவர்களைத் துன்புறுத்துவதுபோல் தோன்றும் சம்பவங்கள் உண்டாகின்றன. ஒன்றாக அமைக்கப்பட்ட இந்த உலகத்தில் ஒரு பாகத்தை வெட்டிப் பேதித்தால் அதன் சுகமும், அழகும் குறையும். உலக அமைப்பில் நடக்கும் ஒரு விஷயத்தைக் குறித்து நீ தனித்து அதிருப்தி யடைவது ஒரு பாகத்தை வெட்டிப் பேதிக்கும் தோஷமே யாகும். இயற்கைத் தருமத்திற்கு இடையூறு செய்த குற்றமே யாகும்.

43. எப்போதேனும் அறநெறியிலிருந்து விலகி வழுவினையானால் அதனால் சோர்வுகொள்ளாதே. கெட்டேன் என்று முயற்சியை விட்டுவிடாதே. அறவழிக்குத் திரும்பிவந்து சேர்வாயாக. மொத்தத்தில் யோக்கியனாக வாழ்க்கை நடத்தினேன், நான் பாக்கியசாலி என்று மகிழ்வாயாக. வழிதப்பித் திரும்பும்போது, பள்ளிக்கூட உபாத்தியாயரிடம் குழந்தைகள் வெறுப்புடன் போவது போல் நடக்காதே. கண்வலியில் கஷ்டப்படுகிறவன் குளிர்ச்சி மருந்துகள் சந்தோஷமாக கண்களின் மேல் போட்டுத் துடைத்துக் கொள்வதுபோலும், காயப்பட்ட

வன் ஒத்தடம்போட்டு கொள்ளப் போவது போலவும், சந்தோஷத்துடன் அறவழிக்குத் திரும்புவாயாக. மனதில் சாந்தியடைய மெய்யறிவை நாடு. மெய்யறிவைவிட வேறு எந்த சாதனமும் மனிதனுக்கு அதிக சுகம் தரமுடியாது.

44. சித்து, சடம் இவ்விரண்டின் சேர்க்கையால் நான் உண்டாயிருக்கிறேன். இரண்டில் எதுவும் சூனியமாக அழிந்துபோகாது. சூனியத்திலிருந்து உண்டாகவில்லை, ஆகையால், சூனியமாய்ப் போக முடியாது. இந்த உடலின் ஒவ்வொரு பகுதியும் அழிந்து விகாரப்பட்டு உலகத்தில் வேறு ஒரு பொருளில் சேர்ந்து பயன்பட்டுப் போகும். மறுபடி அவ்வுருவமும் மாறி வேறு பொருள்களாகும். இப்படி அனந்த காலமும் பயன்படுத்தப்படும். இவ்வாறு அல்லவோ நான் என்கிற இந்த உடலும் உயிரும் மற்ற பொருள்களிலிருந்து உண்டானது. அழிவென்பது கிடையாது. முந்தியும் அனந்த காலம், பிந்தியும் அனந்த காலம் உலகத்திலுள்ள உருவங்கள் மாறிக்கொண்டே வரும். பிரளய காலங்களிலும் கற்பங்களிலும் உலகம் முடிவாவதாக வைத்துக்கொண்டாலும் அதாவது எல்லா உருவங்களும் சேர்ந்து பிரளயகாலத்தில் ஓர் உருவாகி அதனின்று மறுபடி உலகம் உண்டானாலும் இந்த உண்மைக்கு அது விலக்கு ஆகாது.

தத்துவங்கள் தம் வழியே செல்லும் ஒன்றிலிருந்து ஒன்று நியாய விதிப்படி செல்லுமே ஒழிய, அதன் போக்கை நம் இஷ்டப்படி மாற்ற முடியாது. தம் வழியைப் பிடித்துக்கொண்டு நேராகச் செல்லும். இதனால் தான் நேர்மை என்பது தரும வாழ்க்கைக்குப் பெயர். வழி பிறழாமல் தத்துவ முறைப்படி நடப்பதே தருமம்.

ஒரு மனிதனண்டைவந்து சேரும் பொருள்களைப்பற்றி அவை அவனுடையவன்று சொல்லுவது பிழை. அவனது

என்றால் அவனுடையது பிரகிருதியில் ஒரு பாகமாக இருக்க வேண்டும். அல்லது அந்தப் பிரகிருதியின் முடிவாக இருக்க வேண்டும். பொருள்களுக்கும் மனிதனுக்கும் என்ன சம்பந்தம்? பொருளை வெறுக்க வேண்டியது மில்லை, பற்றுதல் கொள்ளவும் வேண்டியதில்லை. மனிதனுடைய நன்மையும் தீமையும் அவற்றில் இல்லை. பொருள்களினின்று மனவேறுபாடின்றி ஒதுங்கிய அளவு மனிதன் விடுதலை அடைகிறான். தானே பொருள்களை நீக்கினாலும் சரி, அவன் முயற்சியின்றி வேறு காரணங்களினால் பொருள்கள் தன்னை விட்டுப்போனாலும் சரி, மனநிலை கலங்காமல் நின்றால் அது விடுதலைக்கு உதவியாகும்.

45. எந்தப் பொருள்களை நீ இடைவிடாமல் சிந்திக்கிறாயோ, அவற்றின் தன்மையை உன் மனம் அடைகிறது. சாயத்தில் தோயும் துணியைப் போல், உள்ளத்திலுள்ள எண்ணங்களில் தோய்ந்த ஆத்மா நிறம் மாறும். ஆகையால், உயிர்வைத்துக்கொண்டு வாழ முடியுமானால் நல்வாழ்வு நடத்தவே முடியும் என்பதைப் போன்ற எண்ணங்களை எப்போதும் எண்ணுவாயாக. எந்தப் பதவியிலும் நல்வாழ்வு வாழலாம்; அரண்மனை வாழ்க்கையிலும்கூட ஒருவன் உண்மை வாழ்வு வாழ முடியும். ஒரு பொருள் எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டதோ அதற்கிசைய அதன் இயற்கையும் அமைக்கப்பட்டு வளரும். அதுவே அதன் தருமம்; அதுவே அதன் நன்மையும். எனவே, அறிவுள்ள மனிதனுடைய நன்மை ஒப்புரவறிந்து செய்தலே. அதற்காகவே அவன் ஜன்மம். ஜீவனற்ற பொருள்களைவிட உயிருள்ளவை சிறந்தவை. உயிருள்ளவைகளில் அறிவுள்ள பிராணிகள் சிறந்தவை. பிராணிகளின் நன்மைக்காக ஜீவனற்றவை நிருமாணிக்கப்பட்டிருக்கின்றன. அறிவுள்ள பிராணிகள் தமக்குள் ஒருவ

ருக் கொருவர் பணிசெய்து பயன்பட்டு வாழ்வதற்காகப் பிறந்திருக்கிறார்கள்.

46. முடியாதது ஒன்றை எதிர்பார்ப்பது அறியாமை யாகும். துராத்மாக்கள் தங்களுடைய இயற்கைக்கு மாறாய் நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம்.

47. எந்த ஸ்தூலப் பொருள்களாலும் ஆத்மா பாதிக்கப்படுவ தில்லை; ஆத்மாவிடம் சென்று அதைத் தீண்ட ஸ்தூலப்பொருள்களுக்கு வழியில்லை. அவைகளால் ஆத்மாவை அசைக்கவாவது நடத்தவாவது முடியாது. ஆத்மாவானது பூரண சுவாதீனம் படைத்திருக்கிறது. தன்னைத்தானே தான் நடத்திக்கொள்ளும். வெளியில் நிற்கும் பொருளைப்பற்றியும் நிகழ்ச்சிகளைப்பற்றியும் என்ன எண்ணம் உள்ளத்தில் கொள்கிறோமோ அதுவேதான் ஆத்மாவை பாதிக்கும். பொருள்களே அதைப் பாதிக்க முடியாது.

48. உலகத்தில் அறிவுள்ள பிராணிகளாகிய மனிதர்களுக்கு நன்மை செய்வதும், அவர்கள் செய்வதைப் பொறுப்பதுமே நம்முடைய கடமை யாகும். இந்தக் கடமையைப் பொறுத்த மட்டில் அவர்கள் மனிதர்கள். ஆனால், நாம் செய்யவேண்டிய கருமங்களுக்கு இடையூறு செய்துவரும் மனிதர்கள் சடப்பொருள்களைப் போல் ஆவார்கள். வெயில், மழை, காற்று அல்லது துஷ்ட மிருகங்களைப்போல் அவர்களைக் கருத வேண்டும். சடப்பொருள்களைப் போலவே அவர்களும் என் முயற்சிக்கு இடையூறுவார்கள். அவர்கள் செய்யும் தீமைகள் சடப்பொருள்களால் உண்டாகும் இடையூறுகளைப்போலவே என் உள்ளத்தின் சக்தியையாவது சுபாவத்தையாவது பாதிக்கக் கூடாது. தடைக்குத் தகுந்தவாறு முயற்சியை

மாற்றிக்கொண்டு வேறு வேறு வழிகளில் என் கருத்தை நடத்த எனக்குச் சக்தி யுண்டு. மனிதனுக்குத் தன் கருமத்தை நிறைவேற்றுவதற்காக எந்த இடையூறையும் தனக்கு ஒரு சாதனமாகவே மாற்றிக்கொண்டு, வெற்றியடைய ஆத்மாவுக்குச் சக்தியுண்டு.

49. பிரபஞ்சத்தில் எது சிறந்த அம்சம்? எல்லாப் பொருள்களையும் தனதாக்கிப் பயன்படுத்திக்கொள்ளும் அம்சம், எல்லாப் பொருள்களையும் தன் ஆட்சிக்குள் அடக்கி ஆளும் அம்சம், அதுவே சிறந்ததாகக் கருதுவாய். அவ்வாறே உனக்குள்ளும் எது சிறந்த அம்சம் என்பதையும் அறிந்துகொள். அந்தப் பொருளும் உலகத்தை ஆண்டுவரும் பொருளும் இரண்டும் ஒரு இனம். அதுவேயல்ல? இரண்டும் ஒன்றே. உலகப் பொருள்களையெல்காம் தனதாக்கிப் பயன்படுத்தும் பரம்பொருள் உனக்குள்ளும் இருக்கிறதல்லவா? அதுவே உன் உடல் வாழ்க்கையையும் நடத்துகிறது.

50. ஊரைக் கெடுக்காதது ஒன்று ஊரானுக்கு கேடாகாது. எந்த விஷயத்திலும் இந்த உண்மையை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய ஊருக்கு இதனல் துன்பமில்லை அல்லவா? அப்படியாயின் எனக்காக நான் ஏன் வருந்த வேண்டும்? ஒருவனுடைய செயல் ஊருக்கே துன்பம் தருவதாயின் அவன் அவ்வாறு ஏன் செய்தான்? அவன் எதைத் தவருக உணர்ந்தான்? இவ்விஷயங்களை விசாரித்தல் தகும். சினங்கொள்வதில் பயனில்லை.

பொருளின் மறைவும் அழிவும் என்ன வேகத்துடன் நடைபெறுகிறது என்பதை அடிக்கடி சிந்திப்பாயாக. பிரபஞ்சமே ஒரு நதிப்பிரவாகம்போல் ஓடிச்செல்கிறது. எதுவும் நிலையில்லை. எத்தனை மாறுதல்கள்! எவ்வளவு

விசை! நாம் நிற்கும் நிலை என்ன? முந்தி தீர்ந்த காலம் அநாதியும் அளவிறந்தது மானது, வருங்காலமும் எல்லையற்றது. அதன் அகன்ற வாயிலில் அனைத்தும் விழுந்து அழிந்து போகும். இப்படி அளவும் எல்லையுமற்ற இரண்டின் மத்தியில் ஏதோ கஷ்டம் வந்தது என்று துயரப்படுகிறோம், கவலைப்படுகிறோம். முந்தியும் பிந்தியும் ஆதியந்தமற்ற அகண்ட கால அளவுகள் கிடக்க, மத்தியில் வரும் இந்த அற்பங்களைப் பொருள்படுத்துவது என்ன அறியாமை!

51. எப்போதும் நினைவில் வை. சர்வ வியாபகமான பொருளில் நீ எவ்வளவு அற்பமான பகுதி? பிரபஞ்சத்தில் நீ எவ்வளவு சிறிய பாகம்? அனந்தமான யுகங்களில் எவ்வளவு க்ஷணமாத்திரம் உன் ஆயுள்? உலகத்தின் சம்பவங்களில் உன் வாழ்வு ஒரு அணு மாத்திரம். இதை நினைவுக்குத் தந்துகொண்டால், உனக்கு நிகழும் சுக துக்கங்களைப் பொருள்படுத்த மாட்டாய்; சமநிலை யடைவாய்.

52. எனக்கு ஒருவன் தீங்கா செய்தான்? அவனுக்கல்லவோ அது துன்பம்? பிறனுடைய தீச்செயல் என்னை என்ன செய்யும்? அவனுடைய மனோவிருத்தியும் அவனுடைய முயற்சியும் அவனைத் தாக்கும். நன்மையோ தீங்கோ அவனுக்குத்தான் நேரிடும். நான் என்ன செய்ய வேண்டும் என்று என்னுடைய ஆத்மா எண்ணம் ஊட்டுகிறதோ, அதை நான் செய்கிறேன். நான் அடைய வேண்டும் என்று உலகத்தை நடத்தும் தெய்வம் எனக்கு எதைத் தருகிறதோ அதை நான் அடைகிறேன். பிறனுடைய தீங்கு என்னைத் தாக்காது.

உ

53. தேவர்களுள் ஒருவனாக வாழ். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஈசுவரனுடைய அம்சம் குடிகொண்டிருக்கிறது. அதுவே உள்ளிருந்து நமக்கு அறிவூட்டி, வழிகாட்டி எப்பொழுதும் நம்மைக் காத்து வருகிறது. வாழ்வில் தான் பெற்றதைத் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டு, எல்லாக் காரியங்களிலும் உள்ளத்திலுள்ள தெய்வம் காட்டும் வழியில் நடப்பதே மனிதன் வானவர்களுடன் வாழ்வதாகும்.

54. உலகத்தின் தருமம் ஒருமைப்பட்டு வாழ்வதே. சிருஷ்டியில் ஒன்றுக்கொன்று பயன்படவும் ஒன்றோடொன்று இணங்குமாறும் அனைத்தும் நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது. கீழ்ப் பொருள்கள் ஒன்றை ஒன்று தாங்கும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை எளிதில் கண்டுகொள்கிறோம். இதைப் போலவே மேல் வகைப் பிராணிகளாகிய நாமும் ஒன்றுபட்டு வாழ அமைக்கப்பட்டிருக்கிறோம்.

உன் நெஞ்சை நீ கேள்: இதுவரையில் நீ எவ்வாறு நடந்துகொண்டாய்? தெய்வம், தாய் தந்தையோர், சகோதரர்கள், மனைவி, குழந்தைகள், குருக்கள், உபாத்தியாயர், சிநேகிதர்கள், பந்துக்கள், வீட்டு வேலைக்காரர்கள் இவர்களிடமெல்லாம் எப்படி நடந்துகொண்டாய்? நான் இதுவரையில் எவர்பாலும் அநியாயம் செய்யவில்லை, தகாத பேச்சும் பேசவில்லை என்று உண்மையாகச் சொல்ல இயலுமா? அவ்வாறு நடந்துகொண்டாயா? நீ வாழ்ந்த வாழ்க்கையை முற்றிலும் நினைவுக்குத் தந்துகொள். எவ்வளவு பொறுத்தாய்? துக்கத்தைப் பொருள்படுத்தாமலும், சுகத்தைப் பற்றிக்கொள்ளாமலும் சமநிலையிலிருந்து

வந்தாயா? எவ்வளவு வரையில் அவ்வாறு இருந்தாய், எவ்வளவில் தவறினாய்? எத்தனை ஆசைகளை விட்டு விலகினாய்? எத்தனை தீமைக்கு நீ நன்மை செய்து கடனைத் தீர்த்தாய்? உன்னுடைய உலக வாழ்க்கை முடியும் காலம் வந்ததே, இதையெல்லாம் கணக்கு எடு.

55. இந்திரியங்கள் விரும்பும் விஷயங்கள் நிலையற்றவை. ஐம்பொறிகளால் அடையக்கூடிய அறிவும் ஐயம் திரிபு கொண்டது. உயிரும் இரத்த ஓட்டம்தான்; இப்படியானால் எதற்காக இந்த உலகத்தில் வாழ்ந்திருக்க வேண்டும்? நல்ல கீர்த்திக்காகவா? நிலையாமையும் அறியாமையும் நிறைந்த இந்த உலகத்தில் கீர்த்திதான் என்ன பொருள்? அதற்கு மேலென்ன இருக்கிறது? முடிவோ, மறு பிறப்போ, அதுவரையில் என்ன கடமை? தேவர்களை வழிபடுதலும், துதித்தலும், மனிதர்களுக்கு உதவுதலும், அவர்கள் செய்ததைப் பொறுத்தலும், செய்யக்கூடாதனவைகளைச் செய்யாமல் தன்னைத் தான் அடக்கலுமே. உன்னுடைய சிறிய உடலும் உயிரும் உன்னுடையன, அவற்றைத் தவிர மற்றவையெல்லாம் உன் ஆதீனமில்லை, உன்னுடைய கவலைக்கும் பொருளல்ல.

56. அறவழியில் நீ நின்று உன் எண்ணமும் செயலும் ஒழுங்கு தவறாமல் இருந்தால் உன் வழி எளிதேயாகும். ஆத்மாவைச் சாந்தப்படுத்தக் கூடியது உள்ளத்துக்கு வெளியில் எதுவும் இல்லை. நடுநிலைமை தவறாத மனமும் செயலுமே அதற்குச் சிறந்த இன்பம். அதற்கு மேல் எதையும் அது வேண்டாது.

57. இது நான் செய்த ஒரு குற்றமா? அல்லது என்னுடைய தீச்செயலிலிருந்து உண்டானதா? இல்லையாயின், இது பொது வாழ்க்கைக்குத் துன்பம் உண்டாக்

குமா? இல்லையாயின், இதைப்பற்றி நான் என் சஞ்சலப்பட வேண்டும்?

58. உன் கடமையை ஆற்றுவதில் வெயிலையும் குளிரையும் பார்க்காதே; தூக்கத்தையும் பார்க்காதே. பிறர் போற்றுவதையும் தூற்றுவதையும் கவனிக்காதே. உயிர் போவதையும் பொருட்படுத்த வேண்டாம். இறப்பதுங்கூட மனிதன் செய்யும் கருமங்களில் ஒன்று தான். உயிர் துறப்பதையும் சரியாகச் செய்து முடிக்க வேண்டும்.

எதையும் ஊடுருவிப்பார். எதிலும் ஒரு சிறப்பான குணமிருக்கும். பொருள்களில் மறைந்து கிடக்கும் நன்மையைக் கவனிக்காமல் விட்டுவிடுவது எளிது.

59. பிறர் செய்த தீமைக்குத் தகுந்த பிரதி. அவரைப் போல் நாமும் செய்யா திருத்தலே.

60. கடவுளை மனதில் எப்போதும் வைத்துப் பிறருக்கு உபகாரமாக வாழ். உனக்கு இன்பம் தருவதும், மனத்தில் அமைதி யுண்டாக்குவதும் இது ஒன்றே. உலகத்தோடு ஒத்துப் பிறருக்கு உபகாரமாய் வாழ்வதில், ஒன்று முடிந்ததும் உடனே மற்றொன்று செய்யத் தொடங்கு. இடைவிடாமல் ஒப்புரவறிந்து செய்தலே சந்தோஷம், அதுவே ஓய்வு.

61. அதிருப்தி என்? எதுவும் இயற்கைத் தத்துவத் திற்கு இசையத்தான் முடியும். அதுவன்றி வேறு வழி எது? மற்றெந்தத் தத்துவத்திற்குப் பொருள்கள் இசைந் திருக்க முடியும்?

62. உலகமானது அறிவில்லாத அணுக்களின் தற் செயலான கலப்பாய் இருக்கலாம். அல்லது தெய்வத் திற்கு அடங்கி ஒழுங்கும் ஒற்றுமையும் பொருந்தியதாக இருக்கலாம். இவ்வுலகம் தெய்வாதீனமற்று ஒழுங்கும்

பயனுமற்றதாயின், அதில் இருக்க வேண்டும், இருக்க வேண்டும் என்று ஏன் இன்னும் ஆசைப்படுகிறேன்.

எப்போது சாம்ப ராவேன் என்பது தவிர, வேறு என்ன கவலைவேண்டும்? அதற்கும்தான் ஏன் கவலை? நான் என்ன செய்தபோதிலும், செய்யாதபோதிலும் உடல் சிதைவடைந்து முடிவில் மண்ணோ, சாம்பலோ ஆவது நிச்சயம். அப்படி யல்ல, தெய்வ முண்டு, ஒழுங் குண்டு, அமைப்புண்டு என்றால் உலகத்தை நடத்தும் தெய் வத்திடம் விசுவாசமும் பக்தியும் வைத்து அமைதி யடை.

63. நேர்ந்த சம்பவங்களினால் உன்னுடைய மனம் அமைதி கெட்டால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ் வளவு சீக்கிரம் மறுபடி அமைதியை உள்ளத்தில் ஏற்படுத் திக்கொள். ஒரு கணமும் தாமதிக்க வேண்டாம். இவ் வாறு கவனித்து வந்தால் அதுவே பழக்கமாகி, சாந்த சித் தம் கலையாமலே இருக்கும்.

64. நான் எண்ணுகிற எண்ணமாவது செய்யும் காரியமாவது குற்றம் என்று பிறன் ஒருவன் எனக்கு அறி வுறுத்துவானானால், உடனே மாற்றிக்கொள்வேன். குற் றத்தை எடுத்துக்காட்டினவனுக்கு நன்றியும் செலுத்து வேன். நான் நாடுவது உண்மையைத்தான். உண்மை யினால் எக்காலத்திலும் ஒருவன் துன்ப மடைந்தது கிடை யாது. உண்மையைப் புறக்கணித்து அஞ்ஞானத்திலிருந்து கொண்டு தன்னைத்தான் மோசம் செய்துகொள்கிறவனே கேடுறுவான்.

65. நான் என் கடமையை செய்து முடிப்பேன். பிற விஷயங்களை நான் கவனிக்க மாட்டேன். எனக்கு இடை யூறுகும் காரணங்களை இரு பகுதியாகப் பிரித்துக்கொள்ள லாம். ஒரு பகுதி அறிவற்ற பொருள்கள். மற்றொரு பகுதி அறிவுள்ள மனிதர்களில் வழி தப்பியவர்களும் நெறி

அறியாதவர்களும்; இரு பகுதியினிடமும் சினங்கொள் வது தகுதி யல்ல.

66. அசேதனப் பொருள்களிடமும் பகுத்தறி வில்லாத பிராணிகளிடமும் அறிவுள்ள நீ பெருந்தகைமை யோடு நடந்துகொள். மனிதர்களுடன் உபகாரஞ் செய்து ஒத்து வாழ்வாய். எல்லா விஷயங்களிலும் தெய்வத்தை வணங்கி நடப்பாய். இவ்வாறு எத்தனை காலம் செய்து வருவேன் என்று கவலைப்பட வேண்டாம். ஏழரை நாழிகை இப்படி அறநெறி வழுவாது நின்றாலும் போதும்

67. மரணம் வந்ததும் உலகத்தை ஆண்ட சிகந்தர் சக்கரவர்த்தியும் அவன் குதிரைக்காரனும் ஒரே நிலை மையை அடைந்தார்கள். அனைத்திற்கும் காரணமாய் நிற்கும் பரம்பொருளில் இருவரும் சேர்ந்துவிட்டார்கள். அல்லது இருவரும் ஒரேவிதமான அணுக்களாகச் சிதறிப் போனார்கள்.

68. மார்க்கன் என்ற உன்னுடைய பெயரை எழுது வது எப்படி என்று ஒருவன் கேட்டால், அவனுக்குச் சாவதானமாய் ஒவ்வொரு எழுத்தாக எழுதிக் காட்டுவாய் அல்லவா? அதை எழுதத் தெரியாதவர்கள் மேல் கோபித் துக்கொண்டு கூப்பாடு போடுவாயா? அவ்வாறே இவ் வுலகத்தில் ஒவ்வொரு சமயத்தில் ஏற்படும் கடமையும் பல அம்சங்கள் கூடி உண்டாகும். இதை நினைவில் வைத் துக்கொண்டு மனந் தடுமாறாமல் கோபம் காட்டுபவரிடம் கோபம்கொள்ளாமல் உன்னுடைய கருமத்தைப் பொறு மையுடன் செய்.

69. ஒருவன் தன் காரியம் தன் சுதந்திரம் என்று கருதக்கூடிய விஷயங்களில் தன் சுகமும் லாபமும் தேடித் தன்னிஷ்டம்போல் செய்கிறான். அதைத் தடுக்க உனக் கென்ன உரிமை? பிழையைச் செய்தான் என்று ஒருவன்

மேல் சினங்கொள்வது இத்தகைய அவனுடைய சுதந் திரத்தைத் தடுப்பதே ஆகுமல்லவா? தன் லாபத்தைக் கருதித் தன் அறிவுக்கிசைய அவன் செய்வது பிழையாக இருக்கலாம். அப்படியாயின் சினங்கொள்ளாமல் பிழை செய்தவனுக்குப் பிழையைக் காட்டி அறிவுறுத்துவா யாக.

பொம்மலாட்டத்தில் பொம்மைகளை ஆட்டுவதுபோல், ஆசைகள் நம்மை ஆட்டுகின்றன. மனமானது விவேகத் துக்குக் கட்டுப்படாமல் தன்னிஷ்டம்போல் இழுத்துச் செல்லுகிறது. தேகத்துக்காகப் பாடுபடுவதோ மகா தொந்தரவு. இந்தப் பாதைகளிலிருந்தெல்லாம் விடுபடுவ தல்லவோ மரணம்?

உன்னுடைய ஆத்மா சாதாரண மனித ஆத்மாவாக இருப்பது மாறி, அரச ஆத்மாவாகப் போய்விடாமல் பார்த்துக்கொள். பழக்கத்தினுல் நீயும்கூட கெட்டுப் போகலாம். ஆகையால் ஜாக்கிரதையாக இருக்க வேண் டும். சாதாரண மனிதத்தன்மையை இழந்து விடாதே. சுய மரியாதையைக் காத்து, நெறிதவறுமல், யோக்கியதையை நழுவவிடாமல் நியாயத்துக்கும் தெய்வத்துக்கும் பயந்து நடந்துகொள். மக்களிடம் அன்பு காட்டு. கடமை யைச் செய்வதில் தைரியத்தோடு இருப்பாய். தரும நூல்களில் நீ எதைக் கண்டாயோ அதன்படி நடக்கவே பார். வாழ்நாட்கள் அதிக மில்லை. அறத்திலிருந்து பிழை யாத ஒழுக்கமும் மக்களுடன் ஒத்துவாழ்வதுமே வாழ்க் கையைப் பயன்பெறச் செய்வதற்கு வழி. எல்லாக் காரியங்களிலும் உன் தகப்பனர் அந்தோனியரைக் குருவாக மனதில் அமைத்துக்கொண்டு, அவருடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றுவாயாக. எந்தக் காரி யத்தைத் துவக்கினுலும் ஒரே நெறியைக்கொண்டு

சென்றார். சமநிலை தவறாமல் மனதைக் காத்துவந்தார். முகத்தில் எப்போதும் சாந்தம், எப்போதும் இன்சொல். உலகத்தார் புகழ்ந்து பேசுவதற்காகத் தன் தருமத்தை அவர் விடமாட்டார். அரசியல் விஷயங்களைத் தளராமல் கவனித்தார். எந்த விஷயத்தையும் ஐயம் தீர விசாரித்து மனதில்கொள்வார். எந்தக் காரணத்தைக்கொண்டும் அரைகுறையாகத் தெரிந்துகொண்டு திருப்தியடைய மாட்டார். அவரைப்பற்றி அக்கிரமமாகச் சிலர் குற்றம் சொன்னாலும், அதைப் பொறுப்பார். அவர்கள் பேரில் அதைக் குற்றமாகச் சொல்லமாட்டார். அவசரப் படமாட்டார். கோள்சொல்லும் மக்கள் பேச்சைக் கேட்க மாட்டார். மனிதர்களின் சுபாவங்களையும் நடத்தையையும் அறிந்துகொள்வதில் எவ்வளவு நுட்பம்! பிறத்தியார் பேரில் பிழைபோட மாட்டார். பயப்பட மாட்டார். வீண் சந்தேகம் கொள்ளமாட்டார். சாமர்த்தியமாக வாதிப்பதில் மகிழ்ச்சியடைய மாட்டார். உடுப்பு, உணவு, பரிவாரம், படுக்கை வாசம் எல்லாவற்றிலும் எவ்வளவு எளிய வாழ்க்கை நடத்தினார்! வேலை செய்வதில் சளைப்பதே கிடையாது. நண்பர்களிடம் பிறழாத நட்பு எப்போதும் வைத்துவந்தார். பேத அபிப்பிராயம் கொண்டவர்களிடமும் எதிர்த்துப் பேசினவர்களிடமும் சாந்தமும் பொறுமையும் காட்டினார். தான் கருதியதைக் காட்டிலும் மேலான முறையை யாரேனும் எடுத்துக் காட்டினால் அதைப்பற்றி அவ்வளவு மகிழ்ச்சியடைவார்! தெய்வ பக்தி படைத்திருந்தார். ஆனால், மூடர்களைப் போல் பேய்க்கும் பிசாசுக்கும் பயப்பட மாட்டார். அவரைப் போல் உன் வாழ்நாளை முடிக்கப் பார்.

70. எனக்குள்ளது ஒரு உடலும் ஒரு மனமும். இந்த உடலோ அறிவற்ற வஸ்து. மனம் சேர்ந்தா

லொழிய அதற்கு இன்ப துன்பம் கிடையாது. மனமோ தன் செயலே அல்லாமல் வேறு எதுவும் அதைப் பாதிக்காது. தன் செயலைப் பொருந்தினவளவு மனதிற்குப் பூரண சுதந்திர முண்டு. அதிலும் நிகழ் காலமே அதற்குக் காலம். இறந்த காலமும் வருங் காலமும், மனதைத் தீண்டாதவை. கழிந்ததும், வருவதும் நிகழும் எண்ணமாக வடிவங்கொண்டால்தான் மனதிற்குள் வரும்.

71. ஆசியாவும் ஐரோப்பாவும் பிரபஞ்சத்தில் எவ்வளவு அற்பமான பாகம்? மகா சமுத்திரங்களின் நீரெல்லாம் சேர்ந்தாலும் பிரபஞ்சத்திற்கு ஒரு துளி அளவே யாகும். நிகழும் காலமும் அதில் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஊழிகாலத்திற்கு எம்மட்டு மாகும்? நீளமும் அகலமுமற்ற ஒரு புள்ளி மாத்திரமே யாகும். உலகத்திலுள்ள எல்லாம் பொருள்களும் முழு முதற் காரணத்திலிருந்து உண்டானவை. அல்லது அவ்வாறு உண்டானவைகளி லிருந்து உண்டானவை. காட்டிலுள்ள துஷ்ட மிருகங்கள், விஷம், முள், கல் முதலிய துன்பம் தருபவை அனைத்தும் அழகும் பெருமையும் பொருந்திய பரம்பொருளிலிருந்தே உண்டானவை. எந்தப் பொருளை நாம் வழிபடுகிறோமோ அது வேறு, துன்பம் தரும் இவை வேறு என்று எண்ணி, இவற்றை வெறுக்காதே. எதைக் கண்டாலும் அதற்கு முதற் காரணமான பரம்பொருளைச் சிந்திப்பாயாக.

72. உலகத்திலுள்ள சகல பொருள்களையும் ஒன்றாகத் தொடுத்திருக்கும் தொடர்பைப்பற்றி அடிக்கடி சிந்தித்துப் பார். ஊன்றிப் பார்த்தால் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், எல்லாவற்றுள்ளும் ஒரு உடன்பாடு அமைந்திருக்கிற தென்பதையும் உணரலாம்.

ஒன்றோடொன்று தொடர்பு இல்லைபோல் தோற்றம் காட்டினாலும் உண்மையில் தொடர்பு நீங்காமல் நிற்கின்றன. எல்லாப் பொருள்களிலும் இடைவிடாத உடன்பாடு இருந்துவருகின்றது.

73. ஏதேனும் ஒரு கருவி, ஆயுதம் அல்லது பண்டம் ஆகியவற்றை ஒருவன் செய்தால் அது தொழிலுக்குத் தக்கதா என்று பார்த்து அமைத்துவிட்டுப் பிறகு அதன் கூட நிற்கமாட்டான். அதன் சக்தியினாலேயே அது பயன் பட வேண்டும். ஆனால், இயற்கைப் பண்டங்களோ அப்படியல்ல. அவைகளை உண்டாக்கிய சக்தி அவைகளுக்குள் எப்போதும் மறைந்து நின்றுகொண்டு அதனதன் பயனைப் பரிபூரண மாக்கும். ஆகையால் பராசக்தி உனக்குள்ளும் இருந்துகொண்டு வேலை செய்து வருகிறது. அந்த சக்திக்கு இசைய நடந்துகொண்டாயானால், அந்தர்யாமியாய் நிற்கும் பரம்பொருள் உன்னால் ஆகவேண்டியதை எளிதில் உண்டாக்கிக்கொள்ளும்.

74. இன்பமும் துன்பமும் உன் மனதுக்குள் உன் வசத்திலேயே இருக்கின்றன. புறத்தில் ஒன்றுமில்லை. புறத்தில் சுகத்திற்கும் துக்கத்திற்கும் காரணம் உண்டென்று எண்ணுவாயானால், அதன் பயனாக தெய்வத்தைக் குறைகூறுவாய்; ஜனங்களையும் துவேஷிப்பாய். நியாயத் தவறாயும் நடப்பாய். அவ்வாறின்றி, இன்பமும் துன்பமும் தத்தம் ஆதீனமே; உள்ளத்தின் எண்ணங்களே அவைகளுக்குக் காரணம் என்று உண்மையை அறிந்து நடந்தாயானால், கடவுளைக் குறைகூறவும் மனிதர்களை வெறுக்கவும் காரணம் இராது.

75. உலகத்திலுள்ள அனைவரும் சேர்ந்து ஒரு கூட்டமாகத்தான் உழைத்து வருகிறோம். ஆனால், சிலர் அறிந்து உழைக்கிறார்கள்; சிலர் தங்களுக்குத் தெரியாமல் தெய்

வத்தின் கருத்தை நிறைவேற்றி வருகிறார்கள். சிலர் உறங்கி உணர்வின்றிக் கிடப்பதுங்கூட உலகத்தின் பொது உழைப்பாகும். அவரவர் வழியில் அவரவர் இந்த உலகக் கூட்டுறவில் சேருகிறார்கள். உலக நடையை எதிர்ப்போரும், வேண்டிய அளவு இடையூறு செய்பவர்களும் நாசம் செய்ய முயலுபவர்களுங்கூட உலக நடைக்கு வேண்டியவர்களே. உலகத்தை ஆளும் பராசக்தி எல்லோரையுமே தன் கருவிகளாகக் கொள்ளுகிறது. நீ முடிவு செய்ய வேண்டியது எத்தகைய கருவியாவது உனக்கு நலம்? இவ்வளவே. எதிர்த்துச் சேவை செய்வாயா? அல்லது அறிந்து உடன்பட்டுச் சேவை செய்வாயா?

**76.** தெய்வம் என் தனிநலத்தைப்பற்றிக் கவனித்து வருகிறதோ இல்லையோ என்று கவலைப்படுகிறேன். எனது நலத்தைப்பற்றித் தெய்வம் கவனிக்கும் என்று நான் எண்ணினால் ஏன் கவலைப்பட வேண்டும்? தெய்வத்திற்கு யோசனை கூறவேண்டுமா? எனது நலமும் பொதுநலமும் தெய்வத்திற்கு முற்றிலும் தெரியும். என் உண்மை நலனுக்குக் கேடு இழைப்பதில் தெய்வத்திற்கோ உலகத்திற்கோ என்ன நன்மை? என்னைப்பற்றித் தெய்வத்திற்கு நினைப்பில்லை யென்றாலும் உலகத்தின் நன்மையைப்பற்றி யாவது கவனித்தே யிருக்க வேண்டும் அல்லவா? அதன் காரணமாக எனக்குத் துன்பம் நேரிட்டால் அதை நான் தலைமேற்கொண்டு அனுபவித்தல் வேண்டும்.

**77.** தெய்வம் நம்மைப்பற்றிக் கவனிப்பது பொய் யென்றே வைத்துக்கொள்ளுவோம். எது எனக்கு நன்மை தரும் என்பது கேள்வி. என் இயற்கைத் தருமத்தின்படி நான் இருப்பதே எனக்குப் பயன் தரும். என் இயற்கைத் தருமம் ஒப்புரவறிந்து செய்தலே. மார்க்கனுக்கு ஊர்

ரோமாபுரி. மனிதனுய்ப் பிறந்த எனது தேசம் உலகமே ரோமாபுரிக்கும் உலகத்திற்கும் எது நலனே, அதுவே மார்க்கனுக்கும் நலன்.

78. இறந்துபோனவர்களை அடிக்கடி சிந்தனையில் வைத்துக்கொள். எத்தனை தொழிலில் ஈடுபட்டோர் எத்தனை ஜாதியைச் சேர்ந்தோர் மாண்டு கவலை யற்றுக் கிடக்கிறார்கள்? இவர்கள் இறந்ததால் ஏதாவது துன்பம் உண்டா? மாண்டுபோனவர்கள் பேரையுங்கூட யாரும் நினைப்பதில்லை. அவர்களுக்குத்தான் என்ன துன்பம் நேரிட்டது? இவ்வுலகத்தில் அடையக்கூடிய மேன்மை ஒன்றே: சத்தியமும் நடுநிலைமையும் கொண்டு வாழ்வதும், பொய்யரிடமும் அநீதி செய்பவரிடமும் வெறுப்பின்றி அன்புடன் நடந்துகொள்வதுமே. அதன் பிறகு இறந்தால் என்ன நஷ்டம்?

79. ஜனங்களுக்கு அறிவுறுத்தி அவர்களைத் திருத்து. அவர்களுடைய விருப்பம் நியாயத் தவறுயிருந்தால் அதை நிராகரித்து நியாயமாய் நடந்துகொள். உன் சொல்லைக் கேளாமல் அவர்கள் மிருகபலம் உபயோகித்து உனக்கு இடையூறு செய்து உன் காரியம் நிறைவேருதபடி செய்தால், அதற்காக வருந்தாதே. மனதைச் சாந்தப் படுத்திக்கொண்டு அவர்கள் செய்யும் இடையூறுகளை உன் மன உறுதிக்குக் கருவியாகக் கொள். முடியாத ஒரு காரியத்தை நீ செய்ய முடியாது, உன்னுலான முயற்சியேதான் உன்னுடைய கடமை. அதை நீ செய்த வுடனே உன் எண்ணம் நிறைவேறிற் றென்றே சொல்ல லாம்.

80. எந்த விஷயமாயினும் நாம் இஷ்டப்பட்டால் அது மனத்தில் பிரவேசிக்காமலே செய்துகொள்ள முடியும். அதைப்பற்றி நினைக்காமலே யிருப்பது நம்மால்

கூடும். நாம் இடங்கொடுத்தா லல்லாது புறப்பொருள்கள் மனதிற்குள் செல்ல வழியில்லை.

81. தேனீக்களைப் பார். தங்கள் கூட்டத்திற்கு உதவாததை ஒரு தனி ஈயானது தனக்கென்று நாடாது.

82. காமாலை நோயாளிக்குத் தேன் கசக்கும். வெறி நாய் கடித்தவர்களுக்கு நீரைக் கண்டால் பயம். நோயின் பயனாக உண்டான நிலையைக் கண்டு கோபித்தல் தவறாகும். பித்த விஷத்தைக் காட்டிலும் அறியாமை என்னும் விஷத்தின் வேகம் குறைவா? அதன் காரணத்தினால்தானே மனிதன் தவறான எண்ணம் கொள்கிறான்? நான் அவனைக் கண்டு சினம் கொள்ளலாமா?

83 உன் ஆத்ம இயற்கைக்கு உடன்பட்டு நீ நடப்பதை யாரும் தடுக்க முடியாது. உனக்கு நேர்வதெல்லாம் உலக அமைப்பின் கருத்துக்கு இசைந்ததே. ஆகையால், விதியைக் கண்டு வருந்தாதே. நேர்ந்த தெவ்வாறாயினும், அதை யொட்டி நீ செய்யவேண்டியது எதுவோ, அதைச் செய். உள்ளத்தின் சமநிலை இழக்காதே. உன் இன்பம் உன் ஆதீனமே.

84. ஒரு வேலையைச் செய்யப் புகுந்தால் இது உன்னால் செய்ய முடியுமா? அல்லது உன் சக்திக்கு மீறியதா என்று யோசித்துப் பார். உனக்குள்ள சக்தியைத் தெய்வம் கொடுத்த கருவியாகக் கருதி உபயோகப்படுத்து. உன் சக்திக்கு மீறியதாகத் தோன்றினால் நீ பின்நின்று, தகுந்த வேறொருவனைச் செய்யவிடு. இப்படி விடுவது அறத்திற்கு மாறாயின் விடவேண்டாம். இல்லையேல், வேறொருவனைத் துணையாகக்கொண்டும், உன் அறிவைக் கொண்டும் அவனையும் செய்யச் செய்து உலகத்திற்கு உபகாரமாகச் செய்து முடிப்பாய். தனியாகவாவது துணை

கொண்டாவது நீ செய்யும் எக்காரியமும் உலகத்திற்குப் பயன்படுமாறு இருக்க வேண்டும்.

85. வருங்காலத்தைப்பற்றி மனம் கலங்காதே. வருவன வரும்போது, இப்போதுள்ள அறிவை அப்போதும் செலுத்தி உன் கடமையை ஆற்றலாம், ஆகையால், முன்னரே கவலைப்பட வேண்டியதில்லை.

86. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று நெருங்கி இணைக்கப்பட்டிருக்கின்றன. இத் தொடர்பு தெய்வீகமான சம்பந்தம். எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று கலந்தது ; எதுவும் தனிப்பட்டதல்ல. உலகமெல்லாம் ஓர் உடன்பாடு. ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது. சகலமும் சேர்ந்து ஒரு ஜீவ அமைப்பு; எல்லாம் ஒரு பிரகிருதி ; ஒரு நியமம்.

87. அறிவுள்ளவனுடைய இயற்கைக்கு இசைந்ததும் அறிவுக்கு இசைந்ததும் ஒன்றே ஆகும். அறிவுள்ளவன் இயற்கையும் அறிவுக்கு அதி தெய்வமும் ஒன்றேயாகும்.

88. மனிதர்கள் ஒருவருக்கொருவர் ஓர் உடலின் பல உறுப்புகள் போலாவார்கள். ஒன்றாக வாழவே மனிதர்கள் இருப்பது. அவர்கள் இயற்கையும் இதற்கே இசைந்திருக்கிறது. மனிதவர்க்கம் என்னும் உடலில் நான் ஓர் உறுப்பு என்று அடிக்கடி சிந்திப்பாயாக. இது உன் மனதில் நன்றாகப் பதிய வேண்டும். மனிதர்களில் நானும் ஒருவனாக இருக்க, என் உயிரும் வாழ்வும் வேறு என்று நினைத்தேனானால் உபகாரம் செய்வதில் எனக்கு இன்னும் முழுமகிழ்ச்சி இல்லையென்பது விளங்குகிறது. பிறருக்குச் செய்யும் ஒரு கடமையாக உபகாரம் செய்கிறேனே யொழிய, அப்படிச் செய்வது எனக்கே உபகாரம் என்பதை இன்னும் அறியவில்லை.

89. எது நேரினும் நேர்க. என் உடலை அது தாக்குமேயன்றி என் மனதைப் பாதிக்காது. எதை அது தாக்குகிறதோ அதற்கல்லவோ அதைப்பற்றிக் கவலை? என் எண்ணத்தில் அது துன்பமானுலொழிய என்னை அது என்ன செய்யும்? அதைத் துன்பமாகக் கொள்வதும் கொள்ளாமலிருப்பதும் என் சுதந்திரம்!

90. யார் எது செய்தாலும், எது சொன்னாலும் நன்றே செய்யக் கடவேன். பொன்னும் மரகதமும் பட்டும் இப்படியேதான். யார் எது சொன்னாலும் எது செய்தாலும் அவை தம் நிறமோ அழகோ மாறுமா?

91. அதி சீக்கிரத்தில் எல்லாவற்றையும் விட்டு நீ மறைந்து போவாய். உன்னை விட்டும் எல்லாம் மறைந்து போகும். இதை நன்ருக உணர்ந்தாயா?

92. தீங்கிழைத்தவனிடமும் அன்பு செய்வது உன் தருமம். உன் உறவினன் தவறு செய்வதற்குக் காரணம் அறியாமை. மனம் ஒவ்வாமல்தான் தவறு செய்கிருன். இருவரும் விரைவில் இறந்து போவீர்கள். தவிர உனக்குத் தீங்கும் நேரிடவில்லை. உன் ஆத்மாவுக்கு அவன் செயலினுல் ஒரு கேடும் நேரிடவில்லை. உன் குணம் மாறினுலன்றி ஒரு துன்பமும் நீ அடையவில்லை. இவைகளை மனதில் வைத்தாயானுல் தீங்கு செய்தவனிடம் அன்புகாட்டுதல் எளிதாகும்.

93. மெழுகைக்கொண்டு பொம்மை செய்வதுபோல், இயற்கைச் சக்தியானது, பிரகிருதிப் பொருளிலிருந்து சகல பதார்த்தங்களையும் உருவாக்குகிறது. ஒன்றை அழித்து உடனே அதன் பொருளிலிருந்து வேறு பொருளை உண்டாக்குகிறது. இப்போது ஒரு குதிரை; பிறகு, ஒரு செடியாக மாறும். பிறகு, அது ஒரு மனிதனில் போய்ச் சேரும். பிறகு, வேறென்ருகும். ஒவ்வொன்றும்

கொஞ்ச காலம் பிழைத்திருக்கும். ஒரு பெட்டியைச் செய்தால் பெட்டிக்குச் சுகமா? பெட்டியை மரத் துண்டாகப் பிரித்துப்போட்டால் அதற்குத் துயரமா? உன் மரணத்தைப்பற்றி அப் பெட்டியின் உதாசீனத்தை வளர்ப்பாயாக. அதுவே ஞானமாகும்.

94. உனக்கு ஒருவன் பிழை செய்தால் உடனே அவன் எதைக் குறித்து இப்படிச் செய்தான்; எதை விரும்பி அல்லது எதை ஒழிக்க எண்ணி இவ்வாறு செய்தான் என்று சிந்தித்துப் பார். இவ்வாறு ஆராய்ந்து பார்த்தாயானால் அவனுக்கு இரங்குவாய்; சினங்கொள்ள மாட்டாய். அவன் எதை நலமாகக் கருதி விரும்புகிறானோ அதை நீயும் விரும்புகிறாய்; அல்லது அதைப்போல் வேறொன்றை விரும்புகிறாய். ஆகையால், அவன் பிழையைப் பொறுப்பது உன் கடமை. ஒருவேளை உன் முதிர்ந்த அறிவால் நீ அவன் விரும்பும் பொருளைப் பொய்யென்றும், அவன் வெறுப்பதைத் துன்பமல்லவென்றும் கண்டுகொண் டிருப்பாயேல், அவனுக்கு அத்தகைய மெய்யறிவு கிடையாதென்று அவன்மீது இரக்கம் கொள்ள வேண்டும் அல்லவா?

95. உன்னிடம் இல்லாத ஒரு பொருளின் மேல் ஆசை கொள்ளாதே. உன்னிடம் இருக்கும் சிறந்த பொருள்களை நினைத்துப்பார்த்து மகிழ்ச்சி யடைவாய். அவை இல்லாதிருந்தால் அவற்றை எவ்வளவு அவாவுடன் தேடியிருப்பாய் என்பதை யோசிப்பார். இவ்வாறு சிந்தித்து மனதைத் திருப்தி செய்துகொள். ஆனால், இவ்வாறு சிந்தித்து நீ அடைந்திருக்கும் பொருள்கள்மீது வரம்புமீறிப் பற்று உண்டாக்கிக்கொள்ள வேண்டாம். அவைகளை இழக்க நேரிட்டால் அதிகத் துன்பப்படுவாய்.

96. புலன்களை உள்நோக்கித் தியானஞ் செய். நடு நிலைமைகொண்ட மனத்திற்குத் தியானத்தில் திருப்தி உண்டாகும்.

97. மரணம் என்பது என்ன? உடலில் உடலைத் தவிர வேறு ஒன்றும் இல்லையாயின், அணுக்கள் சிதைவு படுதல்தானே. உயிர் என்பது வேறாயின் அதுவும் வேறு உடலுக்குச் செல்லும், அல்லது முடிவடையும்.

98. நோய் என்பது என்ன? பொறுக்க முடியாத தாயின் உயிர் நீங்கும். பிறகு நோய் இல்லை. மனதைத் தனக்குள் செலுத்தி அடக்கிக்கொண்டால் அமைதியடை யலாம். உடலைப் பாதிக்கும் நோயால் ஆத்மாவுக்குத் துன்பம் இல்லை. மனதை வசப்படுத்தி நோயை விட்டுத் தனித்து நிற்கச் செய்தால் உடலுக்குத் தனி உணர்ச்சி இல்லை. அதையும் நோய் துன்புறுத்தாது.

99. அனந்த காலத்தையும் பிரகிருதிப் பொருளையும் நோக்கும் விசாலமான அறிவை உடையவனுக்கு, மனித னுடைய வாழ்நாள் பெரிதாகத் தோன்றாது. அத்தகை யோனுக்கு இறப்பதில் ஒரு துயரமும் இல்லை.

100. நலம் புரிவதும் நிந்தனைக்கு ஆளாவதும் அரசர்க ளுடைய பெரும் பாக்கியம்போலும்.

101. தேகபலத்தில் உன்னை ஒருவன் வெல்லலாம். ஆனால், ஒப்புரவு, அடக்கம், பொறுமை, சினங்காத்தல் இவைகளில் தோல்வி யடையாதே.

102. புலன்களை உன் உள்ளத்தில் புகட்டு. உன் உள்ளமே வற்றாத நீர் ஊற்று. வெட்ட வெட்ட நன்மை உண்டு.

103. யாருடைய புகழ்ப் பேச்சை நீ விரும்புகிறாய்? அவர்கள் எத்தகையோர்? அவர்கள் அறிவு எத்தகையது? சிந்திப்பார். மனிதர்களுடைய எண்ணங்களும் செயல்

களும் அவரவர்களுடைய அறிவுக்கு ஏற்றபடி இருக்கும். அவர்கள் மனமொவ்வாமல் செய்வதைப் பிழையாகக் கருதமாட்டாய். அவர்களுடைய பாராட்டுதலையும் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டாய்.

ந

104. உள்ளம் மகிழ்ந்து எவனும் உண்மையை விட்டுப் பொய்யில் இறங்கமாட்டான். அப்படியே நீதி, நியாயம் அன்பு முதலியவைகளும். இதை எப்போதும் மறவாமல் நினைவில் வைக்க வேண்டும். அப்போது பிழை செய்தவர்களிடமும் தயையுடன் நடப்பாய்.

105. உன் தீவினையினின்று நீ தப்புவது சாத்தியம்; பிறர் தீவினையிலிருந்து தப்புவது அசாத்தியம். ஆயினும், எது சாத்தியமோ அதைச் செய்யமாட்டாய். எது அசாத்தியமோ அதைச் செய்ய முயலுவாய். இது என்ன கேலிக் கூத்து!

106. உபகாரம் செய்வது, உபகாரம் பெறுவது இவை இரண்டன்றி மூன்றாவது ஒரு பொருளை ஏன் தேடுகிறாய்? செய்த நன்மைக்கு மூடர்கள்தான் நன் மதிப்பும் கைம்மாறும் நாடுவார்கள்.

107. உபகாரம் பெறுவதில் யாரும் அலுப்படைய மாட்டார்கள். பிறருக்கு உபகாரம் செய்வதினால் உன் சுபாவ தருமத்தை நீ காப்பாற்றுவாய். அது உனக்கே செய்து கொண்ட உபகாரமாகும். ஆகவே, பிறருக்கு உபகாரம் செய்வதில் அலுப்பு அடையாதே. அது உபகாரம் பெறுவதே ஆகும்.

108. பராசக்தி உலகத்தை ஒழுங்குடன் உண்டாக்கியிருக்கிறது. சகலமும் அந்த ஒழுங்கின்படியே நடைபெறுகிறது.

**109.** எல்லாம் உலக அமைப்புக்கு அனுகூலமாகவே நடைபெறும். ஆகையால், மனக்கலக்க மடையாதே. சில காலம் கழிந்தபின் நீ இருக்கப்போவ தில்லை. புகழ்பெற்ற உன் முன்னோர்கள் எப்படி மாண்டு மறைந்தார்களோ, அப்படியே நீயும் ஆவாய் என்பதை நினைவில் வைத்துக் கொள். எந்தக் கருமம் இப்போது செய்ய வேண்டுமோ அதைக் கவனித்துச் செய்வாய். நலம் புரிவதும், மனித சுபாவத்திற்கு இசைந்து நடப்பதுமே உன் இயற்கைத் தருமம். இதை மறவாமல் உன் செயல்கள் எக்காரணத்தினாலும் அத் தருமத்தினின்று பிறழாமல் இருக்குமாறு பாதுகாப்பாய். உன் பேச்சும் அவ்வாறே நீதி வழுவாதிருக்கட்டும். ஆனால், அன்பும் அடக்கமும் கொண்டு, பொய் வேஷமின்றிப் பேசுவாயாக.

**110.** நெறிதவறுதவனுக்கு மனதில் எப்போதும் மகிழ்ச்சி யிருக்கும். நெறிதவறுமல் இருப்பதற்கு மனதைக் காக்க வேண்டும். ஐயமும் பொய்யும் கொண்ட கருத்துக்களை ஒழித்து உலகத்திற்கு உபகாரம் செய்வதிலேயே மனதைச் செலுத்தித் தன் ஆதீனத்தில் இல்லாத புறப்பொருளில் விருப்பும் வெறுப்பும் கொள்ளாமல், உலகப் போக்கில் எது நேரிடினும் மனக்குறை கொள்ளாமலிருக்கும் சுபாவத்தை வளர்த்து வந்தால் அறிவுள்ளவன் நெறிதவற மாட்டான்.

**111.** செடியிலுள்ள இலை தனக்கு வேண்டியதைப் பெற்று வளர்கின்றவாறு பரம்பொருள் என்னும் செடியில் ஒரு இலையாகிய நீயும் பாதுகாக்கப்பட்டு வருகிறாய். மரம் உணர்ச்சியும் அறிவுமில்லாதது; பந்தப்பட்டது. நீ எந்தப் பரம்பொருளின் இலையாக இருக்கிறாயோ அப்பொருள் கட்டுப்படாதது; வரம்பற்ற சுதந்திரமும் அறிவும் நீதியும் கொண்டது. ஒவ்வோர் உயிருக்கும் ஆயுள்,

பொருள், பாக்கியம், ஆற்றல், முயற்சி, சமயம் இவை களைச் சமமாகவும் தக்கபடியும் அது கொடுக்கும். சமம் என்றால் ஒவ்வொரு பகுதியும் சமமாக இராது. ஆனால், எல்லாம் ஒருமித்துப்பார்த்தால் சமம் தெரியும்.

*112.* உன்னுடைய மற்ற அலுவல்களினாலோ, அல்லது வேறு காரணத்தினாலோ நூல்களை ஆராய்ந்தறிய உனக்கு அவகாசம் இல்லையானாலும் பிறருக்கு அருவருப்பு உண்டாகாதபடி நீ நடந்துகொள்வதற்கு என்ன தடை? இன்ப துன்பங்களால் உன் மனம் கலங்காமலிருக்கக் காலம் போதா? பொய்ப்புகழை நாடாமலிருக்க முடிய வில்லையா? அறிவீனர்களைக் கண்டும், நன்றி யறிவில்லாத வர்களைக் கண்டும் சினங்கொள்ளாமல் அவர்கள் செயலைப் பொருட்படுத்தாம லிருக்க நூல்கள் எதற்கு?

*113.* இறந்துபோனால் உலகத்தை விட்டு நீங்குவாய் என்று நினைக்காதே. மாறி வேறு உருவமாய் மறுபடியும் உலகத்தில் அமைவாய். உன் உடலிலுள்ள தாதுக்கள் அனைத்தும் பிரிந்து மீண்டும் வெவ்வேறு பொருளில் சேரும். அந்த தாதுக்கள் உன்னுடையதென்று இப்போது நீ எப்படி நினைக்கிறாயோ, அப்படியே உலகத்திற்குந்தான் அவை சேர்ந்தவை. மாறிப்போய் வேறு பொருள்களில் சேர அவைகளுக்கு ஆட்சேபணை யில்லை. நீ மட்டும் ஏன் ஆட்சேபிக்கிறாய்? ஆட்சேபிக்கும் உரிமையும் என்ன?

*114.* எது செய்தாலும் மனிதர்களுக்கு உபகார மாகச் செய்வேனாகவும். எனக்கு எது நேரிடினும் அதைத் தெய்வீக மென்று ஏற்றுக்கொள்வேனாகவும். அனைத்திற்கும் காரணமான ஆதிமூலத்திலிருந்து வந்ததென்று எதையும் நலனாகவே கருதுவேன்.

*115.* கருமத்தோடு கருமத்தை யொட்டி உயிர் வாழ்வை ஒழுங்குப்படுத்து. ஒவ்வொரு கருமமும் இவ்

வாறு உன் உயிர்க் கட்டிடத்தில் நேர்மையுடன் சேரு வதில் திருப்தி யடைவாயாக. இப்படிச் செய்வதில் உனக்கு ஒருவரும் தடைசெய்ய முடியாது. தடை எவ்வளவோ உண்டு என்பாய். நியாயம், தெளிவான புத்தி, அறிவு இவை உன் ஆதீனம். எந்தக் கருமம் செய்வதில் தடை நேர்ந்தாலும் அத்தடையைக் கண்டு வருந்தாமல், சூழ்நிலையிலுள்ள அசேதனப் புறப்பொருள்களில் அதையும் ஒரு பகுதியாகக் கருதி, சமசித்தத்துடன் எது சாத்தியமோ அதைச் செய்யப் புகுவாயானால், செய்யமுடியாத ஒரு கருமத்திற்குப் பதில், உடனே செய்யத் தகுந்ததும் உன் வாழ்வின் தருமத்திற்கு இசைந்ததுமான வேறொரு கடமை உன்முன் வந்து நிற்கும்.

**116.** உலகப் போக்கில் நடந்ததைப்பற்றி மனக்குறைபட்டுக்கொண்டு வருந்துதல், அல்லது உலக நலனுக்கு மாறுபாடாக நடந்துகொள்ளுதல் இவ்வாறு செய்தாயானால் உலகத்திலுள்ள ஒற்றுமையைக் கெடுத்து வேறாய்ப் போனவன் ஆவாய். கையோ, காலோ, தலையோ வெட்டுண்டு உடலினின்று வேறுபட்டுக் கிடக்கிறதைப் பார்த்திருக்கிறாயா? அவ்விதமே ஆவாய் நீ உன் செயலால். உலகத்தில் ஓர் உள்அங்கமாக நீ படைக்கப் பட்டாய். அதை மதியாமல் வெட்டுண்டாய். சரி, வெட்டுண்ட போதிலும் மறுபடியும் சேர்ந்து ஒன்றாகும் திவ்ய சக்தி உனக்கு உண்டு. கடவுள் வேறு எந்தப் பொருளுக்கும் வெட்டுண்டபின் மறுபடியும் ஒன்றுசேரும் சக்தியைக் கொடுக்கவில்லை. ஆனால், மனிதனுக்கு மாத்திரம் ஆண்டவன் இந்தச் சக்தியைக் கொடுத்திருக்கிறான். வேறாய் வெட்டுண்டாலும் மறுபடியும் ஒன்றாகக் கூடி வளர்ந்து முன்போல ஆகும் சக்தி மனிதனுக்கு உண்டு.

117. நான் எங்கே போனால் என்ன? எங்கிருந்தால் என்ன? என் உள்ளத்திலிருக்கும் தெய்வம் என்னை விட்டு நீங்காது. அந்தத் துணையைக் கொண்டு என் தருமத்தின் படி நான் நடந்து கொண்டேனானால், என் உள்ளத்தில் சாந்த சித்தம் நிலைக்கும். இவ்வாறிருக்க, ஏதேனும் ஒரு விபத்து நேர்ந்தவுடனே உள்ளம் கலங்கி, இயற்கை மாறி, நடுநடுங்கி, அலைந்து, பயந்து, ஏங்கிக் கையை நீட்டுவது தகைமையாகுமா? மனநிலையைக் காப்பதற்குமேல் எந்தப் பொருள் உளது?

118. வெள்ளரிக்காய் கசக்கிறதா? எறிந்துவிடு. வழியில் முள்ளா? அவ்வழியைவிட்டுத் தள்ளிப்போ, போதும். இப்படிக் கசக்கும் காய் ஏன் இருக்கிறது? முள் எதற்காக உலகத்தில் தோன்றியது? என்ற கேள்விகள் கேட்காதே. மரத்தச்சு அல்லது தோல்வேலைப் பட்டறையில் ஒருவன் போய் இங்கே எதற்காக இவ்வளவு குப்பையும் உபயோகமற்ற துண்டுகளும் சீவல்களும் என்று சொன்னால் சிரிப்பார்கள் அல்லவா? அதுபோல் பிரகிருதியை ஆராய்ந்தறிந்தவர்கள் உன்னைக் கண்டு சிரிப்பார்கள். தச்சனுக்குத் தன் வேலைக்கு உதவாக் குப்பையைப் போட இடமுண்டு. ஆனால், உலகத்துக் குப்பையைப் போட உலகத்தைத் தவிர்த்து வேறு இடமில்லை. ஆனால், இதுவல்லவோ, பிரகிருதியின் அதிசயம்! போட இடமில்லாத தன் குப்பையையுங்கூடப் புதிய புதிய பொருள்கள் உண்டுபண்ணிப் பயன்படுத்திப் பழையனவற்றையும் புதியனவாக்கி, முதுமையை இளமையாக்குகிறது. தன் பட்டறையில் இடமில்லை, உபகரணங்கள் போதாது, வேலைத் திறமை போதாது என்பது பிரகிருதிக்குக் கிடையாது. எதற்கும் இடமுண்டு. எதற்கும் பயனுண்டு.

119. பிரகிருதியின் ஒருமைப்பாட்டை அறியாதவன் தன் ஊரை அறியாத மூடனாவன். பிரகிருதியில் தன் கருமம் இன்னது என்பதை அறியாதவன் தன்னையும் பிரகிருதியையும் இரண்டையும் அறியாதவனாவன். தன் இயற்கைத் தருமத்தையும் பிரகிருதியின் ஒருமைப்பாட்டையும் அறியாமல் போனால், தான் எதற்காக இருக்கிறான் என்பதை அறியமாட்டான். ஒன்றும் அறியாத பலர் போற்றுவதை நாடியும், தூற்றுவதை அஞ்சியும் வாழ்பவனுடைய மடமையை என்னென்று சொல்லுவது?

120. எங்கும் பரவியிருக்கும் காற்றை சுவாசித்து வாழ்ந்தால் மாத்திரம் போதாது. அக்காற்றைப் போலவே எங்கும் பரந்திருக்கும் சித்பொருளையும் உட்கொண்டு வாழ்வாயாக. உயிருள்ளவனுக்கு சுவாசிக்க எங்கும் காற்று இருப்பதுபோலவே அறிவுள்ளவன் உட்கொண்டு வாழ இந்தச் சித்பொருளும் சர்வ வியாபகமாக இருக்கிறது.

121. என் உயிரும் உடலும் வேறு. அயலான் உயிரும் உடலும் வேறு. அப்படியே என் உள்ளம் வேறு. அவன் உள்ளம் வேறு. நாம் அனைவரும் சேர்ந்து வாழுமாறு நம்மைக் கடவுள் படைத்திருந்தாலும் அவனவன் உள்ளத்தின் ஆதீனம் அவனவனுக்கு உண்டு. இப்படியில்லாவிடில் அயலான் ஒருவன் தீய வழியில் சென்றால் அது எனக்குத் தீங்கு இழைக்கும். இது ஒழுங்காகாது. அவனவன் நன்மையும் தீமையும் அவனவன் ஆதீனமே.

122. சூரியனுடைய கிரணங்கள் நாலாபக்கமும் வீசிப்பரவினாலும் அதன் பிரகாசம் குறைந்து போவதில்லை. இருட்டறைக்குள் ஒரு துவாரத்தின் வழியாய் வரும் வெளிச்சத்தைப் பார். அது நேராகப் பாயும். அதற்கு ஏதாவது தடையானால் அதன் மேலேயே தங்கும்.

அவ்விடத்தை விட்டு நகராது. உன் மனதின் போக்கும் எண்ணங்களும் அவ்வாறே இருக்க வேண்டும். தளராத நல்லெண்ணம் இருக்க வேண்டும். நோய்ச் செல்ல வேண்டும். தடையைக் கண்டால் அதன்மேல் சூரிய வெளிச்சம் தங்குவதுபோல் உன் மனமும் தங்கவேண்டும். பலாத்காரமும் கொடுமையும் கூடாது. தடையைக் கண்டு வெறுப்பு அடையாமல் அதன்மேல் பிரகாசித்துக் கொண்டே இருக்க வேண்டும். வெளிச்சம் ஊடுருவிச் செல்லவிடாமல் ஏதேனும் தடுத்தால் அது அதன் குற்றமே அன்றி, பிரகாசிக்கும் கிரணங்களின் தவறு அல்ல.

123. மரணத்தைக் கண்டு அஞ்சுகிறவன் எதைக் கண்டு அஞ்சுகிறான்? உயிரும் உணர்ச்சியும் இல்லாமல் போய்விடுவதைக் கண்டா? அல்லது புதிய உயிரும் புதிய உணர்ச்சிகளும் வரும் என்ற பயமா? உணர்ச்சி யற்றுப் போவதானால் எந்த விதமான துக்கமும் இல்லாமல் இருக்கலாமே? புதிய உயிரும் புதிய உணர்ச்சிகளும் வருமாயின் அதனால் என்ன நஷ்டம்? புதுப்பிக்கப்படுவதில் மரணம் எது?

124. ஒருவருக் கொருவர் உபகாரம் செய்து வாழுமாறு கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். ஆகையால், குற்றங்களைத் திருத்த வேண்டும்; அல்லது பொறுக்க வேண்டும்.

125. மக்களைக் கடவுள் படைத்தது ஒருவருக்கொருவர் தக்கபடி உபகாரம் செய்துகொண்டு கூடி வாழவே. நீதி வழுவாமலும் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாமலும் இருக்கவே. நெறிதவறி நடப்போன் பல தேவதைகளை ஆராதித்தாலும் தேவாதி தேவனை பரமேசுவரனை வணங்காதவனே யாவான். உண்மை பேசாதவனும்

தெய்வத் துரோகி யாவான். பரம்பொருள் உண்மை வடிவம். பொருள்கள் தத்தம் உண்மை நிலையில் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடன் அமைந்து உலகம் நடைபெறுகிறது. உண்மை தவறினால் அந்த அமைப்புக்குப் பெரிய இடையூறுகும். ஈசுவர நிர்மாணத்திற்கு விரோத மாகும். பிரதிருதி என்பது உண்மை. உண்மை என்பது பிரகிருதி. பிரகிருதியே உண்மைக்கு மூலாதாரம். ஆகவே, ஒருவன் மனப்பூர்வமாகப் பொய் பேசி வஞ்சனையும் அநீதியும் செய்தானானால், அவன் நிச்சயமாய்த் தெய்வத் துரோகி யாவான். வேண்டாது பொய் பேசுகிறவனுங்கூடப் பிரகிருதி சுபாவத்திற்கு மாறுபாடாக நடந்து உலகத்தின் ஒழுங்குக்குக் குறைவு உண்டாக்குவதால் அவனும் அப்படியே தெய்வத் துரோகி யாவான். தன்னை அறியாமல் உண்மையிலிருந்து தவறுகிறவன், மெய்யும் பொய்யும் பகுத்தறிவதற்கு வேண்டிய அறிவும் வழியும் படைத்திருந்தும், அதைப் புறக்கணித்து உண்மையை அறியக்கூடாமல் தன்னைத் தானே செய்து கொண்டு, தெய்வச் சிருஷ்டியில் ஒழுங்கீனமும் கலகமும் உண்டாக்குகிறான். இன்பத்தையே நலனாகக் கருதித் துன்பத்தினின்றும் தப்பப் பார்க்கிறவனும் தெய்வ பக்தி இல்லாதவன் ஆவான். பல துஷ்டர்கள் சுகமும் செல்வமும் அனுபவித்து வந்தும், நல்லோர் பலர் கஷ்டங்களுக்கு ஆளாகியும் இருப்பது கண்டு, நன்மை தீமைகளைத் தகுதிக்கு ஏற்றபடி உலகத்தில் புகுத்தவில்லையென்று பாமரர்கள் கடவுளைப் பழிப்பார்கள். நன்மை தீமையின் உண்மை இயல்பை அறியாமையால் இப்படிப் பழிக்கத் தோன்றும். துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறவன் இயற்கையில் இன்றியமையாத ஒரு சம்பவத்தைக் கண்டு அஞ்சுகிறவன் ஆவான். எவன் இன்பங்களை அதிகமாக நாடுகிறானோ அவன் அநீதி செய்

யப் பின்வாங்க மாட்டான். இது நிச்சயமாய்த் தெய்வத் துரோகமாகும். ஆகையால், கடவுளிடம் பக்தி கொண் டிருப்பவன் உலகத்தில் எப்படி இன்பம் துன்பம் என்ற இரண்டும் சமமாய் நிர்மாணிக்கப்பட் டிருக்கிறதோ அப் படியே தன் வாழ்விலும் இன்ப துன்பம் இரண்டையும் சமாதானத்துடன் கருத வேண்டும். இன்பம்—துன்பம், பிறப்பு—இறப்பு, புகழ்ச்சி—இகழ்ச்சி இந்தத் துவந்துவங் களைச் சம உணர்ச்சியுடன் கருதாதவன் தெய்வ பக்தன் ஆக மாட்டான். உலக சிருஷ்டியில் இவ்விரு நிலைகளும் படைக்கப்பட் டிருக்கின்றன. பொருள்கள் சரிவர நிலை பெறவும் மாறவும் ஒன்றின்பின் ஒன்று தொடர்ந்து வரவும் அவைகளுள் சக்தி அமைக்கப்பட் டிருக்கிறது. அந்தச் சக்திக்கு வரம்பும் அமைக்கப்பட் டிருக்கிறது. இன்ப மும் துன்பமும், பிறப்பும் இறப்பும் இன்னும் மற்ற துவந் துவங்களும் இந்தச் சக்தியோடு ஒட்டியவை. பிரகிருதிக்கு இன்றியமையாத இன்ப துன்பம் என்னும் இரு வகை நிலைகளும் நல்லோர் தீயோர் என்ற வேற்றுமை பார்க்கா மல் உலகப் போக்கில் கலந்து வருகின்றன.

**126.** இறப்பது உலகத்தில் இன்றியமையாத நிகழ்ச்சி. அது கடவுள் நியதி; அதை வெறுக்காதே. பாலி யப் பருவத்திலிருந்து வளர்ந்து யௌவனம் அடைவது போலவே, முடிவில் இறப்பதும் இயற்கையாக வரும். ஆகையால், அறிவுள்ளவன் மரணத்தை வெறுக்க மாட் டான்; அசட்டை செய்யவும் மாட்டான். அதன் மெய்ப் பொருளை அறிந்து இயற்கைச் சக்திகளுள் ஒன்றாக அதை ஒப்புக்கொண்டு அதனை எதிர்பார்த்திருப்பான். தாயின் வயிற்றிலிருந்து குழந்தை பிறக்கும் நாளை எதிர்பார்ப்பது போலவே, உன் ஆத்மா, அடைபட்டிருக்கும் இவ்வுடலி லிருந்து வெளியேறுவதை எதிர்பார்ப்பாயாக. இதற்கு

மேல் இன்னும் ஓர் ஆறுதலையும் உனக்குச் சொல்லுவேன். மரணத்தை மகிழ்ந்து உபசரித்து எதிர்கொள்ளக் காரண மிருக்கிறது. இறந்து போவதால் எத்தகைய மனிதர்களினின்று நீ விடுபடுவா யென்று யோசித்துப்பார். எவர் மீதும் சினங்கொள்ள லாகாது. உண்மை, எதைச் செய்தபோதிலும் பொறுக்கவேண்டியதுதான். அதுவும் உண்மை. ஆனால், உன்னைச் சுற்றியுள்ளவர்கள் மனோபாவமும் உன் மனோபாவமும் எவ்வளவு வேற்றுமை கொண்டவை? அவர்களுடைய கூட்டுறவை நீக்கிப் போவது நன்மையே யல்லவா? உயிருட னிருக்க ஆசைப்பட ஒரே ஒரு காரணம் இருக்கக்கூடும். தன்னைப் போல் மனோபாவமும் எண்ணங்களும்கொண்ட சத் புருஷர்களுடன் கூடி வாழலாம் என்ற ஆசைதான். ஆனால், நீ எவர்கள் மத்தியில் வாழ்க்கை நடத்த வேண்டி யிருக்கிறதோ, அவர்கள் மனோபாவமும் உன் மனோபாவமும் இணக்க மின்றி எவ்வளவு பிணக்குகள் உண்டாகின்றன. "மரணமே சீக்கிரம் வா வா; இல்லையாயின், நானுங்கூட அறிவு இழந்து இவர்களைப் போலவே ஆவேன்" என்று மரணத்தை வருந்தி அழைக்கவேண்டி யிருக்கிறது அல்லவா?

**127.** எவன் பிறரிடம் நெறிதவறி நடந்துகொள்கிறானோ, அவன் தனக்கே கேடு விளைவித்துக்கொள்கின்றான். எவன் பிறருக்கு அநீதி செய்கிறானோ, அவன் தன் சுபாவத்தைத் தீமையாக்கிக்கொண்டு தனக்கே அநீதி செய்துகொள்கிறான்.

**128.** மூன்று போதும்: மெய்யறிவுடன் எண்ணங்களை மனதில் கொள்வது; உபகாரமான செயல்களைச் செய்வது; தன் ஆதீனமில்லாமல் நிகழும் நிகழ்ச்சிகளைத் திருப்தியுடன் அங்கீகரிப்பது. கழிந்தவற்றை நினையாமலும்

வருபவை பற்றிக் கவலைகொள்ளாமலும் இம் மூன்றும் நிகழும் காலத்தில் கவனித்தால் போதுமானது.

**129.** எல்லா உயிர்களும் காண்பதும் சுவாசிப்பதும் ஒரே வெளிச்சம், ஒரே காற்று, நிலைத்து நிற்க எல்லா உயிர்களுக்கும் ஒரே பூமி. ஓர் உயிர் பல பகுதிகளாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. இதைச் சிந்தித்தால், பகுத்தறிவுள்ள மனிதர்களின் ஆத்மாக்கள் அனைத்தும் ஒரு பரமாத்மாவின் கூறுகளே யாகும் என்பதையும் உணரலாம்.

**130.** பிரகிருதிப் பொருள்கள் எல்லாம் தத்தம் இனத்துடன் சேர்வது இயல்பு. மண் இயல்பு கொண்ட பொருள்கள் நிலத்தோடு சேர்ந்துபோக விரும்பும். நீர் இயல்பு உள்ள பொருள் யெல்லாம் ஒன்ருகச் சேர்ந்து பெருக முயலும். வாயு ரூபமான தெல்லாம் வாயுவுடன் சேரப்போகும். இந்த இயல்புக்கு மாருகத்தத்தம் இனத்துடன் சேராமல் தனித்து நிற்பது நிர்பந்தத்தினுலேதான். தடை நீங்கினவுடன் இயல்பு மேலிட்டுத் தத்தம் இனத்துடன் சேர்ந்துவிடும். இவ்வாறே அறிவென்னும் தத்துவத்தைக் கொண்டன வெல்லாம் தத்தம் இனத்துடன் சேர விரும்பும். பொருள் எவ்வளவுக் கெவ்வளவு உத்தமமோ, சூக்ஷ்மமோ அவ்வளவுக் கவ்வளவு அதிக வேகத்துடன் இனத்தோடு இனம் சேர இழுக்கும். கட்டிப் பொருள்களைவிட, திரவப்பொருள்களின் சேர்க்கை வேகம் அதிகம். திரவப் பொருள்களின் வேகத்தைவிட வாயுப் பொருள்களின் சேர்க்கை வேகம் அதிகம். எனவே, ஸ்தூலப் பொருள்களின் வேகத்தைக் காட்டிலும் சித்பொருள்களின் பரஸ்பர ஆகர்ஷண சக்தி அதிகமாகவே இருக்க வேண்டும். பகுத்தறிவில்லாத உயிர்களைப் பார். சடப்பொருள்களுக் கில்லாத கூட்டுறவு உணர்ச்சி அவை

களுக்கு உண்டு. பூச்சிகள், மிருகங்கள், பறவைகள் இவை கூட்டங் கூட்டமாகச் சேர்கின்றன. தாய் தன் குஞ்சுகளை வளர்க்கும். அவைகளுக்குள் ஒருவித குடும்ப வாழ்க்கையையும் அன்பையுங்கூடக் காணலாம். பகுத்தறிவுள்ள மனிதர்கள் நாடு, நட்பு, வீடு, இல்வாழ்வு, கூட்டுறவு என்பவைகளை உண்டாக்கிக் கொள்கிறார்கள். யுத்தம் செய்தாலும் சீக்கிரம் சமாதான உடன்படிக்கைகளை நாடுகிறார்கள். மனிதர்களைவிட உயர்ந்த பிறப்புகளோ ஒன்றுக்கொன்று வெகு தூரத்திலிருந்தாலும் ஒன்றோடொன்று கட்டுப்பட்டு நடப்பதை ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்களைப் பார்த்தறிவாய்.

இப்போது பரிதாபம் எதுவென்றால், பகுத்தறிவுள்ள மனிதர்கள் இந்த இயற்கைக் குணத்தை மறந்து ஒருவரோடொருவர் வேறுபட்டுப் போராட முயல்கிறார்கள். இனத்துடன் இனம் சேரும் பிரகிருதி வேகம் தடைப்பட்டிருக்கிறது. ஆனால், ஒன்று நிச்சயம். இயற்கைச் சக்திக்கு மாறுபாடாக நடக்க ஒரு நாளும் முடியாது. ஆராய்ந்து பார்த்தாயானால் இது விளங்கும். எவனும் உலகத்தினின்று வேறுபட்டுத் தனித்து நிற்க முடியாது. அந்த முயற்சி வீணாகும்.

**131.** கஷ்டம் அனுபவிக்கும்போது துயரப்படுபவன் போல நடந்துகொள்ளாதே. மற்றவர்களுடைய இரக்கத்தையாவது, பாராட்டுதலையாவது விரும்பாதே. உலக வாழ்வின் நலனும் உன் பகுத்தறிவுமே உன் கருத்தில் இருக்க வேண்டும். இதைக் கொண்டு எதைச் செய்ய வேண்டும், எதை ஒழிக்க வேண்டும் என்று கண்டுகொள்வாயாக.

**132.** இன்று கஷ்டங்களினின்று வெளியேறினேன் என்பாய்! கஷ்டங்கள் உள்ளத்தில்தான் உண்டாயின.

புறத்தில் ஒன்றுமில்லை. அவைகளை உள்ளத்தினின்று நீக்குவதே தொல்லைகளை விலக்கிக்கொண்டதாகும்.

**133.** எப்போதும் வெளிப்புறத்தை விட்டு உள்ளத்தையே கவனிப்பாயாக. அதுவே சாந்தமடைவதற்குச் சாதனமாகும். உலகத்தின் உட்பொருளையும் அதன் இயல்பையும் அறிந்து அதன் ஒரு பகுதி நீ என்பதை மறவாதிருப்பாயாக. அயலானைக் கவனிக்கும்போதும் அவன் உள்ளத்தை அறிவாயாக. அப்போதுதான் அவன் எதை அறிந்து செய்தான், எதை அறியாமையால் செய்தான் என்று தெரியும். அவன் வாழ்க்கைக்கும் உன் வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசமும் உனக்குத் தெரியவரும்.

**134.** உலகத்தில் நீ ஓர் அங்கம் ஆவாய். உன் செயலெல்லாம் உலக வாழ்வுக்கு இசைந்ததாக இருக்க வேண்டும். உன் வாழ்க்கை உலகத்திற்குப் பயனற்றதானால், அவ்வாழ்க்கை உன்னை உலகத்தினின்று வேறுபடுத்தும். உலகத்தின் ஒற்றுமையைக் குலைத்து உன்னை ஊரோடு சேராத கலகக்காரனைப்போல் செய்யும்.

**135.** ஒருவன் உன்மீது குறை சொல்லுகிறான். மற்றொருவன் உன்னைத் துவேஷிக்கிறான். சிலர் உன்னைப் பற்றிப் பகைத்துப் பேசுகிறார்கள். பேசினால் என்ன? அவர்களுடைய உள்ளங்களை ஊடுருவிப் பார். அவர்கள் எத்தகையோர் என்பதை யோசித்துப் பார். அத்தகையோர் உன்னைப்பற்றி என்ன நினைத்தால் என்ன? அதற்காக நீ வருந்தவேண்டிய காரணமில்லை யென்பதைக் காண்பாய். ஆனால், அவர்களை நீ வெறுக்க வேண்டியதுமில்லை. இயல்பில் அவர்கள் உன் நண்பர்களே.

ஒருவனைத் திருத்த முடியாமல்போனால் அவனிடம் வெறுப்புக் கொள்ளாதே. தயை என்பதை உனக்கு ஏன் கடவுள் கொடுத்திருக்கிறார்? தெய்வம் மனிதனிடத்தில்

எவ்வளவு தயை காட்டுகிறது பார், தீயவர்களுங்கூட உடல் வலி, பொருள், புகழ் எல்லாம் அடைகிறார்கள் பார். நீயும் தெய்வத்தைப்போல் தயைகொண்டு நடப்பாயாக.

136. சக்கரம்போல் எல்லாம் விடாமல் சுழன்று வருகின்றது. மேலே சென்றது கீழாகும். கீழே போனது மேலாகும். ஒவ்வொரு சம்பவமும் பராசக்தியின் எண்ணத்தின்படியே நடக்கும். அதாவது அதன் மூல நியமனத்தின் பயனாக ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து வரும். உலக நிகழ்ச்சிகளில் தவறாத தொடர்பு இருக்கிறது. எதுவாயினும், தெய்வ நியமனமே. அது நலனே யாகும். ஒரு வேளை நீ கடவுள் பொய், எல்லாம் தற்செயல் என்றாலும், நீயும் நியமமற்று இருக்க வேண்டிய அவசியமில்லை. சாந்தம் இழந்து கவலைப்பட வேண்டியதில்லை.

சீக்கிரத்தில் சகலமும் மண்ணாய் நிலத்தில் சேரும். பிறகு அதுவும் மாறி, வேறு உலகமாகவே ஆகும். பிறகு, அதுவும் மாறும். இப்படி நடந்துகொண்டே போகும். இவ்வாறு உலகமே மாறி மாறிப் போவதை நினைத்தால் நிலையில்லாத விஷயங்களில் பற்று தீர்ந்துவிடும்.

137. ஒருவன் பிழை செய்தவனானால் அவனுக்கே அது கேடாகும். ஒரு வேளை உண்மையில் அவன் பிழை செய்யாமலும் இருந்திருக்கலாம்.

138. உலகமெல்லாம் ஓர் உயிர், ஒரு மனம், ஓர் உடல். எது நேர்ந்தாலும் அந்த ஒரு மனதில் உண்டான எண்ணந்தான். அந்த ஓர் உடலுக்கு நேர்ந்ததே யாகும். அந்த உயிரில் ஓர் அங்கமாகிய நீ எப்படி ஆட்சேபிக்கலாம்? நீ சொல்லலாம்: இது உண்மை யல்ல; உலகத்திற்கு ஆத்மா எது? எண்ணம் எது? எல்லாம் அசேதன

அணுக்களின் தற்செயல் சேர்க்கையும் பிரிவும் என்று இவ்வாறு நீ நினைத்தாலும் எதற்காக நீ மனம் கலங்க வேண்டும்? உன் உள்ளத்தில் கலங்கும் சேதனப் பொருளுக்குச் சொல். "சீ, உனக்கு உயிரில்லை; நீ ஓர் உண்மைப் பொருள் அல்ல; நீ பொய்; நான் ஒரு புல்மேயும் மிருகம் போலவே ஒரு பிராணி" என்று நாஸ்திக தைரியத்தையேனும் சொல்லிச் சும்மா இருப்பாயாக.

**139.** எவனாவது ஒருவன் வெட்கமின்றி நடந்து நடந்துகொண்டு அதற்காக நீ சினம் கொண்டாயானால், உடனே, உலகத்தில் வெட்கமின்றி நடப்போரே இல்லாமல் இருக்க முடியுமா வென்று உனக்குள் கேட்பாயாக. இல்லை யென்றால், ஏன் கலவரப்படுகிறாய்? கூடாத ஒரு சம்பவத்தை ஏன் நாடுகிறாய்? உலகத்தில் வெட்கமில்லாதவர்களும் சிலர் இருக்கவே செய்வார்கள். அவர்களில் இவன் ஒருவன். யாராவது திருட்டுத்தனமும் மோசமும் செய்தால் இவ்வாறே சிந்திப்பாயாக. அவ்விதத் துஷ்டர்களே உலகத்தில் இல்லாமல் செய்ய முடியாது என்பதை நினைப்பூட்டிக்கொண்டால் மோசக்காரனிடமுங்கூட, நீ இரக்கமே கொள்வாய்.

தவிர, இன்னொரு சிந்தனையும் உதவும். பிறர் செய்த ஒவ்வொரு பிழைக்கும் மருந்துபோல் நீ நற்குணம் படைத்திருக்கிறாய். துவேஷிப்பவனைக் கண்டால் அன்பு உன்னிடம் இருக்கிறது. அதற்கு அதுவே மருந்து. அதைக் கொடு. இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் ஒரு பரிகாரம் இருக்கிறது. பிழை செய்தவனை அனேகமாய்த் திருத்தலாம். அவன் அரக்கனல்ல, வழிதப்பியவனே ஆவான். அவனுக்கு வழிகாட்ட உன்னால் முடியும். இன்னும் ஒன்று. ஒருவன் செய்த பிழையால் உனக்கு என்ன துன்பம் நேரிட்டது? எவன்பேரில் நீ சினம்

கொண்டிருக்கிருயோ, அவன் செய்த செயலால் உன் இயல்பு மாறவில்லை. உனக்கு உண்டான கேடும் தீங்கும் உன் உள்ளத்திலேதான் உண்டாயின.

அறியாதவன் அறியாதவனைப்போல் தானே நடப்பான், இதில் என்ன அதிசயம்? அதனை எதிர்பாராதது உன் பிழையே. அவன் தவறி நடப்பானென்று நீ எதிர்பார்க்க உனக்கு அறிவும் காரணமும் இருந்தன. அதை மறந்துவிட்டு அவன் பிழை செய்தானென்று இப்போது நினைக்கிருய். இது உன் பிழைதானே.

முக்கியமாய் உனக்கு எவனுவது துரோகம் செய்தான், அல்லது செய்த உபகாரத்தை மறந்து நடந்தானென்று நினைத்தாயானுல், உடனே உன்னையே சோதித்துக்கொள். பிழை உனதே யாகும். அவன் இயல்பை நீ அறியவில்லையா? அவனை ஏன் நீ நம்பினுய்? நீ உபகாரம் செய்யும்போது அதுவே உனக்குக் கைம்மாருக இருக்க, வேறு கைம்மாறு ஏன் எதிர்பார்த்தாய்? உன் இயல்புக்கு இசைய ஒரு கருமம் நீ செய்தால் அதற்குக் கூலி கேட்கலாமா? பார்த்ததற்குக் கண் ஏதாவது உன்னை கூலி கேட்கிறதா? நடந்ததற்குக் கால் ஏதாவது பதில் கொடு என்று உன்னைக் கேட்கிறதா? தத்தம் இயற்கைக் கருமத்தைச் செய்துவிட்டுச் சும்மா இருக்கும். அதைப்போல் நீயும் உபகாரம் செய்து வாழத்தான் பிறந்தேனென்று அறிந்துகொண்டு உபகாரம் செய்த பின்னும் அல்லது ஒருமைப்பட்ட வாழ்வில் வேறு எது செய்த பின்னும் உன் இயற்கைக் கருமத்தைச் செய்தாய் என்கிற திருப்தியுடன் சும்மா இருப்பாயாக.

**140.** மனமே! எப்போது நீ ஆனந்த நிலையை அடைவாய்? சகலமும் ஒன்ருன நிலையை எப்போது அடைவாய்? சர்வ வியாபகமான அன்பின் ஆனந்தத்தை

நீ என்று காண்பாய்? ஆசையற்றுச் சுதந்திரமாய் என்று நிற்பாய்? இடம், பொருள், காலம், உறவினர்களின் கூட்டம் இவை ஏன் வேண்டும்? உன் நிலையே உனக்கு ஆனந்தம் என்று தரும்? பராசக்தியை என்று அறிவாய்? பரிபூரண ஆனந்தத்தை என்று அடைவாய்?

**141.** ஒருவன் தவறிப் பிழை செய்தானானால் அவனுக்கு அன்புடன் புத்திபுகட்டித் திருத்துவாயாக. அப்படிச் செய்ய முடியாமல் போனால், தவறு உனதே என்று எண்ணுவாயாக. இதுவும் வேண்டாம், சும்மா பொறுத்துக்கொள்வாயாக.

**142.** உலகமானது அணுக்களின் சேர்க்கையால் உண்டாயிருந்தாலும் சரி, பராசக்தியின் செயலா யிருந்தாலும் சரி, நான் அவ்வுலகத்தில் ஒரு பகுதி. பிரகிருதியின் இயற்கைத் தருமத்திற்கு ஆதீனமானவன். நான் எந்த முழுமையில் ஒரு பகுதியோ, அதற்கு நலன் எதுவோ, அதுவே எனக்கும் நலன் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஒன்றுக்கு யாதாயினும் நலனாய் இருந்தால், அது எப்படி அதில் ஒரு பகுதிக்கு உண்மையில் தீங்காகும்? எந்தப் பொருளிலும் தனக்குப் பயன்படாத பகுதி ஒன்று இருக்காது. அதிலும் தனக்கு விரோதமான ஒரு பொருளை உண்டாக்கிக்கொள்ளுமாறு பிரகிருதியை நிர்ப்பந்திக்கக் கூடிய சக்தி பிரகிருதிக்குப் புறத்தில் ஒன்று மில்லை. ஆகையால், நான் பிரகிருதி அமைப்பில் ஒரு பாகமாய் இருக்கிறபடியால் எது நேரிடினும் திருப்திகொண்டிருக்க வேண்டும். ஜீவன்களுக்கு அதிலும் என் இனமாகிய மனிதக் கூட்டத்தில் வாழ்வுக்குத் தீங்கு உண்டாகக் கூடியது எதையும் செய்யா திருப்பேனாக. அவர்களுடைய க்ஷேமத்தையே கருதுவேனாக. என் உள்ளம் இவ் வெண்ணங்களையே கொள்ளும்படி செய்வேன். உல

கத்தின் கூட்டுறவுக்கு விரோதமான செயல்கள் என் உள்ளத்திலும் தோன்றாதவாறு மனதைத் திருத்திக் கொள்வேன். இவ்வாறு செய்தால் என் வாழ்க்கை சுகமாக முடியும். அரசனுடைய கட்டளைக்கு அடங்கி மற்றக் குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதி வாழும் ஒருவனுடைய வாழ்க்கை சுகமாக இருக்கும். இதைப்போலவே என் வாழ்க்கையும் ஒழுங்குபட்டுச் சுகமாக முடியும்.

**143.** ஓர் ஈயைப் பிடிப்பதில் சிலந்திப் பூச்சிக்குப் பெருமை. ஒரு மனிதன் முயலைப் பிடித்தேனென்று பெருமைப்படுவான். மற்றொருவன் ஒரு குருவியை வலையில் பிடித்துவிட்டதற்காகச் சந்தோஷப்படுவான். வேறொருவன் காட்டுப் பன்றிகளைப் பிடித்துவிட்டு அதை மிகவும் பெருமையாக நினைப்பான். வேறொருவன் அயல் நாட்டு மக்களை அடிமை கொண்டதற்காகப் பெருமைப் படுவான். மெய்யறிவு அடைந்தவனுக்கு இவை அனைத்தும் ஒரே விதமான கொலையும் களவுமாகத்தான் தோன்றும்.

**144.** பிரபஞ்சத்தில் ஒன்றைக் கொடுப்பதும் பராசக்திதான்; அதை மறுபடி வாங்கிக்கொள்வதும் பராசக்தியே. அறிவுடையோன் விருப்பு வெறுப்பை அடக்கி நீ நினைத்தவாறு கொடு, நீ நினைத்தவாறு எடுத்துக் கொள் என்பான். இப்படிச் சொல்லுவதிலும் வீரியம் வேண்டாம். பராசக்தியிடம் வணக்கமும் அன்பும் கொண்டே சொல்ல வேண்டும்.

**145.** நல்லவன் இவ்வாறு இருக்க வேண்டும், அவ்வாறு இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்தது போதும். இனி, நீ நல்லவனாக இருக்கக் கொஞ்சம் முயற்சி செய்வாயாக.

146. பராசக்தி எது விதிக்கிறதோ, அதுவே தன்னுள் அடங்கிய தனி ஒருவனுக்கும் நல்லதாகும். எக்காலத்தில் எதைத் தருகிறதோ, அக்காலத்தில் அதுவே நல்லதாகும்.

147. சட்டத்தின் தண்டனைக்கு அகப்படாமல் ஓடித் திரிபவன் நாடோடியாவான்: அதைப்போலவே வாழ்க்கையில் எவன் துன்பத்தைக் கண்டு துக்கப்படுகிறானோ, எவன் கோபத்திற்கு இடம் கொடுக்கிறானோ, எவன் பயப்படுகிறானோ, எவன் கிடைக்காத பொருள்களின்மேல் ஆசைப்படுகிறானோ, அவனும் சட்டத்திற்கு அடங்க இஷ்டமில்லாமல் ஓடித்திரிபவனைப் போலாவான்.

148. துக்கமும் மனக்குறையும் கொள்கிறவன் பலி பீடத்தில் யாகத்திற்காகக் கட்டி யிழுக்கும்பொழுது தப்பியோட முயலும் மிருகம் போன்றவன். தனி அறையில் ஒருவருக்கும் சொல்லாமல் தன் படுக்கையில் இருந்துகொண்டே துயரப்பட்டாலும் இவ்வாறே யாவான். தெய்வச் செயல்களின் பயனை அறிந்து கொள்ளும் பாக்கியம் அறிவுள்ள பிராணிகளுக்குத்தான் உண்டு. பயனை அறியாமல் போனாலும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

149. யாராவது செய்த பிழையைக் கண்டு நீ கோபித்தாயானால் உடனே உன்னையே நினைத்துக் கொண்டு ஆராய்ந்து பார். அவன் செய்தவாறே நீயும் பிழைகளைச் செய்கிறாய். யோசித்துப் பார். பணம், இன்பம், புகழ் இவை போன்றவைகளை நீயும் மெய்ப் பொருள்களாகவே நினைக்க வில்லையா? இதை நன்றாக யோசித்தாயானால் உன் கோபம் சீக்கிரம் மறந்துபோகும். மேலும் அவன் சுதந்திரமாய் வேண்டுமென்று செய்கிறானா என்பதையும் யோசித்துப் பார். அவன் இயல்பை மாற்ற முடியுமானால், அவ்வாறு மாற்ற நீ முயல்வாய்.

**150.** எது நேர்ந்தாலும், எப்பொருள் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், உனக்கு வாய்த்த பொருளுக்கும் சமயத்திற்கும் தகுந்தவாறு நீ செய்ய வேண்டியது எது, சொல்ல வேண்டியது எது வென்று அறிந்து அதைச் செய்யவும் சொல்லவும் கடவாய். அது உன் சுதந்திரத்தி லிருக்கிறது. முடிவில், அதற்கு யாரும் எவ்விதத் தடையை யும் செய்ய முடியாது. நீ செய்ய விரும்பிய கருமத்திற்குக் குறுக்கே நிற்கும் தடைகளையும் கருதி அதற்கு ஏற்ற உன் கருமத்தை எப்போதும் நீ செய்யலாம். ஆகையால், தடை வந்தது, என் கடமை செய்ய முடியவில்லை என்று சாக்குச் சொல்லாதே. தடைக்குத் தக்க புது உருவம் கொள்ளும் உன் கருமம்.

எந்த வேலையில் எது நேர்ந்தாலும், எது கிட்டினும் அத்தருவாயில் உன் பகுத்தறிவுக்குத் தகுந்த கருமத்தைச் செய்து தருமத்தை நிறைவேற்றுவதே சுகமும் ஆனந்தமு மாக நீ கொள்ளும் வரையில் நீ கஷ்டந்தான் படுவாய். சிற்றின்பத்தில் ஒரு காமாதுரன் எவ்வளவு தீவிர மகிழ்ச்சி யடைகிறானோ அவ்வளவு மகிழ்ச்சி நீ உன் தருமத்தைச் செய்வதில் அடையக் கற்றுக்கொள்ளும் வரையில் நீ துக்கப்படுவாய். தன் பிறப்பின் தருமத்திற்குத் தகுந்த வாறு தான் நடப்பதே சுகமாகக் கருத வேண்டும். அவ் வாறு நடந்துகொள்ளுவது எப்போதும் எது நேரிடினும் கூடும்.

**151.** ஒரு ஜடபார்த்தத்தை நினைத்தவாறு உருட்ட முடியாது. அதன் வடிவுக்கிசைந்த வழியே உருட்டலாம். நீர், நெருப்பு முதலிய அசேதன வஸ்துக்களும் பகுத்தறி வற்ற பிராணிகளும் இப்படியே தாம் நினைத்தவாறு செல்ல முடியாது. தடையும் இடையூறும் அவைகளைக் கட்டுப் படுத்தும். புத்தியும் பகுத்தறிவுள்ள நாம் அவ்வாறல்ல.

எந்த இடையூறு நேர்ந்தாலும், அதைத் தாண்டிச் செல்ல அதாவது அதற்கிசைந்த கருமத்தைக் கண்டு செய்ய மனிதனுடைய பகுத்தறிவின் இயல்பிலேயே சக்தி வாய்ந்திருக்கிறது. ஆத்மாவுக்குத் தன் கருமத்தைச் செய்ய முற்றிலும் சுதந்திரமுண்டு. இடையூறுகள் அசேதனமான உடலைத்தான் தாக்கும். சேதனமான ஆத்மாவைப் பாதிக்காது. உள்ளத்தில் தாமாகவே தோன்றும் எண்ணங்களாலேயே, அல்லது பகுத்தறிவை உபயோகிக்காமல் போவதனாலேயோதான் எந்தச் சம்பவமும் நம்மைத் துன்புறுத்தும். மற்று, எதுவும் ஆத்மாவைப் பாதிக்காது. மனிதனுக்கே இந்தப் பாக்கியம். மற்றப் பிராணிகளுக்கும் பொருள்களுக்கும் நேர்ந்த துன்பம் அவைகளை உடனே பாதிக்கும். மனிதனுக்கு எது நேர்ந்தாலும் வந்த இடையூறுக்குத் தகுந்தவாறு கடமையும் மாறி, முந்தியைவிட அதிக அனுபவமும் ஆற்றலும் அவன் அடைவான். உனக்கு வந்த இடையூறு எதுவும் உலக அமைப்பிற்குத் தீங்கிழைக்க முடியாது. உலக அமைப்பைப் பாதிக்காத எதுவும் உலகத்திற்கு ஒரு தீங்காக மாட்டாது. உலகத்திற்குத் தீங்காகாத தெதுவும் உலகத்தில் அடங்கிய யோக்கியன் ஒருவனுக்கு இடையூறு ஆகமாட்டாது.

152. நோயில்லாத கண்ணானது தன் எதிரில் நிற்பது எதையும் பார்க்கும். பசுமையான பொருள்களை மாத்திரம் பார்ப்பேன், மற்ற நிறங்களைப் பார்க்க முடியவில்லை யென்றால் அது கண்ணில் நோய் இருப்பதற்கு அறிகுறியாகும். அவ்வாறே செவியும் மூக்கும் எந்த ஒலியையும் எந்த நாற்றத்தையும் உட்கொள்ளும். யந்திரத்தில் எப்பண்டமும் அறைபடுவதுபோல் நோயில்லாத வயிற்றில் எந்த உணவும் ஜீரணித்துப்போகும், இவ்வாறே நோயில்லாத உள்ளத்திலும் எது நேர்ந்தாலும் ஜீரணித்துப் போக

வேண்டும். அதாவது பொறுமையுடன் அதைத் தாண்ட வேண்டும். என் மக்களுக்கு எது லாபம், நான் செய்கிறதை ஜனங்கள் புகழ்கிறார்களா என்பதுபோன்ற கவலைகள் உண்டானால் மனிதன் நோய்ப்பட்டவனே ஆவான். இதைப் பார்க்க முடியும், அதைப் பார்க்க முடியாதென்று சொல்லும் நோய்ப்பட்ட கண்ணைப்போலவும், இதை மெல்ல முடியும், இதை மெல்ல முடியாது என்று மறுக்கும் பற்களைப்போலவும் அவன் உள்ளம் ஆரோக்கியமற்ற உள்ளமாகும்.

153. எத்தகைய உயர்குண முடையவனாயினும் அவன் இறந்தால் மகிழ்கிறவர்கள் சிலர் இருப்பார்கள். ஞானமும் ஆழ்ந்த கருத்தும் கொண்டவன் ஒருவன் இறந்தால் "அப்பா! இவன் ஒழிந்தான்; இனி நாம் சுகமாய் இருக்கலாம். நம்மை இவன் வெளிப்படையாய்ப் பழிக்காவிடினும் மனத்தில் எப்போதும் இகழ்ந்தே வந்தான். இது எனக்கு நன்கு தெரியும்" என்று எவனாவது ஒருவன் கட்டாயம் எண்ணி மகிழ்வான். நல்லோருக்கே இந்தக் கதியானால், பிழைகள் நிறைந்த என்னைப் போன்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்? இவர்கள் இறந்து ஒழிந்தால் நலம் என்று பலர் காத்திருப்பார்கள். இதை நினைத்தாயானால் உன் அந்திய காலத்தில் சமாதானமாய் மரணத்தை எதிர்கொள்வாய். நான் எவர்களுக்காக இவ்வளவு காலம் பாடுபட்டேனோ, தேவர்களை வணங்கினேனோ, கவலைப் பட்டேனோ, அவர்களே நான் என்று தொலைவேனென்று எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய வாழ்வை வாழாமல் உயிர் துறப்பதில் என்ன துயரம்? இன்னும் உயிருடன் ஏன் இருக்க வேண்டும்?

இப்படி உயிருடன் வாழ்வதை வெறுத்தாலும் மனிதர்களை வெறுத்து அவர்களிடம் அன்பு குறைந்து பகைமை

கொள்ள வேண்டாம். உன்னுடைய தருமத்தை விடாமல், உன்னுடைய அன்பும் நல்லெண்ணமும் சாந்த சித்தமும் எப்போதும்போல வைக்கக் கடவாய். உயிரை விடுவ தற்கு மாத்திரம் மனதைப் பக்குவப்படுத்திக்கொள். மகிழ்ச்சியுடன் மரணத்தை எதிர்கொள்வாயாக. நோயற்ற சுக மரணத்தில் உடலிலிருந்து உயிர் சுகமாக வேறுபட்டுப்போவதுபோல் உன் உள்ளமும் இனத்தார் கள், தோழர்கள் என்ற பற்றில்லாமல் சுகமாக வேறு பட்டுப் போக வழி தேடு. எந்த சக்தி உன்னை அவர்க ளுடன் அமைத்ததோ, அதே சக்தி இப்போது உன்னை வேறுபடுத்துகிறது. நெருங்கிய தொடர்பும் சுகமாக நீங்கி வேறுபடுவது பிரகிருதியின் இயல்பு. மரத்தின் இலைகள் உதிர்வதைப் பார்.

154. சூத்ரதாரன் உள்ளே இருக்கிறான். அவன் தான் பேசுகிறான்; அவனே உயிர்; அவன்தான் புருஷன். உன்னைச் சுற்றி மூடியிருக்கும் இந்த உடலை நீ என்று எண்ணி மயங்காதே. இந்த உடலில் அமைக்கப்பட்டிருக் கும் இந்தக் கருமேந்திரியங்களை ஆத்மா என்று எண் ணாதே. தச்சனுடைய உளி, வாய்ச்சி முதலியவைகளைப் போல் இவை வெறுங் கருவிகள்தான். உடலிலேயே சேர்த்து அமைக்கப்பட்ட கருவிகள் என்பதுதான் வித்தி யாசம். உள்ளே நின்று இவைகளைச் செலுத்தியும் அடக் கியும் வரும் ஆன்மாவை மறந்துவிட்டு இக் கருவிகளையே நலனாக எண்ணாதே. மரம் வெட்டுகிறவனுக்குக் கோடாலி எழுதுபவனுக்கு எழுத்தாணி, வண்டி யோட்டுபவனுக் குச் சாட்டையைப்போல் இவைகள் ஆன்மாவுக்குக் கருவி களாகும். நற்பயனும் தீமையும் ஆன்மாவில்தான் உண்டு.

155. பகுத்தறிவுள்ள ஓர் உயிரின் இலட்சணங்களைப் பார். தன்னைத்தான் அறிந்துகொள்ளவும் தன்னைப் பற்

றிப் பிறருக்குச் சொல்லவும் தான் வேண்டியபடி தன்னைச் செய்துகொள்ளவும் அதற்கு முடியும். தான் பெற்றதைத் தானே அனுபவிக்கும். தாவர வர்க்கமும் பசுப் பிராணிகளும் பெற்றதை மற்றவர்கள் அனுபவிப்பார்கள்.

ஓர் ஆட்டம் அல்லது ஒரு கூத்தில் ஏதாவது தடை வந்து நேர்ந்தால் அரைகுறையாய் நின்று போகும். பகுத்தறிவுள்ள உயிரின் வாழ்க்கை அப்படி யல்ல. எது நேர்ந்தாலும் எந்தச் சமயத்திலும் அது பூரணமாய் முடியும். நேர்ந்ததற்குத் தக்கபடி தன் கடமை இது வென்று முடித்துக்கொண்டு அதைப் பூரணமாய்க் கொள்ளும்.

பிரபஞ்சம் முழுதும் அதன் அறிவுக்குள் அடங்கும். உலகம் அதைச் சுற்றியுள்ள ஆகாயம், காலம், கல்பம் சகலமும் அது அறியும் பொருளாகும். எதிர்காலம், இறந்த காலம் இரண்டையும் அறியும். பகுத்தறிவுள்ள உயிரின் லட்சணங்கள் அன்பு, சத்தியம், அடக்கம், ஆன்மாவே உயர்ந்த பொருள் என்று அறியும். அதன் அறிவும் உலக நன்மையும் ஒன்றுகவே முடியும்.

**156.** ஆட்டமும் பாட்டும் வேடிக்கையும் பயனற்றவை யென்று தள்ளக்கடவாய். தள்ளுவது கஷ்டமாகி இருந்தால் காதுக்கும் கண்ணுக்கும் இன்பம் தரும் பாட்டை அல்லது கூத்தை ஒலி ஒலியாகவும் வெவ்வேறு அபிநயமாகவும் பிரித்துப் பார். பயனற்ற இதுவா என்னை மயக்கு மென்று யோசித்துப் பார். அப்படிப் பார்த்தால் அவைகளை அற்பமென்று நீயே தள்ளுவாய். நற்குண நற்செயல் தவிர வேறு எதைக் கண்டாலும் அதை இவ்வாறு பிரித்துப் பார்த்து அது அற்பமா யிருப்பதை அறிந்து கொண்டு அதன் மோகத்தினின்று விடுவித்துக்கொள். சிற்றின்ப மோகங்களுக் கெல்லாம் இதுவே தகுந்த மருந்து.

157. எந்த நிமிஷம் உயிர் நீங்கினாலும் மகிழ்ச்சியுடன் மரணத்தை எதிர்கொள்வது ஆன்மாவுக்குப் பெருமை. உயிர் இருந்தாலும் உயிர் நீங்கினாலும் சமநிலையுடன் இரண்டுக்கும் தயாராய் இருப்பதே பெருமை. இச் சமநிலை பகுத்தறிவால் உண்டாக வேண்டும். பிறருக்கு அதை எடுத்துக் காட்டினால் அவர்களும் அந்த நிலையை அடையும்படியான வழியில் நீ உன் சமநிலையை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். அப்படியல்லாமல் உயிர் வாழ்வை வெறுத்து மரணத்தை விரும்பலாகாது. சமநிலையைப்பற்றி ஆடம்பரமும் கூடாது.

ஃ

158. நான் ஒருவனுக்கு ஏதாவது உபகாரம் செய்தேனா? செய்தேனானால் நானே உபகாரம் அடைந்தவனாவேன்.

159. ஒரு கிளையிலிருந்து ஒரு கிளையை வெட்டினால் அது மரத்தினின்று வேறுபடும். அவ்வாறே ஒருவன் மற்றொருவனிடம் வெறுப்புக்கொண்டு வேறுப்பட்டானானால் உலகத்தினின்று வேறுபட்டவன் ஆவான். மரத்தின் கிளை வேறொருவனால் வெட்டப்படும். ஆனால், உலகத்தினின்று வேறுபடும் மனிதன் தன்னைத்தானே அறியாமையால் வெட்டிக்கொள்கிறான்.

கிளை வேறுபடுவதற்கும் மனிதன் வேறுபடுவதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. வேறுபட்ட கிளை மறுபடியும் சேர முடியாது. மனிதன் வேறுபட்டால் மறுபடியும் சேர முடியும். இது மனிதனுக்குத் தெய்வம் கொடுத்திருக்கும் சக்தி. ஆனால், அடிக்கடி பிரிந்து வேறுபட்டோமானால் மறுபடியும் கூடுவது கடினமாகும். தோட்டக்காரனைக் கேட்டால் சொல்லுவார்கள். செடியில் பிறந்த

கிளையின் குணம் வேறு, மரத்தோடு ஒட்டிவளர்ந்த கிளையின் குணம் வேறு. உலகத்தாருடைய மனோபாவங்களும் என்னுடைய மனோபாவங்களும் வேறுபட்டிருந்தாலும் அவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்னுடைய கடமை.

**160.** இடையூறு செய்பவர்களின் செயலைக் கண்டு உன் விவேகத்தைக் கெடுத்துக்கொள்ளாமல் ஒழுங்காய் உன் கருமத்தைச் செய்வாயாக. இடையூறு செய்பவர்களிடம் அன்பு குன்றாமல் இருப்பாயாக. உன் அறிவையும் கருமத்தையும் நெறிதவறாமல் காப்பாய்; அதனுடன் உனக்கு இடையூறு அல்லது துன்பம் இழைப்பவர்களிடம் மனம்கோணாமல் காத்துக்கொள்வாயாக. எடுத்த காரியத்தை இடையூறுகளுக்கு அஞ்சி விட்டுவிடுவது ஆண்மையல்ல. இடையூறு செய்பவனிடம் சினம் கொள்வதும் ஆண்மையற்ற செயலாகும். யுத்தத்திலிருந்து பயந்து ஓடுவதும் துரோகம்; உலகத்தார் அனைவரும் உனக்குச் சுற்றந்தானே?

**161.** உன்னை ஒருவன் இழந்தானென்று வைத்துக் கொள்வோம். அது அவனையே பாதிக்கும். அதன் பொருட்டு உன் செயலும் பேச்சும் இகழ்ச்சிக்கு இடமாகக் கூடாது. ஒருவன் உன்மேல் பகை கொண்டானென்று வைத்துக்கொள்வோம். அதுவும் அதனையே பாதிக்கும். உன் உள்ளத்தில் அவனிடம் அன்பு வைத்து அவனுக்கு உண்மையை எடுத்துக்காட்ட வேண்டும். அதிலும் அவன் குற்றத்தை அதிகமாக வற்புறுத்தி அவன் மீது பழிசுமத்த வேண்டாம். உன்னுடைய பொறுமையையும் பெரிதாகக் காட்டிக்கொள்ள வேண்டாம். மனதார அவனுக்கு உதவி செய்து அவன் எண்ணத்தை மாற்றி அவனுக்கு நன்மை செய்ய முயற்சிப்பாய். உன் உள்

ளத்தில் கோபம் ருற்றம் இரண்டு மில்லாமல் பரிசுத்தமா யிருப்பதைக் கடவுள் காணுமாறு வைத்துக்கொள்ள வேண்டும். உன் தருமத்திற்குத் தகுந்தபடி நீ நடந்துகொண் டால் உனக்கு யாதொரு குறையும் உண்டாக இடமில்லை.

162. நம்முடைய சுகம் உள்ளத்திலேயே இருக்கிறது. ஆன்மாவைப் பாதிக்காத விஷயங்களை நாம் பொருட்படுத் தாமல் இருக்க வேண்டும். எதையும் நன்ருய் விவகரித்து உலகம் முழுவதையும் கருத்தில் வைத்துப் பகுத்தறிய வேண்டும். புறப்பொருள் எதுவும் மனத்தைத் தானகவே பாதிக்க முடியாது. உன் மனத்தில் உண்டாகும் எண் ணங்களுக்கு நீயே அதிகாரி. புறப்பொருளால் உண்டா கும் எண்ணங்களை மாற்றி, வேறு எண்ணங்களைக் கொள்ள உனக்குச் சக்தி யுண்டு. இவ்வாறு புறப்பொருள்களால் பீடிக்கப்படாமல் மனதைக் காக்க வேண்டிய காலவரை யும் கொஞ்சமே. சீக்கிரத்தில் உயிர் நீங்கி விடுதலை யடை வோம். அதுவரையில் மனதைத் தடஸ்தமாக இருக்கச் செய்வதில் அதிக வருத்தமில்லை. இயல்பாக நடந்த விஷ யங்களைப்பற்றி ஏன் மனம் வருந்த வேண்டும்? இயல் புக்கு மாருக நடந்தவைகளாஞல் உன்னுடைய பிறப்பின் தருமத்தை நினைவில் வைத்துக்கொண்டு அதன்படி நட. அவனவன் நடத்துவதே நெறியாகும்.

163 மனத்தில் கோபம் உதிக்கும்பொழுது இந்த விஷயங்களை நினைவூட்டிக்கொள்ள வேண்டும். முதலா வது: மனிதர்களுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அவர்கள் யார்? ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து வாழ்வதற் கல்லவோ பிறந்தோம்? பசுக்கூட்டத்தை முன் சென்று நடத்தும் ரிஷபம் போல் அல்லவோ நீ அமைந் திருக்கிருய். வழிகாட்டி நடத்துவதற்குப் பதில் சினம் கொள்ளலாமா? உலகம் வெறும் அணுத்திரளா? தற்

செயலா? அல்லது அனைத்தையும் நடத்தும் பரம்பொருள் ஒன்றுண்டா? அனைத்தும் ஒன்றுபட்டல்லவோ வாழ வேண்டும்? கீழது மேலுக்கும், மேலது கீழுக்கும் துணைசெய்து வாழவே படைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது: யார்மேல் நீ சினம் கொள்கிறாய்? அவர்கள் சுபாவத்தை நீ அறியாயா? அவர்கள் சாப்பிடுவது என்ன? உறங்குவது எப்படி? அவர்கள் மனோபாவங்கள் எல்லாம் என்ன? அவர்களுக்குள்ள அகங்காரமும் அறியாமையும் உனக்குத் தெரியுமே.

மூன்றாவது: இவர்கள் செய்தது சரியா? தவறா? சரியாயிருந்தால் சினம் கூடாது. தவறாயிருந்தாலும் அறியாமையா லல்லவோ செய்தார்கள். அறிந்து செய்திருந்தாலும் மனம் ஒவ்வாமல்தான் செய்திருக்கிறார்கள். சுபாவத்தில் எவனும் சுதந்திரமாய்த் தவறுசெய்ய மாட்டான். ஆகையால், அவர்களைப் பழிப்பது தவறாகும். எந்தக் காரணங்களால் அவர்கள் நெறிதவறினார்களோ, அக்காரணங்களைத்தான் பழிக்க வேண்டும்.

நான்காவது: நீயே எத்தனை விஷயங்களில் தவறியிருக்கிறாய்? அவர்களைப்போல் நீ பிழை செய்யாமல் தப்பி யிருந்தபோதிலும் அது என்ன பெரியதாகுமா? பிழை செய்யும் எண்ணம் உனக்கும் இல்லையா? பயந்தோ, அல்லது உலகத்தோர் பழிக்கு அஞ்சியோ, அல்லது வேறு இதைப் போன்ற சிறு காரணத்தாலேயோதான் நீ பிழையிலிருந்து தப்பி நிற்கிறாய்.

ஐந்தாவது: அவன் பிழை செய்தானென்று உனக்கு எப்படித் தெரியும்? ஒரு செயலுக்குப் பல காரணங்கள் உண்டு. மற்றொருவன் செய்தது தவறு என்று நிச்சயிக்க எவ்வளவோ விஷயங்களை ஆராய வேண்டும்.

ஆறாவது: அதிகக் கோபம் உண்டாகும்போதும் பொறுமை இழக்கும்போதும் ஒன்றை நினைவூட்டிக் கொள். மனிதனுடைய ஆயுள் மிகச் சிறியது. சில நாட்கள் கழிந்தபின் அனைவரும் இறந்தவர்களாவோம்.

ஏழாவது: உன்னை எது துன்புறுத்துகிறது? அவர்கள் செய்த செயல் அல்ல. அவைகளைப்பற்றி நீ கொண்ட எண்ணங்களே உன்னை வருத்துகின்றன. புறப்பொருள் உன் ஆத்மாவைத் தீண்டாது; அவர்கள் செய்த செயல் அவர்களைத்தான் பாதிக்கும். உன் எண்ணங்கள் உன்னைப் பாதிக்கும்; உன்னை ஒரு செயல் துன்புறுத்துகிறதென்று எண்ணுங் காலத்தில், அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள முயற்சி செய். கோபம் தானாகவே போய் விடும். மற்றொருவன் செய்த பிழை உன் ஆத்மாவைத் தீண்டாது. அது உனக்கு ஒரு தீமையையும் விளைவிக்காது. மற்றவர்கள் செய்த தீங்குகளால் நீ ஒரு திருடனாகவாவது, துஷ்டனாகவாவது போய்விடுவாயா?

எட்டாவது: எதை நீ தீங்காக நினைத்து வருந்துகிறாயோ, அதைக் கண்டு சினங்கொள்வதும் வருந்துவதும் அதைவிடப் பன்மடங்கு தீங்கு உனக்கு.

ஒன்பதாவது: அன்பே வெற்றி யடையும். அதை எதுவும் வெல்ல முடியாது. ஆனால், உண்மையான அன்புக்குத்தான் அந்த வல்லமை. வெறும் நகைப்புக்கும், நடிப்புக்கும் அந்தச் சக்தி கிடையாது. உன் உள்ளத்திலுள்ள அன்பு குறையாமல் சமயம் வாய்த்தபோது இன் சொல்லால் புத்தி கூறி வந்தால் எவ்வளவு வெறுப்புக் கொண்டவனும் உன்னை என்ன செய்யக் கூடும்? அவன் தீங்கிழைத்த போதெல்லாம் "தம்பீ, வேண்டாம். நாம் கூடப் பிறந்தது எதற்கு? நீ செய்வது என்னைப் பாதிக்காது. அது உனக்கே தீங்காகும்" என்று அவனுக்குச்

சொல்லுவாய். இதை அவனுக்கு உண்மை அன்புடன் மனதில் எவ்விதக் கசப்புமின்றிப் பரிகாசமும் பழிச்சொல்லும் இல்லாமல் அவனுக்குச் சொல்லி வழிகாட்ட வேண்டும். பிரசங்கம் செய்வது போலாவது பக்கத்தில் நின்று கேட்பவர்கள் உன்னைப் புகழ்வதற்காகவாவது உபதேசம் செய்ய வேண்டாம். தனியேநின்று ஆன்மாவுடன் ஆன்மா சம்பாஷிப்பதுபோல் பேசுவாய்.

இந்த ஒன்பது விஷயங்களையும் தெய்வம் தந்த வரங்களாக மதித்து நினைவில் வைப்பாயாக. உயிருள்ளபோது மனித தர்மத்திற்கு இயைச வாழ முயல்வாய். மனிதர்கள்மீது சினம் கொள்ளக் கூடாது. அது போலவே அவர்களைப் பொய்யாகவும் புகழ வேண்டாம். இரண்டும் தீங்கிழைக்கும்; இரண்டும் அபகாரமாகும்.

சினம் கொள்வது ஆண்மை யாகாது. பொறுமையும் இன்சொல்லுந்தான் ஆண்மை. அதுவே வீரம். சினம் கொள்பவன் ஆற்றலும் தைரியமும் இல்லாதவன். எந்த அளவுக்கு மனம் கலங்காமல் இருக்கிறாயோ, அந்த அளவுக்கு சக்தி யுண்டாகும். ஆண்மையற்றவனே துயரப்படுவான். அவனே சினங்கொள்வான். துயரமும் சினமும் கொள்பவன் கஷ்டத்தைத் தாங்கிநிற்க மாட்டான்.

பத்தாவதாக, இதையும் மனதில் வைத்துக்கொள்வாய். மதியற்றவர்கள் பிழை செய்வது இயல்பு. அவர்கள் பிழை செய்யாமல் இருப்பார்களென்று எதிர்பார்ப்பது உன்மத்தமாகும். மற்றவர்களிடம் அவர்கள் மதியீனமாக நடந்துகொள்ளும்போது அதைப்பற்றி நீ வருத்தமடைவதில்லை. உன்னிடம் மாத்திரம் அவர்கள் வேறு விதமாக நடப்பதாக எதிர்பார்ப்பது பெருங் குற்றமல்லவா?

164. உன் உடலில் கலந்து நிற்கும் பூதப்பொருள்களில், நெருப்பும் வாயுவும் மேலே சென்று மறைந்து

போகும் இயல்புடையனவாயினும் உன் உடலை விட்டுப்பிரியாமல் இட்ட இடத்தில் அவை நிற்கின்றன. அவ்வாறே நீரும் மண்ணும் கீழே சென்று நீருடனும் நிலத்துடனும் கலந்துபோகாமல் உன் உடலில் அவைகளின் இயல்புக்கு மாறாய் நிற்கின்றன. இவ்வாறு பூதப்பொருள்க ளெல்லாம் எந்தக் கருமத்திற்கு எந்த இடத்தில் வைக்கப்பட் டிருக்கின்றனவோ, அவ்விடத்தில் நின்று அக் கருமத்தை நடத்துகின்றன. உடலினின்று உயிர் நீங்கிக் கலந்துபோகும் நாள்வரையில் தங்கள் இயல்பைத் தடுத்துக்கொண்டு பரம்பொருளின் ஆட்சிக்கு அடக்கி நிற்கின்றன. இப்படியிருக்க உன் புத்தி மாத்திரம் ஏன் சொல்லுக்கு இணங்காமல் வருந்துகிறது? தனக்கு இட்ட இடத்திலேயே இருக்க மாட்டேன் என்கிறது. பூதப்பொருள்களைப் புறப்பொருள் தாக்கும். மனத்துக்கோ புறப்பொருள் தாக்காமல் தன் தருமத்திற்கு இசைந்து நடக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட் டிருக்கிறது. ஆயினும், தருமத்தில் நிற்காமல் மாறாகச் செல்கிறது. இதுதான் வியப்பு. அநீதியைச் செய்வதும் அடக்கமின்மையும் கோபமும் அமைதியின்மையும் பயமும் தெய்வத்தின் அதிகாரத்தைமீறி நடப்பதே யாகும். நேர்ந்த ஒரு சம்பவத்தைக் கண்டு துக்கப்படும் மனம் தனக்கு வேலையைச் செய்யாமல், தெய்வத்தின் அதிகாரத்தை மறுப்பதாகும். பொறுமையும் பக்தியும் சத்தியமும் ஆன்மாவுக்கு இன்றியமையாத கடமையாகும்.

165. உனக்கு எழுதப் படிக்கத் தெரிந்தால்தான் பிறருக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கலாம். பல நாட்கள் சிக்ஷைக்கு உட்பட்டபின் அல்லவோ பிறருக்குச் சொல்லித் தரமுடியும். நல்வாழ்வு போதிப்பதும் இவ்

விதமே. எழுத்தறிவு புகட்டுவதைவிட நல்வாழ்வு புகட்டு வது எளிதல்ல.

166. நீ எதற்காக வருத்தப்படுகிருய்? உனக்கு வேண்டியதை யெல்லாம் எளிதில் அடையலாம். கழிந்ததை மறந்து விடு. வருவன வெல்லாம் தெய்வத்தின் ஆதீன மென்று அதைப்பற்றிய கவலையை ஒழி. நீ கவனிக்க வேண்டிய காலம் நிகழ் காலமே, அதில் பக்தியும் நீதியும் கொண்ட வாழ்வை நடத்த முயல்வாயாக. பக்தி என்ருல் உனக்கு நேர்ந்ததை யெல்லாம் மகிழ்ச்சி யுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். தெய்வம் அமைத்த அமைப்பைச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்வதுதான் உண்மையான பக்தி. நீதி என்ருல் உண்மையை மறைக்காமல் பேச வேண்டும். தருமம் தவருமல் நடக்க வேண்டும். பிறன் ஒருவன் செய்த தவறு, அல்லது சொன்ன சொல், அல்லது நினைத்த எண்ணத்தைக் கருதி உன் செயல் வேறுபடக் கூடாது. உடலுக்கு என்ன நேர்ந்தாலும் உன் செயலும் எண்ணமும் பேச்சும் தருமத்திலிருந்தும் உண்மையிலிருந்தும் தவருமல் நிற்க வேண்டும். மரணம் நெருங்கி யிருக்கிறது என்பதை அறிந்து ஆன்மாவின் நலத்தையே பெரிதாகக் கருதி,மற்றவைகளையெல்லாம் பொருட்படுத்தாம லிருக்க வேண்டும். தருமத்திற்கு மாருக நடப்பதே கேடு என்னும் ஒரு பயத்தை மட்டில் வைத்துக் கொண்டு மரணத்தைக் கண்டு பயப்படாமல் வாழ்வாய். அப்போது உன் ஜன்மம் பயன் பெற்றதாகும். எந்தச் சம்பவத்தைக் கண்டும் திகைக்கமாட்டாய். புறப்பொருளின்மேல் உன் மனத்தை நிறுத்தமாட்டாய். எந்த உலகத்தில் நீ ஒரு பகுதியாய்ப் பிறந்தாயோ அந்த உலகத்தினின்று வேறுபட்டுத் தேசப்பிரஷ்டனைப்போல் அலைய மாட்டாய்.

**167.** மறைந்து கிடக்கும் நம்முடைய எண்ணங்களைத் தெய்வம் நேரில் காண்கிறது. தன்னிலிருந்து உண்டான ஆன்மாக்களுடன் தெய்வத்தின் உள்ளம் எப்போதும் கலந்து நிற்கும். நீயும் கவலையற்று அறிவுடன் வாழவிரும்பினல் ஆன்மாவை மறைக்கும் உடலை மறந்து, உள்ளே நிற்கும் மெய்ப்பொருளைப் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். உடலை மறந்து ஆன்மாவை நோக்கும் ஒருவனுக்குத் துணியும், மணியும், வீடும், மாளிகையும், புகழும், செல்வமும் அதிகாரமும் மற்ற நாடக வேஷங்களும் தாமாகவே மறைந்துபோகும்.

**168.** பயனற்ற செயல் செய்ய வேண்டாம். செய்வதெல்லாம் நற்பயனைக் கருதிச் செய். நற்பயன் என்பது ஜனங்களுக்கு உபகாரமாகும் தன்மை.

**169.** விரைவிலேயே நீ உடலைவிட்டுப் பிரிந்துவிடுவாய். இப்போது உன்முன் நிற்கும் பொருள்களில் எதுவும் சாசுவதமல்ல. எல்லாம் அழிந்துபோகும். பிரகிருதியில் ஒவ்வொரு பொருளும் அவ்வப்போது அழிந்துபோய், வேறு பொருள் உண்டாவதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறது,

**170.** உன்னைப் பொருத்த மட்டில் உலகமெல்லாம் உன் எண்ணத்தைத் தவிர வேறில்லை. உன் எண்ணம் உன் சுதந்திரத்தில் முற்றிலும் இருக்கிறது. இந்த உண்மையை அறிந்து, உன் உள்ளத்தை அடக்கி ஆண்டு, சாந்தியை அடைவாயாக.

**171.** துக்கம் வந்தபோது இவைகளை நினைவிற்குத் தந்துகொள் : எல்லாம் உலகம் நடைபெறுவதற்காகவே நடக்கின்றன. ஒருவன் செய்த பிழை அவனையே பாதிக்கும். உன்னைப் பாதிக்காது. புதிதாக ஒன்றும் இல்லை. இப்பொழுது உனக்கு நேரிட்டதைப்போல் முன்பும்

நேரிட்டதே, இந்த க்ஷணத்தில் வேறு பலருக்கும் நேரிட்டிருக்கிறது. மானுடர் எல்லோரும் ஒரு குடும்பம். அவர்களுடைய உறவு மிக நெருங்கிய உறவாகும். அது உடல் சம்பந்தமல்ல. உயிருக்கு உயிருடனுள்ள பாந்தவ்யம், உடலில் நிற்கும் உள்ளமானது தெய்வத்தினின்று உற்பத்தியான பொருள். அது தேவாம்சம். உன்னுடையது என்பது ஒன்றுமில்லை. உடலும் மகனும், மகளும் உயிரும் கடவுளினின்று வந்த பொருள்கள். அவர்கள் எல்லாரும் அவருடைய பொருள்களே யாவர். சகல சுகமும் துக்கமும் விருப்பமும் உள்ளத்தில் உதிக்கும் எண்ணம் தவிர வேறு இல்லை.

172. கழிந்ததும் வருவதும் மனிதனுடைய காலமல்ல. தற்காலமே மனிதனுக்கு உரித்தான காலம். அதை அவன் வீணாக்குகிறான். தன் வசமில்லாத முதலிரண்டைப்பற்றி வருந்தியும் கவலைப்பட்டும் தன் வசமுள்ள காலத்தை வீணாக்குகிறான். என்ன பேதைமை!

173. எதைப்பற்றியாவது மிக்க கவலை கொண்டவர்களையும், கஷ்டப்பட்டவர்களையும், பெரிய புகழ் பெற்றவர்களையும், நினைத்துப் பார். அவர்கள் எல்லோரும் இப்பொழுது எங்கே? அவர்களுடைய பெருமையும் பகைமையும் இப்பொழுது எங்கே? புகையும் சாம்பலுமாய்ப் போன ஒரு கதைதான். அக் கதையைக்கூடச் சிலர்தான் சொல்லுகிறார்கள், அதுவும் விரைவில் மறக்கப்படும்.

174. பல விஷயங்களைப்பற்றிக் கவலைப்படுவதில் என்ன பயன்? கடவுளுக்கு அடியானாகி நீதியும் அடக்கமும்கொண்டு வாழ்வதல்லவோ பெருமை? இவ்வாறு பக்திகொண்ட வாழ்வை அடக்கத்துடன் வாழ வேண்டும். அடக்கம் உள்ளத்தில் இருக்கவேண்டும். புறத்தில் அடக்

கங்காட்டி, உள்ளத்தில் அகம்பாவம் கொண்டிருப்பது அகம்பாவத்திலும் பெரிய அகம்பாவம்.

175. தெய்வம் தெய்வம் என்று சொல்லுகிறாயே; தெய்வத்தை எங்கே நீ கண்டாய் என்று கேட்பார்கள். தெய்வத்தை தெய்வத்தின் செயல்களால் கண்ணாலேயே காணலாம். நம்முடைய உயிரைத்தான் நாம் கண்ணால் பார்க்கிறோமா? ஆனால், நாம் அதை உண்டென்று எண்ணி, அதையே பெரிதாக மதித்து ஒவ்வொரு செயலி லும் அதற்குச் சேவை செய்யவில்லையா? அப்படியே தெய்வத்தையும் அதன் செயல்களினால் எனது அனுப வத்தில் சதா பார்த்து வணங்குகிறேன்.

176. வாழ்வைக் காப்பது விவேகம். எப்பொருளி லும் காரியம் எது? காரணம் எது? என்று பார்த்து நியாயமாக நடந்து சத்தியம் பேசி வந்தால் சோர்வை பிறழாமல் வாழ்வு நடக்கும்.

177. ஒரு சூரியனுடைய ஒளி எங்கும் பரவி நிற் கிறது. சுவரும் மலையும் பல பொருள்களும் குறுக்கே நின்றாலும் வெளிச்சம் ஒன்றே. அவ்வாறே பலவேறு பொருள்களின் உருவங்கள் தனித்தனியே நின்றாலும் எல் லாம் ஒரு பிரகிருதிப் பொருள். பலபல உயிர்களாகப் பிராணிகள் பிரிந்து பிரிந்து நின்றாலும் அனைத்தும் ஓர் உயிரே. பல ஆன்மாக்களாகக் காணினும் சர்வவியாபக மான பரமாத்மாவே பல்வேறாகக் காண்கிறது. எல்லாவற் றுள்ளும் ஒரே பரம்பொருள்தான் ஊடுருவி விளங்கு கிறது.

178. காலம் எல்லையற்றது, அதில் உனக்கு மிகச் சிறிய பாகம் கிடைத்திருக்கிறது. பெரிய பிரபஞ்சத்தில் உன் உடல் எத்துணைச் சிறிய பாகம்? பரமாத்மாவின் அளவு என்ன? அதில் நீ எத்துணை அற்ப பாகம்? நீ நடக்

கும் நிலமுங்கூட மகா பெரிய உலகத்தில் எவ்வளவு சிறிய பாகம்? பராசக்தியின் எண்ணத்தை நிறைவேற்றுவதே வாழ்வு. மற்றவை யெல்லாம் அற்பம்.

179. உள்ளத்தைப் பரிசுத்தமாக்கிப் பயன்படுத்துவதே பெருமை. அதில்தான் சகல நற்பயனும் உண்டு. மற்றவை அனைத்தும் நிலையற்றவை. வெறும் புகையாய்ப் போகும்.

180. நீ இவ் வுலகத்தினின்று ஐந்து வருஷம் முன்பு போனால் என்ன? பின்பு போனால் என்ன? எந்தச் சக்தி உன்னை உண்டாக்கிற்றோ, அந்தச் சக்தி உன்னைப் போ என்கிறது. இதில் என்ன குற்றம்? நாடகத் தலைவன் நடிகனைப் போ என்பதில் என்ன பிழை? "ஐயோ! நாடகம் முழுதும் ஆடவில்லையே" என்பாய். நாடகம் முடியவில்லை யென்பது உண்மை. ஆனால் முடியாத நாடகமே நாடகம். நாடகத் தலைவன் இட்ட முடிவே முடிவு. நாடகத்துக்காவது நாடகத்தின் முடிவுக்காவது நீ தலைவன் அல்லன். ஆகையால், கலங்காமல் உடலை விட்டு நீங்குவாயாக. சாந்தி அடைவாய். தெய்வமே சரண்.